பகுநிலைசார் மொழி ஆய்வு பகுநிலை மொழியியல் எனப்படும். மொழியின் காலத்தையும் இடத்தையும் வேறுபடாத ஒன்றாக எடுத்துக்கொண்டு மொழியின் ஒலி, சொல், வாக்கியம் இவற்றை ஆய்வது பகுநிலை மொழியியலாகும் (analytic linguistics). இதன் அடிப்படையில் மொழியின் பகுநிலை ஆய்வை ஒலியனியல், உருபனியல், தொடரியல் மற்றும் பொருண்மையியல் என்று பகுக்கலாம். பகுநிலை மொழியியல் மொழியின் ஒரு காலத்தைச் சார்ந்த தரவை எடுத்துக்கொண்டு பகுப்பாய்வுசெய்வதால் இது ஒருகால மொழியியல் (synchronic linguistics) என்றும் அழைக்கப்படும். இதை வருணனை மொழியியல் (descriptive linguistgics) என்றும் பொதுவாக அழைப்பர். மொழி கருத்துப்பரிமாற்றத்திற்கும் வெளிப்பாட்டிற்கும் வேண்டி மனிதனால் பயன்படுத்தப்படும் உச்சரிக்கப்பட்ட ஒலிகளின் இடுகுறித்தன்மையான ஒழுங்குமுறையாகும். மொழிக்கு ஒலிகள், சொற்கள், வாக்கியங்கள் மற்றும் பொருண்மை என்பன இருக்கின்றது. மனித மொழியின் ஒலிகளையும் சொற்களையும் வாக்கியங்களையும் பொருண்மைகளையும் விளக்க மொழியை சில வேறுபட்ட ஆனால் ஊடாட்டம் செய்யும் ஆய்வு நிலைகளாக நிறுவுவது பயனுள்ளதாக அமையும். இதன் காரணமாக மொழியியலார்

ஒலியனியல், உருபனியல், சொல்லியல், தொடரியல், பொருண்மையியல் என்ற ஆய்வு நிலைகளை நிறுவியுள்ளனர். மொழியியலார் மொழியை இவ்வாறு வேறுபட்ட அலகுகளாகப் வேறுபட்ட மட்டங்களில் பகுப்பதை மொழியின் படிநிலை அமைப்பு (hierarchical strucutre) என்பர்.

• பேச்சொலிகளை ஒலித்தல், கடத்தல் மற்றும் பெறுதல் என்ற நிலைகளில் ஆய்வது ஒலியியலாகும்.

• பேச்சொலிகளின் அலகுகளை அசைகளாகவும் பிற பெரிய அலகுகளாகவும் ஒழுங்குபடுத்துவதை ஆய்வது ஒலியனியலாகும். ஒரு மொழியின் ஒலியனியல் அம்மொழியில் நிகழும் ஒலிகளின் ஒழுங்குமுறைகள் மற்றும் அமைப்பொழுங்குகள் இவற்றின் வர்ணனையாகும். எவ்வாறு ஒலிகள் எல்லாம் ஒருங்கிணைந்து ஒலியன்களாகக் கருதப்படுகின்றன, ஒலியன்கள் எவ்வாறான வரிசைக் கிரமத்தில் வந்து உருபன்களாகவோ சொற்களாகவோ உருவாக்கம் பெறுகின்றன என்பதை ஒலியனியல் விவரிக்கின்றது.

• சொற்களை ஆய்வது உருபனியலாகும். எவ்வகையிலான ஒலியனியல் தெடர்ச்சிகள் உருபுகளாக உருப்படுத்தம் பெறுகின்றன, உருபுகள் எவ்வாறு உருபன்களாக் குழுமப் படுகின்றன, உருபன்கள் எவ்வரிசை கிரமத்தில் வந்து சொற்களை உருவாக்குகின்றன என்பதை எல்லாம் உருபனியல் விவரிக்கின்றது.

• எவ்வாறு சொற்கள் எல்லாம் இணைந்து தொடர்களாகவும் பெருந்தொடர்களாகவும் வாக்கியங்களாகவும் உருவாக்கம் பெறுகின்றன என்பதை தொடரியல் விவரிக்கின்றது.

• பொருண்மையியல் எல்லா நோக்கிலும் பொருண்மையை ஆய்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. எவ்வாறு உருபன்களின் பொருள்கள் இணைந்து சொற்களின் பொருள்கள் பெறப்படுகின்றன, சொற்களின் பொருள் எல்லாம் இணைந்து தொடர்களின் பொருள் கிடைக்கின்றது, தொடர்களின் பொருள் எல்லாம் இணைந்து வாக்கியங்களின் பொருள் கிடைக்கின்றது என்பதைப் பொருண்மையியல் விவரிக்கின்றது.

• எழுத்தியல் பேச்சை எழுத்தாக உருப்படுத்தம் செய்வதில் உள்ள எல்லா மரபுகளையும் ஆய்கின்றது.

• சொல்லியல் (lexicology) சொல் அலகுகள் மற்றும் அவற்றின் சேர்துவருகை உறவுகளை ஆய்கின்றது.

• இலக்கணம் என்ற சொல் உருபனியலையும் தொடரியலையும் குறிப்பிட சிலவேளைகளில் பயன்படுத்தப்படுகின்றது. சில மொழியியலார் மொழியின் மொத்தத்தையும் குறிப்பிட இதைப் பயன்படுத்துவர்.

மொழியின் வளர்ச்சிசார் அல்லது மாற்றம்சார் ஆய்வை கால அடிப்படையில், இட அடிப்படையில், பிரிதல் அடிப்படையில், குவிதல் அடிப்படையில் ஆயலாம். கால அடிப்படையிலான ஆய்வை வரலாற்று மொழியில் (historical linguistics) என்றும், இட அடிப்படையிலான ஆய்வை கிளைமொழியல் (dialectology) ஆய்வு என்றும், பிரிதல் அடிப்படையிலான ஆய்வை ஒப்புமை மொழியல் (comprative linguistics) ஆய்வு என்றும், குவிதல் அடிப்படையிலான ஆய்வை மொழிக்குவிய ஆய்வு (languge convergence) என்றும் குறிப்பிடுவர். மொழி காலத்தாலும் இடத்தாலும் மாறும் தன்மையுடையது. ஒரு கால கட்டத்திலுள்ள மொழியமைப்பு அடுத்த காலகட்டத்தில் மாற்றமுற்றிக்கும். ஒவ்வொரு காலகட்ட மொழி அமைப்பயையும் ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் பகுப்பாய்வு செய்து ஒப்பிட்டுப் பார்த்தால் மொழியானது அதன் வேறுபட்ட அமைப்பு மட்டங்களில் வேறுபட்டு இருப்பதைக் காணலாம். இத்ததைய ஆய்வு வரலாற்று மொழியியல் (historical linguistics) ஆய்வு என்படும். எடுத்துக்காட்டாக பழந்தமிழின் ஒலியனியல், உருபனியல், தொடரியல் மற்றும் பொருண்மையியல் பண்புக்கூறுகள் இடைக்கால மற்றும் தற்காலத் தமிழின் இத்தகையப் பண்புக்கூறுகளில் வேறுபட்டிருக்கின்றது என்று ஆய்ந்து கூறுவது வரலாற்று மொழியியல் ஆய்வாகும். இன உறவு மொழிகளை ஒப்பிட்டு ஆய்வது ஒப்புமை மொழியியல் (comprative linguistics) ஆகும். எடுத்துக்காட்டாக திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடா, துளு, தெலுங்கு போன்ற மொழிகளின் ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் அமைப்புகளை ஒப்பிட்டு ஆய்வது ஒப்புமை மொழியியல் ஆய்வின் கண் படும். மொழி காலத்தால் வேறுபடுவதைப்போன்று இடத்தாலும் வேறுபடும். எடுத்துக்காட்டாக, தஞ்சை மாவட்டத் தமிழ்மொழி அதாவது தஞ்சைக் கிளை மொழி கன்னியாகுமரி மாவட்டத் தமிழிலிருந்து அதாவது கன்னியாகுமரிக் கிளை மொழியிலிருந்து வேறுபட்டிருப்பதை உணரலாம். இத்தகைய வேறுபாடுகளை ஒலியனியல், உருபனியல், சொல்லியல், பொருண்மையியல், தொடரியல், அடிப்படையில் ஆய்வதுதான் கிளைமொழியல் ஆய்வாகும்.

இடத்தால் மட்டுமன்றி கிளைமொழிகள் சமூகத்தாலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, அரிசன சமுதாயத்தைச் சார்ந்தவர் பேசும் தமிழ்க் கிளைமொழி பிராமணர் சமுதாயத்தைச் சார்ந்தவர் பேசுகின்ற கிளைமொழியிலிருந்து வேறுபட்டிருப்பதை உணரலாம். இத்தகைய கிளை மொழிகள் சாதிக் கிளைமொழிகள் அல்லது சமூகக் கிளைமொழிகள் (social dialects) எனப்படும்.

நீண்டகாலத் தொடர்பின்மையாலும் அல்லது தொடர்பின் குறைவாலும் காலத்தின் உந்தலாலும் கிளைமொழிகள் வேறுபட்டு தனித்தனி மொழிகளாக மாறும் நிலையை எய்தும். எடுத்துக்காட்டாக இன்றைய காலகட்டத்தில் தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு எனத் தனிப்பட்ட மொழிகளாக இருப்பவை ஒரு காலகட்டத்தில் ஒரு தாய்மொழியின் (திராவிடமொழியின்) கிளைமொழிகளாகத்தான் இருந்திருக்க வேண்டும். நாளாவட்டத்தில் இவை தனி மொழிப் பண்புக்கூறுகளைப் பெற்று ஒன்றிற்கொன்று புரிதல் இல்லாமல் தனித்தனி மொழிகளாக மாறியுள்ளன. இதை மொழி வேறுபடல் (language divergence) என்பர். வேற்றினத்தைச் சார்ந்த இரு மொழிகள் தமது நீண்டகால நெருங்கியத் தொடர்பின் காரணமாக சில பொதுவான மொழிப் பண்புக்கூறுகளைப் பெற்று ஒன்றுபடும். இதை மொழிக் குவிதல் (language convergence) என்பர். எடுத்துக்காட்டாக. ஆரிய மொழிகளும் திராவிட மொழிகளும் நெருங்கிய தொடர்பு கொண்டு பழக்கத்தில் இருப்பதால் இவற்றிற்குள் இனங்கடந்த ஒற்றுமையான மொழிப் பண்புக்கூறுகளைக் காணலாம். எடுத்துக்காட்டாக தமிழ் போன்ற திராவிட மொழிகளும் இந்தி போன்ற ஆரிய மொழிகளும் எழுவாய்-செயப்படுபொருள்-வினை என்ற தொடரியல் அமைப்பைக் கொண்டிருப்பது நீண்ட நாளையத் தொடர்பால் ஏற்பட்ட மொழிக் குவிதல் செற்பாங்கு ஆகும். மொழிகளை ஒலியனில், உருபனியல், தொடரியல், பொருண்மையில் அடிப்படையில் ஆய்ந்து அவைகளுக்கு இடையே உள்ள ஒற்றுமையான மொழிப் பண்புக்கூறுகளை கண்டுபிடித்து இனம், இடம் இவற்றிற்கு அப்பாற்பட்டு வகைப்படுத்துவதை மொழி வகைப்பாட்டியல் (language taxonomy) என்பர். மொழிகளை ஒலியனில், உருபனியல், தொடரியல், பொருண்மையில் அடிப்படையில் ஆய்ந்து எல்லா மொழிகளுகளுக்கும் பொதுவான மொழிப் பண்புக்கூறுகளைக் காண்பது மொழி உலகப்பொதுமைகளை (language universals) நோக்கிய ஆய்வாகும்.

## 1.4. அமைப்புமொழியியல் கோட்பாடு

மொழியியலின் பிரிவுகளையும் அதன் அடிப்படையில் நடைபெறும் மொழியலகுகளின் ஆய்வுகளையும் நன்கு புரிந்துகொள்ள நீங்கள் அமைப்பு மொழியியல் கோட்பாட்டை நன்கு அறிந்திருக்கவேண்டும். மொழியியலின் தொடக்க கால கட்டத்தில் அதாவது 40களிலும் 50களிலும் அமைப்புமொழியியல் கோட்பாடுகள் மிகப் பரவலாகப் பேசப்பட்டு ஆய்வுக்கோட்பாடுகளாகப் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக மொழியியல் அறிஞர்களான புளூம்பீல்டு, நைடா, பைக், ஹாரிஸ் போன்றவர்கள் அமைப்பு மொழியியல் கோட்பட்டின் அடிப்படையில் தங்கள் மொழியியல் ஆய்வை அமைத்து கொண்டனர். அமைப்பு மொழியியல் கோட்பாடுகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்:

• மொழி சமுதாயப் பழக்கவழக்கம். மொழியியலின் ஆதாரப்பொருள் (subject matter) வழக்கங்களின் மற்றும் அமைப்பொழுங்குகளின் மொத்தக் குழுமத்தைப் பற்றி படிப்பதாகும்.

• அறிவியல் கண்டுபிடிப்புச் செயல்முறை (discovery procedure) எதிர்பார்க்கிற தேவைக்கு எற்ப ஆய்வும் விளக்கமும் அமையவேண்டும்.

• மொழி அதன் ஒழுங்குமுறைகளாலும் (systems) துணை ஒழுங்குமுறைகளாலும் (subsystems) விளக்கப்படவேண்டும். உலகப்பொது இலக்கணமில்லை.

• மொழி கருத்துப் பரிமாற்றத்திற்காக ஒரு கூட்டம் மனித இனம் பயன்படுத்;துகிற உச்சரிக்கப்படுகின்ற ஒலிகளின் இடுகுறி (arbitrary) ஒழுங்குமுறை.

• இயற்கையால் உரைக்கப்பட்டது என்ற பொருளில் ‘இயற்கை மொழி’ இல்லை. அப்படி என்றால் எல்லோரும் ஒரே மொழியைப் பேசவேண்டும். ஒவ்வொரு மொழியின் இயல்பும் வடிவும் அதன் சமுதாயத் தேவைகளுக்கு ஏற்ப பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. பின்வருவன அமைப்பு மொழியியலாரால் கூறப்பட்ட சில பொதுவான கூற்றுளாகும்:

அ. ஒவ்வொரு மொழியும் அதைப் பயன்படுத்துபவருக்கு போதுமானதாக இருக்கின்றது.

ஆ. ஒவ்வொரு மொழியும் பயன்படுத்துகின்ற சமூகத்திற்கும் நல்லதாய் உள்ளது.

இ. எந்த மொழியும் பிற மொழியைவிட அழகானதல்ல.

• மொழியைப் பற்றிய கூற்றுகளும் விளக்கங்களும் புறவாயமான (objective) சொற்களால் கூறப்பட வேண்டும். மனவழிசார் வெற்றுச்சொற்கள் இல்லாமால் வடிவங்களும் வடிவம்சார் உபாயங்களும் மட்டும்தான் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

• அமைப்புகளும் பொருண்மையை அடையாளங்காட்டும். ஆனால் அமைப்பைக் கண்டுபிடிப்பதற்குப் பொருள் பயன்படாது. பொருண்மை விளக்கப்படவேண்டும்; ஆனால் பொருள் ஆய்வில் கருவியாயகப் பயன்டுத்தப்படக்கூடாது. அமைப்புகள் ஒன்றா வேறுபட்டவையா என்று அறியப் பொருண்மையைப் பயன்படுத்தலாம்.

• அங்குமிங்குமாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட கூற்றுகளின் தொகுதிதான் பெருந்தரவு (corpus) பொதுமையாக்கம் செய்வதற்காக பெருந்தரவு மாதிரியாகப் பயன்படுத்தப்படவேண்டும். மொழியை ஆய்வதற்காகப் பயிற்சி பெற்றவர்தான் மொழியியலார். விவரணை செய்யும் மொழியைப் பேசுபவராக அவர் இருக்கத்தேவையில்லை. மொழி பேசும் தகவலாளியின் உதவியால் அவர் தெரியாத மொழியை ஆய இயலும்.

• மொழியின் ஆய்வு மிகச்சிறிய அலகான ஒலியனில் (தகவலாளி மொழியியலாருக்குத் தெரியாத மொழியைப் பேசுகையில் கூடுதல் வெளிபடையாகத் தெரிகிற அலகு) தொடங்கி மிகப் பெரிய அலகான வாக்கியம் வரைச் செய்யப்படும்.

• வேற்றுநிலை மற்றும் துணைநிலைக் கொள்கைகள் புளூம்பீல்டியன் மொழியியலில் மிக முக்கியமானவை. வேற்றுநிலை வருகையின் போது பொருண்மையில் மாறுபாடு இருக்கும். துணைநிலை வருகையின் (complementary distribution) போது ஒரு அலகின் உறுப்பினர்கள் எதிர்பார்கிறபடி மாற்றொலியன்கள் (allophones) மாற்றுருபுகள் (allmorphs) என்பனபோல வினியோகிக்கப்பட்டிருக்கும்.

அமைப்பு மொழியியல் (structural linguistics) மொழியலகுகளை இரண்டுவகையிலான உறவுகளால் தொடர்புபடுத்தி ஆய்வு செய்கின்றது. முதலாவது, மொழியலகுகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து வருவதால் பெறப்படும் உறவு. இதுவே தொடர் முறை உறவு அல்லது உறுப்பமைவு உறவு (syntagmatic relation) என்று குறிப்பிடப்படும். மற்றொன்று, ஓர் உறுப்புக்குப் பதிலாக அதே

இடத்தில் வரும் அலகுகளுக்கிடையே உள்ள உறவு. இது அடுக்கு முறை உறவு (paradigmatic relation) எனப்படும். இவ்வாறு மொழி அலகுகள் தொடர்ந்து வந்தும் ஒன்றை ஒன்று பதிலீடு செய்தும் இரு விதமான உறவுகளை வெளிப்படுத்தி அவற்றின் வருகை அமைப்பை ஒரு அமைப்பொழுங்காக அமைத்துக்கொள்கின்றன. எந்த மொழியலகையும் மேற்சொன்ன கிடக்கை நிலை உறவாலும் செங்குத்து நிலை உறவாலும் நிர்ணயிக்கலாம். இது வரைபடத்தில் ஒரு புள்ளியின் இருப்பிடத்தை x-அச்சையும் y-அச்சையும் கொண்டு நிர்ணயிப்பதை ஒக்கும்.







பெயர்கள், வினைகள், பெயரடைகள் மற்றும் வினையடைகள் என்ற சொல்வகுப்புகள் அடுக்குகளை உருவாக்குகின்றன. இச்சொல்வகுப்புகள் ஒரு வாக்கியத்தை உருவாக்க வேண்டி ஒன்று சோ;க்கப்படும் வழி அவற்றின் உறுப்பமைவு உறவாகும். அமைப்பு மொழியியல் அடிப்படையில் ஒலியனியல்,

உருபனியல், தொடரியல் நிலைகளில் கூறுகளின் மொழியியல் ஆய்வை பின்வருமாறு வரை படத்தில் காட்டலாம்:

**படம்**



### 1.4. மொழியியலின் பயன்பாடு

பல துறைகளில் மொழியியலின் பயன்பாடு கருதி பயன்பாட்டு மொழியியல் என்ன துறை உருவாகியுள்ளது. சமூகமொழியியல் (sociolinguistics), இனமொழியியல் (ethnolinguistics), மானிடவியல் மொழியியல் (anthropological linguistics), உயிரியல்சார் மொழியியல் (biolinguistics), கணித மொழியில் (mathematical linguistics), புள்ளியியல் மொழியியல் (statisticsl linguistics), மொழிகற்றல் கற்பித்தல் (language learning and teacing), அகராதியியல் (Lexicography) என்பன பயன்பாட்டு மொழியியலில் (applied linguistics) அடக்கப்பட்டுள்ளன. மொழியியலும் கணப்பொறி அறிவியலும் ஒன்றை ஒன்று சார்ந்து மொழியாய்வில் ஈடுபடுவதன் காரணமாக கணினி மொழியியல் அல்லது இயற்கைமொழி ஆய்வு (natural language processing (NLP)) என்ற புதிய ஒட்டு வகை துறை உருவாகியுள்ளது. கணிப்பொறி அறிவியலுடன் தொடர்பு காரணமாக பெருந்தரவை ஆய்யும் மொழி ஆய்வு தரவுத்தொகுதி மொழியியல் (corposus lingusitcs) எனவும் அளவீடுசார் மொழியியல் (quantificational linguistics) எனவும் பரிமளித்துள்ளது (இது மரபு நெறிமுறையான பண்புசார் மொழியியலுக்கு (qualitative lingusitcs) எதிரிடையானது).

இவை தவிர அகராதி உருவாக்கத்தைப் பற்றி படிக்கும் அகராதியியலும் மொழி கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளும் மொழிபெயர்ப்பியலும் மொழியியலின் பயன்பாட்டின் அடிப்படையிலான துறைகளாகும்.

எழுத்துச் சீர்திருத்தம் செய்தல், தாய்மொழியை அறிவியல் மற்றும் பிற பாடங்களைச் சொல்லிக்கொடுக்கும் மொழியாக அறிமுகப்படுத்தல், தாய்மொழியயை மற்றும் இரண்டாம் மொழியை பள்ளிகளில் அறிமுகப்படுத்தும் காலகட்டத்தைத் தீர்மானித்தல், தாய்மொழியை நீதிமன்றங்களிலும் அலுவலங்களிலும் பயன்படுத்தலை தீர்மானித்தல், முதியோர் கல்வித்திட்டத்திற்கான பாடங்களை உருவாக்கி கற்பித்தல், கலைச்சொற்களை உருவாக்குதல், விசைப்பலகையில் எழுத்துக்களின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல், சுருக்கெழுத்து மொழியயை உருவாக்குதல், மின்தகவல் தொடர்புகருவிகளுக்கு குறியீடுகளைத் தீர்மானித்தல், கணிப்பொறியில் தாய்மொழிக்குக் குறியீடுகளைத் தீர்மானித்தல் போன்ற மொழித் திட்டமிடும் (language planning) விசங்களில் மொழியியல் ஆய்வுகள் முக்கிய பங்களிபு செய்கின்றது. மேலும் பேச்சுக்குறைபாட்டை நீக்குதல்,

ஊமைகளுக்கு மொழியைக் கற்றுத்தருதல், குருடர்களுக்கு படிக்கும் சாதனங்களை உருவாக்குதல போன்று மொழி தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வுகாண்பதற்கு மொழியியல் அறிவு பெரிதும் பயன்படுகின்றது.

**தன்மதிப்பீடு**

1. மொழியியல் என்றால் என்ன? மொழியியலின் நோக்கம் என்ன?

2. மொழியை படிப்பதற்கும் மொழியைப் பற்றி படிப்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?

3. பகுநிலைசார் மொழியியலின் பிரிவுகள் யாவை?

4. அமைப்பு மொழியியலின் அடிப்படைக் கொள்கை என்ன?

5. வரலாற்று மொழியியல் என்றால் என்ன?

**1.6. பாடத் தொகுப்புரை**

மொழியியல் ஆய்வின் நோக்கமும் குறிக்கோளும் பற்றி அறிந்துகொண்டோம். மொழி என்றால் என்ன, மொழியல் என்றால் என்ன என்பது குறித்த விரிவான விளக்கத்தை அறிந்துகொண்டோம். மொழியியலின் பிரிவுகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டோம். மேலும் மொழியியலின் பயன்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டோம்.

**1.7. கலைச்சொற்கள்**

1. இலக்கணம் (grammar), 1. ஒலியனியல் (phonology) 2. உருபனியல் (morpholog) 3. எழுத்தியல் (grapholog) 4. சொல்லியல் (lexicology) 5. தொடரியல் (syntax) 6. படிநிலையமைப்பு (hierarchical structure) 7. பொருண்மையியல் (semantics)

**1.8. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்**

கருணாகரன், கி. மற்றும் வ. ஜெயா. 1997. மொழியியல். குமரன் பதிப்பகம் சென்னை கோதண்டராமன், பொன். பொது மொழியியல். பூம்பொழில் சென்னை.

பரமசிவன்.கு. 1984. இக்கால மொழியியல் அறிமுகம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

முத்துச்சண்முகம். 1989. இக்கால மொழியியல் மதுரை பப்ளிஷிங் உறவுஸ் மதுரை. மூன்றாம் பதிப்பு.

**தன்மதிப்பீடு விடைகள்**

1. மொழியை அறிவியல் அடிப்படையில் ஆய்வது மொழியியலாகும். மொழியைப் பேசுவதற்கு என்றில்லாமல் மொழியின் அமைப்பைப் பற்றி ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் என்ற மட்டங்களில் ஒருகால அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் உலகப்பொதுமை அடிப்படையிலும் ஆய்வது மொழியலாகும். மொழியியல் என்பதன் நோக்கம் மொழியின் அமைப்பை ஆய்வது மட்டும்தான் என்ற நிலையில் நின்றுவிடாமல் தத்துவம், தர்க்கம், இலக்கியம், உளவியல், சமூகவியல், மானிடவியல், கணிதவியல், கணினிவியல் என்ற பிற துறையுடன் தொடர்புபடுத்தி ஆய்வதும் மொழியியலின் பயன்பாட்டு அடிப்படையிலான நோக்கமாகும்.

2. மொழியை பேசுவதற்குப் வேண்டி படிப்பதற்கும் மொழியை ஆய்வதற்கு வேண்டி படிப்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. பிந்தயதுதான் மொழியியல் எனப்படும்.

3. பகுநிலை அடிப்படையில் மொழியியலை ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் எனப் பிரிக்கலாம்.

4. அமைப்பு மொழியியல் (structural linguistics) மொழியலகுகளை இரண்டுவகையிலான உறவுகளால் தொடர்புபடுத்தி ஆய்வு செய்கின்றது. முதலாவது, மொழியலகுகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து தொடர்ந்து வருவதால் பெறப்படும் உறவு. இதுவே தொடர் முறை உறவு அல்லது உறுப்பமைவு உறவு (syntagmatic relation) என்று குறிப்பிடப்படும். மற்றொன்று, ஓர் உறுப்புக்குப் பதிலாக அதே இடத்தில் வரும் அலகுகளுக்கிடையே உள்ள உறவு. இது அடுக்கு முறை உறவு (paradigmatic relation) எனப்படும். இவ்வாறு மொழி அலகுகள் தொடர்ந்து வந்தும் ஒன்றை ஒன்று பதிலீடு செய்தும் இரு விதமான உறவுகளை வெளிப்படுத்தி அவற்றின் வருகை அமைப்பை ஒரு அமைப்பொழுங்காக அமைத்துக்கொள்கின்றன. எந்த மொழியலகையும் மேற்சொன்ன கிடக்கை நிலை உறவாலும் செங்குத்து நிலை உறவாலும் நிர்ணயிக்கலாம்.

5. மொழி காலத்தாலும் இடத்தாலும் மாறும் தன்மையுடையது. ஒரு கால கட்டத்திலுள்ள மொழியமைப்பு அடுத்த காலகட்டத்தில் மாற்றமுற்றிக்கும். ஒவ்வொரு காலகட்ட மொழியமைப்பயையும் ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் பகுப்பாய்வு செய்து ஒப்பிட்டுப் பார்த்தால் மொழியானது அதன் வேறுபட்ட அமைப்பு மட்டங்களில் வேறுபட்டிருப்பதைக் காணலாம். இத்ததைய ஆய்வு வரலாற்று மொழியியல் (historical linguistics)

ஆய்வு என்படும். எடுத்துக்காட்;டாக பழந்தமிழின் ஒலியனியல், உருபனியல், தொடரியல் மற்றும் பொருண்மையியல் பண்புக்கூறுகள் இடைக்கால மற்றும் தற்காலத் தமிழின் இத்தகையப் பண்புக்கூறுகளில் வேறுபட்டிருக்கின்றது என்று ஆய்ந்து கூறுவது வரலாற்று மொழியியல் ஆய்வாகும்.

**1.4. மொழியியலின் பயன்பாடு**

பல துறைகளில் மொழியியலின் பயன்பாடு கருதி பயன்பாட்டு மொழியியல் என்ன துறை உருவாகியுள்ளது. சமூகமொழியியல், இன மொழியியல், மானிடவியல் மொழியியல், உயிரியல்சார் மொழியியல், கணித மொழியில், புள்ளியியல் மொழியியல், மொழிகற்றல் கற்பித்தல், அகராதி மொழியியல் என்பன பயன்பாட்டு மொழியியலில் அடக்கப்பட்டுள்ளன. மொழியியலும் கணப்பொறி அறிவியலும் ஒன்றை ஒன்று சார்ந்து மொழியாய்வில் ஈடுபடுவதன் காரணமாக கணினி மொழியியல் அல்லது இயற்கைமொழி ஆய்வு (natural language processing) என்ற புதிய ஒட்டு வகை துறை உருவாகியுள்ளது. கணிப்பொறி அறிவியலுடன் தொடர்பு காரணமாக பெருந்தரவை ஆய்யும் மொழி ஆய்வு பெருந்தரவு மொழியியல் (corposus lingusitcs) எனவும் அளவீடுசார் மொழியியல் (quantificational linguistics) எனவும் பரிமளித்துள்ளது (இது மரபு நெறிமுறையான பண்புசார் மொழியியலுக்கு (qualitative lingusitcs) எதிரிடையாது).

இவை தவிர அகராதி உருவாக்கத்தைப் பற்றி படிக்கும் அகராதியியலும் மொழி கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளும் மொழிபெயர்ப்பியலும் மொழியியலின் பயன்பாட்டின் அடிப்படையிலான துறைகளாகும். எழுத்துச் சீர்திருத்தம் செய்தல், தாய்மொழியை அறிவியல் மற்றும் பிற பாடங்களைச் சொல்லிக்கொடுக்கும் மொழியாக அறிமுகப்படுத்தல், தாய்மொழியயை மற்றும் இரண்டாம் மொழியை பள்ளிகளில் அறிமுகப்படுத்தும் காலகட்டத்தைத் தீர்மானித்தல், தாய்மொழியை நீதிமன்றங்களிலும் அலுவலங்களிலும் பயன்படுத்தலை தீர்மானித்தல், முதியோர் கல்வித்திட்டத்திற்கான பாடங்களை உருவாக்கி கற்பித்தல், கலைச்சொற்களை உருவாக்குதல், விசைப்பலகையில் எழுத்துக்களின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல், சுருக்கெழுத்து மொழியயை உருவாக்குதல், மின்தகவல் தொடர்புகருவிகளுக்கு குறியீடுகளைத் தீர்மானித்தல், கணிப்பொறியில் தாய்மொழிக்குக் குறியீடுகளைத் தீர்மானித்தல் போன்ற மொழித் திட்டமிடும்

(டயஇபரயபந pடயஇஇ¦இப) விசங்களில் மொழியியல் ஆய்வுகள் முக்கிய பங்களிபு செய்கின்றது. மேலும் பேச்சுக்குறைபாட்டை நீக்குதல், ஊமைகளுக்கு மொழியைக் கற்றுத்தருதல், குருடர்களுக்கு படிக்கும் சாதனங்களை உருவாக்குதல போன்று மொழி தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வுகாண்பதற்கு மொழியியல் அறிவு பெரிதும் பயன்படுகின்றது.

**தன்மதிப்பீடு**

1. மொழியியல் என்றால் என்ன? மொழியியலின் நோக்கம் என்ன?

2. மொழியை படிப்பதற்கும் மொழியைப் பற்றி படிப்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?

3. பகுநிலைசார் மொழியியலின் பிரிவுகள் யாவை?

4. அமைப்பு மொழியியலின் அடிப்படைக் கொள்கை என்ன?

5. வரலாற்று மொழியியல் என்றால் என்ன?

**1.6. பாடத் தொகுப்புரை**

மொழியியல் ஆய்வின் நோக்கமும் குறிக்கோளும் பற்றி அறிந்துகொண்டோம். மொழி என்றால் என்ன, மொழியல் என்றால் என்ன என்பது குறித்த விரிவான விளக்கத்தை அறிந்துகொண்டோம். மொழியியலின் பிரிவுகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டோம். மேலும் மொழியியலின் பயன்பாடுகள் பற்றியும் அறிந்து கொண்டோம்.

1.7. கலைச்சொற்கள்

1. இலக்கணம் (grammar) 2. ஒலியனியல் (phonology) 3. உருபனியல் (morphology) 4. எழுத்தியல் (graphology) 5. சொல்லியல் (lexicolog) 6. தொடரியல் (syntax) 7. படிநிலையமைப்பு (hierarchical structure) 8. பொருண்மையியல் (semantics)

**1.8. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்**

கருணாகரன், கி. மற்றும் வ. ஜெயா. 1997. மொழியியல். குமரன் பதிப்பகம் சென்னை.

கோதண்டராமன், பொன். பொது மொழியியல். பூம்பொழில் சென்னை.

பரமசிவன்.கு. 1984. இக்கால மொழியியல் அறிமுகம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

முத்துச்சண்முகம். 1989. இக்கால மொழியியல் மதுரை பப்ளிஷிங் உறவுஸ் மதுரை. மூன்றாம் பதிப்பு.

தன்மதிப்பீடு

விடைகள்

1. மொழியை அறிவியல் அடிப்படையில் ஆய்வது மொழியியலாகும். மொழியைப் பேசுவதற்கு என்றில்லாமல் மொழியின் அமைப்பைப் பற்றி ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் என்ற மட்டங்களில் ஒருகால அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் உலகப்பொதுமை அடிப்படையிலும் ஆய்வது மொழியலாகும். மொழியியல் என்பதன் நோக்கம் மொழியின் அமைப்பை ஆய்வது மட்டும்தான் என்ற நிலையில் நின்றுவிடாமல் தத்துவம், தர்க்கம், இலக்கியம், உளவியல், சமூகவியல், மானிடவியல், கணிதவியல், கணினிவியல் என்ற பிற துறையுடன் தொடர்புபடுத்தி ஆய்வதும் மொழியியலின் பயன்பாட்டு அடிப்படையிலான நோக்கமாகும்.

2. மொழியை பேசுவதற்குப் வேண்டி படிப்பதற்கும் மொழியை ஆய்வதற்கு வேண்டி படிப்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. பிந்தயதுதான் மொழியியல் எனப்படும்.

3. பகுநிலை அடிப்படையில் மொழியியலை ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் எனப் பிரிக்கலாம்.

4. அமைப்பு மொழியியல் (structural linguistics) மொழியலகுகளை இரண்டுவகையிலான உறவுகளால் தொடர்புபடுத்தி ஆய்வு செய்கின்றது. முதலாவது, மொழியலகுகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து தொடர்ந்து வருவதால் பெறப்படும் உறவு. இதுவே தொடர் முறை உறவு அல்லது உறுப்பமைவு உறவு (syntagmatic relation) என்று குறிப்பிடப்படும். மற்றொன்று, ஓர் உறுப்புக்குப் பதிலாக அதே இடத்தில் வரும் அலகுகளுக்கிடையே உள்ள உறவு. இது அடுக்கு முறை உறவு (paradigmatic relation) எனப்படும். இவ்வாறு மொழி அலகுகள் தொடர்ந்து வந்தும் ஒன்றை ஒன்று பதிலீடு செய்தும் இரு விதமான உறவுகளை வெளிப்படுத்தி அவற்றின் வருகை அமைப்பை ஒரு அமைப்பொழுங்காக அமைத்துக்கொள்கின்றன. எந்த மொழியலகையும் மேற்சொன்ன கிடக்கை நிலை உறவாலும் செங்குத்து நிலை உறவாலும் நிர்ணயிக்கலாம்.

5. மொழி காலத்தாலும் இடத்தாலும் மாறும் தன்மையுடையது. ஒரு கால கட்டத்திலுள்ள மொழியமைப்பு அடுத்த காலகட்டத்தில் மாற்றமுற்றிக்கும். ஒவ்வொரு காலகட்ட மொழியமைப்பயையும் ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் பகுப்பாய்வு செய்து ஒப்பிட்டுப் பார்த்தால்

மொழியானது அதன் வேறுபட்ட அமைப்பு மட்டங்களில் வேறுபட்டிருப்பதைக் காணலாம். இத்ததைய ஆய்வு வரலாற்று மொழியியல் (historical linguistics) ஆய்வு என்படும். எடுத்துக்காட்டாக பழந்தமிழின் ஒலியனியல், உருபனியல், தொடரியல் மற்றும் பொருண்மையியல் பண்புக்கூறுகள் இடைக்கால மற்றும் தற்காலத் தமிழின் இத்தகையப் பண்புக்கூறுகளில் வேறுபட்டிருக்கின்றது என்று ஆய்ந்து கூறுவது வரலாற்று மொழியியல் ஆய்வாகும்

## பாடப்பகுதி 2

## ஒலியியல்

இதற்கு முன் மொழியியல் ஆய்வின் நோக்கமும் குறிக்கோளும் பற்றி படித்தீர்கள். மொழி என்றால் என்ன, மொழியியல் என்றால் என்ன என்பது குறித்த விரிவான விளக்கத்தை அறிந்தீர்கள். மொழியியலின் பிரிவுகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டீர்கள் மொழியியலின் பயன்பாடுகள் பற்றி அறிந்து கொண்டீர்கள். இப்பிரிவில் ஒலியியல் குறித்து விரிவாகத் தெரிந்துகொள்வோம்.

படிப்புநோக்கம்

• ஒலியியலின் நோக்கமும் விளக்கமும்

• ஒலியிப்பியயல்

• மொழியாய்வில் ஒலியியலின் பயன்பாடு பாடக்கருத்தலகுகள்

**2.0. பாட முன்னுரை**

2.1. ஒலியியலின் நோக்கமும் விளக்கமும்

2.2. மூவகை ஒலியியல்

2.3. ஒலிப்பியல்

2.3.1. பேச்சுறுப்புகள்

2.3.2. மெய்யொலிகள்

2.3.3. உயிரொலிகள்

2.4. ஒலியியலாய்வின் பயன்பாடுகள்

2.5. பாடத்தொகுப்புரை

2.6. கலைச்சொற்கள்

2.7. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

**2.0. பாட முன்னுரை**

இப்பகுதியில் மொழி ஆய்வில் ஒலியியலின் பங்கையும் ஒலியியல் என்பதன் விளக்கத்தையும் ஒலிப்பியல் (அல்லது ஒலிபிறப்பியல்) பற்றிய விரிவான விளக்கத்தையும் மனிதன் மொழியை மெய்படுத்தம் செய்யப் பயன்படுத்தும் ஒலிகளின் வகைபாடுகள் மற்றும் வகைப்பாட்டிற்கான ஒலிப் பண்புகூறுகள் பற்றியும் படிப்போம்.

**2.1. ஒலியியலின் நோக்கமும் விளக்கமும்**

ஒலி மொழியை மெய்படுத்தம் செய்யும் செவிப்புல அடிப்படையிலான குறியீடாகும். ஒலியியல் என்றால் ஒலிகளைப் பற்றி படிப்பது என்று பொதுவாகக் கூறலாம். மொழியியலில் பேச்சொலிகள் மட்டும் ஆயப்படுகின்றன என்பதால் ஒலியியல் என்பதைப் பேச்சொலிகளைப் பற்றி ஆய்தல் அல்லது படித்தல் என விளக்கம் தரலாம். கருத்துப்பரிமாற்ற மாதிரியில் தகவலை அனுப்புவர் மூளையில் எண்ணும் தகவலானது நரம்பணுக்களின் உதவியால் இயக்கப்படும் ஒலியுறுப்புகளால் ஒலிகளாகக் குறியாக்கம் செய்யப்பட்டு, காற்று ஊடகத்தின் வழியாகச் சென்று பெறுபவர் காதுகளை அடைந்து அவரது மூளையால் குறியத் திறவு செய்யயப்பட்டு தகவல் புரிந்துகொள்ளப்படுகின்றது என்று முன்னர் பார்த்தோம். இதன் அடிப்படையில் ஒலியியலை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

**2.2. மூவகை ஒலியியல்**

ஒலிகளை அதன் பிறப்பு, காற்றில் பரவுதல், காதால் உணர்தல் அடிப்படையில் மூன்றாகப் பகுக்கலாம்:

- ஒலிப்பியல் (Articulatory phonetics)
- ஒலியியக்கவியல் (Acoustic phonetics)
- ஒலியுணர்வியல் (Auditory phonetics)

**ஒலிப்பியல் (articulatory phonetics)**

Articulatory phonetics என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான சொல் ஒலிப்பியல் ஆகும். ஒலிப்பு + இயல் = ஒலிப்பியல்; பேச்சொலிகள் ஒலிப்பதைப் பற்றி படிக்கும் படிப்பு. இதைப் பேச்சொலியல் என்றும் கூறுவர். ஒலிப்பியல் ஒலிகள் எவ்வாறு உச்சரிக்கப்படுகின்றன என்பதை ஆராய்கிறது. இதனால் இதனை உச்சரிப்பொலியியல் என்றாலும் பொருந்தும். ஒலிகளின் பிறப்பு குறித்து விளக்குவதால் இது ஒலிபிறப்பியல் என்றும் அறியப்படும். இவ்வாய்வுமுறை பேச்சுறுப்புக்களின் அமைப்பையும் தொழிலையும் ஆதாரமாகக் கொண்டு உடற்கூற்றியல் நோக்கில் ஒலிகளின் பிறப்பை ஆராயும்.

ஒலிப்பியலே காலத்தால் முந்திய ஒலியாய்வு முறை என்பர். அனேகமாக எல்லா மொழிகளிலுள்ள மரபிலக்கணங்களிலும் ஒலிகள் இவ்வாய்வு முறையில்தான் ஆராயப்படுகின்றன. இந்திய மொழிகளில் மிகப் பழைய மொழிகளாகக் கருதப்படுகின்ற சமஸ்கிருதத்திலும் தமிழிலும் ஒலிப்பியல் முறையில் ஒலிகள்

ஆராயப்படுகின்றன. இன்றைய ஒலிப்பியல் வளர்ச்சிக்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் அமைந்தது பாணினியின் ஒலிப்பியல் விளக்கமே என்பர். மரபிலக்கணங்களில் எழுத்துகளுக்கும் ஒலிகளுக்கும் இடையேயும் எழுத்துக்களின் எண்ணிக்கைக்கும் ஒலிகளின் எண்ணிக்கைக்கும் இடையேயும் நிலவி வந்த மயக்கநிலை இவ்வாய்வு முறையால் தெளிந்தது.

மனிதனுடைய வாயறையில் உள்ள பல், நாக்கு, அண்ணம் போன்ற பல்வேறு இடங்களில் இருந்து பல்வேறு பேச்சொலிகள் பிறக்கின்றன. ஒரு ஒலி பிறக்கும் இடங்களையும் வகைகளையும் விளக்கி ஆராயும் ஒலியியல் பிரிவு ஒலிப்பியல் எனப்படும். ஒரு மொழியின் ஒலிப்பிடம், ஒலிப்பு முறை ஆகியவற்றைப் பற்றி விளக்குவது ஒலிப்பியல் அல்லது பேச்சொலியியல் எனப்படும். பேச்சொலிகளை உயிரொலிகள் (vowels), மெய்யொலிகள் (consonants) எனப்பிரிப்பர். தமிழ் மரபிலக்கணம் தமிழுக்கு அ, ஆ, இ, ஈ போன்ற 12 உயிரெழுத்துக்கள் இருப்பதாயும் 18 மெய்யெழுத்துக்கள் இருப்பதாயும் கூறும். ஒலிகளை முதலாவதாக அவற்றின் ஒலிப்பு முறை அடிப்படையில் உயிரொலிகள் மற்றும் மெய்யொலிகள் எனப் பகுக்கலாம்.

**ஒலியியக்கவியல்** (acoustic phonetics)

Acoustic phonetics என்பதற்கு இணையான தமிழ்ச் சொல் ஒலியியக்கவியல் ஆகும். ஒலி+இயக்கம்+ இயல் = ஒலியியக்கவியல்; ஒலிகளின் இயக்கத்தைப் பற்றி படிக்கும் படிப்பு. ஒலிகளின் ஒலியியக்க அமைப்பை ஆராய்கிறது. இதைத் தவிர ஒலிகளை கேட்கும் இயல்பைக் கொண்டும் விளக்கலாம். நாம் அன்றாடம் பல ஒலிகளைக் கேட்கிறோம். இவற்றுள் ஒர் ஒலியை மற்றொரு ஒலியிலிருந்து வேறாக நாம் கேட்டுணர்வதற்கு முக்கிய காரணமாக அமைவது அதன் ஒலியியக்க அமைப்பாகும். ஒலிகளின் பல்வேறு ஒலியியக்க அமைப்பை ஆராய ஸ்பெக்ரோகிராப் என்ற கருவியை ஒலியியல் அறிஞர்கள் கையாளுவர். பேச்சொலிகளின் பண்பு நலன்களை ஒலியாராய்ச்சி கருவிகளின் மூலம் கண்டறிவதே ஒலியியக்கவியலின் செயலாகும்.

**ஒலியுணர்வியல்** (auditory phonetics)

Auditory phonetics என்பதற்கு இணையான தமிழ்ச் சொல் ஒலியுணர்வியல் என்பதாகும். ஒலி+உணவு+இயல் + ஒலியுணர்வியல்; ஒலிகளை உணர்வதை உணர்வதைப் படிக்கும் படிப்பு. இதைக் கேட்பொலியியல் என்றும் கூறுவர். ஒலியுணர்வியல் என்பது ஒரு ஒலி செவியால் உணரப்படும் தன்மையை

விவரித்தல் ஆகும். ஒலியாராய்ச்சியில் மூன்றாவது ஆய்வு முறையாக எண்ணப்படுவது ஒலியுணர்வியலாகும். இவ்வாய்வு முறையில் ஒலிகள் அவற்றை ஒலியாராய்ச்சியாளன் கேட்கும் நிலையையும் அறிந்துணரும் வகையையும் ஆதாரமாகக் கொண்டு ஆராயப்படுகின்றன. ஒலியாராய்ச்சியில் ஒலிப்பியல் வரவேற்கப்பட்ட அளவிற்கு ஒலியுணர்வியல் வரவேற்கப்படவில்லை. பெரும்பாலான மொழி ஆராய்ச்சிகளில் ஒலிப்பியலையோ ஒலியியக்கவியலையோ அடிப்படையாகக் கொண்ட ஒலியாராய்ச்சியையே பார்க்க முடிகிறது.

**2.3. ஒலிப்பியல் ஆய்வு**

முன்னர் கூறியபடி பேச்சொலிகளின் பிறப்பு பற்றி ஆய்வது ஒலிப்பியல் ஆய்வாகும். இதில் ஒலியுறுப்புகள் பற்றியும் அவை எவ்வாறு வேறுபட்ட ஒலிகளை உருவாக்குகின்றன என்பது பற்றியும் அவற்றை ஒலிப்பிடம் அடிப்படையிலும் ஒலிப்புமுறை அடிப்படையிலும் எவ்வாறு வேறுபடுத்தலாம் என்பது பற்றியும் இங்கு விளக்கப்படும். குறிப்பாகத் தமிழ் ஒலிகளின் பிறப்பியல் பற்றி இங்கு விரிவாகப் பேசப்படும். ஒலிப்பியல் ஆய்வு ஒலியியக்கவியல் ஆய்வுக்கும் உரையிலிருந்து பேச்சாய்வுக்கும் பேச்சிலிருந்து உரையாய்விற்கும் அடிப்படையாய் அமையும்.

**2.3.1. ஒலியுறுப்புகள்**

நுரையீரல் முதல் உதடுகள் வரை உள்ள உறுப்புகளின் இயக்கங்களே பேச்சொலிகளைப் பிறப்பிக்கின்றன. ஒலியுறுப்புகள் என்னும் பெயர் நுரையீரல் முதல் உதடுகள் வரையுள்ள உறுப்புகளையும் அவற்றை இயக்கும் தசைகளையும் குறிக்கின்றது. இவ்வுடற் பகுதியைப் பேச்சுப்பாதை (speech tract) என்று அழைப்பர். ஒலியுறுப்புகளை எல்லாம் கீழ்வரும் பேச்சுப்பாதையின் படம் காட்டும்:

**படம் 4 பேச்சு உறுப்பு**




பேச்சு உறுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: 1. இதழ் (உதடு) (lips), 2. பல் (teetch), 3. நுனியண்ணம் (alveolar ridge/alveolum), 4. இடையண்ணம் (dome), 5. கடையண்ணம் (velum), 6. உள்நாக்கு (uvula), 7. நுனிநா (tip of the tongue), 8. இடைநா (blade of the tongue), 9. கடைநா (dorsum), 10. அடிநா (root of the tongue), 11. மூக்கறை (nasal cavity), 12. மூக்கறை வாயில் (pharnx), 13. முன்தொண்டை (epiglottis), 14.காற்றுக்குழல் மூடி (epiglottis), 15. குரல்வளை மடல்கள் (vocal chords), 16. காற்றுக் குழல் (velic), 17. குரல் வளை (larynx/adams apple).

**மூக்கறை**: வாயிலிருந்து மேல்நோக்கிச் சென்று கீழே இறங்கி மூக்கில் முடியும் உடற்பகுதியை மூக்கறை எனலாம். நுரையீரலிலிருந்து வரும் மூச்சு மேற்தொண்டையின் மேற்பகுதியிலிருந்து மூக்கறைக்குச் செல்ல ஒரு வாயில் உண்டு. இதனை மூக்கறை வாயில் எனலாம். இம்மூக்கறை வாயில் அடைந்திருக்கும் போது நுரையீரலிலிருந்து வரும் மூச்சு வாய் வழியாக

வெளியேறுகிறது. இது திறந்திருக்கும் போது மூச்சு மூக்கறையுனுள்ளே சென்று நாசித்துவாரங்கள் வழியாக வெளியேறுகிறது.

**நா**: மொழியில் காணப்படுகின்ற பல ஒலிகளை உச்சரிப்பதற்கு பயன்படும் ஓர் உறுப்பு நா. பேச்சுறுப்புகளில் அண்ணத்தை நோக்கி வளையவும், குறுகவும் செய்வது நா வளை எனப்படும். குரல்வளை மடல்களின் அதிர்வோடு ஆனால் ஒலிபாதையில் எவ்விதத் தடுப்பும் உரசலும் இன்றித் தோன்றுவது உயிர்கள் எனப்படும். நாவானது நுனிநா, இடைநா, கடைநா, அடிநா என நான்காகப் பகுக்கப்படும்.

**இதழ்**: பேசுவதற்குப் பயன்படுகின்ற உறுப்புகளில் இதழ் முக்கியமான உறுப்பாகக் கருதப்படுகிறது. மொழியில் உள்ள ஒலிகளான உயிரொலிகளையும் மெய்யொலிகளையும் உச்சரிக்கும் போது இதழின் பங்கு முக்கியமானதாக உள்ளது. பேச்சுறுப்புகளில் இதழ் அசையும் உறுப்பாகும். இதனை மேலிதழ், கீழிதழ் என்று இரண்டாக வகைப்படுத்தலாம். சில ஒலிகளை உச்சரிப்பதில் கீழிதழும், சில ஒலிகளை உச்சரிப்பதில் மேழிதழும் செயல்படுவதால் ஒலி வகைகளின் அடிப்படையில் இவ் வேற்றுமை முக்கியமானது எனலாம். கீழிதழ் போல் மேலிதழ் எந்த ஒலியையும் ஒலிப்பதில் தனியாகச் செயற்படுவதில்லை. ஒயிரொலிகளைப் பொறுத்தவரையில் இதழ்களின் பங்கு மிகவும் முக்கியமானது. சில உயிரொலிகள் உச்சரிக்கப்படும் போது இதழ்கள் குவிந்தும் வேறு சில உயிரொலிகள் உச்சரிக்கப்படும் போது விரிந்தும் செயற்படுகின்றன.

**பல்**: பல் ஒரு நிலையொலிப்பியாகும். பல்லொலிகளின் பிறப்பிடம் பல்லாகும்.

**அண்ணம்**: அண்ணமானது நுனியண்ணம், இடையண்ணம், கடையண்ணம் என பகுக்கப்படும். இவை ஒலிப்பின் போது இயங்காமல் நிலையாக இருப்பதால் இது நிலையொலிப்பி (passive articulator) எனப்படும்.

**உள்நா**: உள்நா வாயறையையும் மூக்கறையையும் பிரிக்க உதவும். வாயொலிகளின் உச்சரிப்பின் போது இது மூக்கறை வாயிலை அடைத்து காற்று மூக்கறைக்குச் செல்வதை தடைசெய்யும். மூக்கொலிகளின் உச்சரிப்பின் போது இது மூக்களை வாயிலைத் திறந்து காற்று மூக்கறை வழியாகச் செல்வதை அனுமதிக்கும்.

**குரல்வளை மடல்கள்**: தொண்டை குருத்தெலும்புகளால் ஆன பெட்டியாகும். இப்பெட்டியில் ஒட்டிக்கொண்டிருக்கும் இரண்டு மெல்லிய சவ்வுகளாலான

பேச்சுறுப்பை குரல்வளை மடல்கள் என்பர். குரல்வளை மடல்கள் அடைப்பு நிலையில் இருக்கும்போது பிறக்கும் ஒலியை குரல்வளை அடைப்பொலி என்பர். குரல்வளை மடல்கள் அகன்று விரிந்திருக்கையில் வெளியேறும் மூச்சு அதிர்வின்றி வெளியேறும். இவ்வொலி ஓசை குன்றி இருக்கும். இவ்வாறு உச்சரிக்கப்படும் ஒலிகள் குரலிலா ஒலிகள் எனப்படும். குரல்வளை மடல்கள் அண்மைப்பட்டு இருக்கையில் வெளியேறும் காற்று அதிர்வைப்பெறுவதால் அப்போது உச்சரிக்கப்படும் ஒலி ஓசையுடனிருக்கும். அது குரலொலி எனப்படும்.

**மூச்சோட்ட இயக்கம்**

மூச்சு என்பதற்கு வாய்க்கும் நுரையீரலுக்கும் இடைபட்ட காற்று எனப் பொருள்படும். மூச்சுக் காற்றானது மூக்கு மற்றும் வாய் வழியாக விரைந்து நுரையீரலுக்குச் சென்று வருதலை மூச்சோட்டம் எனலாம். நுரையீரல் முதல் குரல்வளையுள்ள உறுப்புகளின் இயக்கத்தை மூச்சோட்ட இயக்கம் (air-stram process) குரல்வளையில் நிகழ்வதை ஒலிப்புடமைத் இயக்கம் (phonation process) குரல்வளை முதல் உதடுவரை நிகழ்வதை ஒலிப்பு இயக்கம் (articulatry process) என்றும் மூக்கறையில் நிகழ்வதை வாய்மூக்கு இயக்கம் (oral-nasla proeess) என்றும் அழைக்கப்படுகின்றது. ஒலிப்புகள் மூச்சோட்ட இயக்கத்தை மாற்றி பலவித ஒலிகளை எழுப்புகின்றது எனலாம்.

**2.3.2. உயிரொலி**

உயிரொலி என்றால் என்ன என்று நீங்கள் சரியாக விளக்க அறியாவிட்டாலும் உயிரெழுத்து பற்றி ஆரம்ப வகுப்புகளில் படித்திருப்பீர்கள். மூச்சுக்காற்றானது வாயறையில் எவ்விதத் தங்கு தடையுமின்றி அதாவது, இயங்கு ஒலிப்பான்களுக்கும் இயங்கா ஒலிப்பான்களுக்கும் இடையே தடையின்றிச் செல்லும்போது உயிரொலிகள் பிறக்கின்றன. மெய்யொலிகள் பிறக்கும் போது முழுத்தடையோ சிறிதளவு தடையோ நிச்சயம் இருக்கும். உயிரொலிகள் மூன்று முதன்மையான பரிமாணங்கள் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன:

- வாய் திறந்திருக்கும் அளபு (மேல், மேலிடை, கீழிடை, கீழ் அல்லது திறந்த,பகுதிதிறந்த, பகுதி மூடிய, மூடிய)
- நாவின் உயர்ந்த பகுதியின் இருப்பிடம் (முன், நடு, பின்)
- இதழ்களின் இருப்பு (குவி, விரி)

மேற்கண்ட பரிமாணங்களின் அடிப்படையில் தமிழ் உயிர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

இ [i] - மேல் முன் இதழ் விரி குற்றுயிரொலி

ஈ [i:] - மேல் முன் இதழ் விரி நெட்டுயிரொலி

எ [e] - மேலிடை முன் இதழ் விரி குற்றுயிரொலி

ஏ [e:] - மேலிடை முன் இதழ் விரி நெட்டுயிரொலி

அ [a] - கீழ் நடு இதழ் விரி குற்றுயிரொலி

ஆ [a:] - கீழ் நடு இதழ் விரி நெட்டுயிரொலி

ஒ [o] - மேலிடை பின் இதழ் குவி குற்றுயிரொலி

ஓ [o:] - மேலிடை பின் இதழ் குவி நெட்டுயிரொலி

உ [u] - மேல் பின் இதழ் குவி குற்றுயிரொலி

ஊ [u:] - மேல் பின் இதழ் குவி நெட்டுயிரொலி

தமிழில் பத்து உயிரொலிகளும் இரண்டு ஈருயிர்களும் உள்ளன.

**ஈருயிர் (diphthong)**: ஓர் உயிர் ஒலியின் உச்சரிப்போடு தொடங்கி மற்றொரு உயிரொலியின் உச்சரிப்போடு முடிவடையும் உயிரொலியின் ஒலிப்பே ஈருயிர் (dipthongs) எனப்படுகிறது. இதுவொரு நெட்டுயிராக ஒலிக்கப்படுகிறது. இரண்டு உயிரொலிகளின் சாயலும் இந்நெட்டொலியில் காணப்படும். தமிழ் ஐ, ஔ ஆகிய இரண்டும் இவ்வாறு ஒலிக்கப்படும் ஈருயிர்களாகும். எ.கா.

அ + இ = ஐ [ai]

அ + உ = ஔ [au]

**அரையுயிர்** (**semi vowels**): இது உயிரொலி போன்று உச்சரிக்கப்பட்டாலும் மெயொலி போன்று ஒலிப்பிடம் உடையதாக அமையும். எனவே மெய்யொலியின் தன்மையே அதிகம் பெற்றிருப்பதாகக் கருதப்படும். மேலும் உயிரொலி போன்று இது அசையாக (syllable) அமையாது. அதனால் ய், வ் இரண்டும் தமிழில் அரை உயிர்களாகக் கருதப்படுகின்றன. அவை முறையே இ, உ என்ற உயிர்களின் தன்மையயப் பெற்று விளங்குகின்றன.

**குரலொலி (voiced sound):** குரலொலி என்பது குரல்வளை மடல்களனின் அதிர்வுடன் எழுப்பப்படும் ஒலி எனப் பொருள்படும். நெட்டுயிர்கள்: ஒவ்வொரு ஒலியும் அவ்வொலிக்கே உரிய கால அளவோடு உச்சரிக்கப்படுகிறது. இக்கால அளவு மாத்திரை எனப்படும். சில ஒலிகளை உச்சரிக்கும் கால அளவு குறுகியும்,

சில ஒலிகளை உச்சரிக்கும் கால அளவு நீண்டு இருக்கும். ஒரு மாத்திரை கால அளவில் பிறக்கும் ஒலிகளை குறில் (short vowel) என்றும், இரண்டு மாத்திரை கால அளவில் பிறக்கும் ஒலிகளை நெடில் (long vowel) என்றும் வகைப்படுத்தலாம். **விறைப்புயிர்கள்** (**tense vowels**): பேச்சுறுப்புகளின் தசையில் அதிகமான விறைப்பை ஏற்றி எழுப்பப்படும் உயிர்களுக்கு விறைப்புயிர்கள் என்று பெயர். உயிரொலிகளில் குறடில், நெடில் பாகுபாடில்லாத மொழிகளில் இவை விறைப்புயிர்களாக உச்சரிக்கப்படும் இயல்பைக் காணலாம். எடுத்துக்காட்டாக இந்தி மொழியில் [e, o, a] ஆகிய ஒலிகள் விறைப்புயிர்களாகும். தமிழ் மொழியில் நெட்டுயிர்களை விறைப்பாக உச்சரிக்கும் இயல்பு உண்டு. பிரெஞ்சு மொழியில் இவ்வகை உயிர்கள் மிகச் சாதாரணமாகக் காணப்படுகிறன.

**நாவளை உயிர்கள்** (**Retroflex vowels**): உயிரொலிகளின் பிறப்பாக்கத்தில் இடைநா இடையண்ணத்தை நோக்கி எழும் போது முன்னுயிர்களும், இடைநாவிற்கும் கடைநாவிற்கும் இடையே உள்ள அண்ணப்பகுதியை நோக்கி எழும் போது நடுவுயிர்களும் பிறக்கின்றன. நா இவ்வாறு செயற்படும் போது நுனி நா மேற்பல் வரிசையை நோக்கியோ அல்லது அண்பல்லை நோக்கி வளைந்தோ அல்லது இடையண்ணத்தை அடுத்து வளைந்தோ இருக்கும். இவ்வுயிர்கள் நாவளை உயிர்கள் எனப்படும்.

### 2.3.3. மெய்யொலிகள்

மூச்சுக்காற்று ஒலியுறுப்பால் தடுத்து நிறுத்தப்படுவதாலோ வேறுவகையில் மாற்றப்படுவதலோ மெய்யொலிகள் பிறக்கின்றன. அதாவது நுரையீரலிலிருந்து வெளியேறும் மூச்சு வாயறையில் அடைபடவோ அல்லது சிறிய இடுக்கின் வழியாகச் செல்லவோ அல்லது நாவின் இருமருங்கு வழியாகச் செல்லவோ அல்லது கடையண்ணம் மூக்கறை வாயிலைத் திறக்க மூக்கறையில் ஒலியூக்கம் பெற்று நாசி துவாரங்கள் வழியாக வெளியேறவோ செய்கையில் மெய்யொலிகள் பிறக்கின்றன. ஒலிப்பிடத்தையும் (இயங்கும் ஒலிப்பானும் இயங்கா ஒலிப்பானும் தொடர்பு கொள்ளுமிடம்) ஒலிப்பு முறையையும் அடிப்படையாகக் கொண்டு மெய்யொலிகளைத் தெளிவாக விளக்கலாம். இருப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு மெய்யொலிகளைப் பின்வருமாறு பகுக்கலாம்.

இதழ் ஒலிகள் (Labial Sounds) - ப், ம் [p, m]

பல்லொலிகள் (Dental Sounds) - த், ந் [t, n]

அண்பல்லொலிகள் (Alveolar sounds) – ற், ர், ன் [r, r, n]

இடையண்ண ஒலிகள் (Palatal Sounds) – ச், ஞ், ய் [c, n, y]

கடையண்ண ஒலிகள் (Velar Sounds) - க், ங் [k, n]

நாமடி ஒலி (Refroflex Sounds) - ட், ண், ள், ழ் [t, ɳ, l, l]

ஒலிப்பு முறை அடிப்படையில் ஒலிகளை வெடிப்பொலி, உரசொலி, மருங்கொலி, ஆடொலி, மூக்கொலி, வருடொலி எனப் பகுக்கலாம். இவ்வொலிகளின் வேறுபட்ட ஒலிப்பிடங்களையும் ஒலிப்பு முறைகளையும் அறிந்துகொள்வோம். அடைப்பொலி: இவற்றை வெடிப்பொலி என்றும் கூறுவர். வாயறையின் ஓரிடத்தில் மூச்சுக்காற்று முழுவதும் தடை செய்யப்பட்டு திடீரென்று வெடிப்போடு வெளியேறினால் அதற்கு அடைப்பொலி என்று பெயர். இவ்வொலிப்பின் போது கடையண்ணம் மூக்கறையினுள் மூச்சு செல்லாதவாறு அடைக்கின்றது. குரல்வளை மடல்கள் அதிரவோ அதிராமலோ இருக்கலாம். தமிழில் வல்லின மெய்கள் அடைப்பொலிகளாகும். எ.கா. க், ச், ட், த், ப் [k, c, t, t, p].

**மூக்கொலி**: அடைப்பொலி போலவே அமைந்து அண்ணக்கடை திறந்து மூக்கறை வழியே மூச்சுக்காற்று வெளியே செல்லும் போது மூக்கொலி தோன்றும். பெரும்பாலும் மூக்கொலி உண்டாகும்போது குரல்வளை மடல்கள் அதிர்கின்றன. தமிழில் மெல்லின மெய்கள் மூக்கொலிகளாகும்: ங், ஞ், ண், ந், ம் , ன் [ŋ, ɲ, ɳ , n,  m, n].

**உரசொலி**: வாயறையில் மூச்சுக்காற்று வரும்போது முழுவதும் தடுக்காமால் மூச்சு வெளியேறும் பாதையை ஒலிப்பானால் குறுக்கி அந்த இடுக்கின் வழியே செலுத்தினால் உராய்வுத்தன்மை (கசiஉவiடிஇ) ஏற்படும். இப்படி உராய்வுத் தன்மையோடு பிறக்கும் ஒலிகளே உரசொலிகள் எனப்படுகின்றன. தமிழில் சகரம் [c] பாண்டி நாட்டுத் தமிழைத்தவிர பிற மாவட்டங்களில் [s] என்று உரசொலியாகவே உச்சரிக்கப்படுகிறது. உரசொலி உண்டாகும் போது குரல்வளை மடல்கள் அதிர்ந்தும் அதிராமலும் இருக்கலாம். அப்போது அண்ணக்கடை அடைப்பும் ஏற்படும் (β, f,  s, y, h)

**மருங்கொலி**: மூச்சுக்காற்று வாயறையில் ஓர் இடத்தை அடைத்து நாக்கின் இரு மருங்கிலும் வெளியேறும் போது பிறக்கும் ஒலி மருங்கொலி எனப்படுகிறது. ல், ள், ழ் (l, ɭ, ɭ) மூன்றும் மருங்கொலிகளாகும்.

**வருடொலி**: நாக்கின் நுனி மேலே எழுந்து உள்நோக்கி வளைந்து பின் வேகமாகக் கீழே வரும்போது அண்ணத்தில் மோதுவதால் எழுகிற ஒலியே வருடொலி. ஆடொலி: மூச்சுக்காற்று வெளியேறும் போது இதழ்களோ நுனி நாக்கோ உள்நாக்கோ வேகமாக அதிர்ந்து ஆடும்படி அமைகிற ஒலியே ஆடொலி எனப்படுகின்றது. இன்று குமரி மாவட்ட மக்களால் மட்டுமே தமிழ் வழக்கில் ற் [r] என்ற ஆடொலி உச்சரிக்கப்பட்டு வருகிறது. பின்வரும் அட்டவணை வேறுபட்ட மெய்யொலிகளின் வகைகளைக் காட்டும்:

அட்டவணை 2

| | ஈரிதழ்<br>குஇ | பல்லிதழ்<br>குஇ கு | பல்<br>குஇ கு | நுனியண்ணம்/ அண்பல்<br>குஇ இ | நுனியண்ணப் பின்புறம்<br>குஇ கு | நாவளை<br>குஇ கு | இடை அண்ணம்<br>குஇ கு | கடை அண்ணம்<br>குஇ கு | முன் தொண்டை<br>குஇ கு | குரல் வளை<br>குஇ கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மூக்கொலி | ம்<br>m | | ந்<br>n | ன்<br>n | | ண்<br>ɳ | ஞ்<br>ɲ | ங்<br>ŋ | | |
| அடைப் பொலி | ப்<br>p b | | த்<br>t d | ற் | | ட் | ச் ஜ்<br>c j | க்<br>k g | | |
| உரசொலி | | வ்<br>f v | θ | ஸ்<br>s z | | ஷ் | | | | ஹ்<br>h |
| மருங்கொலி | | | | ல்<br>l | | ள் | ழ் | | | |
| ஆடொலி | | | | ற் | | | | | | |
| அடியொலி | | | | ர்<br>r | | | | | | |
| வருடொலி | | | | | | | | | | |

மேற்கண்ட அட்டவணையில் உலக ஒலியியல் கழகத்தாரின் குறியீடுகளும் (International Phonetic Association Alphabets) சாத்தியமான இடங்களில் தமிழ்மொழிக் குறியீடுகளும் தரப்பட்டுள்ளன. கு குரலொலி, குஇ= குரலிலா ஒலி

**2.4. ஒலியியலாய்வின் பயன்பாடுகள்**

ஒலியியல் படிப்பைப் பொறுத்தவரையில் உடலியக்கவியலின் ஆதிக்கத்தையும் அவசியத்தையும் ஒலிப்பியலில் பார்த்தோம். மொழி கற்பித்தலிலும் கற்றலிலும் சமுதாயவியலிலும் அறிவியலிலும் ஒலியியல் பெரும் பங்களிப்பு செய்கின்றது. புதிய மொழிகளை ஆயவிருக்கும் மொழியியலார்களும் புதிய மொழியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் புதிய மொழியைக் கற்கும் மாணவர்களும் அறிந்த மொழியை நன்றாக உச்சரிக்க விரும்புகின்ற மொழி பேசுபவர்களும் ஒலியியல் அறிவுடையவராய் இருத்தல் வேண்டும். புதிய மொழியை ஆயவிருக்கும் மொழியியலார் ஒலியியலில் நன்கு பயிற்சியுடையவராய் இருந்தால்தான் நேரிடும் புதிய மொழியின் ஒலியமைப்பை விளங்கிக்கொள்ளவியலும். ஒலிக்கும் ஒலியனுக்கும் எழுத்திற்கும் இடையிலான பொருத்தங்களை அவர்கள் நன்கு உணர்ந்தவராய் இருத்தல் வேண்டும். ஒரு மொழியாசிரியருக்கு ஒரு மொழியின் உச்சரிப்பைச் சரியாக மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் பின்வரும் பகுதிகளில் போதிய அறிவும் பயிற்சியும் வேண்டும்:

• பேச்சுறுப்புகளின் அமைப்பைப் பற்றியும் அவை செயற்படும் விதத்தைப் பற்றியும் தொpந்திருக்க வேண்டும்.

• எவ்வாறு பேச்சுமொழிக்கூறுகளை அவற்றைக் கற்பிக்கும் நோக்கத்தோடு ஆராய்ந்து விளக்கவேண்டும் என்பதில் சரியான தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

• பொதுவாக, கற்பிக்கின்ற மொழியின் ஒலியமைப்பைப் பற்றித் தொpந்திருக்கவேண்டும். அதோடு மொழியைக் கற்பவரின் தாய்மொழியின் ஒலியமைப்பைப் பற்றிய அறிவும் முக்கியமானது.

• மொழி உச்சரிக்கும் போது மாணவர் செய்யும் தவறுகளை உடனடியாகக் கேட்டுணர்ந்து கொள்ளும் முறையில் காதுகளைப் பழக்கியிருத்தல் வேண்டும்.

• கற்பிக்கின்ற மொழியிலுள்ள ஒவ்வொரு ஒலியையும் தனியாக உச்சரிக்கும் வகையில் பேச்சுறுப்புகளைத் தன் கட்டுப்பாடுக்குள் வைத்திருக்கவேண்டும்.

• மாணவர்கள் தவறாக உச்சரிப்பனவற்றைத் தானும் பாவனை செய்யும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

• ஒலிகளைக் கற்பிக்கும் போதோ அல்லது மாணவர்கள் செய்யும் பிழைகளைத் திருத்தும் போதோ சில குறுக்கு வழிகளைக் கையாளும் திறன் பெற்றிருக்கவேண்டும். கணினியின் வரவிற்குப் பின்னர் ஒலியியல் ஆய்வு வேறு பரிமாணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. பேச்சை உரையாக (எழுத்து வடிவில்) மாற்றுதல், உரையை பேச்சாக மாற்றுதல் என்ற செயல்பாடுகளுக்கு ஒலியியக்கவியலில் ஆழ்ந்த அறிவு தேவை. பேச்சுக் குறைபாடுகளை நீக்க முயலும் மருத்துவர்களுக்கும் வல்லுனர்களுக்கும் ஒலியியல் பற்றிய ஆழ்ந்த அறிவு மிகவும் அவசியம். **தன்மதிப்பீடு 2**

1. ஒலிப்பியல் என்றால் என்ன?
2. ஒலியியக்கவியல் என்றால் என்ன?
3. ஒலியுணர்வியல் என்றால் என்ன?
4. உயிரொலிக்கும் மெய்யொலிக்கும் உள்ள வேறுபாடு என்ன?
5. உயிரொலிகளை எவ்வாறு வகைபடுத்துவீர்கள்?
6. மெய்யொலிகளை எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்?
7. ஈருயிர் என்றால் என்ன?
8. வெடிப்பொலி என்றால் என்ன?
9. உரசொலி என்றால் என்ன?
10. மூக்கொலி என்றால் என்ன?
11. ஆடொலி என்றால் என்ன?
12. மருங்கொலி என்றால் என்ன?

**2.5. பாடத்தொகுப்புரை**

இப்பகுதியில் மொழி ஆய்வில் ஒலியியலின் முக்கியத்துவம் பற்றி இவ்வலகில் தொpந்து கொண்டோம். மூவகை ஒலியியல் ஆய்வுகளான ஒலிப்பியல், ஒலியியக்கவியல் மற்றும் ஒலியுணர்வியல் குறித்து அறிந்து கொண்டோம். பேச்சொலியியல் பற்றிய விரிவான விளக்கமாக உயிரொலிகளின் வகைகளையும் ஒலிப்பு மு்றைகளையும் மெய்யொலிகளின் வகைகளையும் ஒலிப்பு முறைகளையும் அறிந்து கொண்டோம். ஒலியியல் ஆய்வின் பயன்பாடுகள் பற்றி தெரிந்து கொண்டோம்.

2.6. கலைச்சொற்கள் , 1. அடைப்பொலி (stop) , 2. அரையுயிர் (semi-vowel) , 3. ஆடொலி (trill),

4. ஈருயிர் (dipthongs), 5. உயிரொலி (volwel), 6. உரசொலி (fricative), 7. ஒலிப்பியல் (articulatory phonetics), 8. ஒலியியக்கவியல் (acoustic phonetics), 9. ஒலியுணர்வியல் (auditory phonetics), 10. மருங்கொலி (lateral)

11. மூக்கொலி (nasal)

12. மெய்யொலி (consonant)

13. வருடொலி (flap)

2.7. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

இராசாராம், சு. 1980. ஒலியியல். அனைத்திந்திய மொழியியற் கழகம், அண்ணாமலை நகர். **தன்மதிப்பீடு விடைகள்**

1. ஒலிப்பியல் ஒலிகள் எவ்வாறு உச்சரிக்கப்படுகின்றன என்பதை ஆய்கிறது. இவ்வாய்வுமுறை பேச்சுறுப்புக்களின் அமைப்பையும் செயல்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு உடற்கூற்றியல் நோக்கில் ஒலிகளின் பிறப்பை ஆயும். ஒரு ஒலி பிறக்கும் இடங்களையும் வகைகளையும் விளக்கி ஆராயும் ஒலியியல் பிரிவு ஒலிப்பியல் எனப்படும்.

2. ஒலியியக்கவியல் ஒலிகளின் ஒலியியக்க அமைப்பை ஆராய்கிறது. ஓர் ஒலியை மற்றொரு ஒலியிலிருந்து வேறாக நாம் கேட்டுணர்வதற்கு முக்கிய காரணமாக அமைவது அதன் ஒலியியக்க அமைப்பாகும். பேச்சொலிகளின் பண்பு நலன்களை ஒலியாராய்ச்சிக் கருவிகளின் மூலம் கண்டறிவதே ஒலியியக்கவியலின் செயல்பாடாகும்.

3. ஒலியுணர்வியல் என்பது ஒரு ஒலி செவியால் உணரப்படும் தன்மையை விவரித்தல் ஆகும். இவ்வாய்வு முறையில் ஒலிகள் அவற்றை ஒலியாராய்ச்சியாளன் கேட்கும் நிலையையும் அறிந்துணரும் வகையையும் அடிப்படையாகக் கொண்டு ஆயப்படுகின்றன.

4. மூச்சுக்காற்றானது வாயறையில் எவ்விதத் தங்கு தடையுமின்றி அதாவது, இயங்கு ஒலிப்பான்களுக்கும் இயங்கா ஒலிப்பான்களுக்கும் இடையே தடையின்றிச் செல்லும்போது உயிரொலிகள் பிறக்கின்றன. மெய்யொலிகள் பிறக்கும் போது முழுத்தடையோ சிறிதளவு தடையோ நிச்சயம் இருக்கும்.

5. உயிரொலிகள் மூன்று முதன்மையான பரிமாணங்கள் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன: வாய் திறந்திருக்கும் அளபு (மேல், மேலிடை,

கீழிடை, கீழ் அல்லது திறந்த,பகுதிதிறந்த, பகுதி மூடிய, மூடிய), நாவின் உயர்ந்த பகுதியின் இருப்பிடம் (முன், நடு, பின்), இதழ்களின் இருப்பு (குவி, விரி)

6. ஒலிப்பிடத்தையும் (இயங்கும் ஒலிப்பானும் இயங்கா ஒலிப்பானும் தொடர்பு கொள்ளுமிடம்) ஒலிப்பு முறையையும் அடிப்படையாகக் கொண்டு மெய்யொலிகளை வகைப்படுத்தலாம்.

7. ஓர் உயிர் ஒலியின் உச்சரிப்போடு தொடங்கி மற்றொரு உயிரொலியின் உச்சரிப்போடு முடிவடையும் உயிரொலியின் ஒலிப்பே ஈருயிர் (னiphவாடிஇப) எனப்படுகிறது. இதுவொரு நெட்டுயிராக ஒலிக்கப்படுகிறது. இரண்டு உயிரொலிகளின் சாயலும் இந்நெட்டொலியில் காணப்படும். தமிழ் ஐ, ஔ ஆகிய இரண்டும் இவ்வாறு ஒலிக்கப்படும் ஈருயிர்களாகும். எ.கா. அ + இ = ஐ [ai], அ + உ – ஔ [au]

8. வாயறையின் ஓரிடத்தில் மூச்சுக்காற்று முழுவதும் தடை செய்யப்பட்டு திடீரென்று வெடிப்போடு வெளியேறினால் அவைகள் வெடிப்பொலிகள் என்று அழைக்கப்படும். அப்போது அண்ணக்கடை அடைப்பு ஏற்படும். இவ்வொலிகள் அடைப்பொலிகள் என்றும் அழைக்கப்படும். தமிழில் வல்லின ஒலிகள் வெடிப்பொலிகளாகும். எ.கா. க், ச், ட், த், ப் [k, c, t, t, p].

9. வாயறையில் மூச்சுக்காற்று வரும்போது முழுவதும் தடுக்காமால் மூச்சு வெளியேறும் பாதையை ஒலிப்பானால் குறுக்கி அந்த இடுக்கின் வழியே செலுத்தினால் உராய்வுத்தன்மை (friction) ஏற்படும். இப்படி உராய்வுத் தன்மையோடு பிறக்கும் ஒலிகளே உரசொலிகள் எனப்படுகின்றன. தமிழில் சகரம் [c] பாண்டி நாட்டுத் தமிழைத்தவிர பிற மாவட்டங்களில் [s] என்று உரசொலியாகவே உச்சரிக்கப்படுகிறது. உரசொலி உண்டாகும் போது குரல்வளை மடல்கள் அதிர்ந்தும் அதிராமலும் இருக்கலாம். அப்போது அண்ணக்கடை அடைப்பும் ஏற்படும் (β, f, s, y, h)

10. அடைப்பொலி போலவே அமைந்து அண்ணக்கடை திறந்து மூக்கறை வழியே மூச்சுக்காற்று வெளியே செல்லும் போது மூக்கொலி தோன்றும். பெரும்பாலும் மூக்கொலி உண்டாகும்போது குரல்வளை மடல்கள் அதிர்கின்றன. தமிழில் மெல்லின ஒலிகள் மூக்கொலிகளாகும். எ.கா. ங், ஞ், ண், ந், ம் , ன் [ŋ, ɲ, ɳ , n, m, n].

11. மூச்சுக்காற்று வெளியேறும் போது இதழ்களோ நுனி நாக்கோ உள்நாக்கோ வேகமாக அதிர்ந்து ஆடும்படி அமைகிற ஒலியே ஆடொலி எனப்படுகின்றது.

இன்று குமரி மாவட்ட மக்களால் மட்டுமே தமிழ் வழக்கில் ற் [r] என்ற ஆடொலி உச்சரிக்கப்பட்டு வருகிறது.

12. மூச்சுக்காற்று வாயறையில் ஓர் இடத்தை அடைத்து நாக்கின் இரு மருங்கிலும் வெளியேறும் போது பிறக்கும் ஒலி மருங்கொலி எனப்படுகிறது. ல, ள, ழ (l, l, l) மூன்றும் மருங்கொலிகளாகும்.

## பாடப்பிரிவு 3
## ஒலியனியல்

**படிப்பு நோக்கம்**

• ஒலியனியலியலின் நோக்கமும் விளக்கமும்

• ஒலி, ஒலியன், மாற்றொலி இவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் பற்றிய விளக்கம்

• ஒலியன்களைக் கண்டுபிடிக்கும் முறைகள் குறித்த விளக்கம்

• ஒலியன்களின் வரன் முறைகள் பற்றிய விளக்கம்

• ஒலியன் கோட்பாட்டு விளக்கம் பாடக்கருத்தலகுகள்

**3.0. பாட முன்னுரை**

3.1. ஒலியனியல் நோக்கமும் விளக்கம்

3.2. ஒலி, ஒலியன், மாற்றொலியன்

3.3. ஒலியன்களைக் கண்டுபிடிக்கும் முறை

3.3.1. ஒலியனியல் செயல்முறைகள் 1

3.3.2. ஒலியனியல் செயல்முறைகள் 2

3.3.3. ஒலியனியல் செயல்முறைகள் 3

3.4. ஒலியன்களின் அமைப்பொழுங்கு

3.5. பாடத்தொப்புரை

3.6. கலைச்சொற்கள்

3.7. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

**3.0. பாட முன்னுரை**

ஒரு மொழியின் ஒலியன்களை நிறுவி அவற்றின் மாற்றொலிகளைக் கண்டுபிடித்து வருணனை விளக்கம் தருவதும் ஒலியன்களின் வரன்முறையை விளக்குவதும் ஒலியனியலியலின் முக்கிய நோக்கங்களாகும். ஒலி, ஒலியன், மாற்றொலி இவற்றிற்கிடையில் வேறுபபாடுகள் உள்ளன. ஒலியன்களைக் கண்டுபிடிப்பதற்கென்று வழிமுறைகள் இருக்கின்றன. ஒரு மொழியின் ஒலியன்கள் ஒரு குறிப்பிட்ட வரன் முறை அமைப்பைக் கொண்டிருக்கும். ஒலியன்களை விளக்க பல கோட்பாட்டுகள் உள்ளன.

**3.1. ஒலியனியலின் நோக்கமும் விளக்கமும்**

ஒரு மொழியின் ஒலி ஒழுங்குமுறையை ஆயும் மொழியியலின் ஒரு கிளைப்பாடம் ஒலியனியலாகும். அதாவது ஒரு மொழியின் ஒலியன்களைக்

கண்டுபிடித்து அவற்றின் வரன்முறை, அமைப்பொழுங்கு, செயற்பாடு போன்ற செய்திகளை விளக்குவது ஒலியனியலாகும் (phடிஇடிடடிபல). ஒரு மொழியின் கூற்றுகளை வேறுபடுத்தும் குறைந்த செயற்பாட்டு அலகு ஒலியனாகும் (phoneme). மனித பேச்சு உறுப்புகள் உற்பத்தி செய்ய இயலும் ஒலிகளின் விரிந்த பரப்பெல்லையில் ஒத்தறி அடிப்படையில் குறைந்த எண்ணிக்கையிலான ஒலிகள் தான் எந்த ஒரு மொழியிலும் பயன்படுதப்படும். ஒலிகள் முரண்படும் ஒழுங்கு முறைகளாக அமைக்கப்படுகையில் அவை ஒலியன்கள் எனப்படும்.

**3.2. ஒலி, ஒலியன், மாற்றொலி**

எந்த ஒலியும் (அது மொழிசார்ந்ததாய் இருந்தாலும் இல்லாவிட்டாலும்) ஒலிதான். அதை ஒலியன் என்று குறிப்பிட இயலாது. ஒலியன் என்பது ஒரு மொழி சார்ந்த ஒலி. இந்த ஒலி கூற்றுக்களை வேறுபடுத்தும் செயல்பாட்டை மொழியில் செய்யும். எடுத்துக்காட்டாக பல் என்பது கல் என்பதிலிருந்து ப்-க் என்ற ஒலி வேறுபாட்டால் வேறுபடும் சொற்களாகும். எனவே ப் என்பதும் க் என்பதும் ஒலியன்கள் ஆகும். ஒரு மொழிக்கு எழுத்து வடிவமும் ஒலியன்களால் தான் தீர்மானிக்கப்படும். ஒலியன்களைப் பற்றி படிப்பது தான் ஒலியனியல் என்று ஓரளவுக்கு நீங்கள் ஊகித்திருப்பீர்கள். பேச்சொலிகளை அவை கூற்றுக்களை வேறுபடுத்தும் செயல்பாட்டின் அடிப்படையில் ஒலியன்களாக இனங்கண்டு அவற்றின் வருகையிடங்கள், சோ;க்கைகள், அதனால் அமையும் அசைகளின் ஒழுங்குமுறைகள் இவற்றை ஆய்ந்து விளக்குவதே ஒலியனியல் எனப்படும். எடுத்துக்காட்டாக பின்வரும் சொற்களை அவற்றின் உச்சரிப்பின் அடிப்படையில் எழுதுங்கள்:

1. பல் [pal] - [p]
2. கல் [kal] - [ம]
3. பத்து [pattu] - [p]
4. தம்பி [tambi] - [b]

முதல் இரண்டு எடுத்துக்காட்டுகளில் [p], [b] என்பன முரண்பட்டு கூற்றுகளை அதாவது இரண்டு பொருள்கொண்ட சொற்களை வேறுபடுத்துகின்றன. எனவே இவை இரண்டும் ஒலியன்களாகும். 3-ஆவது மற்றும் 4-ஆவது எடுத்துக்காட்டுகளில் [p], [b] என்பன முரண்பட்டு வருவதில்லை. [p] என்பது சொல்லின் முதலிலும் [b] என்பது [m] என்ற ஒலியை அடுத்தும் வருகின்றன. [m]

என்ற மூக்கொலி குரலொலியாகும். இவ்வொலியானது தன்னை அடுத்து வரும் [p] என்ற குரலிலா ஒலியை குரலொலியாக அதாவது [b] ஆக மாற்றியது என நீங்கள் விளங்கிக் கொள்ளலாம். அதாவது [b] என்பது [p] என்பதன் மாற்றொலிகள் எனலாம். [b], [p] என்பன இரு வேறுபட்ட (முரண்படாத) இடங்களில் வருகின்றன என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இவ்வாறு இரு ஒலிகள் வேறுபட்ட இடங்களில் வருவதை துணைநிலை வருகை முறை என உணர்ந்து கொள்ளுங்கள். [p], [b] என்பன ஒன்றையொன்று இடம்பெயர்ப்பதுபோல் ஒரே இடத்தில் வருவதை வேற்றுநிலை வருகை முறை என அறிந்து கொள்ளுங்கள். துணை நிலை வருகையில் வரும் ஒரே வகை சார்ந்த ஒலிகள் ஒரு ஒலியனின் மாற்றொலிகளாக் கருதப்படும். வேற்றுநிலை வருகை நிலையில் வந்து கூற்றை வேறுபடுத்ததும் ஒலிகள் தனித்தனியான ஒலியன்கள் என அறிந்து கொள்ளவும். [tambi] என்பதற்குப் பதிலாக [tampi] என உச்சரித்தாலும் கூற்று வேறுபடாது (அதாவது பொருள் வேறுபடாது) என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். 3.3. ஒலியன்களைக் கண்டுபிடிக்கும் முறை ஒலியன்களைப் பற்றிய ஆய்வுக்கு வரிவடிவாக்கம் அல்லது எழுத்துப் பெயர்ப்பு செய்யபட்ட மொழித்தரவு தேவை. எழுதப்படாத பழங்குடி மக்களின் மொழிகளை அல்லது கிளை மொழிகளை ஆயும் மொழியியலார் தாங்கள் பெற்ற ஒலியியல் பயிற்சியின் பயனாய்த் தகவலாளி தரும் கூற்றுகளை எழுத்துப் பெயர்பு செய்வர். எழுத்துப்பெயர்ப்பு செய்பவரின் குறைபாடு காரணமாக தரவின் பதிவில் பிழைகள் ஏற்படலாம். இத்தகைய பிழைகள் ஒலியியல் பயிற்சியின் குறைபாடு காரணமாகவோ செறிவு எழுத்துப்பெயர்ப்பு (narrow transcription) காரணமாகவோ செறிவல்லாத எழுத்துப்பெயர்ப்பு (broad transcription) காரணமாகவோ ஒலிகளைத் தவறாகப் பிரிப்பதனாலோ ஏற்படலாம். ஒலியனியல் ஆய்வுக்கு முன்னர் இக்குறைபாடுகள் மொழித்தரவிலிருந்து நீக்கப்படவேண்டும். அதன் பின்னர் ஒலியனியல் ஆய்வு அதாவது ஒலியன்களைக் கண்டுபிடிக்கும் செயல்முறைகள் கடைபிடிக்கப்படும்.

### 3.3.1. ஒலியனியல் செயல்முறைகள்

1 முதலாவது மொழித் தரவின் பதிவில் காணப்பெறும் ஒலிகளை அவற்றின் ஒலியியல் பண்புக்கூறுகளின் அடிப்படையில் அட்டவணைப் படுத்தவேண்டும்.

எடுத்துக்காட்டாக பின்வரும் படைக்கப்பட்ட கலாபமொழியின் சொற்களை எடுத்துக்கொள்வோம்:

[mafasa] 'திமிங்கிலம்'

[tasa] 'வால்ரஸ்'

[mavma] 'வீடு'

[katavs] 'தோட்டம்'

இம்மொழித்தரவுப் பதிவிலுள்ள ஒலிகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்:

| | | |
|---|---|---|
| | t | k |
| f v | s | |
| m | | |

வ ம க எ ள அ ய இரண்டாவதாக, ஐயத்திற்கு இடமான ஒலி இணைகளைத தனியே எடுத்து எழுதவேண்டும். ஓர் ஒலியின் மாற்றொலிகளாக வரவியலும் எல்லா ஒலிகளும் ஐய இணைகளே. மேலே காட்டிய எடுத்துக்காட்டில் க , எ என்பன ஐய இணைகளாகும். ஒரே இடத்தில் பிறக்கும் மெய்யொலிகளும் (குறிப்பாக குரலொலிகளும் குரலிலா ஒலிகளும்) ஒரே ஒலிப்பு முறையில் பிறக்கும் மெய்யொலிகளும் அடுத்துவரும் உயிர்களும் ஐய இணைகளாக வரலாம். மூன்றாவதாக ஐயத்திற்கு இடமில்லாத ஒலிகளையெல்லாம் பட்டியலிட வேண்டும். மேற்காட்டிய எடுத்துக்காட்டில் பின்வரும் ஒலிகள் ஐயத்திடமில்லாத ஒலிகளாகும்:

| | | |
|---|---|---|
| | t | k |
| f v | s | |
| m | | |
| | a | |

இரண்டாவதாக, ஐயத்திற்கு இடமான ஒலி இணைகளைத தனியே எடுத்து எழுதவேண்டும். ஓர் ஒலியின் மாற்றொலிகளாக வரவியலும் எல்லா ஒலிகளும் ஐய இணைகளே. மேலே காட்டிய எடுத்துக்காட்டில் க , எ என்பன ஐய இணைகளாகும். ஒரே இடத்தில் பிறக்கும் மெய்யொலிகளும் (குறிப்பாக

குரலொலிகளும் குரலிலா ஒலிகளும்) ஒரே ஒலிப்பு முறையில் பிறக்கும் மெய்யொலிகளும் அடுத்துவரும் உயிர்களும் ஐய இணைகளாக வரலாம்.

**பிரித்தறியும் முறைகள்**

அடுத்தகட்டமாக ஐய இணையிலுள்ள ஒலிகளைப் பிரித்தறியவேண்டும். முதலாவது ஒத்த சூழ்நிலைகளில் வரும் ஒலிகள் பொருள்வேறுபாட்டிற்குக் கராணமாக அமைகின்றனவா (contrast in analogous environunment) என்று காண்பதாகும். பின்வரும் மொழித்தரவு பதிவைப் பாருங்கள்:

| | |
|---|---|
| [sama] 'மனிதன்' | [esa] 'இலை' |
| [ɛka] 'காம்பு' | [zama] 'விதை' |
| [tamza] 'மகரந்தம்' | [tadza] 'கிளை' |
| [tatsa] 'பூ' | [ksama] 'இதழ்' |
| [eke] 'சாறு' | |

செயல்முறைகள் 1.

ஒலிகளிகளின் அட்டவணை

t, d k

s, z

m

e ɛ

a

8. ஐய இணைகள்:

[t, d]

[s, z]

[e, ɛ]

9. ஐயத்திற்கு இடமில்லாத ஒலிகள்:

[k, m, a]

**பிரித்தறியும் முறைகள்**

• ஓர் ஐயவிணையிலுள்ள ஒலிகளின் இயல்புகளைக் குறிப்பிட வேண்டும். மேலேயுள்ளத் தரவுப் பதிவிலுள்ள ஐயவிணை [t, d] என்பதில் [t] குரலில்லாதது [d] குரலுடையது.

---

• ஓர் ஐயவிணையிலுள்ள ஒலிகள் வரும் ஒத்த சூழ்நிலைகளை எடுத்துக்காட்டவேண்டும். [t, d] என்பன வரும் ஒத்த சூழ்நிலை பின்வருவதாகும்: [tadza] 'கிளை', [tatsa] 'பூ'. இவ்விரு சொற்களும் [t, d] என்ற ஐயத்திற்கிடமான ஒலிகளால் மட்டுமன்றி [s, z] என்னும் ஒலிகளாலும் வேறுபடுவதைக் காண்டுகொள்வும்.

• அடுத்ததாக ஒத்த சூழ்நிலைகளிலுள்ள வேறுபாடுகளைக் குறிப்பிடவேண்டும். [t] என்பது [s] என்பதற்கு முன்னரும் [d] என்பது [z] என்பதற்கு முன்னரும் வருவதைக் கண்டுகொள்ளவும். இலக்கண வேறுபாடு இல்லை என்பதையும் அறிந்துகொள்ளவும்.

• ஓரிணையிலுள்ள ஒலிகள் வேறுபடுவதற்குச் சூழல்தான் காரணம் என்று கூறுவதற்குச் சான்றுகள் இருக்கின்றதா என்று பார்க்கவும். மொழித்தரவிலிருந்து குரலொலியான [d] குரலொலிக்கு முன்னரும் வரும் என்றும் குரலிலா ஒலியான [t] அச்சூழலில் வருவதில்லை (அதாவது குரலிலா ஒலிக்கு முன்னரும்) என்றும் கருதுகோள் செய்யலாம். இந்த கருதுகோளை மறுப்பதற்கான சான்று மேற்கண்ட மொழித்தரவில் இல்லை. (கூடுதலான மொழித்தரவை உற்றுநோக்கி மேற்சொன்ன கருதுகோளை நிறுவவோ மாற்றவோ மறுக்கவோ செய்யலாம்.)

• முடிவை கூறுவதோமு அம்முடிவிற்கான காரணத்தையும் சொல்ல வேண்டும். கருதுகோளை மறுப்பதற்கான சான்றுகள் இல்லை என்றால் இரண்டு ஒலிகளும் ஒத்த சூழலில் வரவில்லை என்று பொருள். ஒத்த சூழலில் வராத இரண்டு ஒலிகளை ஒலியன்களாகக் கொள்ளவியலாது. என்வே [t], [d] என்பன வெவ்வேறு ஒலியனின்கள் அல்ல (அதாவது ஒரு ஒலியனின் மாற்றொலியன்கள்) என்ற முடிவை எய்தலாம்.

[s, z] என்ற இணை ஒத்த சூழ்நிலையில் வந்து பொருள்வேறுபாட்டிற்குக் காரணமாய் அமைவதால் ([sama] 'மனிதன்', [zama] 'விதை') அவை வெவ்வேறான ஒலியன்களாகும்: /s/ , /z/ . இதுபோலவே [e, ɛ] என்ற இணையும்

ஒத்த சூழ்நிலையில் வந்து பொருள்வேறுபாட்டிற்குக் காரணமாய் இருப்பதால் ([ɛka] 'காம்பு', [eke] 'சாறு') அவை வெவ்வேறு ஒலியன்களாகும்: /e/, /ɛ/

### 3.3.2. ஒலியனியல் செயல்முறைகள் 2

முந்திய தலைப்பில் இரண்டு ஒலிகள் ஒத்த சூழ்நிலையில் வந்து பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாய் அமைவதைக் கொண்டு அவை வெவ்வேறு ஒலியன்கள் என்று பிரித்தறியும் முறைகளைப் பார்த்தோம். அடுத்து ஒரே சூழ்நிலையில் பொருள் வேறுபடுதலைக் (contrast in identical environment) கொண்டு ஒலியன்களைப் பிரித்தறியும் முறைகளைப் பார்ப்போம்.

ஒத்த சூழ்நிலையின் ஒரு வகையே ஒரே சூழ்நிலை என்பது ஒரே சூழ்நிலையில் இரண்டு ஒலிகள் பொருளை வேறுபடுத்துவதால் அவை வெவ்வேறு ஒலியன்கள் என்பது தெளிவாகின்து. ஒரே சூழ்நிலையில் இரண்டு ஒலிகள் வேறுபடுவதைக் காட்டும் சொற்கள் சிறுமக் குறையிணை (minimal pair) எனப்படும். சிறுமக் குறையிணைகளைக் கொண்டு ஒலியன்களைப் பிரித்தறியும் முறைகளை பின்வரும் எடுத்துக்காட்டு மூலம் விளக்குவோம்.

[tap] 'ஒவ்வொரு' [tab 'நரம்பு'

[nat] 'வேலைசெய்' [gana] 'குரங்கு'

[kana] 'பெல்ட்' [tan] 'பழம்'

[gan] 'நீந்து' [kaka] 'சுண்ணாம்பு'

---

[sona] 'மூழ்கு' [tazna] 'எலுமிச்சை'

[dan] 'கம்பு' [dat] 'கடினம்'

[nata] 'பர்ஸ்' [gaka] 'விற்றுவிடு'

[kos] 'வாங்கு'

**செயல்முறைகள்:**

1. ஒலிகளின் அட்டவணை:

| | | | |
|---|---|---|---|
| p b | t d | | k g |
| | s z | | |
| | n | | |
| | | o | |

a

2.ஐயவிணைகள்: [p, b], [t, d], [k,g], [s, z]

3.ஐயத்திற்கு இடமில்லா ஒலிகள்: [n, o, a]

**பிரித்தறியும் முறைகள்:**

ஐயவிணை [p, b]

சூழ்நிலைகள்: ஒன்றே

சான்று : [tap] [tab]

முடிவு : [p], [ b] ஆகிய ஒலிகள் ஒரே சூழ்நிலையில் வந்து பொருளை வேறுபடுத்துவதால் அவை வெவ்வேறு ஒலியன்களாகும்: /p/, / b/.

இதுபோலவே [t, d], [k,g] என்ற இணைகளிலுள்ள [t] , [d], [k] , [g] என்பனவும் வெவ்வேறு ஒலியன்களாகும்: /t/ , /d/ /k/ , /g/. [s, z] என்ற இணை ஒரே சூழலில் வராததன் காரணமாக அவற்றை வெவ்வேறு ஒலியன்கள் என்று கூற இயலவில்லை.

**3.3.3. ஒலியனியல் செல்முறைகள் 3**

முந்திய பகுதியில் ஒரே சூழ்நிலையில் பொருள்வேறுபடுவதை வைத்து, ஒலியன்களைப் பிரித்தறியும் முறையைக் கண்டோம். அம்முறைக்கு அடிப்படை வேற்றுநிலைக் கொள்கை (principle of contrast) ஆகும். இரண்டு ஒலிகள் ஒரே சுழ்நிலையில் பொருளை வேறுபடுத்தி வருவதை வேற்றுநிலை வருகைமுறை (contrastive distribution) எனப்படும். இவ்வாறின்றி ஒலியொற்றுமையுடைய இரண்டு ஒலிகள் ஒன்று வருமிடத்தில் மற்றது வருவதில்லை என்றும் நிலை இருக்குமானால் அதைத் துணைநிலை வருகைமுறை எனலாம். இரண்டு ஒலிகள் வெவ்வேறு சூழ்நிலைகாரணமாக மாறி இருக்குமானால் அவற்றை சூழ்நிலையின் திரிபொலிகளாக அல்லது மாற்றொலிகளாகக் கருத இடமுண்டு. சில சமயங்களில் இரண்டுமே வேறோர் ஒலியின் திரிபுகளாகவும் வரலாம். பின்வரும் மொழித்தரவுப் பதிவை எடுத்துக்கொள்வோம்:

[tofo] ‘ராசி’ [xexe] ‘தோல்வியடை’

[ose] ‘கிரகணம்’ [toϕo] ‘கால்விரல்’

[ϕநஓ] ‘சூரியன்’ [seso] ‘மதிப்பீடு’

[efes] ‘நேற்று’ [feϕe] ‘கூர்மை’

[toxos] ‘இருக்கலாம்’ [tokox] ‘பாடு’

[foxɔ] ‘கட்டை’ [xoɸe] ‘நீலப்பறவை’

[texɔ] ‘பனி’

செயல்முறை:

1. ஒலிகளின் அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| | t | | k | |
| ɸ f | s | | | x |
| | | e | | |
| | | o ɔ | | |

2. ஐயவிணைகள்:

[ɸ, f] [k, x] [o, ɔ]

3.ஐயத்திற்கு இடமில்லா ஒலிகள்: [t, s, e]

பிரித்தறியும் முறை:

ஐயவிணை [ɸ, f]

சூழ்நிலை: ஒன்றே

சான்று: [tofo] ‘ராசி’, [toɸo] 'கால்விரல்'

முடிவு:[ɸ] , [f] என்ற இரண்டும் ஒரே சூழ்நிலையில் வந்து பொருளை வேறுபடுத்துவதால் அவை வெவ்வேறு ஒலியன்களாகும்: /ɸ/ / f /

ஐயவிணை: [k, x]

சூழ்நிலை: ஒத்த சூழ்நிலை

சான்று: [texɔ] ‘பனி’, [xexe] ‘தோல்வியடை’

முடிவு: [k], [x] என்ற இரண்டும் ஒத்த சூழ்நிலையில் வந்து பொருளை வேறுபடுத்துவதால் அவை தனித்தனி ஒலியன்களாகும்: / k /, / x /

ஐயவிணை: [o, ɔ] எடுகோள்: [ɔ] என்பது கடையண்ண ஒலியை அடுத்து சொல்லின் இறுதியல் வருகின்றது. [டி] அச்சூழலில் வருவதில்லை.

முடிவு:[ ɔ] என்பதும் [o] என்பதும் ஒலியொற்றுமை உடையவை ஆதலாலும் துணைநிலை வருகைமுறையில் வருவதாலும் ஒரே ஒலியின் மாற்றொலிகளாகும். இயல்பான ஒலியன்: / o /

### 3.4. ஒலியன்களின் அமைப்பொழுங்கு

ஒரு மொழியில் ஒலியனியல் அலகுகளின் தொடர்ச்சியான வரிசைமுறையைப் பற்றிக் கூறுவது ஒலியன்களின் அமைப்பொழுங்கு (phonotactics) எனப்படும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் /fs/ மற்றும் /spm/ என்ற மெய்யெழுத்துகளின் வரிசைகள் சொல் முதலில் வராது. சாத்தியமான மெய்யொலி + உயிரொலி இணைப்புகளில் பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன· எடுத்துக்காட்டாக /ŋ/ என்பது /ɪ æ ʌ ɒ/ என்ற குற்றுயிர்களுக்குப் பின்னர்தான் வரும். இந்த வரிசைமுறை கட்டுப்பாடுகள் அமைப்பொழுங்கு விதிகள் (phonotactics rules) என்பதன் கீழ் பேசப்படும். ஒலியன்களின் அமைப்பொழுங்கில் உயிரொலிகள், மெய்யொலிகள் என்பன வருமிடங்களும் வராவிடங்களும், உயிர்களின் மற்றும் மெய்களின் தொடர்ச்சிகள், சாத்தியமான சாத்தியமில்லா மெய்மயக்கங்கள், அசை அமைப்புகள் என்பன குறித்து பேசப்படும். எடுத்துக்காட்டாக நிலைபெறு தமிழில் க், ச், த், ப், ஞ், ந், ம், ய், வ் என்ற மெய்யெழுத்துகள் மொழி முதலில் வரும் ஆனால் ட், ற், ங், ண், ன், ர், ல், ழ், ள் என்ற மெய்யெழுத்துகள் சொல் முதலில் வராது, மெய்மயக்கங்கள் சொல் முதலிலும் சொல் இறுதியிலும் வராது, இரண்டு உயிரெழுத்துகள் தொடர்ந்து வராது போன்ற கூற்றுகள் ஒலியன்களின் அமைப்பொழுங்கு குறித்த உண்மைகளாகும். தன்மதிப்பீடு

1. ஒலியனியல் என்றால் என்ன?
2. ஒலி, ஒலியன், மாற்றொலி – வேறுபடுத்துக.
3. துணை நிலை வருவகை முறை வேற்றுநிலை வருகை முறை என்றால் என்ன?
4. ஒலியன்களின் அமைப்பொழுங்கு என்றால் என்ன?

**3.5. பாடத் தொகுப்புரை**

இப்படப்பகுதியில் ஒலியனியலியலின் நோக்கமும் விளக்கமும் பற்றி முதலில் பார்த்தோம். பின்னர் ஒலி, ஒலியன், மாற்றொலி இவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் பற்றி அறிந்து கொண்டோம். இப்பகுதியின் முக்கிய நோக்கமான ஒலியன்களைக் கண்டுபிடிக்கும் முறைகள் பற்றி அறிந்து கொண்டோம். ஒலியன்களின் அமைப்பபொழுங்கு குறித்து தொpந்து கொண்டோம்.

3.6. கலைச்சொற்கள்

1. ஒலியன் (phoneme)
2. ஒலியனின் அமைப்பொழுங்கு (phonotactics)
3. துணைநிலை வருகைமுறை (complementary distribution)

4. மாற்றொலி (allophone)

5. வேற்றுநிலை வருகை முறை (contrastive distribution)

## 3.7. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

கருணாகரன், கி. மற்றும் வ. ஜெயா. 1997. மொழியியல். குமரன் பதிப்பகம் சென்னை.

கோதண்டராமன், பொன். பொது மொழியியல். பூம்பொழில் சென்னை.

பரமசிவன்.கு. 1984. இக்கால மொழியியல் அறிமுகம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

முத்துச்சண்முகம். 1989. இக்கால மொழியியல் மதுரை பப்ளிஷிங் ஹவுஸ் மதுரை. மூன்றாம் பதிப்பு.

## தன்மதிப்பீட்டு விடைகள்

1. ஒரு மொழியின் ஒலி ஒழுங்குமுறையை ஆயும் மொழியியலின் ஒரு கிளைப்பாடம் ஒலியனியலாகும். அதாவது ஒரு மொழியின் ஒலியன்களைக் கண்டுபிடித்து அவற்றின் வரன்முறை, அமைப்பொழுங்கு, செயற்பாடு போன்ற செய்திகளை விளக்குவது ஒலியனியலாகும். 2. பேச்சு உறுப்புக்களால் ஒலிக்கப்படும் பௌதிக இருப்பான் ஒலியாகும். ஒரு மொழியில் கூற்றுக்களை வேறுபடுத்தப் பயன்படும் ஒலிகள் ஒலியன்களாகும். ஒலியன்கள் ஒரு குழும ஒலிகளை உள்ளடக்கும். இவ்வொலிகள் மாற்றொலிகள் எனப்படும்.

3. ஒரு ஒலியனைக் குறிப்பிடும் ஒலிகள் ஒன்று வரும் இடத்தில் மற்றொன்று வராமல் அமையும் நிலை துணை நிலை வருகை முறை எனப்படும். ஒன்றையொன்று இடம்பெயர்ப்பதுபோன்று வரும் ஒலிகளின் வருகை முறை எனப்படும்.

4 ஒரு மொழியில் ஒலியனியல் அலகுகளின் தொடர்ச்சியான வரிசைமுறையைப் பற்றிக் கூறுவது ஒலியன்களின் அமைப்பொழுங்கு (phonotactics) எனப்படும். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் /fs/ மற்றும் /spm/ என்ற மெய்யெழுத்துகளின் வரிசைகள் சொல் முதலில் வராது. சாத்தியமான மெய்யொலி + உயிரொலி இணைப்புகளில் பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக /ŋ/ என்பது /ɪ æ ʌ ɒ/ என்ற குற்றுயிர்களுக்குப் பின்னர்தான் வரும். இந்த வரிசைமுறை கட்டுப்பாடுகள் அமைப்பொழுங்கு விதிகள் (phonotactics rules) என்பதன் கீழ் பேசப்படும்.

## பாடப்பிரிவு 4
## உருபனியல்

**பாட நோக்கம்**

• உருபனியலின் விளக்கமும் நோக்கமும்
• உருபுகள், உருபன்கள், மாற்றுருபுகள் பற்றிய விளக்கம்
• உருபன்பளைக் கண்டறிதல்
• உருபன்களின் வகைப்பாடு
• உருபன்களின் வரன்முறை
• திரிபும் ஆக்கமும் பாடக்கருத்தலகுகள்

---

4.0. பாட முன்னுரை
4.1. உருபனியலின் நோக்கமும் விளக்கமும்
4.2. உருபுகள், உருபன்கள், மாற்றுருபுகள்
4.3. உருபன்களைக் கண்டறிதல்
4.3.1. நைடாவின் ஒன்றாம் விதி
4.3.2. நைடாவின் இரண்டாம் விதி
4.3.3. நைடாவின் மூன்றாம் விதி
4.3.4. நைடாவின் நான்காம் விதி
4.3.6. நைடாவின் ஐந்தாம் விதி
4.3.7. நைடாவின் ஆறாம் விதி
4.4. திரிபும் ஆக்கமும்
4.5. உருபன்களின் வகைகள்
4.6. உருபன்களின் அமைப்பொழுங்கு
4.7. பாடத்தொகுப்புரை
4.8. கலைச்சொற்கள்
4.9. தொடர்ந்து படித்தற்குரிய நூற்கள்

### 4.0. பாட முன்னுரை

இப்பாடப்பகுதியில் உருபனியலின் நோக்கமும் விளக்கமும் அறிமுகமாகத் தரப்படும். ஒரு சொல்லிலுள்ள உருபன்களைப் பிரித்து அவற்றின் பொருண்மைகளைத் தருவதும் இவ்வாய்பின் கண் அடங்கும். உருபுகள்,

உருபன்கள், மாற்றுருபுகள் என்பன ஒன்றிற்கொன்று தொடர்புடையனவும் வேறுபட்டவையும் ஆகும். உருபன்களைக் கண்டுபிடிக்க வழிமுறைகள் இருக்கின்றன. பல வகையிலான உருபன்கள் இருக்கின்றன. ஓர் மொழியின் உருபன்கள் ஒரு குறிப்பிட்ட அமைப்பொழுங்கைக் கொண்டிருக்கின்றன. மொழிகள் அவற்றின் உருபனியல் அமைப்பால் ஒன்றுபடவோ இருக்கவோ வேறுபடவோ செய்யலாம். உருபன்களை திரிபுகளாகவும் ஆக்கங்களாகவும் வகைப்படுத்த இயலும். சொல்லாக்கம் குறித்த ஆய்வுகள் தற்காலத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

### 4.1. உருபனியலின் நோக்கமும் விளக்கமும்

ஒரு மொழியின் உருபன்களைக் கண்டு பிடித்து அவற்றின் பட்டியலை உருவாக்குவதும் உருபுகளை உருபன்களின் கீழ் மாற்றுருபுகளாக அடையாளங் கண்டு பட்டியலிடுவதும் உருபனியலின் நோக்கமாகும். மொழி அமைப்பின் இரண்டாவது மட்டமாக வருவது உருபனியல் ஆகும். சொற்களின் அக அமைப்பைப் பற்றிக் கூறுவது உருபனியலாகும். உருபனியல் ஆய்வர் சொல் வடிவுகளை அவற்றின் ஆக்கக்கூறுகளாகப் (உருபன்களாகப்) பிரித்து அவை ஒவ்வொன்றின் அமைப்பொழுங்கைக் கூற முயல்வர். சொல்வகைப்பாட்டிற்கு ஏற்ப உருபன்களின் இணைப்பு முறைகளும் வருகை முறைகளும் வேறுபடும். ஒருவரது பேச்சு ஒலியன்களின் அடுக்காக மட்டுமே அமையுமானால் அவர் பேசுவதும் அப்பேச்சினை மற்றவர்கள் கேட்பதும் வீண்வேலையாகும். பேசுவதாலும் கேட்பதாலும் கருத்துப்பரிமாற்றம் நிகழ்வதனாலேயே பேச்சினை ஆராய்வது தேவையாகின்றது. கருத்துக்களைப் பரிமாற முடிகிறது என்றால், அதற்குக் காரணம் உருபனமைப்பு ஆகும். வேறுவகையில் சொன்னால உருபன்களே பொருளை வெளிப்படுத்துகின்றன. பொருளுக்கும் ஒலியனுக்கும் நேரடித் தொடர்பில்லை. ஓர் ஒலியன் தனித்தோ வேறு ஒலியன்களோடு சேர்ந்தோ ஓர் ஒலியக்கூறு ஆகின்றது. இந்த ஒலியக்கூற்றையே உருபன் என்கின்றோம். இது பொருளுடையது. சான்றாகத் தமிழில் ஆ என்னும் ஒலியனுக்குப' பொருள் இல்லை. அதுவே தனித்து ஒரு உருபனாய் (ஓரெழுத்து ஒரு மொழியாய்) வரும்போது இலக்கியத்தில் 'பசு' என்பதைக் குறிக்கின்றது. இவ்வாறே ஆ என்பதும் ண் என்பதும் சோ;ந்து ஆண் என்னும் உருபனாக வரும்போதுதான் 'ஆண் தன்மையுடையவன்' என்னும் பொருள்

தோன்றுகின்றது. இவ்வாறு பொருள் தருகின்ற மிகச்சிறிய ஒலியக்கூறே உருபன் எனப்படுகின்றது. இங்கு 'மிகச்சிறிய' என்பது 'மேலும் பிரிக்கவியலாத' என்னும் கருத்தில் வழங்கப்படுகின்றது. நாய்கள் என்னும் சொல்லை நாய் + கள் என்று பிரித்து பொருள் கொள்ளலாம். ஆனால் நாய் என்பதையோ கள் என்பதையோ மேலும் பரித்து பொருள் கொள்ளவியலாது. எனவே *நாய்*, *கள்* ஆகிய இரண்டும் உருபன்களாகும். மேலே கூறிய எடுத்துக்காட்டே உருபனியலின் மற்றொரு பயன்பாட்டையும் விளக்குகின்றது. *நாய்* என்பது ஒரு விலங்கினையக் குறிக்கின்றது. *கள்* என்பது பன்மையைக் குறிக்கின்றது. அதாவது கள் என்ற சொல்லுக்குச் சொற்பொருள் (lexical meaning) இல்லை, இலக்கணப் பொருள்தான் (grammatical meaning) இருக்கின்றது. வேறுவகையில் சொன்னால் உருபன்கள் தான் இலக்கண உறவுகளையும் வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறு ஒரு புறம் ஒலியனியலுக்கும் பொருண்மையியலுக்கும் பாலமாகவும் மறுபுறம் ஒலியனியலுக்கும் இலக்கணத்திற்கும் பாலமாகவும் உருபனியல் அமைகின்றது.

**4.2. உருபுகள், உருபன்கள், மாற்றுருபன்கள்**

உருபனியலின் அடிப்படைக்கூறு உருபன் ஆகும். ஒரு கூற்றை அல்லது சொல்லை பொருள் தரும் அலகுகளாகப் பிரிப்பது உருபனியல் ஆய்வாகும். இவ்வலகை மேலும் பிரிக்க இயலாது. இத்தகைய மேலும் பிரிக்க இயலாத பொருண்மை தரும் அலகுகளை உருபுகள் என்று அழைக்கலாம். எவ்வாறு ஒலியன்களுக்கு மாற்றொலிகள் உள்ளனவோ அது போலவே உருபனுக்கும் மாற்றுருபுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக பின்வரும் சொற்களைக் கவனியுங்கள்: மரம், மரங்-கள். மரம் என்பதும் மரங் என்பதும் மரம் என்ற உருபனின் மாற்றுருபுகள் எனலாம். ஒரு சொல்லை பொருண்மை தரும் கூறுகளாகப் பிரிக்கையில் அவற்றை உருபுகள் என்றுதான் அழைக்க வேண்டும். இவ்வுருபுகள் அவற்றின் செயல்பாடு மற்றும் வருகைமுறை அடிப்படையில் உருபன்களாகக் குழுமப்படும்.

**4.3. உருபன்களைக் கண்டறிதல்**

உங்களுக்குத் தெரியும் நீங்கள் பேசும் போது உருன்களைப் பிரித்துப் பேசுவதில்லை. இன்னும் சொல்லப்புகுந்தால் நீங்கள் சொற்களைக் கூடப் பரித்துப் பேசுவதில்லை. எடுத்துக்காட்டாக *நீங்கள் என் கூட வருகிறீர்களா?*

என்ற வாக்கியத்தைப் பேச்சுவழக்கில் எப்படி வெளிப்படுத்துவீர்கள் என்று எண்ணிப்பாருங்கள். *நீங்களங்கூடவர்ரீங்களா*? என்று சேர்த்துத்தானே பேசுவீர்கள். இக்கூற்றைப் உருபன்களாகவோ சொற்களாகவோ பிரித்துத் பாருங்கள். நீங்க-எங்-கூட-வர்-ர்-ஈங்கள்-ஆ என்றுதானே பிரிப்பீர்கள். உங்களுக்குத் தமிழ்த் தொpவதால் இதைச் செய்யமுடிகின்றது. சில வட்டார வழக்குக் கூற்றுகளை நீங்கள் உருபன்களாகப் பகுக்கப் புகுந்தால் அந்த முயற்சி மிகக் கடினமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் மொழியிலாராக ஆகப்போகின்ற நீங்கள் இலக்கணம் எடுத்தப்படாத கிளை மொழிகளை மட்டுமன்றி பழங்குடி மக்களின் மொழிகளையும் ஆய வேண்டிவரும். இதற்காக நீங்கள் தரவுகளைச் சேகரித்துப் பின்னர் அதை ஆயவேண்டும். எனவே எந்த மொழிக்கும் உருபன்களைக் கண்டுபிடிக்கும் கொள்கைகளைப் பற்றி அறியவேண்டும். சொற்களை அல்லது கூற்றுக்களை முதலில் உருபுகளாகப் பிரிக்வேண்டும். பின்னர் சில கொள்கைகள் அல்லது கோட்பாடுகள் அடிப்படையில் இந்த உருபுகளை உருபன்களின் மாற்றுருபுகளாகக் குழம வேண்டும். மட்டுமன்றி இம்மாற்றுருபுகள் வரும் இடங்களையோ அல்லது அவ்வடிவை ஆக்கும் விதிகளையோ தரவேண்டும். யூஜீன் நைடா என்பவர் தான் எழுதிய உருபனியல் என்ற புத்தகத்தில் உருபன்களைக் கண்டறிய ஆறு விதிகளைக் கூறுகின்றார்.

**4.3.1. நைடாவின் முதல் விதி**

எல்லா இடங்களிலும் தமக்கென தனிப்பொருளும் ஒரே ஒலியவடிவமும் பெற்று வருகின்ற உருபுகள் ஓர் உருபனாய் அமையும். இதைப் பின்வரும் எடுத்துக்காட்டால் நீங்கள் விளங்கிக்கொள்ளலாம். *ஓட்டு-நர், இயக்கு-நர், அனுப்பு-நர்* என்ற சொற்களில் *-நர்* என்று வரும் உருபுகள் யாவும் ஓர் உருபனாகும் என்பது மேற்சொன்ன விதியால் நீங்கள் அறிந்துகொள்ளலாம்

**4.3.2. நைடாவின் இரண்டாம் விதி**

தமக்கென ஒரு தனிப்பொருளைப் பெற்ற உருபுகள் ஒலிய வடிவத்தால் வேறுபட்டிருந்தாலும், அதாவது ஒலியன்களிலோ ஒலியன்களின் வரிசைமுறையிலோ வேறபட்டிருந்தாலும், அவ்வேறுபாடுகள் ஒலியச் சூழலால் ஏற்படுகின்றன என்று காட்ட முடியுமானால், அவ்வுருபுகள் எல்லாம் ஒரே உருபனாக அமைத்துக்கொள்ளப்படலாம்.

இவ்விதியைப் நீங்கள் பின்வரும் எடுத்துக்காட்டால் விளங்கிக்கொள்ளலாம். intolerable, indecent, impossible, impatient என்ற ஆங்கிலச் சொற்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவற்றை முறையே in-tolerable, in-decent, im-possible, im-patient என்று பிரிப்பீர்கள். in- என்ற உருபும் im- என்ற உருபும் எதிர்மறைப் பொருளைக் குறிப்பதை நீங்கள் உணர்வீர்கள். இவை வரும் இடங்களை நீங்கள் அனுமானித்து விளக்க இயலும். im- என்பது ஈரிதழ் அடைப்பொலிக்கு முன்னரும், in- என்பது இது அல்லாத பிற இடங்களிலும் வரும் என்பதை நீங்கள் கண்டுபிடித்துக் கூற இயலும். இவ்வேறுபாடு சூழல் தொடர்பான வேறுபாடு எனவே இவ்வுரு உருபுகளும் நைடாவின் இரண்டாவது விதியின் படி ஒரே உருபனின் இரு மாற்றுருபன்களாகக் கருதப்படவேண்டும். இதே விதியின் அடிப்படையில் மரம் என்பதையும் மரங்-கள் என்பதில் வரும் மரங் என்பதையும் ஒரே உருபனின் மற்றுருபுகளாக நீங்கள் எடுத்துக்கொள்ள இயலும்.

### 4.3.3. நைடாவின் மூன்றாம் விதி

தமக்கென ஒரு தனிப்பொருளைப் பெற்ற உருபுகள் ஒலியவடிவத்தால் வேறுபடும்போது, அவ்வேறுபாடுகள் ஒலியச் சூழலால் ஏற்படுகின்றன என்று காட்ட இயலாவிட்டாலும், அவ்வுருபுகள் கீழ்வரும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத் துணைநிலை வழக்கில் வருமொன்றால், அவை ஒரே உருபனாகக் கொள்ளப்படலாம்:

1. வேறுபட்ட வகை அமைப்பு வரிசையில் வருவதைவிட ஒரே வகை அமைப்பு வரிசையில் வருதே உருபனாகும் தகுதியை வரையறுப்பதில் முக்கியமானது.

எடுத்துக்காட்டாக rose-s, boy-s, lip-s, ox-en, sheep என்ற சொற்களை எடுத்துக்கொண்டால் இவற்றின் பன்மை படிவங்கள் பெயர்சொல்லின் ஒருமை வடிவம் + பன்மை உருபு என்ற வரிசை முறையில் அமைகின்றது. ஆனால் உடமைப் பொருள்வேற்றுமையை உருபினைக் கொண்ட சொற்களாகிய அயஇ’ள, அநஇ’ள போன்ற சொற்கள் வேறோர் அமைப்பு வரிசையாகும். உடைமையுருபு பெயர்சொல்லின் ஒருமை வடிவத்தோடும் பன்மை வடிவத்தோடும் இணைகின்றது. இவ்வாறு ஆங்கிலத்தில் பன்மை உருபுகளும் உடைமை உருபுகளும் ஒரே வடிவம் உடையவை என்றாலும், அவை அமைப்பு வரிசையால் வேறுபடுகின்றன. இதுபோலவே தமிழில் கருவிவேற்றுமைப் பொருளில் வரும் ஆல் (எ.கா. கத்தியால், கம்பால்) என்பதும் நிபந்தனைப்

பொருளில் வரும் ஆல் (எ.கா. வந்தால், படித்தால்) என்பதும் அமைப்பு வரிசையில் வேறுபடுகின்றன. எனவே அவை இரண்டும் இரு உருபன்களாகும்.

2. வேறுவகை அமைப்பு வரிசையில் துணைநிலை வருகைமுறையில் வரும் உருபுகளைக்கூட ஒரே உருபன் என்று கொள்ளலாம்.

ஆனால் அவ்வேறுவகை அமைப்பு வரிசையில் வரும் ஓர் உருபனாவது மேற்குறித்த உருபுகள் வரும் இடங்களில் எல்லாம் வருவதாகவும், தனக்கு ஒரேயொரு மாற்றுருபையோ, ஒலியன்களால் கட்டுண்ட மாற்றுருபுகளையோ பெற்றதாக இருக்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக, தமிழ்வினைமுற்றுகளில் திணை, பால், எண், இடம் உணர்த்தும் உருபுகளாய் (விகுதிகளாய்) வருவனவற்றை மூவிடப்பெயர்களோடு தொடர்புபடுத்தலாம்.

மூவிடப்பெயர் வினைமுற்றுவிகுதி

| | **மூவிடப்பெயர்** | **வினைமுற்றுவிகுதி** |
|---|---|---|
| தன்மை ஒருமை | நான் | ஏன் |
| முன்னிலை ஒருமை | நீ | ஆய் |
| ஆண்பால் ஒருமை | அவன் | ஆன் |
| பெண்பால் ஒருமை | அவள் | ஆள் |
| பலர்பால் ஒருமை | அவர் | ஆர் |
| ஒன்றன்பால் ஒருமை | அது | அது |

ஒன்றன்பால் ஒருமை வெவ்வேறுவகை அமைப்பு வரிசைகளில் *அது* என ஒரே உருபுவடிவில் வருவாதால் *நான், ஏன்* என்பனவற்றை ஒரே உருபனாயும் *நீ, ஆய்* என்பனவற்றை ஒரே உருபனாகவும் கருதவியலும்.

3. அடுத்து வராத தொடரமைப்புச் சூழலை விட அடுத்து வரும் தொடரமைப்புச் சூழலே உருபனாகும் தகுதியை வரையறுப்பதில் முக்கியமானது. எடுத்துக்காட்டாக ஆண்கள் என்பதில் ஆண் என்னும் உருபனும் கள் என்னும் உருபனும் அடுத்து வந்து ஒரு தொடரமைப்பாக உள்ளன. எனவே *ஆண்* என்னும் உருபனைப் பொறுத்தவரையில் *கள்* என்பது அடுத்துவரும் தொடரமைப்புச் சூழலாகும். அறிவுள்ள ஆண்கள் என்பதில் *ஆண்* என்பதற்கு அடுத்துவரும் தொடரமைப்புச் சூழல் *கள்* என்பதேயன்றி அறிவுள்ள என்பதாகாது.

4. ஒத்த சூழ்நிலைகளில் இரண்டு உருபுகள் வேற்றுநிலை வழக்கில் வந்தாலும், அவற்றின் பொருள் வேறுபாட்டினை வருகை முறைகளோடு தொடர்புபடுத்த

முடியுமென்றால், அப்பொருள் வேறுபாடு உருபநிலை பெறாது என்றே கருதப்படும்.

எடுத்துக்காட்டாக hang என்ற ஆங்கிலச் சொல்லுக்கு hanged, hung என்ற இரண்டு இறந்தகால வடிவங்கள் உண்டு. அவ்விரண்டும் பொருளில் வேறுபடுகின்றன. ஒன்று இயங்குவினையாகவும் மற்றது இயக்கு வினையாகவும் பொருள்படுகின்றன. நான்காம் கட்டுப்பாட்டின்படி இப்பொருள்வேறுபாடு மட்டும் அவையிரண்டும்; வெவ்வேறு உருபன்கள் என்று கூறுவதற்குச் சான்றாகாது. ஏனென்றால் அவை துணைநிலை வருகைமுறையில் வருகின்றன. அதனால் அவ்விரண்டு உருபன்களையும் வெவ்வேறு உருபன்களாக் கருதவேண்டியதில்லை.

### 4.3.4. நைடாவின் நான்காம் விதி

பொருளாலும் வடிவாலும் வேறுபட்டு ஒரே அமைப்பு வரிசையில் வரும் இரண்டு உருபுகளுக்கிடையே வேறுபாட்டடிற்குக் காரணமாய் வெளிப்படையான வடிவவேறுபாடும் உருவிலா அமைப்பு வேறுபாடும் மட்டுமே காணப்படுமானால் அந்த வெளிப்படையான வடிவ வேறுபாட்டினையும் ஓர் உருபனாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் பன்மையைக் காட்டுவதற்கு வெளிப்படையான உருபு சேர்ப்பது மரபு (boy-boys). ஆனால் sheep என்ற சொல்லில் பன்மையைக் காட்ட உருபு இல்லாததால் அதில் வெற்றுருபு (zero morph) பன்மையைக்காட்டுகின்றது எனக் கொள்ளவேண்டும். foot [fut] - feet [fi:t]] என்பவைகளுக்கிடையில் உள்ள வடிவ வேறுபாட்டை (u → i:) உருபனாகக் கொள்ளவேண்டும். இத்தகைய உருபனை பதிலி உருபன் (replacive morpheme) என்பர்.

### 4.3.5. நைடாவின் ஐந்தாம் விதி

ஒரே ஒலி வடிவமுடைய சொற்கள் ஒரே உருபனா, வெவ்வேறு உருபன்களா என்பதைக் கீழ்வரும் கட்டுப்பாடுகளைப் பொறுத்து முடிவுசெய்யவேண்டும்:

1. ஒரே ஒலி வடிவமுடையவை என்றாலும் தொடர்பில்லாத வெவ்வேறு பொருள்களைக் குறிக்கின்ற சொற்கள் வெவ்வேறு உருபன்களாகும்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் *படி* என்ற வடிவத்தை எடுத்துக்கொள்ளுங்கள். *படி* என்பது படித்தலாகிய செயலையும் *படி* என்ற ஏறுவதற்கான தளங்களையும் குறிக்கும். எனவே பொருள் அடிப்படையில் படி என்ற வடிவத்தை இரு உருபன்களாகக் கொள்ளவேண்டும்.

2. ஒரே ஒலிவடிவம் பெற்றுத் தொடர்புடைய வெவ்வேறு பொருளைக் குறிக்கின்ற சொற்களைப் பொறுத்தவரை, பொருள் வேறுபாட்டினை அச்சொற்கள் வரும் சூழ்நிலை வேறுபாட்டினை வைத்து விளக்க முடியுமென்றால் அவை உருபனாகும். இல்லையெனில் தனித்தனி உருபனாகும். எடுத்துக்காட்டாக, *அடி* என்ற சொல் *நான் அவனை அடித்தேன்* என்ற சூழலிலும் *நான் அவனுக்கு ஒரு அடி கொடுத்தேன்* என்ற சூழலிலும் சிறிது வேறுபட்ட பொருள்களைக் குறித்தாலும் இவ்வேறுபாட்டை அவை வரும் சூழல் அடிப்படையில் விளக்க இயலும். எனவே இந்த இரு நேர்வுகளிலும் வரும் அடி என்பதை ஒரே உருபனாகத்தான் கொள்ளவேண்டும்.

**4.3.6. நைடாவின் ஆறாவது விதி**

கீழ்வரும் மூன்று சூழல்களில் வருமானால் ஒரு சொல் வடிவத்தை உருபனென்று கொள்ளலாம்:

1. தனித்து வருதல்

2. பல்வேறு உருபுகஏளாடு இணைந்து வரதல். அவ்வாறு வரும்போது அச்சொல் வடிவம் எவ்வுருபுகளோடு இணைந்து வருகின்றதோ அவ்வுருபுகளில் ஒன்றாவது தனித்தோ வேறு உருபுகளோடு இணைந்தோ வரவேண்டும்.

3. ஒரேயொரு உருபோடு இணைந்து வருதல். இவ்வாறு வரும்போது, அச்சொல் வடிவம் எவ்வுருபோடு இணைந்து வருகிறதோ அவ்வுருபு தனித்தோ வேறு உருபுகளோடு இணைந்தோ வரவேண்டும். அவ்விணைப்பும் தனியொன்றாய் இருக்கலாகாது.

எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் cran என்ற அலகை எடுத்துக்கொள்வும். இது berry என்ற சொல்லோடு இணைந்து cranberry என்று வரும். berry என்பது தனித்தும் வேறு உருபுகளோடு இணைந்தும் வரலாம் (எ.கா. strawberry, gooseberry). எனவே berry என்பதுடன் மட்டும் இணைகிற cran என்பதையும் ஒரு உருபனாகக் கொள்வேண்டும்.

**4.4. திரிபும் ஆக்கமும்**

உருபனியலைச் சொல் திரிபு உருபனியல், சொல்லாக்கம் (சொல் வழி உருபனியல்) என்று இரு கிளையியல்களாகப் பகுக்கலாம். சொல் திரிபு உருபனியல் சொல்லன்களின் பல வடிவுகளைப் பற்றிக் கூறுகின்றது (எ.கா. *படி, படித்தான், படிக்கிறான், படிப்பான்*). ஆனால் சொல்லாக்கம் தந்துள்ள அடியிலிருந்து புதிய சொற்களை ஆக்குதைப் பற்றிக் கூறுகின்றது (எ.கா.

படி+ப்பு> படிப்பு, படு +க்கை> படுக்கை). சொல்லாக்கத்தை ஆக்கப்பாடு என்றும் கூட்டாக்கம் என்றும் மேலும் வகைப்படுத்தலாம். ஆக்கப்பாடு ஒட்டாக்கத்தால் புதிய சொல்லன்களை உருவாக்குவதைப் பற்றிக் கூறுகின்றது (துணை+இ> துணைவி). கூட்டாக்கம் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தகுதி வாய்ந்த பகுதிகள் சேர்ந்து புதிய சொல்லன்களை உருவாக்குவது பற்றி கூறுகின்றது (கரும்+ பலகை> கரும்பலகை). ஆக்கப்பாட்டையும் வகைப்படுத்தலாமா என்ற ஐயம் உங்களுக்கு எழலாம்.

ஆமாம். ஆக்கப்பாட்டை வகுப்புமாறா ஆக்கப்பாடு, வகுப்புமாறும் ஆக்கப்பாடு என இரு வகுப்புகளாகப் பிரிக்கலாம். சொல்லடியிலிருந்து அதே வகுப்பைச் சார்ந்த சொல்லன்களை ஆக்குவது வகுப்புமாறா ஆக்கப்பாடாகும் (எ.கா. *வேலை + ஆள் > வேலையாள்*). சொல்லடியிலிருந்து வேறுபட்ட சொல் வகுப்பு சார்ந்த சொல்லன்களை ஆக்குவது வகுப்பு மாற்றும் ஆக்கப்பாடாகும் (*அன்பு+ஆக> அன்பாக, வாழ்+கை>வாழ்க்கை*). கூட்டாக்கத்தையும் ஆக்கப்பட்ட கூட்டுகளின் வடிவ அடிப்படையில் கூட்டுப்பெயர், கூட்டுவினை எனப் பிரிக்கலாம். ஆக்கப்பாடுகளைப் பொருண்மையியல் அடிப்படையில் உள்வட்டக்கூட்டு (எ.கா. *மாம்பழம், மாமரம்*), வெளிவட்டக்கூட்டு (எ.கா. *கால்நடை*), நேரியையபு கூட்டு, உம்மைத்தொகைக் கூட்டு (எ.கா. *செடிகொடிகள்*) என்று பிரிக்கலாம். கீழே தந்துள்ள கிளைப்படம் உருபனியலின் அடிப்படையான பாகுபாடுகளைக் காட்டும்:

படம்5




### 4.5. உருபன்களின் வகைகள்

மரபு உருபனியில் உருபன்களை அவற்றின் இணையும் முறையின் அடிப்படையில் சேர்க்கை உருபன்கள் (additive morphme), குறைப்பு உருபன்கள் (substrative morpheme), பதிலி உருபன்கள் (replacive morpheme) என மூன்று வகைகளாகப் பிரிக்கும். இவை முறையே கூடுதல், குறைதல், பதிலாய் வருதல் என்ற மூன்று இணைப்புச் செயல்பாடுகளைக் குறிப்பிடும். ஒன்றோடொன்று கூடும் நிலையை உடைய உருபன்பகள், வேர் உருபன்கள் (சடிடிவள), முன்னொட்டுகள் (prefixes), பின்னொட்டுகள் (suffixes), உள்ளொட்டுகள் (infixexs), அடுக்குகள் (reduplicatives) முதலியவை கூடுநிலை உருபன்களாகும். இவற்றில் நால்வகை ஒட்டுகளும் கட்டுண்ட உருபன்கள் (bound morphmes) ஆகும். கட்டுண்ட உருபன்கள் தனிச்சொல்லாக வரவியலாத உருபன்களாகும். தனிச்சொல்லாக வரவியலும் உருபன்கள் (எ.கா. தமிழில் கை, கால் என்பன) தனி உருபன்களாகும் (free morphemes)

முன்னொட்டுகள் எ.கா. அ-நீதி என்பதிள்ள un-happy என்பதிலுள்ள un

பின்னொட்டுகள் எ.கா.: கால்-கள் என்பதிலுள்ள கள், வாள்-ஐ என்பதிலுள்ள ஐ.

உள்ளொட்டுகள் எ.கா. கீழே தரப்பட்டுள்ளது.

**குறைநிலை உருபன்** என்பது ஓர் உருபனிலிருந்து ஒலியன்கள் ஒன்றோ பலவோ குறைக்கப்படுவதாகும். எடுத்துக்காட்டாக பிரஞ்சு மொழியில் பெயரடை ஒவ்வொன்றிற்கும் ஆண்பால் பெண்பால் என இரு படிவங்கள் உண்டு. ‘கெட்ட’ என்னும் பொருளில் வரும் ஆண்பாலில் /movez/ என்பதும் பெண்பாலில் /mov ɛ / என்பதும் வருகினறன. இவ்வாறே கீழ்வருவனவும் உள்ளன:

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| /šod/ | /šo/ ‘சூடான’ |
| /gras/ | /gra/ ‘கொழுத்த’ |
| /fr ɛ š/ | /fr ɛ / ‘புதிய’ |

**பதிலி உருபன்** என்பது அடிச்சொல்லின் ஒரு பகுதிக்குப் பதிலாய் வரும் உருபனாகும் (எ.கா. ஆங்கிலத்தில் ஒருமை-பன்மை வடிவுககளான foot [fut]-feet [fi:t] என்பதிலுள்ள u -> i: பதிலி உருபனாகும்) . அடிச்சொல் (stem) என்பது வேர்ச்சொல்லாகவும் (எ.கா. தமிழில் வினயடிகளான *படி, வா* என்பன)

இருக்கலாம். வேச்சொல்லும் வேறு உருபனும் சேர்ந்த ஒன்றாகவும் இருக்கலாம் (தமிழினல் வினையடிகளான எ.கா. *படிப்பி, வருவி* என்பன).
ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுணர்த்தும் ஒரு கலவைத்தன்மையான உருபனை **போர்ட்மென்டொ உருபன்** (portmanteau morpheme) என்று கூறவர். எடுத்துக்காட்டாக இலத்தீன் மொழியில் ஒருமை, பன்மை பெருண்மைகளும் வேற்றுமை பொருண்மைகளும் கலந்த ஒரு கலவைத்தன்மையான உருபன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை போர்ட்மெனடோ உருபன் என்பர். எடுத்துக்காட்டாக இலத்தீன் மொழியிலுள்ள ANNUS 'year' என்பதன் திரிபு பின்வருமாறு அமையும்:

| | **ஒருமை** | **பன்மை** |
|---|---|---|
| எழுவாய் வேற்றுமை (Nominative) | ann-us | ann-i: |
| விளிவேற்றுமை (Vocative) | ann-e | ann-i: |
| செயப்படுபொருள் வேற்றுமை (Accusative) | ann-um | ann-o:s |
| உடைமை வேற்றுமை (Genitive) | ann-i: | ann-o:rum |
| கு-வேற்றுமை (Dative) | ann-o: | ann-i:s |
| நீங்கல் வேற்றுமை | ann-o: | ann-i:s |

முன்னொட்டும் பின்னொட்டும் இணைந்து ஒரு அடியுருபனை சூழ்ந்து ஒரு உருபனாகச் செயல்படும். இவ்வொட்டுகள் ஓரஒட்டுகள் (circumfixes) எனப்படும். எடுத்துக்காட்டாக ஜெர்மன் மொழியில் உள்ள பின்வரும் ஓர ஒட்டுகளைக் கூறலாம்:

film-en 'to film' ge-film-t 'filmed
frag-en ' to ask ge-frag-t 'asked'
lob-en 'to praise' ge-lob-t 'parised'
zeig-en 'to snow' ge-zeig-t 'shown'

உள்ளொட்டுகள் (Infixes) ஒரு தொடரா அடியை (தொடரா உருபனை= discontinous morpheme) உருவாக்கும். வியட்நாமில் பேசப்படும் சரவ் என்ற மொழியில் உள்ளொட்டுகள் காணப்படுகின்றன. எ.கா.

(Charau, a language of Vietnam)

sulat ‘write’

s-um--ulat ‘wrote

s-in-ulat ‘was written’

தொடரா ஒட்டுகளையும் தொடரா அடிகளையும் உள்ளடக்கிய ஒரு தனித்தன்மையான உள்ளொட்டுகள் செருகு ஒட்டுகள் (interfixes) எனப்படும். இஜிப்சியன்-அரேபிய மொழியில் இவ்வகையிலான ஒட்டுகள் காணப்படும். இதில் அடிகள் மெய்யெழுத்துகளின் சட்டகங்கள் போல இருக்கும். இதில் உயிரெழுத்துகள் ஒட்டுகளாகச் செருகப்படும். எ.கா.

**<u>Egyptian Arabic</u>**

ktb ‘write’

‘katab ‘he wrote’

‘jiktib ‘he will write’

mak’taba ‘bookshop

ma’kaatib ‘book shops’

kaatib ‘clerk’

அடியின் ஒரு பகுதி இரட்டுவதால் விளையும் உருபன் இரட்டையுருபன் (reduplicative morpheme) எனப்படும். முழு அடியும் இரட்டித்தால் அது கூட்டாக்கத்தை ஒக்கும். எ.கா.

<u>Afrikaans</u>

| | |
|---|---|
| sumulat ‘to write | su-sulat ‘will write’ |
| bumasa ‘to read’ | ba-basa ‘will read’ |
| ?umaral ‘ to teach | ?a-?aral ‘will teach’ |

### 4.6. உருபன்களின் அமைப்பொழுங்கு

ஒரு சொல்லில் வரும் உருபன்களின் வரிசை அமைப்பு உருபன்களின் அமைப்பொழுங்கு எனப்படும். தமிழில் பெயர்ச்சொற்களில் உருபன்களின் அமைப்பொழுங்கு பின்வருமாறு அமையும்: பெயர் (+ எண்) (+வேற்றுமை எ.கா. கை-கள்-ஐ, மரங்-கள்-ஐ வினைமுற்றுக்களில் உருபன்களின் அமைப்பொழுங்கு பின்வருமாறு அமையும்: வினை + காலஒட்டு + வினைமுற்று விகுதி எ.கா. படி-த்த்-ஆன், செய்-த்-ஆன் ஒவ்வொரு மொழியும் தனித்தன்மையான உருபனியல் அமைப்பொங்கைக் கொண்டிருக்கும்.

**தன்மதிப்பீடு**

1. உருபனியல் என்றால் என்ன?

2. உருபு, உருபன், மாற்றுருபன் - வேறுபடுத்துக.

3. உருபன்களைக் காணும் முறை பற்றி ஒரு குறிப்பு எதுக.

4. திரிபு, ஆக்கம் - வேறுபடுத்துக.

**4.7. பாடத்தொகுப்புரை**

உருபனியல் அறிமுகத்தை உருபனியல் பற்றிய விளக்கமாகத் தெரிந்து கொண்டீர்கள். உருபுகள், உருபன்கள், மாற்றுருபுகள் பற்றிய விளக்கங்களையும் இவைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளையும் அறிந்து கொண்டீர்கள். உருபன்பளைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகளை விளங்கிக்கொண்டீர்கள். உருபன்களின் வகைப்பாடு பற்றியும் உருபன்களின் வருகைமுறை பற்றிய விளக்கத்தையும் தெரிந்து கொண்டீர்கள். திரிபும் ஆக்கமும் குறித்து விளங்கிக்கொண்டீhக்கள். தமிழில் கலைச்சொல்லாக்கம் குறித்து விரிவாக அறிந்துகொண்டீர்கள். **4.8. கலைச்சொற்கள்**

1. **ஆக்கம்** (derivation), 2. **உருபன்** (morpheme), 3. **உருபு** (morph), 4. **ஒட்டு** (affix), 5. **கலைச்சொல்** (technical term), 6. **கூட்டு** (compound), 7. **சொல்லாக்கம்** (wordformation), 8. **திரிபு** (suffix), 9. **பின்னொட்டு** (suffix), 10. **முன்னொட்டு** (prefix)

**4.9. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்**

கருணாகரன், கி. மற்றும் வ. ஜெயா. 1997. மொழியியல். குமரன் பதிப்பகம் சென்னை

பரமசிவன்.கு. 1984. இக்கால மொழியியல் அறிமுகம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

**தன்மதிப்பீடு விடைகள்**

1. ஒரு சொல்லிலுள்ள உருபன்களைப் பிரித்து அவற்றின் பொருண்மைகளைத் தருவதும் அவற்றின் அமைப்பொழுங்கைத் தருவதும் உருபனியலாகும்.

2. உருபனியலின் அடிப்படைக்கூறு உருபன் ஆகும். ஒரு கூற்றை அல்லது சொல்லை பொருள் தரும் அலகுகளாகப் பிரிப்பது உருபனியல் ஆய்வாகும். இவ்வலகை மேலும் பிரிக்க இயலாது. இத்தகைய மேலும் பிரிக்க இயலாத பொருண்மை தரும் அலகுகளை உருபுகள் என்று அழைக்கலாம். எவ்வாறு ஒலியன்களுக்கு மாற்றொலிகள் உள்ளனவோ அது போலவே உருபனுக்கும் மாற்றுருபுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக பின்வரும் சொற்களைக்

கவனியுங்கள்: மரம், மரங்-கள். மரம் என்பதும் மரங் என்பதும் மரம் என்ற உருபனின் மாற்றுருபுகள் எனலாம். ஒரு சொல்லை பொருண்மை தரும் கூறுகளாகப் பிரிக்கையில் அவற்றை உருபுகள் என்றுதான் அழைக்க வேண்டும். இவ்வுருபுகள் அவற்றின் செயல்பாடு மற்றும் வருகைமுறை அடிப்படையில் உருபன்களாகக் குழுமப்படும்.

3. நைடா பட்டியலிட்டுள்ள ஆறுவிதிகளைப் பயன்படுத்தி உருபன்களைக் கண்டுபிடிக்கலாம். ஒரு சொல்லில் உருபன்பகளைக் கண்டுபிடிக்கையில் அதில் வரும் எல்லா ஒலியன்களும் ஏதாவது உருபனுடன் சேர்க்கப்படவேண்டும் என்ற கொள்கையை மனதில் கொள்ளவேண்டும். எந்த ஒலியனும் உருபனுடன் சேர்க்கப்படாது விட்டுவிடலாகாது. உருபன்களுக்கு பொருளோ இலக்கணச் செயல்பாடோ இருக்கும். ஒரே பொருளையோ இலக்கணச் செயல்பாட்டையோ கொண்ட உருபுகள் உருபன் விதிகள் அடிப்படையில் ஒரு உருபனின் மாற்றுருபுகளாகக் கொள்ளப்படவேண்டும்.

4. உருபனியலைச் சொல் திரிபு உருபனியல், சொல்லாக்கம் (சொல் வழி உருபனியல்) என்று இரு கிளையியல்களாகப் பகுக்கலாம். சொல் திரிபு உருபனியல் சொல்லன்களின் பல வடிவுகளைப் பற்றிக் கூறுகின்றது (எ.கா. படி, படித்தான், படிக்கிறான், படிப்பான்). ஆனால் சொல்லாக்கம் தந்துள்ள அடியிலிருந்து புதிய சொற்களை ஆக்குதைப் பற்றிக் கூறுகின்றது (எ.கா. படி+ப்பு> படிப்பு, படு +க்கை> படுக்கை). பாடப்பகுதி

## பாடப்பகுதி 5
## தொடரியல்

**பாட நோக்கம்**

• தொடரியலின் நோக்கத்தையும் விளக்கத்தையும் தருவது

• அண்மை உறுப்புப் பகுப்பாய்வையும் அதன் குறைபாடுகளும் விளக்குவது

• தொடரமைப்பு ஆயவையும் அதன் குறைபாடுகளையும் விளக்குவது ளும்

• மாற்றிலக்கணத் தொடரியலை சாம்கியின் 1965 முன்மாதிரியின் அடிப்படையில் தருவது பாடக்கருத்தலகுகள்

5.0. தொடரியலின் நோக்கமும் விளக்கமும்

5.1. அண்மையுறுப்பாய்வு

5.1.1. அண்மை உறுப்புகளாகப் பிரிப்பதன் அளவீடு

5.1.2. அண்மையுறுப்புகளின் வகைகள்

5.1.3. அண்மையுறுப்பாய்வின் மாதிரிகள்

5.1.4. அண்மையுறுப்பாய்வின் வரம்பெல்லை அல்லது சிக்கல்கள்

5.2. தொடரமைப்பு இலக்கணம்

5.2.1. விரித்தெழுது விதிகள்

5.2.2. தொடரியல் வகைப்பாடுகள்

5.2.3. சொற்செருகல் விதிகள்

5.2.4. தொடரமைப்பு இலக்கணத்தின் வரம்பெல்லை

5.3. ஆக்கமுறை மாற்றிலக்கணம்: சாம்ஸ்கியின் 1965 மாதிரி

5.3.1. அக அமைப்பும் புற அமைப்பும்

5.3.2. Syntactic Structure -இல் மாற்றுவிதிகள்

5.3.3. Aspects மாதிரி

### 5.0. தொடரியலின் நோக்கமும் விளக்கமும்

சொற்கள் இணைந்து வாக்கியங்களை உருவாக்கும் விதிகளை உள்ளடக்கிய ஆய்வுதான் மரபாகத் தொடரியல் என்று கூறப்பட்டது. இவ்விதம் தொடரியல் சொற்களின் அமைப்பை ஆயும் உருபனியலிலிருந்து வேறுபடும். வாக்கிய அமைப்பின் தனிமங்களுக்கு இடையே உள்ள உறவுகளைப் பற்றிய ஆய்வு தொடரியல் எனப்படும். திரிபுகளாலும் ஆக்கத்தாலும் உருவாக்கப்பட்ட சொற்களால் ஆன கட்டுமானங்களை வரிசைப்படுத்திப் பொPய

கட்டுமானங்களாக ஆக்கும் கொள்கைகளைத் தொடரியல் எனலாம். உருபனியலுக்கும் தொடரியலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு எப்போதும் தெளிவாக இருப்பதில்லை. சில மொழிகளில் இவ்வேறுபாடு தெளிவாகவும் சிலவற்றில் தெளிவற்றும் இருக்கும்.

**5.1. அண்மையுறுப்பாய்வு**

தொடரியல் ஆய்வுக்கு அடிப்படையாக அமைவது அண்மை உறுப்பு ஆய்வாகும். இவ்வாய்வு ஒருவாக்கியத்தில் நெருங்கிய உறவில் வரும் சொற்கள் அண்மைப்பட்டுவரும் என்ற எதிர்பார்பின் அடிப்படையில் அமைந்தது எனலாம். அண்மை உறுப்பாய்வின் நோக்கம் ஒவ்வொரு கூற்றையும் மற்றும் ஒவ்வொரு உறுப்பையும் கூடுதலான சுயேட்சைத் தொடர்ச்சிகளாக ஆய்வதுதான். ஒரு கட்டு உருபனியல் நிலையில் உருபன்களாகவும் தொடரியல் நிலையில் சொற்களாகவும் பொருள் தரும் சிறு அலகுகளாகப் பிரிக்கப்பட்டு விளையும் உறுப்புகள் இறுதி உறுப்புகள் எனப்படும். அண்மை உறுப்பு ஆய்வின் செயல்பாடு எவ்விதமான கூற்றுகள் வருகின்றன என்பதை விளக்குவதல்ல. இக்கூற்றுகள் தரப்பட்ட பின் அவற்றின் உறுப்புகள் யாவை என விவரிப்பதுதான். வாக்கியங்களில் படிநிலை அமைப்பு இருக்கின்றது. அண்மை உறுப்பு ஆய்வு வாக்கியங்களில் எவ்வாறு அலகுகள் படிநிலையில் அமைகின்றன, அதாவது எவ்வாறு ஒவ்வொரு கீழ்நிலை உறுப்புகளும் உயர்நிலை உறுப்புகளின் பாகமாக அமைகின்றது என்பதைக் கண்டறிய உதவுகின்றது. இந்தச் செயல்முறைகள் புளூம் ஃபீல்டால் தொடங்கப்பட்டு பைக்கால் முன்னேற்றப்பட்டு வெல்ஸ்சால் முறையாக அமைக்கப்பட்டது. இது வாக்கியத்தில் வரும் சொற்களுக்கிடையே சொல்லத்தக்க உறவு உண்டு என்பதையும் அண்மைப்பட்ட சொற்கள் அண்மைப்படாத சொற்களைக் காட்டிலும் கூடுதல் உறவை வெளிப்படுத்தும் என்ற எதிர்பார்பின் மேல் அமைந்ததாகும். பின்வரும் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம் அங்கே வசிக்கும் வயதான மனிதர் தன் மகன் வீட்டிற்குச் சென்றிருக்கிறார். சொற்களைக் குறிப்பிடத் தக்க விதத்தில் குழுமம் செய்தல் கட்டுமானம் அல்லது கட்டு எனப்படும். நாம் பார்த்த எடுத்துக்காட்டில் முழுக்கூறும் கட்டுமானமாகும். பொாpயகட்டுமானத்தில் அடங்கும் சொல்லோ கட்டுமானமோ அதன் உறுப்பாகும். அங்கே வசிக்கும், வயதான மனிதர் என்பன அங்கே வசிக்கும் வயதான மனிதர் என்ற கட்டுமானத்தின் உறுப்புகளாகும். வயதான, மனிதர் என்பன வயதான மனிதர் என்ற கட்டுமானத்தின் உறுப்புகளாகும்.

ஒருகட்டுமானத்தை உருவாக்கும் இரு உறுப்புகளில் ஒன்று அண்மை உறுப்பாகும்.

**பதிலீடு முறை** (substitutability)

அண்மை உறுப்பு ஆய்வில் பயன்படுத்தப்படும் பரிசோதனை பதிலீடு முறையாகும். பதிலீட்டு முறைதான் ஒரு வாக்கியத்தையோ தொடரையோ அண்மை உறுப்புகளாகப் பகுத்தாயத் துணைபுரிகின்றது. ராஜாவின் மகனுடைய வீடு தெனாலிராமனுடைய வீடு அவனுடைய வீடு மேற்கண்ட தொடர்களில் ராஜாவின் மகனுடைய, தெனாலிராமனுடைய என்பன மொத்தத் தொடர்களின் அதாவது கட்டுமானங்களின் உறுப்புகளாகும் என்ற உண்மை ராஜாவின் மகனுடைய, தெனாலிராமனுடைய என்பவற்றை அவனுடைய என்ற ஒரு சொல்லால் பதிலீடு செய்யலாம் என்ற சாத்தியத்தால் உறுதிப்படும். தெனாலிராமனனுடைய வீடு என்பது உறுப்பு. தெனாலிராமனுடைய என்பதன் அண்மை உறுப்புகள் தெனாலி, ராமனுடைய என்பனவல்ல, தொனாலிராமன், உடைய என்பன. எனவே ராமனுடைய என்பது இந்த வாக்கியத்தின் உறுப்பல்ல. கட்டுமான அமைப்பொழுங்கு மற்றும் உறுப்பு வகுப்பு (constituent class) கருத்துரு அடிப்படையில் தான் அண்மை உறுப்பு வரையறுக்கப்படும். உறுப்பு வகுப்பு கூடுதல் அளவு ஒன்றையொன்று பதிலீடு செய்கிற முறையைக் காட்டுகின்ற ஒரே கட்டுமான அமைப்பொழுங்கில் வருகிற உறுப்புகளின் ஏதாவது வகுப்பு உறுப்பு வகுப்பு எனப்படும். பின்வரும் வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம்.

எ.கா.

அங்கே வசிக்கும் வயதான மனிதர் என் தந்தை
அவர் என் தந்தை நான்
அங்கே வசிக்கும் வயதான மனிதரைப் பார்த்தேன்

*அங்கே வசிக்கும் வயதான மனிதர்* என்பதும் *அவர்* என்பதும் ஒரே உறுப்பு வகுப்பில் அடங்குபவை. பின்வரும் வாக்கியங்களை ஆய்வோம். உறுப்பு வகுப்பும் கட்டுமான அமைப்பொழுங்கும் உள்ளுணர்வு அடிப்படையிலான அண்மை உறுப்பு ஆய்வுக்கு மிக உகந்தது. உறுப்பு வகுப்பின் அங்கங்கள் பல்வேறுபட்ட நீளங்களில் பல் வேறுபட்ட அக அமைப்பில் வரும். இதுதான் உறுப்பு வகுப்பை பயனுள்ளதாக்குகின்றது. இது நீண்ட வாக்கியங்களை கட்டுமான அமைப்பொழுங்கால் விளக்க அனுமதிக்கின்றது. சிறிய வாக்கியங்களை விளக்கப் பயனள்ளதாய் அமைகின்றது.

ஒரு மொழி உறுப்பு வகுப்புகளின் எளிய அமைப்பைப்பொழுங்கைக் கொண்டிராமல் துணைவகுப்புகள், துணை துணை வகுப்புகள் என அமைப்பொழுங்கைக் கொண்டிருக்கும். அடுத்தடுத்து வருகின்ற ஒவ்வொரு துணை பகுப்பும் (subdivision) இறுதிவரை செயல்படும். இவ்வாறு நமக்கு வகுப்புகளின் படிநிலையும் துணைவகுப்புகளின் பல நிலைகளும் கிடைக்கும். பின்வரும் வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம்:

நான் அவரைப் பார்த்தேன்
*நான் அந்த மனிதரைப் போனேன்
*நான் அந்த மனிதரை வந்தேன்

நாம் இங்கு இருவகைப்பட்ட வினைவகுப்புகளைப் பார்க்கிறோம்: செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை. ஒரு மொழியுறுப்பு வகுப்பு ஒழுங்குமு¡யைக் கொண்டிருக்கிறது என்று கூறுவததைவிட வகுப்புகள், உள்வகுப்புகள் என ஒழுங்குமுறையைக் கொண்டுள்ளது எனக் கூறலாம். இவ்வாறாக நமக்கு வகுப்புகளின் படிநிலையும் உள்வகுப்புகளின் படிநிலையும் இருக்கின்றன.

**5.1.1. அண்மை உறுப்புகளாகப் பிரிப்பதன் அளவீடு**

அண்மை உறுப்புகளாகப் பிரிப்பதன் அளவீடுகளாக அகப்பற்றாசு, அகமாறுபாடு, சுதந்திரத்தன்மை என்பனவற்றைக் குறிப்பிடலாம். அகப்பற்றாசு ஒரு தொர்ச்சி எந்த அளவுக்கு ஒரு அலகாகச் செயல்படுகின்றது என்பதை அகப்பற்றாசு (internal cohesion) எனலாம். ஒவ்வொரு தொடர்ச்சியும் அதன் விரிவுகளின் பகுதிகளாக ஆயப்பட வேண்டும். எடுத்துக்காட்டாகப் பின்வரும் வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம். மாவட்ட ஆட்சியர் அந்தக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார் தாமோதரன் அதைச் செய்தார் இந்த இரு வாக்கியங்களிலும் வருகை சலுகை (privilege of occurrence) ஒன்றாகும். ஒரு கட்டின் உறுப்பகளில் ஒன்று வரும் இடத்திலேயே வரும் வடிவை அக்கட்டு தந்தால் அந்தக் கட்டு உள்வட்டக் கட்டு எனப்படும். எ.கா.

மாவட்ட ஆட்சியர்

ஒரு கட்டின் எந்த உறுப்புக்கும் முழுத்தொடர் வரும் இடத்தில் வருகை சலுகை இல்லாவிட்டால் அது வெளிவட்டக் கட்டு எனப்படும். பல உறுப்புகள் சேர்ந்த ஒரு கட்டு வரும் இடங்களில் அதன் உறுப்புகளும் வரக்கூடுமானால் அது கூட்டுநிலை உள்வட்டக்கட்டு (endocentric construction) எனப்படும்.

ஒரு பெரிய அழகான மலர் | பூத்தது

ஒரு பெரிய மலர் | பூத்தது

மலர் | பூத்தது

இதிலிருந்து மாறுபட்டு வருவது வெளிவட்டுக்கட்டு எனப்படும்.

அவன் வேகமாக ஓடினான்

*அவன் வேகமாக

அகமாறுபாடு (**internal diversity**) இதன் படி ஒவ்வொரு அண்மை உறுப்பும் கூடுதல் அக மாறுபாடு அமைப்புள்ள பதிலீடு அலகுகளால் பதிலீடு செய்யப்படும். எடுத்துக்காட்டாக அந்த அறையில் என்பதை அந்த அறை, இல் எனப் பகுக்கலாம். ஏனென்றால் அந்த அறை மிக கூடுதல் அகமாறுபாடு உள்ள பதிலீடுசெய்ய இயலும் தொடர்ச்சிகளின் வகுப்பைச் (அதாவது பெயர்த்தொடரைச்) சார்ந்தது. சுதந்திரத் தன்மை அண்மை உறுப்புகள் அவற்றின் வருகை முறையில் ஒன்றுக்கொன்று சுதந்திரத்தன்மை உடையதாய் இருக்கவேண்டும். அதாவது அண்மை உறுப்புகள் பல சூழல்களில் மற்றும் கட்டுகளில் பல அமைப்புகளில் வரும். பின்வரும் எடுத்துக்காட்டுகள் அந்த அறை என்பதன் சுதந்திரத்தன்மையான வருகையை வெளிப்படுத்தும். அந்த அறையில் வெளிச்சம் இல்லை அவள் அந்த அறையைச் சுத்தம் செய்தாள் அந்த அறை அவன் உடையது

**5.1.2. அண்மையுறுப்புகளின் வகைகள்**

பல் அண்மை உறுப்புகள் மொழியியல் அமைப்புகள் பொதுவாக ஈரிணையானவை (binary). அதாவது இரு கூறுகளாகப் பரிக்கத்தகவை. ஆனால் ஒரு உறுப்பில் மூன்று தொடர்ச்சிகள் இருந்தால் (அஇஉ) அவற்றை அஇ/உ அல்லது அ/இஉ என்று ஆய்வதற்குத் தகுந்த காரணங்கள் இல்லாதிருந்தால் அவை மூன்றாகப் பிரிக்கப்படவேண்டும். அது போலவே நான்கு உறுப்புகள் உள்ள கட்டை இரண்டாக அல்லது மூன்றாக ஆய இயலவில்லை என்றால் நான்காக ஆயப்படவேண்டும். ஒரு கட்டை உருவாக்கும் இரண்டிற்குமேற்பட்ட அண்மை உறுப்புகள் பல் அண்மை உறுப்புகள் (multiple ICs) எனப்படும். பின்வரும் எடுத்துக்காட்டில் *ராமனும் கிருஷ்ணனும் ராதையும்* என்ற தொடர் ஒரே நேரத்தில் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஆயப்படவேண்டும். எ.கா.

ராமனும் |கிருஷ்ணனும் |ராதையும்

இதுபோலவே சேரசோழ பாண்டியர் வந்தனர் என்ற வாக்கியத்தையும் பின்வருமாறுதான் பிரித்தாய இயலும்.

சேர சோழ பாண்டியர் வந்தனர்

சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்றுமே ஒரு நிலையில் வந்து எழுவாயாகச் செயல்படுகின்றன. இருமைப் பகுப்பாய்வு செய்ய இயலாது. இதுபோல் *கை கால் முகம் கழுவினான்* என்பதிலும் *கை, கால், முகம்* என்பனவை ஒரேநிலையில் வந்து செயப்படுபொருளாகச் செயல்படுவதால் அவற்றையும் மூன்றாகப் பகுக்க வேண்டுமேயன்றி இரண்டாகப் பகுக்கலாகாது. தொடரா அண்மை உறுப்புகள் உறுப்புகள் ஒன்றையொன்று தொடர்ந்து வருவதால்தான் அண்மை உறுப்புகள் எனப் பெயர் பெற்றன. ஆனால் சில சூழல்களில் அண்மைப்பட இயலும் உறுப்புகள் அண்மைப்படாது வரும். அதாவது எப்பொழுதும் ஒரு மொழிக்கூறை இரண்டு அலகுகளாகப் பகுக்க இயலாது. ஏனெற்றால் பிணணப்புள்ள கூறுகள் தொடர்ச்சியால் பிரிக்கபட்டிருக்கும். இத்தொடரை தொடரா அண்மை உறுப்புகள் என்பர். எடுத்துக்காட்டாகப் பின்வரும் வாக்கியங்களை எடுத்துக்கொள்வோம்:

அவருக்கு அவனையும் அவளையும் பற்றித் தெரியாது
அவருக்கு அனைப்பற்றியும் அவளைப்பற்றியும் தெரியாது

முதல் வாக்கியத்தில் தெரியாது என்பது அவனைப் பற்றி, அவளைப் பற்றி என்ற இரண்டிற்கும் பொதுவானதாக (அண்மைப்பட்டதாக) அமையும். இந்த உண்மையை அண்மை உறுப்பு ஆய்வில் காட்ட இயலாது. ஆங்கிலத்தில் வரும் பின்வருவன போன்ற வினாவாக்கியங்கள் தொடரா அண்மை உறுப்புக்களுக்கு எடுத்துக்காட்டுகளாக அமையும். ஆங்கிலத்தில் ஒரு வகை வினா வாக்கியங்கள் துணை வினையை எழுவாய்க்கு முன்னர் நகர்த்துவதால் பெறப்படும். ழந ளை ய bடில ஐள hந ய bடில? ளை என்ற துணை வினையைத் தொடர்ந்து தான் ய bடில என்ற நிரப்பி வரவேண்டும். ஆனால் வினாவாக்கயத்தில் இந்த அண்மைத் தன்மை இல்லாது போய் விடுகின்றது. கட்டுமான ஒருபோன்மை ஒரே தனிமங்களால் ஆன ஆனால் வேறுபட்ட கட்டுமான அமைப்பொழுங்குள்ள மற்றும் வேறுபட்ட அண்மை உறுப்பு அமைப்புகள் உள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கட்டுமானங்களின் உறவு/தொடர்பு கட்டுமான ஒருபோன்மை (constructional homonymy) என அழைக்கப்படும். கீழ்வரும் எடுத்துக்காட்டு கட்டுமான ஒருபோன்மையை விளக்கும்.

பழைய வீட்டுச் சாமான்

பழைய வீட்டுச் சாமான்

பழைய என்பது வீட்டிற்கோ வீட்டு சாமானுக்கோ அடையாக வந்து பொருள் மயக்கம் தருகின்றது. இது போலவே அழகான சிறுமியின் பொம்மை பின்வரும் பகுப்பாய்வில் தந்துள்ளது போல் பொருள் மயக்கம் காட்டும். அழகான சிறுமியின் பொம்மைகள்; அழகான சிறுமியின் பொம்மைகள் கட்டு ஒருபோன்மை அல்லது மயக்கம் வகைப்பாடுகளின் செயற்பாடு வேறுபாட்டாலோ படிநிலை அமைப்பு வேறுபாட்டாலோ (அதாவது அடைப்புக் குறியிடல் வேறுபாட்டாலோ) அல்லது இரண்டினாலுமோ ஏற்படலாம். கீழ்வரும் எடுத்துக்காட்டு இதைத் தெளிவுபடுத்தும்.

அவன் பையன்

அவன் ஒரு பையன் அவனுடைய பையன்

### 5.1.3. அண்மை உறுப்பாய்வின் மாதிரிகள்

அண்மை உறுப்பாய்வு தொடரியல், உருபனியல், ஒலியனியல் என்ற எல்லா நிலைகளிலும் செய்யப்படுகின்றது. அண்மை உறுப்பாய்வில் பல மாதிரிகள் உள்ளன.

**அடையாளப்படுத்தாதப் பெட்டிப்படம்**

பின்வரும் எடுத்துக்காட்டில் தரப்பட்ட வாக்கியத்தின் அண்மை உறுப்புகள் பகுக்கப்பட்டு பெட்டிப்படமாகத் தரப்பட்டுள்ளது:

**படம் 6**

<table>
<tr><td>என்</td><td>வீட்டி ற்</td><td rowspan="2">கு ப்</td><td rowspan="3">பக்க த்</td><td rowspan="4">இல்</td><td rowspan="5">வசிக் கும்</td><td>வயதா ன</td><td>மனித ர்;</td><td>பெரிய</td><td>கவிஞர்</td></tr>
<tr><td colspan="2">என் வீட்டிற்</td><td colspan="2" rowspan="5">வயதான மனிதர்</td><td colspan="2" rowspan="6">பெரிய கவிஞர்</td></tr>
<tr><td colspan="3">என் வீட்டிற்குப்</td></tr>
<tr><td colspan="4">என் வீட்டிற்குப் பக்கத்</td></tr>
<tr><td colspan="5">என் வீட்டிற்குப் பக்கத்தில்</td></tr>
<tr><td colspan="6">என் வீட்டிற்குப் பக்கத்தில் வசிக்கும்</td></tr>
<tr><td colspan="8">என் வீட்டிற்குப் பக்கத்தில் வசிக்கும் வயதான மனிதர்</td></tr>
<tr><td colspan="10">என்வீட்டிற்குப் பக்கத்தில் வசிக்கும் வயதான மனிதர் பெரிய கவிஞர்</td></tr>
</table>

**அடைப்புக்குறிப் படம்**

கீழே மேற்கண்ட வாக்கியம் அடைப்குறிகளைப் பயன்படுத்தி அண்மை உறுப்புகளாக ஆயப்பட்டுள்ளது:

[[[[என்] [வீட்டிற்குப்]] [பக்கத்]] [இல்]] [வசிக்கும்]] [[வயதான] [மனிதர்]]] [[பெரிய] [கவிஞர்]]

கிளைப்படம் வாக்கியப் பகுத்தாய்வைப் பின்வருமாறு படிநிலை அமைப்பில் அண்மை உறுப்புகள் கட்டுக்களை ஒன்றுக்குள் ஒன்றாக அமைவதைப் பின்வருமாறு கிளைப்படத்தில் காட்டலாம்:

படம்7




படம் 8




### 5.1.4. அண்மை உறுப்பாய்வின் வரையறை

எல்லை அல்லது சிக்கல்கள் பின்வரும் செய்திகள் அண்மை உறப்பாய்வின் வரையறை எல்லையை வெளிப்படுத்துவன.

1. முதலில் ஒரு வாக்கியத்தை/தொடரை அண்மை உறுப்புகளாக பகுப்பது அவ்வாக்கிய அலகுகளை தெரிந்துகொள்ளுதல்/வகைப்படுத்தல் என்ற முயற்சிக்கு முன்னரே அதாவது அண்மை உறுப்புகளை எழுவாய், செயப்படுபொருள், பெயர்த்தொடர் என அடையாளப்படுத்துவதற்கு முன்னரே செய்யப்பட வேண்டும். இது அமைப்புமொழியியல் ஆய்வின் முக்கிய அறிவியல் பார்வையாகும். ஆனால் உண்மைச் செயல்பாட்டில் அண்மை உறுப்பு பகுப்பாய்வு அலகுகளின் இலக்கண நிலையைத் தழுவியே செய்யப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, எல்லாக் குழந்தைகளும் மலையில் ஏறின என்ற வாக்கியத்தின் அமைப்பு ராமன் வேலை செய்கிறான் என்ற மாதிரியைத் தழுவித்தான் ஆயப்படுகின்றது என்று தோன்றினாலும், இரண்டும் மரபு வகைப்பாடுகளான எழுவயாய், பயனிலை என்ற வகைப்பாட்டைக் கொண்டுதான் ஆயப்படுகின்றது.

2. உறுப்புகள் தொடரா அண்மை உறுப்புகளாக வரலாம் என்று பார்த்தோம். (பார்க்க தொடரா அண்மை உறுப்புகள் பற்றிய விளக்கம்.) அண்மை உறுப்பாய்வு தொடரா அண்மை உறுப்புகளின் உறவை விளக்க இயலாது.

3.அண்மை உறுப்பாய்வில் வாக்கியத்தில் இல்லாத ஆனால் சூழலால் பெறக்கூடிய அலகுகளைக் காட்ட இயலாது.

(நீ) நான் வரும் வரைக் காத்திரு

*நீ* என்பதைப் புரிந்து கொள்ள இயலும் ஆனால் அண்மை உறுப்பு ஆய்வில் காட்ட இயலாது.

4.செய்வினை வாக்கியம்-செயப்பாட்டு வினைவாக்கியம், உறுதிவாக்கியம்-எதிர்மறை வாக்கியம், செய்திவாக்கியம்-வினாவாக்கியம் இவற்றிற்கு இடையே உள்ள உறவுகளை அண்மை உறுப்பு ஆய்வு காட்டாது. எடுத்துக்காட்டாக பின்வரும் வாக்கிய இணைகளுக்கிடையே உள்ள உறவுகளை அண்மை உறுப்பாய்வு காட்டாது.

ராமன் பாம்பைக் கொன்றான் : பாம்பு ராமனால் கொல்லப்பட்டது

அவன் இதை செய்வான் : அவன் இதைச் செய்யமாட்டான்

அவன் படிக்கிறான் : அவன் என்ற செய்கிறான்

5.வாக்கியங்களை அண்மை உறுப்புகளாகப் பகுப்பது மட்டும் வாக்கியமைப்பைப் பற்றி சரியான விளக்கத்தைத் தருவதில்லை. ஆனால் மரபு

அடிப்படையிலான அணுகுமுறையில் இவ்வாறு அண்மை உறுப்புகளாகப் பிரிப்பது மிகவும் அடிப்படையானது. அண்மை உறுப்பாய்வு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற வாக்கியத்தில் வரும் சொற்களின் செயல்பாட்டினை விளக்காது.

6. வாக்கியங்களில் சொற்கள் நடையியல், கவனக்குவிப்பு என்ற நிலைகளில் இடமாற்றம் பெறும். இத்தகைய வேறுபாடுகளை அண்மை உறுப்பாய்வால் விளக்க இயலாது. அவள் மாங்காய் தின்றாள். மாங்காய் அவள் தின்றாள். மேலும் வாக்கியத்தில் வினையடைகள் வினைக்கு அண்மைப்பட்டும் வாக்கிய முதலிலும் வரலாம். நேற்று காலையில் அவன் மதுரைக்குச் சென்றான். அவன் மதுரைக்கு நேற்று காலையில் சென்றான் அவள் வீட்டை நோக்கி மெதுவாக நடந்தான். மெதுவாக அவள் வீட்டை நோக்கி நடந்தாள்

7. பொதுவாக அண்மை உறுப்பாய்வு சொற்களின் ஆய்விற்குப்பின் தான் உருபன்களின் பகுப்பாய்வைச் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்போம். ஆனால் சொற்களின் பகுப்பாய்விற்கு முன்னரே ஒட்டுகளை பகுப்பாய்வு செய்ய வேண்டிய சூழல்கள் பல வரும். எடுத்துகாட்டாக அந்த வயதான மனிதரை என்ற கட்டை பகுப்கையில், அந்த வயதான மனிதர், ஐ என்று முதலில் பகுத்த பின்னர் தான் அந்த வயதான, மனிதர் என்று பகுப்படவேண்டும்.

9. எவ்வித இலக்கண அறிவும் இன்றி நாம் அண்மை உறுப்பாய்வு செய்தால் அது நம்மை அதிக துரம் கொண்டு செல்லாது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் ஆங்கிலத்தொடரக்குப் குறைந்தது மூன்று பொருள்கோண்மைகள் வரும்.

Time files → நேரம் பறக்கிறது
Time files → நேரப் பூச்சிகள்
Time files → பூச்சிகளின் நேரத்தைக் கணக்கிடு

ஆனால் அண்மை உறுப்பாய்வு ஒரே பகுப்பாய்வைத்தான் அனுமதிக்கும்: Time | flies.

### 5.2. தொடரமைப்பு இலக்கணம்

அண்மையுறுப்பு பகுப்பாய்வு பகுநிலை அடிப்படையிலானது. அடிப்படை மொழியலகுகளைக் காண்பதற்காக அறிவியல் கண்டுப்பிடிப்புச் செயல்முறை (discovery procedure) செயல்பாட்டால் உருவானது. வாக்கியங்களை இரண்டு அண்மை உறுப்புகளாகவும் ஒவ்வொரு அண்மை உறுப்பையும் மேலும் சிறு உறுப்புகளாகவும் பகுப்பது இந்தக் கோட்பாட்டின் கொள்கையாகும். சில

மொழியியலார் வாக்கியத்தைப் பெரிய அலகாகக் கொண்டு மேலிருந்து கீழ்நோக்கி ஆய்வார்கள். சிலர் கீழிருந்து மேல்நோக்கி ஆய்வார்கள். அண்மை உறுப்பு அடையாளப்படுத்தப்பட்டால் மரபிலக்கணப் பகுத்துக் குறித்தல் போலவே அமையும். அதாவது வாக்கியத்தை இலக்கண வகைப்பாடுகளாகப்ப பகுத்தல் நிகழும். மரபு அடிப்படையிலான வாக்கியப் பகுப்பாய்வும் பகுத்துக்குறித்தலும் தொடர் அமைப்பு இலக்கணம் எனப்படலாம். இவ்விலக்கணம் பின்வரும் கேள்விகளுக்கு பின்வரும் கேள்விகளுக்கு விடை தருகின்றது:

• ஒரு வாக்கியத்தின் உறுப்புகள் யாவை?

• அவை எவ்வாறு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன?

மரபிலக்கணங்கள் வாக்கியங்களையும் தொடர்களையும் சொற்களையும் விளக்க பின்வரும் கூற்றுகளை தருகின்றன:

• ஒரு வாக்கியத்தில் பெயர்த்தொடரும் (அடிரஇ phசயளந) வினைத் தொடரும் (எநசb phசயளந) அடங்கும். • ஒரு பெயர்த்தொடரில் ஒரு பெயர் மட்டுமோ அடைகொளி அடை (னநவநசஅiஇநச) + பெயர் என்பதோ வரும் • ஒரு வினைத் தெடரில் பெயர் மட்டுமோ வினை மட்டுமோ பெயர் + துணை வினை என்பதோ வேற்றுமைத் தொடர் + வினை என்பதோ வரும்.

• பின்னுருபுத் தொடரில் வேற்றுமைத் தொடரும் பின்னுருபும் வரும்.

• வேற்றுமைத் தொடரில் பெயர்த் தொடரும் வேற்றுமை உருபும் வரும்.

### 5.2.1. விரித்தெழுதுவிதிகள்

திட்டவட்டமற்ற சிக்கனமல்லாத மேற்சொன்ன விளக்கக் கூறுகள் தருவதற்குப் பதிலாகச் சில மரபு மற்றும் குறியீடு அடிப்படையில் ஒரு குழு ஆக்க விதிகள் (generation rules) அல்லது விரித்தெழுவிதிகள் (rewriting rules) தரலாம். இம்மாதிரியான விதிகளைத் தொடரமைப்பு விதிகள் (phrase structure rules) எனலாம். தொடரமைப்பு விதிகள் பின்வருவதுபோல் பொது விதித் திட்டத்தைக் (rule schema) கொண்டிருக்கும்.

அ → ஆ

அதாவது ‘அ’ என்ற குறியீட்டை (symbol) ‘ஆ’ என்ற குறியீடாக விரித்தெழுதலாம். விரித்தெழுதும் செயல்பாட்டைத் தொடங்கி வைப்பதற்குப் பயன்படுத்தும் குறியீட்டைத் தொடக்கக் குறியீடு (initial symbol) எனலாம். எடுத்துக்காட்டாக

வா → பெதொ+ விதொ

என்ற விரித்தெழுது விதியில் வா (வாக்கியம்) என்பது தொடக்கக் குறியீடு. மேற்சொன் விதி ஒரு வாக்கியத்தில் பெயர்த்தொடரும் வினைத் தொடரும் வரும் என்று தெரிவிக்கின்றது. '+' என்ற குறியீடு பிணைப்பைக் (concatenation) குறிப்பிடப் பயன்படுகின்றது. பெதொ, விதொ என்ற புலக்குறிப்புகளை (labels) விரித்துரைக்கவோ விரித்தெழுதவோ செய்யலாம். எடுத்துக்காட்டாக,

பெதொ → அஅ + பெ

என்ற விதி பெதொ கணுவை விரித்தெழுதுகின்றது. (அடைகொளி அடையில் (அஅ) அந்த, இந்த, என், உன், அவனது, அவளது, அதன், அவற்றின் என்பன அடங்கும்.) கணு என்பது ஒரு கிளைப்படத்தில் ஒன்றோ அதற்கு மேற்பட்ட கிளைகளோ வெளிவரும் இடமாகும். தமிழில் விதொ என்பதைப் பின்வருமாறு விரித்து எழுதலாம்.

விதொ → பிஉதொ + பெதொ + வி + துவி

பின்னுருபுத் தொடரைப் பின்வருமாறு விரித்து எழுதலாம்.

பிஉதொ → வேதொ + பிஉ

வேற்றுமைத் தொடர் பின்வருமாறு விரியும்.

வேதொ → பெதொ + வேஉ

இது வரைத் தந்த விதிகளைப் பின்வருமாறு கிளைப் படமாகத் தரலாம்:




நாம் முன்னர் கூறியபடி எவ்வாறு உருபன்கள் எல்லாம் சேர்ந்து சொற்களாகவும்

சொற்களெல்லாம் சேர்ந்து தொடர்களாகவும் தொடர்கள் எல்லாம் சேர்ந்து வாக்கியங்களாகவும் உருவாக்கம் பெறுகின்றன என்றும் எவ்வாறு வாக்கியங்கள் தொடர்களாகவும் தொடர்கள் சொற்களாகவும் சொற்கள் உருபன்களாகவும் ஆயப்படுகின்றன என்றும் காட்ட பல வழிகள் இருக்கின்றன என்று பார்த்தோம். மட்டுமன்றி அவை எவ்வாறு பெட்டி வகைப் படத்தாலும் (புலக்குறிப்புகளுடன் அல்லது புலக்குறிப்பு இல்லாமல்) அடைப்புக்குறிப்புகளாலும் (புலக்குறிப்புடன் அல்லது புலக்குறிப்பு இல்லாமல்) கிளைப்படத்தாலும் எவ்வாறு வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது என்று பார்த்தோம். விரித்தொழுது விதிகள் மேற்சொன்ன செய்திகளை வேறுவழியில் வெளிப்படுத்துகின்றது. விரித்தெழுது விதிகளுக்குப் பிற வெளிப்பாட்டு வடிவங்களைக் காட்டிலும் கூடுதல் அனுகூலம் உண்டு. முதலாவதாகப் புலக்குறிப்புகள் விரித்தெழுது விதிகளுக்குள்ளேயே அமைந்துள்ளன. இரண்டாவதாக ஒவ்வொரு விதிகளையும் (தொடக்க விதி தவிர்த்து) ஏற்கனவே கூறப்பட்ட விதியை/விதிகளை இடம்பெயர்க்கவோ நீட்டவோ விரித்தெழுதவோ செய்யத்தக்க வண்ணம் வரிசை முறைப்படி அடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக பின்வரும் விதிகளை எடுத்துக்கொள்வோம்:

1.வா → பெதொ + விதொ

2.விதொ → பிஉதொ + வேதொ + வி

3.பிஉதொ → வேதொ + பிஉ

4.வேதொ → பெதொ + வேஉ

5.பெதொ → அஅ + பெ

முதல் விதியில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது ஐந்தாவது என ஒன்றன் பின் ஒன்றாக விதிகளைப் பயன்படுத்தினால் முறையே பின்வருமாறு விரித்தெழுது விதிகள் கிடைக்கும்.

வா → பெதொ+ விதொ

வா → பெதொ + பிஉதொ + வேதொ + வி

வா → பெதொ+ வேதொ + பிஉ + வேதொ + வி

வா → பெதொ+ பெதொ + வேஉ + பிஉ + பெ.தொ + வேஉ + வி

வா → அஅ + பெ + அஅ + பெ + வேஉ+ பிஉ + அஅ + பெ + வேஉ + வி

எனவே விரித்தெழுது விதிகள் பிற வடிவ வெளிப்பாட்டைவிட சக்தி வாய்ந்தவை. விரித்தெழுது விதிகளைக் ஒரு கிளைப்படமாக உருப்படுத்தம் செய்யலாம். ஒரு

கிளைப்படத்தில் ஒன்றோ அதற்குமேலோ கிளைகள் வரலாம் அல்லது கிளைகளின்றி வரலாம். கிளையில் கிளைவிடும் இடத்தில் வரும் ஒவ்வொரு புள்ளியும் கிளைவிடும் கணு எனப்படும். கிளைவிடும் கணு ஒவ்வொருன்றுக்கும் புலக்குறிப்பு தரப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, கிளைவிடும் கணுவான பெதொ என்பதை பின்வருமாறு வெளிப்படுத்தலாம்:

பெதொ
அஅ பெ
அந்த மனிதர்

கிளைவிடாத கணுக்களும் உண்டு.

பெதொ
பெ
ராமன்

ஒரு தொடருக்கு மேல் வரும் அல்லது அத்தொடரை அதிகாரம் செய்யும் புலக்குறிப்பு செய்யப்பட்ட கணு இறுதியுறா கணு (non-terminal node) எனப்படும். அக்கணுவை மேலும் விரித்தெழுதலாம். பெதொ, விதொ, வேதொ, பிஉதொ என்பன இறுதியுறாக்கணுக்கள் ஆகும். Δ (டெல்டா) குறியீடு தவிர ஒன்றுமில்லாத கணு இறுதிக்கணு எனப்படும். பின்வரும் எடுத்துக்காட்டு இந்தக் கலைச்சொல்லைத் தெளிவுசெய்யும்:

படம்10




பெதொ, விதொ, பிஉதொ, வேதொ, என்பன இறுதியுறாக்கணுக்களாகும். டெல்டா அடியில் வரும் அஅ, பெஅ, பிஉ, வேஉ, வி, துவி என்பன இறுதிக் கணுக்களாகும். இந்த டெல்டாக்கள் அகராதிச்சொற்களால் இடம் பெயர்க்கப்படும்.

அஅ பெஅ பெ அஅ பெஅ பெ வேஉ வி
அந்த நல்ல மனிதர் ஒரு உயரமான பையன் ஐப் பார்த்தார்

தொடர்ச்சியான இறுதிக் கோவைகள் ஒரு வாக்கியத்தின் இறுதி உறுப்புகளாக அமையும். வகைப்புலக்குறிப்பு இருவகைப்படும்:

1. கட்டாயப் புலக்குறிப்பு
2. விருப்புப் புலக்குறிப்பு

எடுத்துக்காட்டாக, ஆங்கில மொழியில் பெயர்த்தொடரில் அஅ எண்ணக்கூடிய ஒருமைப்ப பெயர்முன் கட்டயாமாய் வரும். ஆனால் பெயரடை விருப்பாகத்தான் வரும். விருப்புப் புலக்குறிப்புகளை அடைப்புக் குறிக்குள் தந்து இந்த வேறபாட்டைக் காட்டலாம்.

1. அஅ (பெஅ) பெ

வாந டிடன அயஇ

2. அஅ (எண்அ) (பெஅ) பெ

அந்த இரண்டு நல்ல பையன்கள்

வகைப்பாடுகளைத் தெரிவு செய்வதில் மீசை அடைப்புக்குறிகள் விருப்புகளையும் தொpவுளையும் காட்டப் பயன்படும்.

பெதொ → { இயற்பெயர் / மாற்றுப்பெயர் / அஅ + பெ }

விதொ → { பெதொ (பிஉதொ + வி) / பெதொ + வி / வி }

ராமன் { ஒரு கவிஞன் / ஒரு விடுதியின் முன் நிற்கிறான் / கிருஷ்ணனைப் பார்த்தான் / பாடுகிறான் }

மேற்கண்ட கருத்துச்சாயல்களைப் பயன்படுத்தி தமிழ் இலக்கணத்தின் ஒரு பகுதிக்கு தொடரமைப்பு விதிகள் உருவாக்கலாம்.

வா → பெதொ + விதொ

விதொ → பெதொ + (பிஉதொ) + வி + துவி

பிஉதொ → வேதொ + பிஉ

வேதொ → பெதொ + வேஉ

பெதொ → அஅ + (பெஅ) + பெ

பெ → பையன், பாம்பு, மனிதர், மரம், மேஜை

துவி → விடு, முடி, இரு, வேண்டு, போ

வி → கொல், வெட்டு, பார், வை, வா, போ

பெஅ → வயதான, இளமையான, இனிமையான

பிஉ → பக்கத்தில், மேல், கீழ், அடியில்

வேஉ → ஐ, ஆல், கு, இல்

மேற்சொன்ன தொடரமைப்பு இலக்கணம் (phrase structure grammar) பின்வரும் தமிழ் வாக்கியங்களை உருவாக்கும்.

அஅ | பெ | அஅ | பெ | வேஉ | வி | துவி

அந்தப் | பையன் | ஒரு | பாம்பு | ஜக் | கொன்று | விட்டான்

அஅ | பெஅ | பெ | பெ | வேஉ | வி | துவி

அந்த வயதான மனிதர் மரம் ஐ வெட்டப் போனார்
அஅ பெஅ பெ அஅ பெ வேஉ பிஉ வி
அந்த அழகான பெண் தன் வீடு ஐ நோக்கி நடந்தாள்

ஆனால் மேற்சொன்ன விதிகள் பின்வரும் பொருளற்ற வாக்கியங்களையும் உருவாக்கும்:

*மேஜை அந்தப் பெண்ணை மரத்திற்கு அருகில் போனது

*மரம் அந்தப் பெண்ணிற்கடியில் கொன்றது .

*மேஜை அந்த வயதான மனிதரை வந்தது .

*அந்த இனிமையான பாம்பை வைத்தான்.

மேற்சொன்ன தொடரமைப்பு விதிகளைச் சூழல் கட்டுண்ட (constext senstive) விதிகளாகமாற்றினால் முன்னர் பார்த்த வாக்கியங்களின் உருவாக்கத்தைத் தடைசெய்து சிக்கலைத் தீர்க்கலாம்.

### 5.2.2. தொடரியல் வகைப்பாடு

ஒரு மொழியில் அதன் இலக்கணம் பாதிக்காமல் ஒன்றையொன்று இடம் பெயர்க்கும் ஒரு கூட்டம் சொற்களோ சொற்தொடர்ச்சிகளோ ஒரு தொடரியல் வகைப்பாட்டைச் சாரும். அது ஏற்புடமையைப் (acceptability) பாதிக்கலாம்.

அந்தச் சிறுமி மரத்தைப் பார்த்தாள்
*மரம் அந்தச் சிறுமியைப் பார்த்தது

எடுத்துக்காட்டாக, தலைப்பாக வரும் சொல், பெயர்ச்சொல் உள்ள ஒரு சொற்களின் தொடர்ச்சியை (பெதொ) எந்த வாக்கியத்திலும் ஒன்றையொன்று இடம்பெயர்க்கலாம்.

ஒரு இளமையான பெண் ஒரு வயதான மனிதரைச் சந்தித்தாள்
ஒரு வயதான மனிதர் ஒரு இளமையான பெண்ணைச் சந்தித்தார்
அந்த உயரமான வாலிபன் அந்தக் குள்ளமான பெண்ணை விரும்புகிறான்
அந்தக் குள்ளமான பெண் அந்த உயரமான வாலிபனை விரும்புகிறாள்

ஒரு வகைப்பாடு தனிச்சொற்களைக் கொண்டிருந்தால் (பெயர், வினை, துணைவினை, பெயரடை, வினையடை, பின்னுருபு), அது ஒரு சொல் வகைப்பாடு எனப்படும். ஒரு வகைப்பாடு சொற்களின் தொடர்ச்சிகயைக் கொண்டிருந்தால் (ஒரு கூட்டம் சொற்களைக் கொணடிருந்தால்) அது ஒரு தொடர் வகைப்பாடு எனப்படும். எ.கா.

பெயர்த்தொடர் (பெதொ) – வயதான மனிதர்

வினைத்தொடர் (விதொ) – மரத்தை வெட்டப் போனார்

பின்னுருபுத்தொடர் (பிஉதொ) – தோட்டத்திற்கு அருகில்

பெயரடைத்தொடர் (பெஅதொ) – மிக நல்ல, ரெம்ப நீளமான

**உள்வகைப்பாடு**

ஒரு சொல் வகைப்பாட்டை உள்வகைப்பாடு செய்யலாம். எடுத்துக்காட்டாக, பெயர்ச் சொற்களை எண்ணக்கூடியவை (countable). எண்ணலாகாதவை (uncountable), இயற்பெயர் (propernouns), பதலீட்டுப்பெயர் (pronouns), பொதுப்பெயர் (common noun) என்று உள்வகைப்பாடு செய்யலாம். உள்வகைப்பாடு மரபில் '+' குறி பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, *பையன்* என்ற சொல் '+எண்ணக்கூடியது', '+பொது' என்று அடையாளப்படுத்தப்பட்டு உள்வகைப்பாடு செய்யப்படுகின்றது. *தேர்ந்தெடு* என்ற வினை '+செயப்படுபொருள் குன்றாமை' என்று அடையாளப்படுத்தப்பட்டு உள்வகைப்பாடு செய்யப்படுகின்றது.

| சொல் | வகைப்பாடு | உள்வகைப்பாடு |
|---|---|---|
| பையனை | பெ | +எண்ணக்கூடியது |
| தேர்ந்தெடு | வி | +பொது |
| நட | வி | +செயப்படுபொருள் குன்றாமை |

ஈரிணையான வகையில் படும் உள்வகைப்பாட்டு பெயர்ச்சொற்களின் எல்லா உள்ளார்ந்த பண்புக்கூறுகளைக் (inherent) காட்டப் போதுமானதல்ல. எண்ணக்கூடியதும் எண்ணமுடியாததும் என்ற வேறுபாடு அருவமும் பருமையும் மற்றும் விலங்கினமும் விலங்கல்லா இனமும் என்ற வேறுபாடுகளைக் கடந்து செல்கின்றது. எனவே நாம் வேறுபாடுகளைக் கடந்த வகைப்பாடு செய்யவேண்டும். மட்டுமன்றி பலபரிமாண உள்வகைப்பாட்டைப் பயன்படுத்த வேண்டும்.

படம்11




பண்புக்கூறுகளைப் பின்வருமாற வெளிப்படுத்தலாம்.

+பெ → [+/-பொது]

[+பொது] → [+/-எண்ணக்கூடியது]

[-பொது] → [+/-விலங்கினம்]

[+விலங்கினம்] → [+/-மனிதவினம்]

[+மனிதவினம்] → [+/-எண்ணக்கூடியது]

[-எண்ணக்கூடியது] → [+/-அருவம்]

எடுத்துக்காட்டாக, *ராமன்* என்பதை [-பொது, +விலங்கினம், +மனிதவினம்] என்ற பண்புக்கூறுகளால் அடையாளப்படுத்தலாம். *மேஜை* என்பதை [+பொது, -விலங்கினம்] என்ற பண்புக்கூறுகளால் அடையாளப்படுத்தலாம். இந்தப் பண்புக்கூறுகள் வினைகளின் உள்வகுப்புகள் எவ்வாறு பெயர்ச்சொற்களின் தேர்வுகளைக் கட்டுப்படுத்துகின்றன என்பதைக் காட்டத் தேவைப்படும்.

அந்த மனிதர் அந்த மேசையைப்ப பார்த்தார்.

*அந்த மேசை அந்த மனிதரைப் பார்த்தது.

பார் என்ற வினை [+மனிதவினம்] என்று அடையாளப்படுத்தப்பட்ட பெயர்ச்சொல்லை வேண்டும். **5.2.3. சொற்சொருகல் விதிகள்**

பெயர்ச்சொற்களை அவற்றின் மரபுப் பண்புக்கூறுகளுக்காகச் சிறப்பித்தால் தொடரியல் சூழலைக் குறிப்பிட முடியும். இதன் பொருள் என்னவென்றால் வகைப்பாடுகள் உள்வகைப்பாடு செய்யப்படுவதோடு அவை எந்த தொடரியல் சூழலில் பயன்படுத்தப்படலாம் என்பதும் கூறப்படவேண்டும். எடுத்துக்காட்டாக, *வை* என்ற வினை பின்வரும் எடுத்துக்காட்டில் தந்துள்ளது போல் எழுவாய் தவிர்த்து ஒரு பின்னுருபுத்தொடரையும் ஒரு

பெயர்த்தொடரையும் வேண்டும் என்பதைக் காட்டவேண்டும். அவன் பெட்டிக்குள் பணத்தை வைத்தான் கொல் என்ற வினை பின்வரும் எடுத்துக்காட்டில் தந்துள்ளது போல் எழுவாய் தவிர்த்து ஒரு வேற்றுமைத்தொடரை மட்டும் வேண்டும்.

அவன் அந்தப் பாம்பைக் கொன்றான்.

இவைச் சொற்சொருகல் விதிகள் எனப்படும். அதாவது கீழே தந்துள்ளது போல் உள்வகைப்பாட்டுச் சட்டகம் தரவேண்டும்.

வை வி + புஉதொ ----

+இடம்

அதாவது, *வை* என்ற வினையை விதொ-இல் (=[ ] ) பிஉதொ-ஐயும் பெதொ-ஐயும் உடனடியாகத் தொடர்ந்து வரும் '---' என்ற இடத்தில் செருக வேண்டும் (=+).

தாமதி வி, - [பெதொ ---] என்றால் *தாமதி* என்ற வினையை விதொ-இல் (=[ ] ) பெதொ-ஐத் உடனடியாகத் தொடர்ந்து வரும் '---' என்ற இடத்தில் செருக இயலாது (= -)

தொடரமைப்பு இலக்கணத்தை வகைப்பாடு, உள்வகைப்பாடு, உள்வகைப்பாட்டுச் சட்டகம் இவற்றைக் குறிப்பிடுவதன் வாயிலாக மேம்படுத்தலாம். ஒரு சொல் எங்கு வரலாம் அல்லது எவ்விடத்தில் செருகப்படலாம் என்ற சூழலைக் காட்டித் தொடரமைப்பு விதிகளைச் சூழல் கட்டுண்டவைகளாக (உடிஇவநஒவ ளநஇளவைiஎந) மாற்றலாம். தொடரமைப்பு விதிகளை பின்வரும் விதியால் மறுதரவாக (recursive) மாற்றலாம்:

பெதொ → அஅ + (பொஅ) + பெ + (வா)

மேற்சொன்ன விதியால் பல பெயரெச்சத் தொடர்களைப் பெதொ-இல் சேர்க்கலாம் அல்லது இணைக்கலாம். இவர் தான் ---- வடையைச் சாப்பிட்ட எலியைத் துரத்திய பூனையைத் துரத்திய நாயை --- அடித்தவர். விரித்தெழுது விதிகளைப் பயன்படுத்த உருவான தொடரமைப்பு விதிகள் எவ்வளவு நுணுக்கமாக வகைப்படுத்தப் பட்டாலும் அவைகள் மட்டும் உள்ள இலக்கணம் தொடரமைப்பு இலக்கணம் என்றுதான் கூறப்படும்.

### 5.2.4. தொடரமைப்பு இலக்கணத்தின் வரையறை எல்லை

பின்வரும் செய்திகள் தொடரமைப்பு இலக்கணத்தின் எல்லையை அல்லது குறைபாடுகளை விளக்கும்.

**‘அடங்கி இரு’ என்ற விதிகளின் குறைபாடு**

தொடரமைப்பு விதிகள் (மிகவிரிவானது கூட) ஒரு மொழியின் எல்லா வகைய வாக்கியங்களையும் கணிக்காது. ஒரு மொழியின் எல்லா அமைப்புகளையும் ‘அடங்கி இரு’ என்ற கூற்றால் மட்டும் தெளிவாக வெளிப்படுத்த இயலாது. ஏனெற்றால் ‘அடங்கி இரு’ ஒருவகை உறவை மட்டும்தான் வெளிப்படுத்தும். மனித மொழியில் உள்ள வாக்கியங்களில் வேறு வகையான உறவுகள் உண்டு. தொடரமைப்பு இலக்கணத்தை விரிவுபடுத்தவும் நீட்டவும் முயன்ற முயற்சிகள் மொழியின் அமைப்பைப்பற்றி புதிய செய்திகளை அல்லது விளக்கங்களைத் தரவில்லை என்ற சாம்ஸ்கி கூறுவார்.

**வாக்கியங்களுக்கிடையே உள்ள உறவு தொடர்பான சிக்கல்**

தொடரமைப்பு இலக்கணம் வாக்கிய வகைகளுக்கு இடையில் உள்ள உறவுகளையும் வாக்கியங்களின் அல்லது எச்சத்தொடர்களின் பாகங்களுக்கு இடையே உள்ள உறவுகளையும் வெளிப்படுத்தத் தவறிவிட்டது. இவ்வகை இலக்கணம் எவ்வாறு வாக்கியங்கள் தொடர்களால் ஆனது, தொடர்கள் சொற்களால் ஆனது, சொற்கள் உருபன்களால் ஆனது என்று காட்டியதேயன்றி கூற்று வாக்கியத்திற்கும் (எ.கா. அவன் நேற்று வந்தான்) வினாவாக்கியத்திற்கும் (எ.கா. அவன் எப்பொழுது வந்தான்), செய்வினை வாக்கியத்திற்கும் (ராமன் பானையை உடைத்தான்) செயப்பாட்டுவினை வாக்கியத்திற்கும் (பானை ராமனால் உடைக்கப்பட்டது), தெரிநிலை வாக்கியத்திற்கும் (ராதை உணவு சமைத்தாள்) எதிர்மறை வாக்கியத்திற்கும் (ராதை உணவு சமைக்கவில்லை), ஏவல் வாக்கியத்திற்கும் (கட்டுரை எழுது) ஏவலிலா வாக்கியத்திற்கும் (நீ கட்டுரை எழுதினாய்) உள்ள உறவுகளைக் காட்டவில்லை. தொடரமைப்பு இலக்கணம். தொடரமைப்பு இலக்கணம் கீழே தந்துள்ள தனி, கலவை மற்றும் கூட்டு வாக்கியங்கள் எவ்வாறு ஒன்றிற்கொன்று உறவு கொண்டுள்ளன என்பதைக் காட்டவில்லை.

ராதை சாப்பிட்டாள். பின்னர் தூங்கினாள்.

ராதை சாப்பிட்டுவிட்டுத் தூங்கினாள்.

ராதை பாடினாள். ராதை ஆடினாள்.

ராதை பாடி ஆடினாள் ராணி இலையில் சாப்பிட்டாள். அதைக் குப்பைத்தொட்டடியில் போட்டாள்.

ராணி தான் சாப்பிட்ட இலையை குப்பைத்தொட்டியில் போட்டாள்.

தமிழ் மொழியைப் பயன்படுத்துபவருக்கு *ராமன் பானையை உடைத்தான்* என்பதும் பனை *ராமனால் உடைக்கப்பட்டது* என்பதும் எவ்வாறோ தொடர்புள்ளவை என்பது தெரியும். ஆனால் தொடரமைப்பு இலக்கணம் இவ்விரண்டையும் உறவற்ற (தொடர்பில்லாத) வாக்கியங்களாகக் கருதுகின்றது (எடுத்துக்கொள்கின்றது). தொடரா அண்மை உறுப்பு குறித்த சிக்கல் தொடரமைப்பு இலக்கணம் ஒரு தொடரின் உறுப்புகளை தொடர்ச்சியான அலகுகளாகத்தான் கருத இயலும். ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினாவாக்கியங்ளில் துணை வினை எழுவாய்க்கு முன்னர் வைக்கப் பெறுகின்றது. ஆனால் துணைவினை வினையோடு தான் நெருங்கிய தொடர்புள்ளது என்பது வெளிப்படை. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதைத் தெளிவு படுத்தும். The old man lives near the river.

Does the old man live near the river?

He is coming.

Is he coming?

ஆங்கிலத்தில் 'be' வினையும் 'ing' என்பதும் நெருங்கிய தொடர்பு உள்ளவை. ஆனால் அண்மை உறுப்பு அடிப்படையிலான தொடரியல் இலக்கணத்தில் இவை பிரிக்கப்பட்டுவிடும். எ.கா.

The old man is still working. (is---ing)

They are eating. (are---ing)

நாம் ளை/யசந என்பதை எடுத்துவிட்டால் -ing என்பது போய்விடும்.

The old man still works.

இந்தத் தொடரா அண்மை உறுப்புகளின் உறவைத் தொடரமைப்பு இலக்கணம் கடந்து செல்லும் கிளைகளை அனுமதிக்காமல் காட்ட இயலாது. கிளைகள் கடந்து செல்லவோ கடந்து செல்லாமலோ இருக்கலாம் என்று கூறினால் அதைத் தொடரமைப்பு இலக்கணத்தில் காட்ட இயலாது. எடுத்துக்காட்டாக, பின்வரும் வெளிப்பாட்டையும் விதிகளையும் எடுத்துக்கொள்வோம்.

வா → துவி + பெதொ + விதொ

படம்12




விதி பின்வருமாறு வரலாம்:

வா → பெதொ + துவி--நன + வி + பெதொ

ஆங்கிலம் பயன்படுத்துவோருக்கு took என்பதும் off என்பதும் தொடர்புள்ளவை எனத் தெரியும். இந்த உறவை நாம் காட்டுவதாய் இருந்தால் நாம் கிளைகளைக் கடந்து செல்வதாகக் காட்டவேண்டும்.

படம்13




இவ்வாக்கியத்தை பின்வருமாறும் கூறலாம்: Raja took off his hat.

நாம் பின்வரும் வாக்கியங்கள் தொடர்புள்ளவை என்று காட்டவேண்டும்:

Raja took off his hat.

Raja took his hat off.

*வள்ளி முருகனை நீ ஒரு முட்டாள்* என்று திட்டினாள் எனும் போது *முருகனை, திட்டினாள்* என்பனவற்றை தொடராத அண்மை உறுப்புகளாகக் கருதவேண்டும். *முருகனை* என்பதற்கும் திட்டினாள் என்பதற்கும் உள்ள

தொடர்பைக் காட்டுவதாய் இருந்தால் நாம் அவற்றின் உறவு கிளைகளைத் தாண்டிச் செல்வதாகக் காட்டவேண்டும்.

படம்14




பொருள் மயக்கம் குறித்த சிக்கல் அமைப்புத் தொடரியல் இலக்கணம் எல்லா இயற்கை மொழிகளில் காணப்படும் பொருள் மயக்கத்தை விளக்காது. முன்பு கூறியபடி இருவகைப் பொருள் மயக்கம் உண்டு: சொற்பொருள் மயக்கம் (lexical ambiguity) மற்றும் அமைப்புப் பொருள் மயக்கம் (structural ambiguity). எடுத்துக்காட்டாக *நீ கல் என்றான்* என்ற வாக்கியத்தில் *கல்* என்பது ‘கற்றுக்கொள்’ என்ற வினைப் பொருளும் ‘பருப்பொருளான பாறையின் சிறு துண்டு வடிவமான பாகம்’ என்ற பெயர்ப் பொருளையும் தரும். நாம் முன்னர் பார்த்தபடி ஒரு அமைப்பு ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருமானால் அது அமைப்பு அடிப்படையில் பொருள்மயக்கம் தருவது எனலாம். எடுத்துக்காட்டாக *மிக வயதான ஆண்களும் பெண்களும்* என்ற தொடர் ‘மிக வயதான ஆண்களும் (இளமையான) பெண்களும் என்றும் ‘மிக வயதான ஆண்களும் மிக வயதான பெண்களும்’ என்றும் பொருள்படலாம். இந்த அமைப்புப் பொருள் மயக்கத்தை இரண்டு கிளைப்படத்தால் காட்டலாம்.

படம்15




படம்16




புதிய உண்மைகளை விளக்க நாம் ஒவ்வொரு தடவையும் வேறுபட்ட வகையிலான உறுப்புகள் அல்லது வகைப்பாடுகள் அமைத்துத் தரவேண்டி இருக்கிறது. அமைப்புப் பொருள் மயக்கத்தைக் கையாள சிக்கனமான வழி தொடரமைப்பு இலக்கணத்தில் இல்லை.

**ஈரிணை ஆய்வின் சிக்கல்**

எல்லா அமைப்புகளும் ஈரிணையானதல்ல. நாம் ஈரிணைக் கொள்கையைத் தாண்டிச் சென்று பகுப்பாய்வு செய்ய வேண்டி உள்ளது.

ராமன் உம் கோபாலன் உம் கிருஷ்ணன் உம்

அது போல் வெளிப்படையாக வரும் துணை வினைகள் வரும் வாக்கியங்களில் துணை வினையை வினைத் தொடரின் உறுப்பாகக் கொள்ளாமல் பின்வருமாறு பகுப்பாய்வு செய்ய வேண்டி வருகிறது:

பெதொ + துவி + விதொ

ஆங்கிலத்தில் துணைவினையை ஆம்-இல்லை வினாக்களில் முன்னிடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டி வருவதால், துணைவினையைத் தனியான உறுப்பாக் கருதுவது பயனுள்ளதாய் அமையும்.

Raja can solve the problem → Can raja solve the proble

**மறுதரவு செயல்பாட்டுச் சிக்கல்**

தொடரமைப்பு இலக்கணம் எல்லா மொழிகளிலும் மறுதரவு செயல்பாட்டை (recursive process) விளக்கத் தவறிவிட்டது. நாம் எல்லையே இல்லாமல் இணைப்பான்களைக் கொண்டு வாக்கியங்களை இணைத்துக்கொண்டே போகலாம்.

தஞ்சாவூர் மாவட்டத்தின் தலைநகராய் இருக்கிற தஞ்சாவூரில் சோழ நகரில் கட்டியருக்கிற தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் வேலை பார்கிற முனைவர் பட்டம் வாங்கிய குள்ளமாய் இருக்கிற சிற்றூர்தியில் தினமும் வருகிற -----

நடையியல் வேறுபாடு குறித்த சிக்கல் தொடரமைப்பு இலக்கணம் நடையியல் வேறுபாடுகளை விளக்க இயலாது. தமிழ் போன்ற மொழிகளில் பெயர்த்தொடரின் செயற்பாடுகள் அவை வாக்கியத்தில் வரும் இடத்தைச் சார்ந்திருக்காமல் வேற்றுமை உருபுகளைச் சார்ந்திருப்பதால் வினைக்கு முன்வரும் எல்லாத் தொடர்களையும் இடம்மாற்றி அமைக்க இயலும். பின்வரும் எடுத்துக்காட்டு இதைத் தெளிவு படுத்தும்.

ராஜா அடிக்கடி ஊருக்குப் போகிறான்.

அடிக்கடி ராஜா ஊருக்குப் போகிறான்.

ராஜா ஊருக்கு அடிக்கடி போகிறான்.

ஊருக்கு ராஜா அடிக்கடி போகிறான்.

ஒவ்வொரு வாக்கியமும் ஒரே வாக்கியத்தின் நடையியல் வேறுபாடு என்பதைக் காட்டாமலேயே தொடரமைப்பு விதிகள் எழுதவேண்டி வருகின்றது.

**உடன்பாட்டை வெளிப்படுத்துவதில் சிக்கல்**

எண் உடன்பாடு, கால உடன்பாடு, எழுவாய்க்கும் வினையில் வரும் முற்று விகுதிக்கும் உள்ள உடன்பாடு போன்ற சார்புகளை (dependencies) காட்டுவதற்கு தொடரமைப்பு இலக்கணத்தில் வசதி இல்லை.

நான் அங்கே தினமுன் போகிறேன். (எழுவாய்க்கும் வினையில் வரும் வினைமுற்று விகுதிக்கும் உள்ள உடன்பாடு)

ஒரு வகைப்பாட்டியல் கோட்பாடு (taxonomic theory) வகுப்புகளை (வகைப்பாடுகளை) அமைக்கலாம். அவற்றை அமைப்பொழுங்கு அடிப்படையில் விளக்கலாம். வகுப்புகளுக்கு பெயரிடலாம். உட்படுத்தும் படிநிலை அமைப்பைக் (hறைநசயசஉல டிக iஇஉடரளiடிஇ) காட்டலாம். தொடரமைப்பு இலக்கணம் ஒரு வகைப்பாட்டியல் இலக்கணம் (taxonomic grammar). ஆனால் இது மொழியலகுகளை வகுப்பு-உறுப்பினர் தவிர பிறவற்றால் தொடர்புடுத்த இயலாது. 5.3. ஆக்கமுறை மாற்றிலக்கணம்: சாம்ஸ்கியின் 1965 மாதிரி தரவை வகைப்படுத்;தாமல் வாக்கியங்களுக்கு இடையே உள்ள உறவுகளையும் வாக்கிய அலகுகளுக்கிடையே உள்ள உறவுகளையும் ஆய்ந்து விதிகளின் முற்றுக் குழுமத்தை எய்தலாம். ஒரு மொழியின் இலக்கணம் வாக்கியங்களின் பட்டியல் அல்ல. ஒரு மொழியைக் கற்றல் ஒரு மொழியில் உள்ள வாக்கியங்களின் பட்டியலை மனனம் செய்வதல்ல. விதிகளைக் கண்டுபிடிப்பதன் செயல்பாட்டை உள்ளடக்கியதாகும். செயல் திறனுக்குத்தான் எல்லை உண்டு; அறிதிறனுக்கு இல்லை; அதாவது நாம் உருவாக்குகின்ற வாக்கியங்களின் எண்ணிக்கையிலும் வாக்கியங்களின் வகைகளிலும் தான் எல்லை உண்டு; அறிதிறனுக்கு அல்ல. நம் நினைவு எல்லை, கவனமாற்றம், வாழ்வுகால எல்லை போன்றவற்றின் காரணமாக நாம் மிக நீளமற்ற அதிகம் சிக்கலற்ற அல்லது எல்லைக்குட்பட்ட வாக்கியங்களைப் பயன்படுத்துகின்றோம். ஒரு இயற்கை மொழியைப் பேசுகின்ற எவரும் முற்றிலும் புதிய கூற்றுகளை உருவாக்கவோ புரிந்துகொள்ளவோ இயலும். தெரிந்த விதிகளால் அவை உருவாக்கப்பட்டவை என்ற காரணத்தால் அவை முற்றிலும் புதியனவல்ல. அதாவது கூற்றுகள் மனப்பாடம் செய்யப்பட்டுத் திரும்பிக் கூறப்படுவன அல்ல. அவை உருவாக்கப்படுகின்றன. ஒரு இலக்கணம் எல்லையற்ற எண்ணிக்கையிலான எல்லா நிகழவியலும் வாக்கியங்களையும் உருவாக்கி விளக்கவியலும் விதிகளின் முற்றுப்பெற்ற ஒழுங்குமுறை (சிறப்பான ஒழுங்கு முறைகள்). இவ்விகளின் முற்றுபெற்ற ஒழுங்குமுறை பற்றிய அறிவதால்தான் புதிதான எல்லையற்ற எண்ணிக்கையிலான வாக்கியங்களை உருவாக்கிப் புரிந்துகொள்ள முடிகின்றது. நமக்கு ஒரு மொழியில் உள்ள மொழியியல் ஒழுங்குமுறை தெரியும். ஆனால் எல்லா வாக்கியங்களையும் தெரியாது. இலக்கணம் ஆக்கமுறையானது (generative). வெளியீடு (டிரவிரவ) உள்ளீட்டைப் போன்றதல்ல. உள்ளீடும் வெளியீடும்

ஒன்றல்ல. அவை வடிவமாக்கப்பட்டது (formalized). அதாவது ஓரளவுக்கு எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையிலான பார்த்த மற்றும் கேட்ட கூற்றுகளிலிருந்து கற்பவர் (அவருடைய வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி அடிப்படையில்) சிலவற்றை தேர்ந்தெடுத்து சில செய்திகளைப் பிரித்தெடுத்து அதை அகநிலையாக்கம் செய்கின்றனர். அகநிலையாக்கம் செய்யப்பட்ட விதிகளின் ஒழுங்குமுறை கூற்றுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இதைப் பின்வருமாறு காட்டலாம்:

படம் 17



இந்த அர்த்தத்தில் இலக்கணம் ஆக்கமுறையிலானது. மாற்றுவிதிகள் வாக்கிய வகைகளையும் வாக்கியங்களின் பாகங்களையும் தொடர்புபடுத்துகின்றது. எனவே தான் இந்த இலக்கணமாதிரி ஆக்கமுறை மாற்றிலக்கணம் என அழைக்கப்படுகின்;றது. ஒரு மொழியைக் கற்றல் ஒரு குழுமத் தொடரியல், பொருண்மையில் மற்றும் ஒலியனியல் விதிகளைக் கற்பதாகும். ஒரு மொழியின் எல்லா வாக்கியங்களையும் நினைக்குக் கொண்டுவருவதாலோ போலச்செய்வதாலோ கற்றல் நேராது. வாக்கிய உருவாக்கம், வாக்கியப் பொருள்கோண்மை மற்றும் உச்சரிப்பு ஆகியவற்றின் விதிகளின் குழுமத்தை ஈட்டம் செய்வது மொழி கற்றலாகும். இப்பொருளில் மொழி விதி ஆட்சிமைக்கு உட்பட்டது (rule governed).

**5.3.1. அக அமைப்பும் புற அமைப்பும்**

மொழியியல் விளக்கத்தில் அக அமைப்புக்கும் புற அமைப்புக்கும் உள்ளவேறுபாடு மிக முக்கியமானதாகும். அக அமைப்பு மொழியின் அடிப்படை ஒழுங்கைப் பிரதிபலிக்கும். ஒரு வகையில் அக அமைப்பு மனத்தின்/மூளையின் உள்ளுறை மொழியியல் ஆற்றலை பிரதிபலிக்கும். அக மொழி அமைப்பைத்தான் எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையிலான பொதுமையாக்கங்களின் வாயிலாகக் கூறலாம். புற அமைப்பில் பல எண்ணிக்கையிலான ஒழுங்கீனங்கள் இருக்கும். இந்த ஒழுங்கீனங்களை அக அமைப்பு அடிப்படையில்தான் ஒழுங்கானவைகளாக மாற்ற இயலும். புறத்தில் தான் பல விஷயங்கள் நடக்கும்; இதுதான் தெரிவுக்கும் மாற்றத்திற்கும் உட்படுகிற இடம்; சொற்பொருள் மயக்கமும் அமைப்புப் பொருள்மயக்கமும் ஏற்படுகிற இடம். இங்குதான் மொழி வாழ்கின்றது. அகத்தில் தான் விஷயங்கள் இருக்கின்றன. இது நிரந்தரமும் ஒழுங்கும் உள்ள இடம்· உலகப்பொதுக் கூற்றுகளின் இடம். மொழியின் உலகப்பொதுமைக் கூறுகளைக் கண்டுபிடித்தல் மனித மூளையின் இயல்பைப் புரிந்துகொள்ள உதவும்.

இப்பண்புக்கூறுகள் ஒருவகையில் மொழியின் உலகப்பொதுப் பண்புக்கூறுகள். அவற்றிலிருந்து மொழிகள் தேவையானவற்றைத் தெரிவுசெய்து, இணைத்து பல வழிகளில் கலந்து வைத்துள்ளது. இதைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்யலாம்.

படம்17




ஆக்கமுறை மாற்றிலக்கணத்தில் (transformational generative grammar) மூன்று உட்பகுதிகள் இருக்கின்றன: தொடரியல் உட்பகுதி (syntactic component), பொருண்மையியல் உட்பகுதி (semantic component), ஒலியனியல் உட்பகுதி (phonological component). அவைகள் அடிப்படை மொழியியல் ஆற்றலைப் பிரதிபலிக்கின்றன. நடுவில் வரும் பாகம் தொடரியல் உட்பகுதி. இதில் அடிநிலை துணை உட்பகுதி (Base subcomponent), மாற்றல் துணை உட்பகுதி (transfomational subcomponent) என்பன அடங்கும். அடிநிலை துணை உட்பகுதியல் தொடரமைப்பு விதிகளும், அகராதியும் அடங்கும். அடிநிலை உட்பகுதி எல்லையற்ற அக அமைப்புகளின் குழுமத்தை உருவாக்கின்றது. இந்த அமைப்புகள் (நீக்கல் பெயர்ச்சிமாற்றம் மற்றும் சேர்க்கை மாற்றம்) போன்ற ஒரு சில மாற்றங்களுக்கு உட்படுகின்றது. மாற்றங்கள் குறிப்பிட்டுக் கூறப்பட்டிருக்கும் (ளிநஉகைநைன) மற்றும் நிரல் படுத்தப்பட்டிருக்கும்

(டிசனநசநன). மாற்றச்செயல்பாட்டால் புற அமைப்புகள் விளையும். புற அமைப்புகள் ஒலியனியல் உட்கூறால் (phonological component) ஒலி உருப்படுத்தம் (phonetic representation) பெறும் மற்றும் பொருண்மையியல் உட்கூறால் (semantic component) பொருண்மை உருப்படுத்தம் (semantic representation) பெறும். இவ்வாறு வாக்கியங்களாக மாறும். புற உருப்படுத்தம் (surface representation) உண்மையான கூற்றல்ல. மனிதன் உண்மையான கூற்றுகளை உருவாக்குகின்றான். அதாவது கூற்று திடமான உண்மை. வாக்கியம் அருவ உண்மை (abstract reality). சீர்மையாக, மொழியின் அக உருவாக்க இலக்கணத்தைக் (iஇரெடைவ பசயஅஅயச) கொண்டிருக்கும் ஒரு மொழியைத் தாய்மொழியாகப் பேசுபவர் தாம்; தம்முடைய உள்ளுணர்வை (intution) வெளிப்படுத்தித் தம் மொழியை விவரணை செய்ய இயலும். வெளிபடுத்தப்படுகின்ற இலக்கணம் அக உருவாக்க இலக்கணத்திற்கு மாதிரியாக அமையும்.

மாற்றிலக்கணத்தில் தாய்மொழி பேசுபவர் (native speaker) என்பது நுண்மையாக்கம் (அருவமாக்கம்) ஆகும். ஒரு சீரான சமுதாயத்தில் (homogenous community) அறிதிறன் நிலையில் தாய்மொழி பேசுபவர்-கேட்பவர் (native speaker-hearer) உறவு விளக்கப்படவேண்டும். சீரிய தாய்மொழி பேசுபவர் (ideal native speaker) ஒரு பண்பாட்டு வாதி. ஆனால் இவர் தேவையான பிரச்சனைக்;குரியவர். நாம் சீர்மையாக்கம் செய்யாவிட்டால் ஒவ்வொரு நபரும் தமது அறிதிறனை வெளிப்டுத்த வேண்டிவரும். பெரும் அளவில் மாறிகளை (large number of variables) நீக்குவதற்காக சீரிய தாய்மொழி பேசபவர் என்ற கருத்துச்சாயல் தேவை. இது கூட்டான உணர்வாகும். எந்த மனித நடப்புகளைப் பற்றி படிப்பதற்கும் இது தவிர்க்க இயலாது.

**5.3.2. Syntactic Structure-இல் மாற்றுவிதிகள்**

சாம்ஸ்கியின் Syntactic Structure -இல் (1957) இரு குழும மாற்றுவிதிகள் முன்மொழியப்பட்டன:

1. அ. பயன்படுத்த இயலும் விருப்பு மற்று விதிகள் (Optional T-rules)

ஆ. பயன்படுத்தப்படவேண்டிய கட்டாய மாற்றுவிதிகள் (Obligatory T-rules)

1.அ. ஒரு இறுதி கோர்வையில் செயன்மைசெய்யும் தனிநிலை மாற்றங்கள் (தனி-அடி) (singualrly transformations)

ஆ.இரண்டு அல்லது அதற்குக் கூடுதலான இறுதி கோர்வைகளில் பயன்படுத்தப்படும் பொது மாற்றங்கள் (இரு-அடிகள்). எல்லா பொது மாற்றங்களும் விருப்பாகும் · சில தனிநிலை மாற்றங்கள் விருப்பானவையாகவும் சில கட்டாயமானவையாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக have+en+be+ing+V என்பதை 'have+be+en+V+ing' எனத் திரும்பமாற்றுவது கட்டாயமாகும். செயப்பாட்டுவினை வாகிய மாற்றம் அல்லது வினா வாக்கிய மாற்றம் விருப்பாகும். பொது மாற்றங்கள் இரு வகைகளாகக் பாகுபடுத்தப்பட்டுள்ளன: உட்படுத்தல் (embedding) மற்றும் இணைப்பு (conjoining) மற்றங்கள். இந்த இரண்டும் மொழியின் விளைவாக்கச் செயற்பாங்கைக் கணிக்கின்றது. ஒரு வாக்கியம் மற்றொரு வாக்கியத்திற்குள் உள்ளடக்கப்படவோ அதன் உறுப்பாக மாறவோ செய்யும் செயற்பாங்கு உட்படு மாற்றம் ஆகும்.

சட்டகம் உட்படுதல்

I know (that) Raja will arrive tomorrow

தமிழில் உட்படும் வாக்கியம் சட்டக வாக்கியத்திற்கு முன்னர் வரும். உட்படுதல் சட்டகம் ராஜா வருவான் என்று எனக்குத் தெரியும் இணைப்பு என்பது ஒரே வகையைச்சார்ந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புகள் யஇன, ரெவ அல்லது டிச என்பதால் இணைக்கப்படும். எச்சத்தொடர் இகி எச்சத்தொடர்

He advanced and his enemy rereated.

தமிழில் மற்றும், ஆனால் என்ற இணைப்புச் சொற்களும் உம், ஓ என்ற குறைச்சொற்களும் இணைக்கப் பயன்படுத்தப் படுகின்றன. எ.கா. எச்சத்தொடர் இகி எச்சத்தொடர் அவன் முன்னேற-வும் அவன் எதிரிகள் பின்வாங்கவும் செய்தனர் (இகி=இணைப்புக்கிளவி) எந்த மாற்ற விதியும் இரண்டு பாகங்களைக் கொண்டிருக்கும்: அமைப்பு விளக்கம் (structural description=SD) மற்றும் அமைப்பு மாற்றம் (strucral change).

முன்னர் பிரயோகிக்கப்பட்ட விதியின் வெளியீட்டில் பிரயோகிக்கப்டும் தொடரமைப்பு விதிகளைப்போல் அல்லாமல் மாற்ற விதிகள் அமைப்பு விளக்கத்தால் (அ.வி.) குறிப்பிடப்பட்ட கோர்வைகளின் மேல்தான் பிரயோகிக்கப்படும் மற்றும் அமைப்பு மாற்றம் (அ.மா.) மாற்ற விதிகள் பிரயோகிக்கப்பட்ட பின் அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதைக் குறிப்பிடுகிது.

[அஅ+பெ+0] + [கா+விபா+ have+en] + V + [அஅ+பெ+0]

The man may have have+en take the ball

என்ற அமைப்பு விளக்கத்தில் எடுத்துக்காட்டாக செயப்பாட்டு மாற்ற விதியைப் பிரயோகிக்க இயலும்.

அ.மா. பெதொ2 துவி+be+en V by பெதொ1

The ball fh+may+have+en+been+take → fh+may+have+be+en+take+en

கட்டாய மாற்று விதிகள் துவி-இன் உறுப்புகளை வரிசைமாற்றும்.

fh+may+have+en+been+take → fh+may+have+be+en+take+en

இது உருபொலியனியல் விதிகள் கோர்வைகளை சரியான ஒலியன் வடிவில் மாற்றும்.

man+0 → /mæn/ , கா+may → /mei/, be+en→ /bi:n/, take+en→ /teikn/

(கவனிக்க: எந்த விருப்பு மாற்றங்களும் பயன்படுத்தப்படாமல் ஒரு தனி வித்துக் கோர்வையிலிருந்த உருவாக்கப்படும் எந்த வாக்கியமும் வித்து வாக்கியம் (kernal sentence) Syntactic Structure -இல் தரப்பட்டுள்ள பின்வரும் மாற்றச் செயற்பாங்குகளைக் நோக்கவும்:

அ.வி. பெதொ1 வி குறைச்சொல் பெதொ2

1 2 3 4 →

you put down the book

கட்டளை மாற்றம்

அ.மா. 0 வி குறைச்சொல் பெதொ2

put down the book

(விளைவது ஒரு கட்டளை வாக்கியமாகும்)

குறைச்சொல் நகர்வு மாற்றம்

அ.வி. பெதொ1 வி குறைச்சொல் பெதொ 2

1 2 3 4 →

0 put down the book

அ.மா.: பெதொ1 வி பெதொ2 குறைச்சொல்

1 2 4 3

put the book down

தமிழிலும் கட்டளை மாற்றத்தைப் பின்வருமாறு காட்டலாம்:

அ.வி.: பெதொ1 வேதொ விஅ வி

1 2 3 4

நீ புத்தகத்தை கீழே வை

அ.வி.: பெதொ1 வேதொ விஅ வி

1 2 3 4

புத்தகத்தை கீழே வை

குறைந்த எண்ணிக்கையிலான மாற்றங்களைத் தந்து பல முக்கியமான கேள்விகளுக்கு விடை தராது விட்டாலும் அது மொழியின் உண்மைகளை நாற்பதுகளிலும் ஐம்பதுகளிலும் பிரசித்துபெற்றிருந்த மொழியியல் கோட்பாடுகளின் சட்டகத்திற்குள் குறிப்பிடத்தகுந்த விதத்தில் விளக்க இயலாது என்பதைக் நிரூபித்தபடியால் அது கோட்பாட்டு மொழியியலின் வரலாற்றில் ஒரு முக்கிய வழிகாட்டும் அடையாளமாக உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ளது.

5.3.3. **Aspects** மாதிரி

சாம்ஸ்கியின் Aspects மாதிரியைப் பின்வருமாறு சுருக்கமாகத் தரலாம்:

படம்19




தொடரியல், பொருண்மையியல், ஒலியனியல் உட்கூறுகள் படத்தில் வேறுபடுத்திக் காட்டப்படாவிட்டாலும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. பின்வரும் படம் இதை விளக்கமாகக் காட்டும்:

படம் 20




தொடரமைப்பு விதிகள் உள்வகைப்பாட்டு விதிகள் சொற்செருகல் வருவரைவு விதிகள் விதிகள் மாற்று விதிகள் ஒலியனியல் விதிகள்

ஆக்கமுறை மாற்றிலக்கணத்தில் மூன்று உட்கூறுகள் உண்டு:

1. தொடரியல் உட்கூறு
2. பொருண்மையியல் உட்கூறு
3. ஒலியனியல் உட்கூறு

தொடரியல் உட்கூறில் இரண்டு பாகங்கள் உண்டு. ஒன்று வாக்கிங்களின் அக அமைப்புகளை உருவாக்குகின்ற அடிக்கூறு (base component). அக அமைப்பு தொடரமைப்பு விதிகளால் (phrase structure rules) உருவாக்கப்படும். அக அமைப்புத்தான் வாக்கியங்களின் அடிப்படை. தொடரியல் உட்கூறின் இரண்டாவது பாகம் மாற்றுத் துணை உட்கூறு (transformational subcomponent). இது அடிக்கூறால் உருவாக்கப்படுகின்ற அக அமைப்புகளை மாற்று விதிகளால் அவற்றின் புற அமைப்பாய் மாற்றகின்றன. எனவே தொடரியல் உட்கூறு தொடரியல் விதிகளின் ஒழுங்குமுறை. மாற்று துணை உட்கூறு மாற்று விதிகளின் குழுமம். பொருண்மையியல் உட்கூறு வாக்கியங்களின் பொருளை அவற்றின் அக அமைப்பு அடிப்படையில் எடுத்துரைக்கும். ஒலியனியல் உட்கூறு வாக்கியங்களின் ஒலிவடிவை அவற்றின் புற அமைப்பு அடிப்படையில் எடுத்துரைக்கும். இவ்வாறு தொடரியல் பொருண்மையிலை ஒலியனியலுடன்

தொடர்புபடுத்துகிறது. ஆக்கமுறை மாற்றிலக்கணத்தின் மூன்று உட்பகுதிகளில், தொடரியல் விளைவாக்கம் உள்ளது. பிற இரு உட்பகுதிகளும் எடுத்துரைக்கும் உட்கூறுகள். தொடரியலால் உருவாக்கப்படும் அமைப்புகளின் அடிப்படையில் ஒன்று வாக்கியங்களின் பொருளை எடுத்துரைக்கும். மற்றொன்று வாக்கியங்களின் ஒலிவடிவை எடுத்துரைக்கும்.




ஆக்கமுறை இலக்கணத்தின் மூன்று உட்பகுதிகளில், தொடரியல் விளைவாக்கம் உள்ளது. பிற இரு உட்பகுதிகளும் எடுத்துரைக்கும் உட்பகுதிகள் (interpretative components). தொடரியலால் உருவாக்கப்படும் அமைப்புகளின் அடிப்படையில் ஒன்று வாக்கியங்களின் பொருளை எடுத்துரைக்கும். மற்றொன்று வாக்கியங்களின் ஒலிவடிவை எடுத்துரைக்கும். தொடரமைப்பு விதிகள் இவை கிளையமைப்பை உட்படுத்தும் விரித்தெழுது விதிகளாகும் மற்றும் வகைப்பாட்டு (கலவையல்லாத (non-complex)) குறியீடுகளைப் பயன்படுத்தும். இவை பின்வருமாறு சாதாரண தொடரமமைப்பு விதிகளாகும்

வா → பெதொா⌧துவி⌧விதொ
விதொ → வி⌧பெதொ
பெதொ → பெ
அஅ → வாந
**துவி** T⌧(modal)⌧(have en)⌧(be ing)

(⌧ என்பது + என்ற குறியீடுகளைப் போல் இணைப்புக் குறியீடாகும் (எ.கா. வா→பெதொ+துவி+விதொ)); சிலர் ' -' என்ற குறியீட்டைப் பயன்படுத்துவர் (எ.கா. வா→ பெதொ-துவி-விதொ)). ஒரு முன்னிறுதி கோர்வை வகைப்பாட்டு உட்கூறின் கிளைவிடும் விதிகளால் உருவாக்கப்படும்.

படம் 21




வா

இது முன்னிறுதிக் கோர்வைகளாகும். முன்னுருபு பின்வரும் சொல் விதிகள் (lexical ruels) அடிப்படையில் சொல் வடிவாக்கிகளையோ அலகுகளையோ செருகுவதால் உருவாக்கப்படும். **துணைவகைப்பாட்டு விதிகள்**

துணைவகைப்பாட்டு விதிகள், சூழல் குறித்த கூற்று தவிர்த்து, சொல் வகைப்பாடுகளை மட்டும் உட்படுத்தும் மற்றும் அவை அவற்றின் தொடரியல் பண்புக்கூறுகளில் பெ அல்லது வி போன்ற வகைப்பாடுகளைச் சிறப்பிக்கும் கலவைக் குறியீட்டைப் பயன்படுத்தும். இரண்டு வகையான துணைவகைப்பாட்டு விதிகள் இருக்கின்றன.

1. கண்டிப்பான துணைவகைப்பாட்டு விதிகள்

பெதொ

#

பெயரெச்சம்

வி → கசு/ பயனிலைப் பெயர் like பயனிலைப் பெயர்

that வா’ பெதொ (of அஅ பெ) வா’ பிற வகைப்பாடுகள்

2. கலவைக் குறியீட்டை அது தோன்றும் சட்டகங்களின் தொடரியல் பண்புக்கூறுகளின் படி ஆயும் தேர்வு விதிகள்

[+அருவம்] துவி--

[-அருவம்] துவி--

[+வி] → கசு/ -அஅ [+விலங்கினம்]

-அஅ [-விலங்கினம்]

சொற்களஞ்சியம் இது எல்லா சொல் வடிவாக்கிகளையும் கொண்டிருக்கும். அதாவது, அது சொல் பதிவுகளின் ஒரு குழுமமாகும். ஒவ்வொரு சொல் பதிவும் ஒலியனியல் வேறுபடுத்தும் பண்புக்கூறுகளின் ஒரு குழுமத்தையும் சிறப்பிக்கப்பட்ட தொடரியல் மற்றும் பொருண்மையியல் பண்புக்கூறுகளின் சேகரிப்பையும் கொண்டிருக்கும். இது சொல் பொருண்மையியல் மட்டுமே

ஆகும். சொல் அலகுகளின் பண்புக்கூறுகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் மற்றும் முழு வாக்கியத்தின் பொருண்மையையும் உருப்படுத்தம் செய்ய வேண்டி வாக்கியத்திற்குள் அவற்றின் உறவுகள் கூறப்படவேண்டும். தொ-வடிவுகளின் உருவாக்கம் வாக்கியங்களின் பொருண்மை அக அமைப்பு அடிப்படையில் எடுத்துரைப்பு செய்யப்படும். அக அமைப்பு மாற்றங்களால் புற அமைப்பாக வெளிப்படுத்தப்படும். அக அமைப்பை உருப்படுத்தம் செய்கின்ற தொடர்வடிவம் அதன் தொ-வடிவம் (p-marker) அல்லது உள்ளுறை தொடர்வடிவம் (underlying p-marker) என்று அழைக்கப்படும். ஒரு தனி வாக்கியத்திற்கு அதன் அக அமைப்பை உருப்படுத்தம் செய்ய ஒரு அடிநிலை தொ-வடிவம் இருக்கும். கூட்டு மற்றும் கலவை வாக்கியங்கள் ஒரு குழும அடிநிலை வடிவுகளைக் கொண்டிருக்கும். தொடரியல் உட்கூறின் அடிக்கூறின் செயல்பாடு அக அமைப்பை உருப்படுத்தம் செய்கின்ற, வாக்கியங்களை உள்ளுறை செய்கின்ற தொ-வடிவுகளை உருவாக்குவதுதான். பின்வரும் எடுத்துக்காட்டால் இதை விளக்குவோம்:

ராஜா அந்த உணவைச் சாப்பிடுவான்.

இம்மாதிரியான தனி வாக்கியங்களில் அக அமைப்பும் புற அமைப்பும் அதிகம் வேறுபடாது. மேற் சொன்ன வாக்கியத்தின் தொ-வடிவத்தை புலக்குறிப்பு செய்யப்பட்ட அடைப்புக்குறிகளாலோ கிளை வரை படத்தாலோ உருப்படுத்தம் செய்யலாம். இந்த தொ-வடிவம் பின்வரும் தொடரமைப்பு விதிகளால் உருவாக்கம் செய்யப்படும்.

1. வா → பெதொ + விதொ + துவி

விதொ → வேதொ + வி

வேதொ → பெதொ + வேஉ

பெதொ → அஅ + பெ

பெதொ → பெ

துவி → எகாலம் + உடன்பாடு

2. எகாலம் → வ்

உடன்பாடு → ஆன்

அஅ → அந்த

பெ → ராஜா

பெ → உணவு

வேஉ → ஐ

வி → சாப்பிடு

படம்21




தொ-வடிவங்கள் வாக்கியத்தை உருவாக்கும் வடிவாக்கிகளின் கோர்வைகளை அதன் உறுப்புகளாக வரும் தொடர்ச்சியான துணைக் கோர்வைகளாக மேலும் மேலும் பகுக்கும். ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு வகைப்பாடு தரப்படும். விதிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் குறியீடுகள் வடிவாக்கிகளையும் (formatives) (உணவு, ராஜா, சாப்பிடு போன்றன) வகைப்பாட்டுக் குறியீடுகளையும் (வா, பெதொ, வி போன்றன) உள்ளடக்கியதாகும். வடிவாக்கிகள் தொடரியல் உறவில் ஈடுபடுகிற மிகச்சிறிய அலகுகளாகும். அவைகள் அமைப்பு மொழியியல் உருபன்களுக்குச் சமமானவை. வடிவாக்கிகள் இரு வகைப்படும்: ராஜா, உணவு, சாப்பிடு போன்ற சொல் வடிவாக்கிகள் மற்றும் பன்மை, உடைமை, வேற்றுமை உருபுகள், காலம், உடன்பாடுகள் போன்ற இலக்கண வடிவாக்கிகள். செயல்பாட்டுக் கருத்துச் சாயல்கள் வகைப்பாட்டுக் குறியீட்டை அறிமுகப்படுத்தும் விதிகளுக்கும் வடிவாக்கிகளை அறிமுகப்படுத்தும் விதிகளுக்கும் இயற்கையான வேறுபாடு இருக்கின்றது. முதலில் குறிப்பிட்டதை வகைப்பாட்டு விதிகள் (categorical ruels) என்றும் இரண்டாவது குறிப்பிட்டதைச் சொல் விதிகள் (lexical rules) என்றும் கூறலாம். இவை தொடரியல் அடிக்கூறின் வேறுபட்ட இரு துணைப் பகுதிகளாகும். வாக்கியங்களை உறுப்புகளாக அவற்றின் புலப்படுத்தப்பட்ட வகைப்பாடுகளுடன் பகுப்பதுடன் எழுவாய், பயனிலை போன்ற கருத்துச்சாயல்களும் அக அமைப்பில் உருப்படுத்தம் செய்யப்பட வேண்டும். எழுவாய் என்ற கருத்துச்சாயல் இலக்கணச் செயல்பாட்டைக் குறிப்பிடும்.

பெதொ என்ற கருத்துச்சாயல் இலக்கண வகைப்பாட்டைக் குறிப்பிடும். இந்தச் செயல்பாட்டைக் கருத்துச்சாயல்கள் பொருண்மை எடுத்துரைப்புக்குத் தேவையானதாகும். எழுவாய் ஒரு குறிப்பிட்ட வாக்கியத்துடன் தொடர்புபடுத்தி விளக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, முன்பு பார்த்த வாக்கியத்தில் ராஜா என்பது அதன் எழுவாய். அது வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் அது எழுவாயாக இருக்கத் தேவையில்லை. ஆதலால் நாம் ராஜா என்பதை ஒரு பெதொ என்று குறிப்பிட வேண்டும். அது எந்த வாக்கியத்தில் வந்தாலும் அது பெதொ தான். இவ்வாறு செயல்பாட்டுக் கருத்துச்சாயல் வகைப்பாட்டுக் கருத்துச்சாயலிலிருந்து வேறுபட்ட நிலையில் இருக்கின்றது. எனவே அவை வேறாக உருப்படுத்தம் செய்யப்படவேண்டும். இலக்கணச் செயல்பாடுகள் தொ-வடிவுகளால் உருப்படுத்தம் செய்யப்பட்டால், வகைப்பாட்டு நிலைமை (categorical status) செயல்பாட்டுக் கருத்துச்சாயல்களுக்குத் தரப்பட்டு சிக்கலை உருவாக்கும். இதனால் அவைகளுக்குள்ள தொடர் பண்பு வெளிப்படுத்தாமல் விடப்படும். தனி வாக்கியங்களுக்கு பின்வரும் வரைபடத்தில் தந்துள்ளது போல வகைப்பாட்டிற்கும் செயல்பாட்டிற்கும் உள்ள தொடர்பை ஊகம் செய்ய இயலும்.

படம்23




ஆனால் சில கலவை வாக்கியங்களில் ஒரே தொடருக்குப் பல செயல்பாடுகள்

இருக்கலாம்· அப்படியென்றால் அந்த உண்மைகளை மேற் சொன்னவாறு வரைபடத்தில் காட்ட இயலாது. எடுத்துக்காட்டாக

ராஜா ராமுவை வண்டி ஓட்டச் சொன்னான்

என்ற வாக்கியத்தில் *ராமு* என்பது சொல் என்ற வினயின் செயப்படுபொருளாகவும் ஓட்டு என்ற வினையின் எழுவாயாகவும் செயல்படுகின்றது. இவ்வகையிலான வாக்கியங்களில் தொடர்களின் சிறப்பான செயல்பாடுகள் அல்லது தொடர்புகள் அக அமைப்பில் உருப்படுத்தம் செய்யப்படுவது புற அமைப்பில் உருப்படுத்தம் செய்யப்படுவதிலிருந்து வேறுபடும்.

எழுவாய், செயப்படுபொருள் என்பன உறவு அடிப்படையிலானவை. இவற்றைத் தொ-வடிவத்தால் உருப்படுத்தம் செய்ய இயலும். அவற்றின் உறவுப்பண்பை வெளிப்படுத்தும்படி இச்செயல்பாடுகள் கருத்துச்சாயல்களை விளக்குவது அவசியம். எடுத்துக்காட்டாக எழுவாய் என்பதை பெதொ + விதொ + துவி என்ற அமைப்பில் வரும் பெதொ-உக்கும் முழுவாக்கியத்திற்கும் உள்ள தொடர்பு என விளக்கலாம். செயப்படுபொருள் என்பதை வேதொ + + வி என்ற அமைப்பில் வரும் வேதொ-உக்கும் முழு விதொ-உக்கும் உள்ள உறவு எனலாம். இவ்விளக்கங்களைப் பின்வருமாறு வாய்பாட்டில் உருப்படுத்தம் செய்யலாம்.

எழுவாய் : [பெதொ, வா]

பயனிலை: [விதொ, வா]

நேர்ச்செயப்படுபொருள்: [வேதொ, விதொ]

முதன்மை வினை: [வி, விதொ]

இவ்விளக்கங்களினால் விதிகளால் உருவாக்கப்பட்ட தொ-வடிவு அடிப்படையில் *ராஜா* என்பது *ராஜா இந்தப் உணவைச் சாப்பிடுவான்* என்ற வாக்கியத்தின் எழுவாய் என்றும் இந்த உணவைச் சாப்பிடுவான் என்பது அதன் பயனிலை என்றும் இந்த உணவு என்பது நோ;ச்செயப்படுபொருள் என்றும் விளக்கலாம். தொ-வடிவை உருவாக்கும் தொடரமைப்பு விதிகள் வடிவாக்கக் கோர்வைகளை (string formatives) பல இலக்கண வகைப்பாட்டிற்குள் அடங்கும் துணைக்கோவைகளாக வகைப்பாடு செய்வதால் அவை வகைப்பாட்டு விதிகள் என்று அழைக்கப்படும்.

இலக்கண வகைப்பாடு இரண்டு வகைப்படும்: சொல்வகைப்பாடு மற்றும் முக்கிய வகைப்பாடு. ஒரு சொல்லையோ அல்லது வடிவாக்கியையோ (formative) அதிகாரம் செய்கின்ற வகைப்பாடு சொல்வகைப்பாடு என்று அழைக்கப்படும். ஒரு குறியீடு ஒரு விதியின் இடப்பக்கமும் மற்றொரு குறியீடு வலப்பக்கமும் வருகையில், முதல் குறியீடு இரண்டாவது குறியீட்டை ஆதிக்கம் செய்வதாகக் கூறலாம். கிளை உருப்படுத்தத்தில் ஒரு கணு அதன் கீழ் வரும் கணுக்களை ஆதிக்கம் செய்கின்றது. மட்டுமன்றி அதன் நேரடி கீழ்வரும் கணுவை உடனடியாக ஆதிக்கம் செய்கின்றது.

ஒரு கோவையை ---- X------ (X- ஒரு சொல் வகைப்பாடாய் இருந்தால்) ஆதிக்கம் செய்யும் வகைப்பாடு முக்கிய வகைப்பாடு எனப்படும். மேல் சொன்ன விதிகளில் பெ, வி, துவி, அஅ என்பன சொல் வகைப்பாடுகளாகும். செயல்பாட்டுக் கருத்துச்சாயல்கள் எல்லாம் முக்கிய வகைப்பாட்டோடு நிறுத்திக் கொள்ளப்படுகின்றது. இலக்கண உறவுகளான எழுவாய்-வினை, செயப்படுபொருள்-வினை அல்லது எழுவாய்-செயப்படுபொருள் என்பனவற்றைச் செயல்பாட்டுக் கருத்துச்சாயல் அடிப்படையில் விளக்கலாம். எடுத்துக்காட்டாக எழுவாய்-வினை என்பதை வாக்கியத்தின் எழுவாய்க்கும் வாக்கியத்தின் பயனிலையின் முக்கிய வினைக்கும் இடையிலான உறவு என விளக்கலாம். மேற்சொன்ன விளக்கங்களும் விளக்கங்களுக்கு அடிப்படையாய் அமைகின்ற வகைப்பாடுகளான வா, பெதொ, விதொ என்பனவும் ஒரு குறிப்பிட்ட இலக்கணத்தைச் சாராமல் உலகப்பொது இலக்கணத்தைச் சாரும். தொடரியல் பண்புக்கூறுகள் பொருண்மை எடுத்துரைக்குத் தேவையான கூடுதலான ஒரு செய்தி அக அமைப்பு உருப்படுத்தத்தில் தரப்படவேண்டும். இது சொல் வகைப்பாடுகளான பெயர், வினை என்பதை உள்வகைப்பாடு செய்வதைக் குறித்ததாகும். மேற் சொன்ன விதிகள் பின்வரும் வாக்கியத்தை உருவாக்குவதுடன்

ராஜா அந்த உணவைச் சாப்பிடுவான்

பின்வரும் தொடர்களையும் உருவாக்கும்:

அந்த உணவு ராஜாவைச் சாப்பிடும்

வாக்கியத்தில் *ராஜா, உணவு, சாப்பிடு* என்ற வடிவாக்கிகள் இருக்கின்றன. இவற்றில் முதல் இரண்டும் பெயர் என்ற வகைப்பாட்டைச் சார்ந்தவை. மூன்றாவது உறுப்பு வினை என்ற வகைப்பாட்டைச் சார்ந்தது. பெயர் என்ற

வகைப்பாட்டை +/- பொது, +/- எண்ணக்கூடியது, +/- விலங்கினம், +/- மனிதவினம், +/- அருவம் என்று உள்வகைப்பாடு செய்யலாம். இந்த உள்வகைப்பாடு மிகக் கட்டுப்பாடான படிநிலை அமைப்பல்ல. இது எல்லை கடந்த வகைப்படுத்தலைக் கொண்டது. எடுத்துக்காட்டாக, பொதுப்பெயர்களும் இயற்பெயர்களும் மனிதவினப் பெயர்களாகவும் மனிதவினமலாப் பெயர்களாகவும் வரலாம். இதனால் சொல்வகைப்பாடுகளின் உள்வகைப்பாட்டைத் தொடரமைப்பு விதிகளால் உருப்படுத்தம் செய்ய இயலாது. மாறாக சொல்வகைப்பாடு ஒரு பண்புக்கூறுகளின் குழுமமாகக் கொள்ளப்பட்டு கலப்புக்குறியீடாக ஆயப்படும். பெயர் என்பதைப் பின்வரும் விதிகளால் உள்வகைப்பாடு செய்யலாம்.

பெ → [பெ, +/- பொது]

[+பொது] → [+/- எண்ணக்கூடியது]

[+ எண்ணக்கூடியது] → [+/- விலங்கனம்]

[+விலங்கினம்] → [+/- மனிதவினம்]

[- எண்ணக்கூடியது] → [+/- அருவம்]

இவ்விதிகள் பின்வருமாறு பெயர்களின் உள்வகைப்பாடுகளை உருவாக்கலாம்.

[+பெ, + பொது, -எண்ணக்கூடியது]

[+பெ, -பொது, +விலங்கினம், +மனிதவினம்]

[+பெ, -பொது, +எண்ணக்கூடியது, +விலங்கினம், -மனிதவினம்]

ஒவ்வொரு வாக்கியமும் ஒவ்வொரு தொடரியல் பண்புக்கூறுகளின் குழுமத்துடன் தொடர்பு படுத்தப்படும். *உணவு* என்பதற்கு [+பெ, +பொது, -எண்ணக்கூடியது, -விலங்கினம்] என்ற தொடரியல் பண்புக்கூறுகள் இருக்கும். இவை உள்வகைப்பாட்டு விதிகளால் உருவாக்கப்படும். உள்வகைப்பாட்டு விதிகள் பொது மொழியியல் கோட்பாட்டிற்குரியது. ஒரு குறிப்பிட்ட இலக்கணத்திற்கு மட்டும் உரியதல்ல. ஒரு சொல் வகைப்பாட்டைக் கலப்புக்குறியீடுகளாக (complex symbol) ஆயும் உள்வகைப்பாட்டு விதிகளும் (அதாவது சிறப்பிக்கப்பட்ட தொடரியல் பண்புக்கூறுகளின் குழுமமும் = specified syntactic features) உள்ளன. அடிக்கூறில் வடிவாக்கிகளை அறிமுகம் செய்யும் விதிகள் கிடையாது. பதிலாக அடிக்கூறில் ஒரு மொழியிலுள்ள வரிசைப்படுத்தப்படாத எல்லா வடிவாக்கிகளின் பட்டியலான சொற்களஞ்சியம்

உள்ளது. ஒவ்வொரு வடிவாக்கிகளும் அதன் உச்சரிப்பை வரையறுக்கும் ஒலியனியல் பண்புக்கூறுகளின் மற்றும் தொடரியல் பண்புககூறுகளின் குழுமத்தால் சிறப்பிக்கப்பட்டிருக்கும். அதாவது ஒவ்வொரு சொற்களஞ்சியமும் சொற்பதிவுகளின் (lecixal entries) குழுமம் ஆகும். ஒவ்வொரு சொற்பதிவும் ஒரு அகராதிச் சொல்களின் ஒலி வடிவை உள்ளடக்கும் பண்புக்கூறுகளின் சட்டகத்தாலும் (feature matrix) தொடரியல் பண்புக்கூறுகளின் தொகுப்பாலும் சிறப்பிக்கப்பட்டிருக்கும் · இது கலப்புக்குறியீடு என்று அழைக்கப்படும். எனவே முன்னர் சொன்ன தொடரமைப்பு விதிகளுக்குப் பதிலாகப் பின்வரும் விதிகளும் சொற்களஞ்சியமும் அடிக்கூறில் இருக்கும்.

1. வா → பெதொ + விதொ + துவி

விதொ → பெதொ + வி

பெதொ → வி

பெதொ → அஅ + பெ

துவி → காலம் + உடன்பாடு

2. பெ → [+பெ, +/-பொது]

[+பொது] → [+/-எண்ணக்கூடியது]

[-எண்ணக்கூடியது] → [+/- விலங்கினம்]

[-பொது] → [+/- விலங்கினம்]

[+விலங்கினம்] → [+/-மனிதவினம்]

[+பெ, +/-பொது] → [- எண்ணக்கூடியது]

[- எண்ணக்கூடியது] → [+/-அருவம் ]

[- எண்ணக்கூடியது] → [- எண்ணக்கூடியது]

3. (ராஜா, [+பெ, -பொது, +மனிதவினம்]) (உணவு [+பெ, +பொது, -எண்ணக்கூடியது, -அருவம்]) (வ், [+காலம்]) (அந்த, [+அஅ, +குறிப்பு])

மேற்சொன்ன விதிகள் இலக்கண வடிவாக்கிகளாலும் கலப்பு குறியீடுகளாலும் ஆன கோவைகளாக இறுதியுறும் ஆக்கங்கங்களை உருவாக்கும். இக்கோவையைகளை முன்னிறுதிக் கோவைகள் எனலாம். சொற்களஞ்சியத்திலிருந்து கலவைக் குறியீட்டில் சொல் வடிவாக்கிகள் செருகப்பட்டால் அக்கோவை இறுதிக் கோவையாக மாறும். சொல் வடிவாக்கிகள் பின்வரும் விதிகளின் அடிப்படையில் செருகப்படும்:

Q என்பது முன்னிறுதிக் கோவையின் (preterminal string) ஒரு கலப்புக் குறியீடாகும். மற்றும் (D, C) என்பது ஒரு சொல்பதிவாகும்; C என்பது Q -இல் இருந்து வேறுபடாவிட்டால் Q -ஐ D-ஆல் இடம் பெயர்க்கலாம்.

விதிகள் 1-உம் 2-உம் பின் வரும் முன்னிறுதிக் கோவையை உருவாக்கும்: [+பெ, -பொது, +மனித இனம்] + அஅ + [+பெ, +பொது, -எண்ணக்கூடியவை, -விலங்கினம்] + Q + எகாலம் + உபாடு; Q என்பது ஒரு கலப்புக்குறியீடு · இதில் வினயானது வினையை உள்வகைப்பாடு செய்யும் விதிகளால் ஆய்வுச் செய்யப்படும். முன்பு தந்த விதிப்படி *ராஜா* என்பது முதல் கலப்புக் குறியீட்டில் செருகப்படும். *சாப்பிடு* என்பது Q என்பதன் அடியில் செருகப்படும்; *வ்* என்பது எதிர்காலம் என்பதன் அடியில் செருகப்படும்; *அந்த* என்பது *அஅ* அடியில் செருகப்படும். இத்தொடர்வடிவை (தொ-வடிவை) பின்வருமாறு கிளைப்படத்தால் உருப்படுத்தம் செய்யலாம்:

படம் 23




பெ என்ற வகைப்பாட்டைக் கலப்புக் குறியீடாக ஆய்தலால் ராஜா என்பதை எழுவாய்ப் பெயராகவும் உணவு என்பதைச் செயப்படுபொருள் பெயராகவும் செருக முடிந்தது. இது பின்வரும் வாக்கிய உருவாக்கத்தைத் தடை செய்யும்.

*இந்த உணவு ராஜாவைச் சாப்பிடும்.

தொடரியல் பண்புக்கூறுகள் அடிப்படையில் அகராதிச் சொற்களைச் சொற்களஞ்சியத்தில் குறிப்பிடும் பேது, பொது விதிகளின் பயன்பாட்டால் ஆக்கப்பெறுவனற்றைக் குறிப்பிட்டுக் கூறத்தேவை இல்லை. எடுத்துக்காட்டாக, பையன் என்பதற்கு [+பெ, +பொது, +எண்ணக்கூடியது, +விலங்கினம், + மனிதவினம், -அருவம், +ஆணினம், -பெண்ணினம்] என்ற தொடரியல் பண்புக்கூறுகள் இருக்கின்றன. ஆனால் [+மனிதவினம்] என்பதற்கு [+விலங்கினம்] மற்றும் [-அருவம்] என்ற பொது விதி இருக்கின்றது. மட்டுமல்ல, [+ஆணினம்] என்பது [-பெண்ணினம்] என்பதை உள்ளடக்கும். எனவே, பையன் என்பது சொற்களஞ்சியத்தில் [+பெ, +பொது, +எண்ணக்கூடியது, +மனிதவினம், +ஆணினம்] என்று குறிப்பிட்டால் போதுமானது. பிற பண்புக்கூறுகள் எல்லாம் பொது விதிகளால் பெறப்படும். சொற்களஞ்சியத்தை இவ்வாறு

எளிமையாக்கலாம். இவ்வாறு ஒரு அகராதிச் சொல்லின் தொடரியல் பண்புக்கூறுகளின் முழுக்குறியீட்டையும் பெற உதவும் பொது விதிகள் மிகைமை விதிகள் (சநனரஇனயஇஉல சரடநள) எனப்படும்.

இதுவரைக் கூறிய பெயரின் உள்வகைப்பாடு (subcategorization) சூழல் கட்டுப்பாடு இல்லாத விதிகளால் (context free ruels) ஆனது. ஆனால் இலக்கண வாக்கியங்களை உருவாக்குவதில் பங்கெடுக்கும் சில சூழல் கட்டுண்ட விதிகளும் (context senstitive ruels) இருக்கின்றன. சூழல் கட்டுண்ட உள்வகைப்பாட்டு விதிகள் (context sensitive subcategorization ruels) பின்வரும் வடிவானவை:

அ → · (ஆ)இ(ஈ)

இவ்விதி இ என்ற வகைப்பாட்டை அது வரும் சட்டக அடிப்படையில் ஒரு கலப்புக்குறியீடாக ஆய்கின்றது. இச்சட்டகத்தை வகைப்பாடு குறியீடு அடிப்படையிலும் தொடரியல் பண்புக்கூறு அடிப்படையிலும் கூறலாம். வகைப்பாட்டுச் சூழல் அடிப்படையில் ஒரு வகைப்பாட்டை அது வரும் சட்டகத்தின் தொடரியல் பண்புக்கூறுகள் அடிப்படையில் ஆயும் விதிகள் தோ;வுவிதிகள் எனப்படும்.

பெதொ → (அஅ) பெ (வா) என்ற விதி ஒரு பெயரை இலக்கணத்தில் (ஆங்கில இலக்கணத்தில்) அறிமுகப்படுத்துக்கின்றது என்றால், பெயரின் கண்டிப்பான உள்வகைப்பாடுகள் பின்வருவன: பெதொ → [அஅ ---], [---வா], [---]

விதொ → (பெதொ) வி

என்ற விதி ஒரு வினையை அறிமுகப்படுத்துகின்றது என்றால், வினையின் கண்டிப்பான உள்வகைப்பாடுகள் பின்வருவன:

[பெதொ---], [---]

இவை செயப்படுபொருள் குன்றா வினைகள் ஆகும். ஆங்கிலத்தில் செயப்படுபொருள் குன்றா வினைகளைச் செயப்படுபொருள் நீக்கலை அனுமதிக்கும் வினைகள் செயப்படுபொருள் நீக்கலை அனுமதிக்கா வினகள் என உள்வகைப்பாடு செய்யலாம். ஒரு வகைப்பாடு வருகின்ற ஒவ்வொரு சட்டகமும் ஒரு வகைப்பாட்டின் கண்டிப்பான உள்வகைப்பாட்டிற்கு இன்றியமையாதது.

தேர்வு விதிகளைப் பொறுத்தவரையில், எழுவாய் மற்றும் செயப்படுபொருளின் ஒவ்வொரு தொடரியல் பண்புக்கூறும் வினையின் பாகுபாட்டை (classification)

வற்புறுத்துகின்றது. அதாவது எழுவாய்ப் பெயர் மற்றும் செயப்படுபொருள் பெயர் இவற்றில் உள்ள தொடரியல் பண்புக்கூறுகள் அடிப்படையில் வினைகள் உள்வகைப்பாடு செய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, சில வினைகள் [+மனிதவினம்] என்ற பண்புக்கூறு பெற்ற எழுவாய்ப் பெயர்களையும் [-அருவம்] என்ற பண்புக்கூறு பெற்ற செயப்படுபொருள் பெயர்களையும் ஏற்கும். வேறு சில [+அருவம்] என்ற பண்புக்கூறு பெற்ற எழுவாய்ப்பெயர்களை ஏற்கும். இவ்வாறு உள்வகைப்பாடுகள் பல செய்யலாம். தேர்வு விதிகள் தேர்வுக்கட்டுத்திட்டத்தை அல்லது உடன் வருகைக் கட்டுத்திட்டத்தை வெளிப்படுத்துகின்றது.

மேற்சொன்ன வாக்கிய உருவாக்கத்தில், தேர்வுவிதிகள் வினை என்ற வகைப்பாட்டை [+வி, +([-பொது, +மனிதவினம்] எழுவாய், [+பொது, -எண்ணக்கூடியவை, -விலங்கினம்] செயப்படுபொருள்)] என்ற கலப்புக்குறிடாக ஆயலாம். சொற்களஞ்சியத்தில் [+வி, +([-பொது, +மனிதவினம்] எழுவாய், [+பொது, -எண்ணக்கூடியவை, -விலங்கினம்] செயப்படுபொருள்)] என்று குறிப்பீடுசெய்யப்பட்ட (சிறப்பிக்கப்பட்ட) *சாப்பிடு* என்ற வடிவாக்கி இருக்கும். சொற்செருகல் விதிப்படி, வினை ஆயப்பெற்ற கலப்புக்குறியீட்டில் சாப்பிடு என்பதைச் செருக இயலும்.

கண்டிப்பான உள்வகைப்பாடு விதிகளை மீறுதல் தேர்வுவிதிகளை மீறுதலால் ஏற்படும் வழுவைக் காட்டிலும் கூடுதல் வழுவுள்ள வாக்கியங்களை உருவாக்கும். எடுத்துக்காட்டாக,

ராஜா துக்கமான சாப்பிட்டான்
ராஜா நேர்மையைச் சாப்பிட்டான்

என்பனவற்றில் முதல் வாக்கியம் இரண்டாவது வாக்கியத்தைவிட குறைவான இலக்கணத்துவம் உள்ளது; ஏனென்றால் முதல் வாக்கியம் பின்வரும் கட்டாயமான உள்வகைப்பாட்டு விதியை மீறுகின்றது.

விதொ → வேதொ + வி

*சாப்பிடு* என்பது ஒரு செயப்படுபொருள் குன்றா வினை. எனவே அதற்குமுன் ஒரு வேற்றுமைத்தொடர் வரவேண்டும். *துக்கமான* என்பது பெயரடை என்ற காரணத்தால் முதல் வாக்கியம் கட்டாய உள்வகைப்பாட்டு விதியை மீறுகின்றது எனலாம். *சாப்பிடு* என்பது [-அருவம்] என்ற பண்புக்கூறு உள்ள வேற்றுமைத் தொடரைத் தொடர்ந்து வரவேண்டும். ஆனால் இரண்டாவது

வாக்கியத்திலுள்ள வேற்றுமைத் தொடரில் அடங்கும் *நேர்மை* என்பது [-அருவம்] என்ற பண்புக்கூறு உள்ளதாகும். எனவே இரண்டாவது வாக்கியம் தேர்வு விதியைத்தான் மீறுகின்றது எனலாம். [பொது] அல்லது [எண்ணக்கூடியது] போன்ற உயர்நிலைப் பண்புக்கூறுகளை மீறும் வாக்கியங்கள் [மனிதவினம்] போன்ற தாழ்நிலைப் பண்புக்கூறுகளை மீறும் வாக்கியங்களைவிடக் குறைந்த அளவு இலக்கணத்துவம் உள்ளவை. இவ்வாறு இலக்கணத்துவ அளவு வெளிப்படையாக வடிவமாக்கப்பட்டுள்ளது.

தேர்வு விதிகளை மீறும் வாக்கியங்களை உருவகித்தல் அடிப்படையில் விளக்கவாம். எடுத்துக்காட்டாக விளக்கு சிரித்தது என்பதற்கு 'விளக்கு பிரகாசமாய் எரிந்தது' என்ற பொருள் தரலாம். சில மொழியிலார் தோ;வு விதிகள் பொருண்மை உட்கூறில் தான் வரவேண்டும், எனவே தொடரியல் உட்கூறு மேற்சொன் வாக்கியங்களை உருவாக்கலாம் என்பர்.

**இலக்கண மாற்றங்கள்** (Grammatical transformation)

மரபாக சில சொற்கள் துணை வினைகள் என்று அழைக்கப்படும். இவை ஆங்கில மொழியில் have என்ற முடிவுறு வினையையும் be என்ற தொடர்வினையையும் can, could, may, might, will, would, shall, should, ought to, must என்ற வினைப்பாங்கு வினைகளையும் உள்ளடக்கும். பின்வரும் ஆங்கில வினைத்திரிபுகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்:

1. could, mihgt, would, should என்பன முறையே can, may, will, shall என்பனவற்றின் இறந்த கால வடிவங்களாகும்.
2. முற்று வினைக் குழுமத்தில் முதல் வினை காலத்தைக் கொண்டிருக்கும்.
3. have என்ற முடிவுறு துணை வினை அதைத் தொடர்ந்து இறந்தகால வினையெச்ச வடிவம் வருவதை வேண்டும். எ.கா.

    Raja has forgotten to do his work.

4. தொடர் துணைவினையான be (am, is, are, was, were) நிகழ்கால வினையெச்ச வடிவம் அதைத் தொடர்வதை வேண்டும். எ.கா.

    Raja is singing.

இந்த உண்மைகள் விதிகளால் கூறப்படவேண்டும். நாம் en என்பதை வினையெச்ச வடிவத்திற்கும் ing என்பமை நிகழ்கால வினையெச்ச

வடிவத்திற்கும் பயன்படுத்துவோம். தொடரமைப்பு விதியை இரண்டு வழிகளில் எழுதலாம்:

1. வா → பெதொ விதொ

விதொ → துவி + வி ...




2. வா → பெதொ துவி பெதொ




அதாவது நாம் துவி-ஐ முதல் எடுத்துக்காட்டில் காட்டியுள்ளது போல் விதொ-இன் உறுப்பாகவோ இரண்டாம் எடுத்துக்காட்டில் காட்டியுயள்ளதுபோல் வா-இன் உறுப்பாகவோ அனுமானிக்கலாம். நாம் பெரும்பாலான மொழியியலாரால் பயன்படுத்தப்படுகின்ற இரண்டாவது எடுத்துக்காட்டைப் பின்பற்றுவோம். காலம் ஒரு கோர்வையில் முதல் தனிமமாகத் தோன்றுகின்றது மற்றும் அது கட்டாயமானதாகும். அது வினைப்பாங்காலும் வினைமுடிவவாலும் வினைத்தொடர்சியாலும் தொடரப்படுகின்றது. இந்த நிரலில் எல்லாம் விருப்புகளாகும். பின்வரும் வாக்கியங்களையும் துவி-இன் பகுப்பாய்வையும் உற்றுநோக்கவும்.

Raja washes his car every week.

நிகழ்காலம் + வி

Raja washed hid car yesterday

இறந்தகாலம் + வி

Raja is wasing his car.

நிகழ்காலம் + be...ing + tp

வினைத்தொடர்ச்சி

Raja was washing his car

இறந்த காலம் + be...ing + tp

வினைத்தொடர்ச்சி

Raja has been wasing his car

இறந்த காலம் + have...en + be...ing + tp

வினைமுடிவு வினைத்தொடர்ச்சி

Raja must have been wasing his car

நிகழ்காலம் + வினைப்பாங்கு + have…en + be…ing + tp

(must) வினைமுடிவு வினைத்தொடர்ச்சி

Raja might have been wasing his car

இறந்தகாலம் + வினைப்பாங்கு + have…en + be…ing + tp

(must) வினைமுடிவு வினைத்தொடர்ச்சி

எல்லாத் தகவல்களையும் பின்வருமாறு கூறலாம்:

துவி → காலம் + வினைப்பாங்கு + hயளந…நஇ + நெ…iஇப + வி

காலம் → இறந்த/நிகழ்

துவி

காலம் வினைப்பாங்கு வினைமுடிவு வினைத்தொடர்ச்சி

இறந்த have…en be…ing

நிகழ்

இந்த படம் உறுப்புகளையும் மற்றும் தொடர்சியற்ற பகுதிகளுக்கு இடையே உள்ள உறவுகளையும் தெளிவாகக் காட்டுகின்றது. இது தொடரா உறவுகளைக் காட்டும் இயக்கநெறியாகும்.

should have be-en work-ing

காலம் shall

இறந்த வினைப்பாங்கு வினைமுடிவு வினைத்தொடர்ச்சி

உறுப்புகளுக்குப் (காலம், -en, -ing) பொதுவான கலைச்சொல் ஒட்டு என்பதாகும். ஒட்டு என்ற கலைச்சொல் தொடரியல் வகைப்பாட்டை குறியீடு செய்கின்றது. நாம் மேற்கண்ட இடமாற்றத்தை 'ஒட்டு தனிநிலை வினைத் தனிமத்தின் வலதுபக்கம் தாண்டி அதனுடன் சோ;ந்துகொள்கின்றது. இதை பின்வரும் விதியால் வடிவமாகக் கூறலாம்.

ஒட்டுத் தாண்டல்: ஒ ஒட்டு வினைத்தனிமம் Y ⇒ X # வினைத்தனிமம் + ஒட்டு # Y

# என்ற குறியீடு ஒட்டால் தொடரப்படும் வினைத்தனிமத்தின் (வித) கோர்வை ஒரு அலகாகக் கருதப்படவேண்டும் மற்றும் பிற எந்த விதியாலும் கூடுதலாகப்

பகுப்பாயப்படக்கூடாது என்பதைக் காட்டுகின்றது. X மற்றும் Y என்பன பிற வகைப்பாடுகள் அதற்கு முன்வரவோ அதைப் பின்தொடரவோ செய்யலாம்.

X ஒட்டு வினைத்தனிமம் Y ⇒ X # வினைத்தனிமம் + ஒட்டு # Y

1 2 3 4 1 $\phi$ 3 + 2 # 4

இதை ஒரு கிளைப் படத்தில் காட்ட இயலும்

படம் 24




இது ஒட்டுத்தாண்டல் விதியின் பிரயோகத்திற்கு அபைப்பு விளக்கத்தையோ அமைப்புக் கட்டுப்பாட்டையோ காட்டும்:

எங்கெல்லாம் X ஒட்டு + வித Y என்ற அமைப்பு விளக்கம் இருக்கின்றதோ அங்கெல்லாம் அது (ஒட்டுத்தாண்டல் விதியால்) X வித + ஒட்டு Y என்ற அமைப்பாக மாறும். அமைப்புமாற்றத்திற்குப் பின் படம் பின்வருமாறு வரும்:

படம்26




(may +இகா = might என்பது உருபொலியன் விதியாகும்.)

ஒட்டுத்தாண்டல் ஒரு கட்டாய விதியாகும்

தன்மதிப்பீடு

1. தொடரியல் என்றால் என்ன?

2. அண்மை உறுப்பு ஆய்வு என்றால் என்ன?

4. தொடரமைப்பு இலக்கணம் என்றால் என்ன?

5. தொடரமைப்பு இலக்கணத்தின் குறைபாடுகள் இரண்டைக் குறிப்பிடு?

6. அக அமைப்பு புற அமைப்பு என்றால் என்ன?

7. ஆக்கமுறை மாற்றிலக்கணம் என்றால் என்ன?

8. மாற்றுவிதிகள் என்றால் என்ன?

5.4. பாடத்தொகுப்புரை தொடரியல் என்றால் என்ன என்று அறிந்து கொண்டீர்கள். தொடர்களின் அமைப்பையும் வாக்கியத்தின் அமைப்பையும் விளக்க அறிந்து கொண்டீhகள். அண்மை உறுப்புப் பகுப்பாய்வு பற்றிய விளக்கமும் அதன் குறைபாடுகளும் பற்றி அறிந்து கொண்டீர்கள். மாற்றிலக்கண அறிமுகம் 1965 முன் மாதிரியை அறிந்து கொண்டீர்கள்.

5.5. கலைச்சொற்கள்

1. அக அமைப்பு

2. அண்மை உறுப்பு

3. ஆக்கமுறை மாற்றிலக்கணம்

4. சொற் செருகல்

5. சொற்செருகல் விதிகள்

6. தொடரமைப்பு இலக்கணம்

7. தொடரமைப்பு விதிகள்

8. புற அமைப்பு

9. மாற்றங்கள்

10. மாற்றிலக்கணம்

11. மாற்றுவிதிகள்

13. விரித்தெழுது விதிகள்

5.6.தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

அரங்கன், கி. ஆக்கமுறை மாற்றிலக்கணம். தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சண்முகம், சி. புதிய மாற்றிலக்கணக்கோட்பாடு.

தன்மதிப்பீட்டு விடைகள்

1. சொற்கள் இணைந்து வாக்கியங்களை உருவாக்கும் விதிகளை உள்ளடக்கிய ஆய்வுதான் மரபாகத் தொடரியல் என்று கூறப்பட்டது. இவ்விதம் தொடரியல் சொற்களின் அமைப்பை ஆயும் உருபனியலிலிருந்து வேறுபடும். வாக்கிய அமைப்பின் தனிமங்களுக்கு இடையே உள்ள உறவுகளைப் பற்றிய ஆய்வு தொடரியல் எனப்படும். திரிபுகளாலும் ஆக்கத்தாலும் உருவாக்கப்பட்ட சொற்களால் ஆன கட்டுமானங்களை வரிசைப்படுத்திப் பெரிய கட்டுமானங்களாக ஆக்கும் கொள்கைகளைத் தொடரியல் எனலாம்.

2. தொடரியல் ஆய்வுக்கு அடிப்படையாக அமைவது அண்மை உறுப்பு ஆய்வாகும். இவ்வாய்வு ஒருவாக்கியத்தில் நெருங்கிய உறவில் வரும் சொற்கள் அண்மைப்பட்டுவரும் என்ற எதிர்பார்பின் அடிப்படையில் அமைந்தது எனலாம். அண்மை உறுப்பாய்வின் நோக்கம் ஒவ்வொரு கூற்றையும் மற்றும் ஒவ்வொரு உறுப்பையும் கூடுதலான சுயேட்சைத் தொடர்ச்சிகளாக ஆய்வதுதான்.

3. சில மொழியியலார் வாக்கியத்தைப் பெரிய அலகாகக் கொண்டு மேலிருந்து கீழ்நோக்கி ஆய்வார்கள். சிலர் கீழிருந்து மேல்நோக்கி ஆய்வார்கள். அண்மை உறுப்பு அடையாளப்படுத்தப்பட்டால் மரபிலக்கணப் பகுத்துக் குறித்தல் போலவே அமையும். அதாவது வாக்கியத்தை இலக்கண வகைப்பாடுகளாகப்

பகுத்தல் நிகழும். மரபு அடிப்படையிலான வாக்கியப் பகுப்பாய்வும் பகுத்துக்குறித்தலும் தொடர் அமைப்பு இலக்கணம் எனப்படும்.

4. தொடரமைப்பு இலக்கணமும் அண்மையுறுப்பாய்வின் பெருப்பாலான குறைபாடுகளைக் கொண்டுள்ளது. தொடரமைப்பு இலக்கணத்தால் தொடரா அண்மை உறுப்புகளைக் கையாள இயலாது. மேலும் தொடரமைப்பு இலக்கணம் வாக்கியங்களுக்கடையே உள்ள உறவுகளை வெளிப்படுத்தாது. எடுத்துக்காட்டாக கூற்றுவாக்கியத்திற்கும் வினாவாக்கியத்திற்கும் உள்ள ஆக்க உறவைக் காட்டாது.

5. தொடரமைப்பு இலக்கணத்தால் தொடரா அண்மை உறுப்புகளையும் தொடர்புள்ள வாக்கியங்களுக்கு இடையே உள்ள உறவுகளையும் கையாள இயலாது.

6. மொழியியல் விளக்கத்தில் அக அமைப்புக்கும் புற அமைப்புக்கும் உள்ளவேறுபாடு மிக முக்கியமானதாகும். அக அமைப்பு மொழியின் அடிப்படை ஒழுங்கைப் பிரதிபலிக்கும். ஒரு வகையில் அக அமைப்பு மனத்தின்/மூளையின் உள்ளுறை மொழியியல் ஆற்றலை பிரதிபலிக்கும். அக மொழி அமைப்பைத்தான் எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையிலான பொதுமையாக்கங்களின் வாயிலாகக் கூறலாம். புற அமைப்பில் பல எண்ணிக்கையிலான ஒழுங்கீனங்கள் இருக்கும். இந்த ஒழுங்கீனங்களை அக அமைப்பு அடிப்படையில்தான் ஒழுங்கானவைகளாக மாற்ற இயலும். புறத்தில் தான் பல விஷயங்கள் நடக்கும்; இதுதான் தெரிக்கும் மாற்றத்திற்கும் உட்படுகிற இடம்; சொற்பொருள் மயக்கமும் அமைப்புப் பொருள்மயக்கமும் ஏற்படுகிற இடம்; இங்குதான் மொழி வாழ்கின்றது.

7. தரவை வகைப்படுத்தாமல் வாக்கியங்களுக்கு இடையே உள்ள உறவுகளையும் வாக்கிய அலகுகளுக்கிடையே உள்ள உறவுகளையும் ஆய்ந்து விதிகளின் முற்றுக் குழுமத்தை எய்தலாம். ஒரு மொழியின் இலக்கணம் வாக்கியங்களின் பட்டியல் அல்ல. ஒரு மொழியைக் கற்றல் ஒரு மொழியில் உள்ள வாக்கியங்களின் பட்டியலை மனனம் செய்வதல்ல. விதிகளைக் கண்டுபிடிப்பதன் செயல்பாட்டை உள்ளடக்கியதாகும்.

8. அக அமைப்பை புற அமைப்பாக மாற்றும் விதிகள் மாற்றுவிதிகளாகும்.

## பாடப்பகுதி 6

## பொருண்மையியல்

**படிப்பு நோக்கம்**

• பொருண்மையியலின் நோக்கத்தையும் விளக்கத்ததையும் அறிதல்

• பெருண்மையைப் பற்றிய கருத்து விளக்கம்

• தர்க்கப் பொருண்மையியல் பற்றி அறிதல்

• சொற்பொருண்மையியல் பற்றி அறிதல் பாடக்கருத்தலகுகள்

6.1. பொருண்மையியலின் நோக்கமும் விளக்கமும்

6.2. தர்க்கப் பொருண்மையியல்

6.2.1. பங்கெடுப்பாளரும் பயனிலைகளும்

6.2.2. வாக்கியங்களின் தர்க்கப் பண்புகள்

6.2.3. தர்க்க வகுப்புகள்

6.3. சொற்பொருண்மையியல்

6.3.1. சொற்பொருண்மையயும் இலக்கணப் பொருண்மையும்

6.3.2. சொற்பொருண்மையும் வாக்கியப் பொருண்மையும்

6.3.3. சொற்பொருண்மையின் அணுகுமுறைகள்

6.3.4. அடுக்கு அர்த்த உறவுகள்

6.4. பாடத் தொகுப்புரை

6.5. கலைச் சொற்கள்

6.6. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

### 6.1. பொருண்மையிலின் நோக்கமும் விளக்கமும்

தனிச் சொற்களாகவோ வாக்கியங்களாகவோ இருந்தாலும் சரி ஒரு சூழலின் கூற்றுகளாக இருந்தாலும் சரி அவற்றின் பொருண்மைகளைக் குறிப்பிடும் அல்லது வரையறை விளக்கம் செய்யும் வழியைக் கண்டறிவது முக்கியமான செயல்பாடாகும். பொருண்மையை இறுதியுற வரையறை விளக்கம் செய்ய இயலாது. எனவே பொருண்மைகளை ஏறக்குறைய சரியாக விளக்கச் சிறந்த வழியைக் காணவேண்டும். சொற்பொருண்மையியல், இலக்கணப்பொருண்மையியல், தர்க்கப்பொருண்மையியல், பயன்வழிப் பொருண்மையியல் என்பன மொழிப்பொருண்மையியல் ஆய்வின் முக்கியக் கிளைகளாகும். சொற்பொருண்மையியல் சொற்பொருண்மையியல் சொற்களின் பொருண்மைகளை ஆய்கின்றது. *அந்த, காட்டிலும், உடைய*

போன்ற இலக்கணச் சொற்களைவிட *புலி, புலமை, கொடு* போன்ற பொருளடக்கச் சொற்களில் கவனக்குவிப்பு செய்கின்றது. வல்லுனர் அல்லாதவர் பிற மொழி அலகுகளைக்காட்டிலும் சொல்லுக்குத்தான் கூடுதல் பொருண்மையுடன் வலுவான தொடர்பு இருப்பதாகக் கருதுகின்றனர். சொற்கள்தான் அகராதியில் பட்டியலிடப்பட்டுள்ளன· அகராதியின் முக்கியச் செயல்பாடு பட்டியலிடப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருண்மை தருவதுதான். எனவேதான் சொற்பொருண்மையியல் பொதுவாகப் பொருண்மையியலின் இரகசியத்தைத் தெரிந்துகொள்ள எளிய வழியைத் தருகின்றது. இலக்கணப் பொருண்மையியல் இலக்கணப் பொருண்மையியல் தொடரியலுடன் நேரடித் தொடர்புடைய பொருண்மையின் நோக்குகளை ஆய்கின்றது. அதற்கு வெளிப்படுத்தல்கள் பல இருக்கின்றன. இங்கு அவற்றை சுருக்கமாக விளக்க இயலும். ஒரு சிக்கல் தொடரியல் வகைப்பாடுகளின் பொருண்மை ஆகும். (ஏனென்றால் தொடரியல் வகைப்பாடுகளுக்குப் பொருண்மைகள் தர இயலும் என்று எல்லோரும் நம்பவில்லை.) எடுத்துக்காட்டாக, பின்வரும் எடுத்துக்காட்டில் *குளிர்* என்பது வேறுபட்ட பொருண்மைகளில் பயன்படுத்தப்படுவதைக் கருத்தில் கொள்ளவும்.

அவள் குளிர்-இல் நடுங்கினாள். (பெயர்)

அவன் குளிர் பானம் அருந்துகிறான். (பெயரடை)

மழை பெய்து பூமி குளிர்-ந்தது. (வினை)

இலக்கணப் பொருண்மையியலின் மற்றொரு நோக்கு *நடந்தான்* என்ற சொல்லில் வரும் *-ந்த்-*, *-ஆன்* என்ற இலக்கண உருபன்கள், *நடந்தால்* என்பதிலுள்ற -*ஆல்* என்ற இலக்கண உருபன், நடத்தல் என்பதிலுள்ள -*த்தல்* என்ற இலக்கண உருபன், *பல்லை* என்பதிலுள்ள *ஐ* என்ற இலக்கண உருபன் போன்றவற்றின் பொருண்மைகள் ஆகும். இலக்கணப் பொருண்மையில் சொற்பொருண்மையியலின் மேலுறலாய் வரும். ஏனென்றால் சில இலக்கண அலகுகள் சொற்களாய் இருக்கின்றன (எ.கா. *அந்த, இந்த, முன், பின்*). மட்டுமற்றி பொருளடக்கச்சொற்களின் சில நோக்குகள் அவற்றின் இலக்கண நடத்தையைத் தீர்மானிப்பதாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, *எனக்கு அவளைத் தெரியும்* என்பது இலக்கணத் தன்மையானது; *நான் அவளைத் தெரியும்* என்பது இலக்கணத் தன்மையில்லாதது. தர்க்கப்பொருண்மையியல் தர்க்கப்பொருண்மையியல் இயற்கை மொழிக்கும் முறையான தர்க்க

ஒழுங்குமுறைகளான தேற்றக்கூற்று (proposition) மற்றும் பயனிலை நுண்கணிதம் (predicate calculus) இவற்றிற்கு இடையிலான உறவுகளை ஆய்கின்றது. இம்மாதிரியான ஆய்வு பொதுவாக மிகக் கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் மிகக்கட்டுப்பாடான தர்க்க வடிவவாதத்தைப் பயன்படுத்தி இயற்கை மொழியை அவற்றிற்குச் சமீபமாக மாதிரிப்படுத்த முனைகின்றது. சில சமயம் இம்மாதிரியான ஆய்வுகள் மாதிரிப்படுத்தப்பட்ட மொழியைவிட கூடுதல் வெளிச்சத்தை வடிவவாதத்திற்குத் தருகின்றது. மதிக்கத்தக்க உள்ளறிவுகள் இந்த அணுகுமுறையால் கிடைத்துள்ளன. இந்நாள் வரை பெரும்பாலான இம்மாதிரியான ஆய்வுகள் பொருண்மையின் தேற்றக்கூற்று/வாக்கிய நிலையில் தான் கவனம் செலுத்தியது. மிக அரிதாகவே சொற்களின் பொருண்மைகளை ஆய முயன்றுள்ளன. பயன்வழிப் பொருண்மையியல் பயன்வழியியல் மொழியால் பரிமாறப்படுகின்ற பின்வரும் தகவல்களின் நோக்கங்களில் ஆர்வம் காட்டுகின்றது: பயன்படுத்தப்படும் மொழி வடிவங்களில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் மரபுப்படி குறியாக்கம் செய்யப்படாத ஆனால் வடிவுகள் பயன்படுத்தப்படும் சூழலுடன் சேர்ந்து எடுக்கப்படும், பயன்படுத்தப்படும் மொழி வடிவுகளில் மரபுப்படி குறியாக்கம் செய்யப்பட்ட பொருண்மைகளிலிருந்து வருகிற மற்றும் அவற்றின்மேல் சாந்திருக்கிற இயற்கையாகவே வருபவை. இந்தக் குழப்பமான முறையாக்கம் பின்வரும் விஷயங்களைப் பயன்வழியியலில் அனுமதிக்க விழைகின்றது:

*நான் ராமசாமியைப் பார்த்தேன்* என்ற வாக்கியத்தில் ராமசாமியை ஒரு தனிநபராகக் கண்டுகொள்ளுதல், *ராமசாமி அறைக்குள் நுழைந்தான்; எல்லா விளக்குகளும் எரிந்துகொண்டிருந்தன* என்ற வாக்கியத்திலிருந்து குறிப்பிட்ட அறையில் பல விளக்குகள் இருந்தன என அனுமானித்தல், அதேசமயம் நான் *ராமசாமியைப் பார்த்தேன்* என்று கூறுபவர் அவர் *ராமசாமி* என்று கூறும் போதெல்லாம் கேட்பவர் அதை *கோவிந்தசாமி* என்று எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு தனிப்பட்ட ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளும் சாத்தியத்தைத் தள்ளிவைத்தல், மேலும் பேசுபவரின் குழறலான பேச்சிலிருந்து அவர் குடித்திருக்கிறார் என்று புரிந்துகொள்ளும் சாத்தியத்தையும் தள்ளிவைத்தல் (ஏனென்றால் இது கூறப்பட்ட சொற்களின் மரபுசார்ந்த பொருண்மைகளைச் சார்ந்திருக்கவில்லை). பெரும்பாலும் பயன்வழியியல் பொருண்மையியலுடன் வேறுபடுத்தி ஒப்பிடப்படும். பொருண்மையியல் மரபாக்கம் செய்யப்பட்ட பொருண்மையை ஆயும். மேலே

விளக்கப்பட்ட மூன்று பாகங்களும் பொருண்மையியலைச் சாரும். சொற்பொருண்மையியல், இலக்கணப்பொருண்மையியல், தர்க்கப் பொருண்மையியல் மற்றும் பயன்வழிப் பொருண்மையியல் இவை குறித்த அறிமுகங்களைத் தொpந்து கொண்டீர்கள். இனி தர்க்கப்பொருண்மையில் மற்றும் சொற் பொருண்மையில் என்பன குறித்து விரிவாகத் தொpந்து கொள்ளுவோம்.

### 6.2. தர்க்கப்பொருண்மையியல்

இப்பகுதி ஒரு மொழியின் பொருண்மையின் ஆய்வுக்குத் தேவையான தவிர்க்கவியலாத அடிப்படை அறிவை உருவாக்கும் தர்க்கக் களத்திலிருந்து கூடுதலாக எடுக்கப்பட்ட அடிப்படைக் கருத்துருக் கருவிகளின் குழுமத்தை அறிமுகப்படுத்துகின்றது.

### 6.2.1. பங்கெடுப்பாளர்களும் பயனிலைகளும்

தர்க்கத்திற்கும் பொருண்மையியலுக்கும் மிக அடிப்படையான கருத்துருகளின் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட இணைகள் பங்கெடுப்பாளர்களும் (arguments) பயனிலையுமாகும் (predicate). சுருக்கமாகக் கூறினால் பங்கெடுப்பாளர் எதாவது இருப்புப்பொருளை (entity) அல்லது இருப்புப்பொருளின் ஒரு குழுவைக் குறிப்பிடும். ஆனால் பயனிலை பங்கெடுப்பாளர்களால் குறிப்பிடப்படும் இருப்புப்பொருளுக்கு இடையே உறவுகளைத் தரும். எடுத்துக்காட்டாக, *ராணி அழகாய் இருக்கிறாள்* என்பதில் நாம் *ராணி* என்பதை பங்கெடுப்பாளராகவும் *அழகாய் இருக்கிறாள்* என்பதை பயனிலையாகவும் அடையாளம் காணலாம். ராஜா ராணியை விரும்புகிறான் என்பதில் ராஜா, ராணி என்பன பங்கெடுப்பாளர்கள்; விரும்புகிறான் என்பது பங்கெடுப்பாளர்களால் குறிப்பிடப்படும் இருப்புப்பொருள்களுக்கு இடையே உள்ள உறவைக் கற்பிக்கும் பயனிலை. *ராஜா ராணிக்கு ஒரு ரோஜாப்பூவைக் கொடுத்தான்* என்பதில் *ராஜா, ராணி, ரோஜாப்பூ* என்பன பங்கெடுப்பாளர்கள்; *கொடுத்தான்* என்பது பயனிலை. ஒரு பங்கெடுப்பாளரும் பயனிலையும் இணைந்து ஒரு தேற்றக்கூற்றை உருவாக்கும். ஒரு தேற்றக்கூற்றில் ஒரு பயனிலைதான் இருக்கும். ஆனால் ஒன்றுக்கும் மேற்பட்ட பங்கெடுப்பாளர்கள் இருக்கலாம். ஒரு பயனிலை ஏற்கிற பங்கெடுப்பாளர்கள்களுக்கு கோட்பாடு அடிப்படையில் உச்ச எல்லை உண்டா என்பதில் தெளிவில்லை· ஆனால்

மொழிப் பொருண்மையியல் விவாதங்களில் நாம் கூடுதலாக நான்கை நேரிட இயலும்: எ.கா.

ராஜா ராணியிடமிருந்து ஒரு லட்சம் ரூபாய்க்கு கார் வாங்கினான்.

பங்கெடுப்பாளர்கள்: ராஜா, ராணி, ஒரு லட்சம் ரூபாய், கார்

பயனிலை: வாங்கினான்

பங்கெடுப்பாளர்களுக்கு கூடுதலாகவோ குறைவாகவோ கலவை நிலை அக அமைப்பு இருக்கலாம். எடுத்துக்காட்டாக, பங்கெடுப்பாளர்(கள்) மற்றும் பயனிலை உள்ள முழு தேற்றக்கூற்றே பங்கெடுப்பாளராக வரலாம். எ.கா.

ராஜா ராணி எவ்வளவு அழகாய் இருக்கிறாள் என்று ஆச்சரியப்பட்டான்.

பங்கெடுப்பாளர்1: 1. ராஜா, 2. ராணி எவ்வளவு அழகாய் இருக்கிறாள் என்று

பயனிலை: ஆச்சரியப்பட்டான்

பங்கெடுப்பாளர் 2: பங்கெடுப்பாளர்: ராணி

பயனிலை: எவ்வளவு அழகாய் இருக்கிறாள்

கலவைநிலை பங்கெடுப்பாளர்களின் உறுப்பாக தேற்றக்கூற்றுகளை உட்படுத்த பல வழிகள் இருக்கின்றன· கலவைநிலையின் விளைவு அளவில் எல்லை இல்லை. பயனிலைகள் பொதுவாக அவை ஏற்கும் பங்கெடுப்பாளர்கள் எண்ணிக்கை அடிப்படையில் ஓரிடப் பயனிலை (one place predicate), ஈரிடப்பயனிலை (two place predicate), மூவிடப்பயனிலை (three place predicate) என விவரிக்கப்படும். எடுத்துக்காட்டாக, *ராணி அழகாய் இருக்கிறாள்* என்பதில் *அழகாய் இருக்கிறாள்* என்பது ஓரிடப்பயனிலை. *ராஜா ராணியை விரும்பினான்* என்பதில் *விரும்பினான்* என்பது ஈரிடப்பயனிலை. *ராஜா எனக்கு ஆங்கிலம் கற்பித்தான்* என்பதில் *கற்பித்தான்* என்பது மூவிடப் பயனிலை.

**6.2.2. வாக்கியங்களின் தர்க்கப்பண்புகள்**

பொருண்மையியல் ஆய்வுரைகளில் குறிப்பாகச் சொற்பொருண்மையியலில் வாக்கியங்களுக்கு இடையிலான தர்க்க உறவுகளில் பல வெளிப்படும். அவைகள் தர்க்கவியலார் தேற்றக்கூற்றுகளுக்கிடையே அடையாளம் காணும் உறவுகளுடன் தொடர்புடையவை· ஆனால் அவைகளுக்குச் சமமானவையல்ல. குழப்பத்தைத் தவிர்க்க வேண்டுமென்றால் அவற்றின் தர்க்க அடிப்படையை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஐந்து உறவுகள் இங்கு அடையாளம் காணப்படும். அவையாவன:

- உட்கிடை (implication)/உட்படுத்தல் நிலை (entailment)
- நிகர்நிலை (equivalence)
- முரண் நிலை (contrariety)
- ஒவ்வா நிலை (contradiction)
- சுதந்திரநிலை (independence)

உட்படுத்தல் நிலை சரியாகச் சொன்னால் இதுவும் இதைத் தொடரும் உறவுகளும் தேற்றக்கூற்றுகளுக்கு இடையே உள்ள உறவுகளாகும். அவற்றின் வாக்கியத்துடனான தொடர்பு பின்னால் விவரிக்கப்படும். பின்வரும் எடுத்துக்காட்டுகளில் அ-வுக்கும் அதற்கு இணையான ஆ-வுக்கும் இடையே உள்ள உறவு உட்படுத்தல் ஆகும்.

| அ | ஆ |
|---|---|
| அது நாய். | அது விலங்கு. |
| ராஜா பாம்பைக் கொன்றான். | பாம்பு இறந்துவிட்டது. |
| எல்லா நாய்களும் கறுப்பு. | என்னுடைய நாய் கறுப்பு. |

நாம் இந்த வாக்கியங்கள் தேற்றக்கூற்றுகளை வெளிப்படுத்துவதாக அனுமானிக்கின்றோம். அதாவது இவ்வாக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட சூழலில் தனிப்பட்ட குறிப்புடன் பயன்படுத்தப்படுவதாக அனுமானிக்கின்றோம். நாம் மேலும் முதல் இணையில் *அது* என்பது ஒரே இருப்புப்பொருளைக் குறிப்பிடுவதாகவும் இரண்டாவது இணையில் ஒரே பாம்பும் ஒரே நிகழ்ச்சியும் குறிப்பிடப்படுவதாக அனுமானிக்கிறோம். அ என்பது ஆ என்ற தேற்றக்கூற்றை உள்ளடக்குகின்றது என்று கூறுவது ஆ-வின் உண்மை தர்க்க அடிப்படையிலும் தவறாமலும் அ-விடமிருந்துதான் கிடைக்கின்றது என்று பொருள்படும். மேலும் அ-வின் பொய்மை ஆ-வின் பொய்மையிலிருந்து வருகின்றது. எனவே, முதல் வாக்கிய இணையில், ஏதோ ஒரு இருப்புப்பொருள் *நாய்* என்பது உண்மையானால், எந்த ஐயமில்லாமல் 'அது ஒரு விலங்கு' என்பது தெளிவு. அது விலங்கு இல்லையென்றால் அது நாயாக இருக்கச் சாத்தியமல்லை. இதேபோல் 'ராஜா பாம்பைக் கொன்றதால் பாம்பு இறந்துவிட்டது' எனற முடிவை விட்டுவிட இயலாது. 'பாம்பு இறக்கவில்லை' என்றால் 'ராஜா அதைக் கொன்றான்' என்ற சாத்தியம் இல்லை.

**நிகர்நிலை**

இரு வாக்கியங்களுக்கு இடையே உள்ள தேற்றக்கூற்று நிகர்நிலையை ஒன்றையொன்று உட்படுத்தல் என்று நேரடியாகக்க கூறலாம். இது இவ்வாக்கியங்கள் எப்போதும் ஒரே தேற்றக்கூற்றை வெளியிடும் என்று கூறுவதற்குச் சமமாகும். பின்வருவன நிகர்நிலைகளின் எடுத்துக்காட்டுகளாகும்.

ராஜா பாம்மைக் கொன்றான். பாம்பு ராஜாவால் கொல்லப்பட்டது.

பாம்பு இறந்துவிட்டது. பாம்பு உயிரோடு இல்லை.

அந்த நிகழ்ச்சி 10 மணிக்குத் தொடங்கியது. அந்த நிகழ்ச்சி 10 மணிக்கு ஆரம்பித்தது

'ராஜா பாம்பைக் கொன்றது' உண்மையானால் 'பாம்பு ராஜாவால் கொல்லப்பட்டது உண்மை'. அதுபோல் 'பாம்பு ரஜாவால் கொல்லப்பட்டது' உண்மையானால் 'ராஜா பாம்பைக் கொன்றது' உண்மை. ஒரு இணையான இருவழி உட்படுத்தல் பிற இரண்டு இணைகளின் அங்கத்தினர்களுக்கு இடையே இருக்கும். ஒவ்வாநிலை ஒவ்வாத் தேற்றக்கூற்றுகள் (உடிஇவசயசல pடிளவிடிளவைiடிஇள) ஒரே நேரத்தில் பொய்யாக இருந்தாலும் ஒரே நேரத்தில் உண்மையாக இருப்பதில்லை. பின்வருவன எடுத்துக்காட்டுகளாகும்:

ராஜா பாம்மைக் கொன்றான். பாம்பு உயிரோடு இருக்கின்றது.

ராஜா பாம்பைக் கொன்றான். ராணி பாம்பைக் கொன்றாள்.

இந்த வர்ணம் சிவப்பு. இந்த வர்ணம் பச்சை.

'ராஜா பாம்பைக் கொன்றான்' என்பதும் 'பாம்பு உயிரோடு இருக்கின்றது' என்பதும் ஒரே நேரத்தில் மெய்யாக இருக்காது. மாறாக பாம்பு உண்மையிலேயே இறந்திருந்தால் ஆனால் அதை ராமு கொன்றிருந்தால் ராஜா பாம்பைக் கொன்றான் என்பதும் பாம்பு உயிரோடு இருக்கின்றது என்பதும் பொய். இந்த உறவை உட்டுத்துதல் அடிப்படையில் விளக்கலாம்: வா1 வா2-இல்லை என்பதை உட்படுத்தினால், ஆனால் வா2-இல்லை வா1-ஐ உட்படுத்தவில்லை என்றால் (மற்றும் மறுதலையாக வந்தால்) வா1-உம் வா2-உம் ஒவ்வாதன எனலாம்.

**முரண்நிலை**

முரண்நிலை தேற்றக்கூற்றுகளுக்கு எல்லாச் சூழலிலும் எதிரிடையான மதிப்பு இருக்கவேண்டும். அவைகள் இரண்டும் உண்மையாகவோ இரண்டும்

பொய்யாகவோ இருக்கலாகாது. ஒரு குறிப்பிட்ட சூழலில் முரண்நிலை இணைகளின் ஒரு அங்கத்தினர் உண்மையாக இருக்கவேண்டும் மற்றது பொய்யாக இருக்கவேண்டும். பின்வரும் வாக்கியங்கள் முரண்நிலை இணைகளை எடுத்துக்காட்டும்:

| | |
|---|---|
| பாம்பு இறந்தது. | பாம்பு உயிரோடு இருக்கிறது. |
| ராஜா இன்னும் பாடிக்கொண்டிருக்கிறான். | ராஜா இப்போது பாடவில்லை. |
| எந்த நாயும் கறுப்பல்ல. | குறைந்தது சில நாய்கள் கறுப்பு. |

'ராஜா இன்னும் பாடிக்கொண்டிருக்கின்றான்' என்றால் 'அவன் இப்போது பாடவில்லை' என்பது பொய். இந்த அளவில் இது ஒவ்வாமை போல் இருக்கின்றது. இருப்பினும் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கின்றது: 'ராஜா இன்னும் பாடிக்கொண்டிருக்கிறான்' என்பது பொய்யானால் 'அவன் இப்போது பாடவில்லை' என்று அர்த்தம். 'ராஜா இப்போது பாடவில்லை' என்பது பொய்யானால் 'அவன் இன்னும் பாடிக்கொண்டிருக்கிறான்' என்று அர்தம். நாம் முரண்நிலையை உட்படுத்தல் அடிப்படையில் விளக்கலாம்: வா1 வா2-இல்லை-ஐ உட்படுத்தினால் மற்றும் வா2-இல்லை வா1-ஐ உட்படுத்தினால் (மற்றும் மறுதலையாகவும் வந்தால்) வா1-உம் வா-2-உம் முரண்களாகும். சுதந்திரநிலை சில தேற்றக்கூற்றுகளின் இணைகளுக்கு உண்மை மதிப்பு ஒன்றுக்கொன்று சுதந்திரமாக மாறும். அவைகள் இரண்டும் உண்மையாக இருக்கலாம். இரண்டும் பொய்யாக இருக்கலாம். அல்லது ஒன்று உண்மையாகவும் மற்றது பொய்யாகவும் இருக்கலாம். ராஜா ஓய்வுபெற்றுவிட்டான். ராணி திருமணம் செய்தாள். இன்று திங்கட்கிழமை. தீபாவளி சனிக்கிழமை வருகின்றது. இப்பகுதியில் விளக்கப்பட்ட உறவுகளுக்குச் சொற்களுக்கு இடையே உள்ள உறவுகளின் பொருண்மையின் ஆய்வில் முக்கியமான பங்கு இருக்கின்றது. பகுநிலை, முரண், கூட்டிணைப்பு வாக்கியங்கள் பகுநிலை வாக்கியங்கள் அவற்றில் வரும் சொற்களின் பொருண்மை மற்றும் அவற்றின் வரிசைமுறை இவற்றின் காரணமாக எந்தச் சூழலிலும் உண்மையான தேற்றக்கூற்றுகளைத் தானாக வெளியிடும். பின்வரும் வாக்கியங்கள் பகுநிலை வாக்கியங்கள் ஆகும்: பிரம்மச்சாரிகள் மணமாகாதவர்கள். ராஜாவின் மானார் ஒரு மனிதர். இந்தத் தேற்றக்கூற்று உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம். முரண் வாக்கியம் முரண் வாக்கியங்கள் தாமாகவே பொய்யான தேற்றக்கூற்றுகளை வெளியிடும்: பிரம்மச்சாரிகள் மணமானவர்கள். ராஜாவின் தங்கை ஒரு ஆண்.

இந்தச் சிவப்பு வர்ணம் பச்சை ஆகும். கூட்டிணைப்பு வாக்கியம் சில சூழல்களில் உண்மையான தேற்றக்கூற்றுகளையும் சில சூழல்களில் பொய்யான தேற்றக்கூற்றுகளையும் வெளியிடும் வாக்கியங்கள் கூட்டிணைப்பு வாக்கியங்கள் எனப்படும். ராஜாவின் சகோதரி திருமணமாகாதவள். இந்த வர்ணம் சிவப்பு. எல்லா நாய்களும் கறுப்பு. (கடைசி வாக்கியம் உண்மையிலேயே பொய், இருப்பினும் அது தர்க்க அடிப்படையில் பொய் அல்ல; அது உண்மையாக இருக்கும் சூழல்களை நாம் கற்பனை செய்ய இயலும்.)

**6.2.3. தர்க்க வகுப்புகள்**

வகுப்புகளுக்கிடையிலான உறவுகளை ஒத்தல், உள்ளடங்கல், வேறுபடல், மேலுறல் என நான்காகப் பகுக்கலாம்.

**ஒத்தல்**

வகுப்பு வ1-க்கு உரிய எல்லா அங்கத்தினர்களும் வகுப்பு வ2-க்கு உரிய அங்கத்தினர்களாக இருந்தால் வ1-உம் வ2-உம் ஒத்திருக்கின்றன எனலாம். எடுத்துக்காட்டாக ஒரு வகுப்பு அப்பாக்களும் ஒரு வகுப்பு ஆண் பெற்றோர்களும் ஒத்திருக்கின்றன. ஒரு வகுப்பு நூல்களும் ஒரு வகுப்பு புத்தங்களும் ஒத்திருக்கின்றன.

**உள்ளடங்கல்**

வகுப்பு வ2-இன் எல்லா அங்கத்தினர்களும் வகுப்பு வ1-இன் அங்கத்தினர்களாக இருந்து மறுதலையாக வராமலிருந்தால் வகுப்பு வ1 வகுப்பு வ2-ஐ அடக்கும் எனலாம். எடுத்துக்காட்டாக விலங்குகளின் வகுப்பு நாய்களின் வகுப்பை, பசுக்களின் வகுப்பை, ஆடுகளின் வகுப்பை உள்ளடக்கும். நாய்களின் குழுமம் விலங்குகளின் குழுமத்தின் துணைவகுப்பு என்றும் விலங்குகளின் குழுமம் நாய்களின் குழுமத்தின் உயர்வகுப்பு என்றும் விளக்கலாம். (ஒத்தலை விலக்கிவைக்கும்படி உள்ளடங்கல் விளக்கப்பட்டுள்ளது. ஒத்தலை உள்ளடக்கும்படியும் உள்ளடக்கலை விளக்கலாம்.)

**வேறுபடல்**

வகுப்பு வ1-இன் எந்த அங்கத்தினரும் வகுப்பு வ2-இன் அங்கத்தினராக வராவிடில் வ1-உம் வ2-உம் வேறுபடுகின்றன எனலாம். ஒரு வகுப்பு பூனைகளும் ஒரு வகுப்பு நாய்களும் வேறுபடுகின்றன எனலாம். அது போல் ஒரு வகுப்பு சிவப்புப் பொருள்களும் ஒரு வகுப்பு பச்சைப் பொருட்களும் வேறுபடுகின்றன.

**மேலுறல்**

வ1 மற்றும் வ2 என்ற வகுப்புகளில் சில அங்கத்தினர்கள் பொதுவாகவும் ஒவ்வொன்றிலும் மற்றொன்றில் இல்லாத அங்கத்தினர்கள் இருந்தால் அவை மேலுறுகின்றன என்று கூறலாம் (அதாவது இங்கு முழுவதுமான மேலுறலோ ஒத்தலோ விலக்கப்பட்டுள்ளன). சிவப்புப் பொருட்களின் வகுப்பும் வட்டமான பொருட்களின் வகுப்பும் இம்மாதிரி மேலுறுகின்றன. அது போல் கட்டிடக்கலைஞரின் வகுப்பும் அமெச்சூர் இசைக்கலைஞர்களின் வகுப்பும் மேலுறுகின்றன. இரண்டோ அதற்கு மேலோ மேலுறல் வகுப்புகளின் பொதுவான அங்கத்தினர்களின் குழுமம் இரண்டோ அதற்கு மேலோ வகுப்புகளின் மேலுறல் என்று குறிப்பிடப்படுகின்றது.

**இணைதல்**

இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட) வகுப்புகளின் அங்கத்தினர்கள் (மேலுறல் வகுப்புகளாக இருந்தாலும் சரி) இணைக்கப்பட்ட குழுமம் இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட) வகுப்புகளின் இணைப்பு என்று கூறப்படுகின்றது. நாய்களின் வகுப்பும் பூனைகளின் வகுப்பும் இணைந்து எல்லா நாய்களும் பூனைகளும் உள்ள குழுமம் கிடைக்கும்.

**வகுப்பு உறவுகளும் தேற்றக்கூற்று உறவுகளும்**

மேற்கண்ட வகுப்பு உறவுகளுக்கும் முன்னால் விளக்கிய தேற்றக்கூற்று உறவுகளுக்கும் வெளிப்படையான தொடர்பு இருக்கின்றது. எடுத்துக்காட்டாக 'அது ஒரு நாய்' என்பது 'அது ஒரு விலங்கு' என்பதை உள்ளடக்குகின்றது என்பது நாய்களின் வகுப்பு விலங்குகளின் வகுப்பின் துணை வகுப்பு என்ற உண்மையுடன் தொடர்பின்றி இருக்கவில்லை. சில உறவுகள் ஒரு அணுகுமுறையைவிட மற்றொரு அணுகுமுறையில் இயற்கையாகவே வெளிப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மேலுறல் என்ற வகுப்பிற்கு தேற்றக்கூற்று இணை தர இயலாது. இதை நாம் தேற்றக்கூற்று சுதந்திரம் என்று கூறலாம்; ஏனென்றால் இம்மாதிரியான இணைகளிலுள்ள எந்த தேற்றக்கூற்றும் மற்றதன் உண்மை மதிப்புக்கு எந்தக் கட்டுப்பாடும் திணிக்கவில்லை. எ.கா.

ராஜா ஒரு கட்டிடக்கலைஞன்.

ராஜா ஒரு ஆமெச்சூர் இசைக்கலைஞன்.

மாறாக முரண் உறவுகள் தேற்றக்கூற்று அணுகுமுறைக்குள் கூடுதல் இயற்கையாகவே வெளிப்படுகின்றது. வகுப்பு அணுகுமுறைக்குள் 'இறந்தவை' என்பதற்கும் 'உயிருள்ளவை' என்பதற்கும் இடையே உள்ள உறவின் நிகரான ஒன்றைக் காண நாம் இறந்த பொருள்களின் வகுப்பும் உயிருள்ள

பொருள்களின் வகுப்பும் வேறுபட்டவை மற்றும் விலங்கினப் பொருள்களின் உயர்வகுப்பின் முழுமை என்று கூறவேண்டும்.

**பொருத்தம்**

ஒரு வகுப்பின் அங்கத்தினர்கள் ஒரு இணையான வகுப்பின் ஒன்றோ அதற்கு மேற்பட்ட அங்கத்தினர்களுடன் ஒரு வகையான தொடர்பின் உறவு கொண்டிருக்கும். இந்த வகையான தொடர்பின் வகை பொருத்தம் (mapping) என்று அறியப்படும். ஒரு எடுத்துக்காட்டு இதைத் தெளிவாக்கும். ஒரு நபரின் விரல் அடையாளங்கள் குறிப்பிடும்படியாக வேறுபட்டிருக்கும் என்பது தெரிந்த உண்மை. நபர்களின் வகுப்பையும் விரல் அடையாளங்களின் வகுப்பையும் எடுத்துக்கொண்டால் இரு வகுப்புகளுக்கிடையே நேரடியான பொருத்த உறவு இருக்கும்: ஒரு வகுப்பின் ஒவ்வொரு அங்கத்தினரும் மற்ற குழுமத்தின் குறிப்பிட்ட அங்கத்தினருடன் தொடர்புகொள்ளும். இது ஒன்றுக்கொன்று பொருத்தம் எனப்படும். இதை தந்தைகள் வகுப்பு மற்றும் குழந்தைகள் வகுப்பு என்ற இரு வகுப்புகளுடன் ஒப்பிடவும். தந்தைகள் வகுப்பின் ஒவ்வொரு அங்கத்தினரும் குழந்தைகள் வகுப்பின் ஒன்றோ அதற்கு மேற்பட்ட அங்கத்தினர்களுடன் தொடர்புறும்.

**6.3. சொற்பொருண்மையில்**

பொருண்மையின் விவரணை அறிமுகத்தில் சொற்களின் பொருண்மைகள் குறித்து கூடுதலாகப் பேசப்படுவது இயல்பு. ஆனால் வடிவவாத அடிப்படையிலான விளக்கத்தில் சொற்களின் பொருண்மை ஆயப்படுவதில்லை; அல்லது அவற்றின் சட்டகமாகச் சுருக்கப்படும். இருப்பினும் மொழியியல் கண்ணோட்டம் இல்லாதவர் பொருண்மையைத் தனித்தனி சொற்களுடன் தொடர்புபடுத்தும் உள்ளுணர்வு இருக்கின்றது. இம்மாதிரியான உள்ளுணர்வு பொருண்மையின் நோக்கை மிகக் குறைத்து மதிப்பிடுகின்றது. அது முழுவதும் தவறில்லை என்றாலும் பொருண்மையின் போதுமான முகவுரை அதை ஒரு நோ;த்தியான வடிவவாதத்தில் அடக்க இயலாது என்ற காரணத்தால் சொற்பொருளின் கலவைத்தன்மையையும் விளக்கத் தவறக்கூடாது. இலக்கண அலகான சொல்லின் தன்மையைப் பற்றி ஏராளமான வாதங்கள் இருக்கின்றன. பல நம் கவனத்திற்குப் பொருத்தமானதல்ல. நாம் எதைப்பற்றி பேசுகின்றோமோ அதைப்பற்றி சில கருத்துகள் இருப்பது அவசியம். இக்கருத்துச்சாயல் சரியான விவரணையைத் தடை செய்கின்றது. நல்ல அணுகுமுறை மூலமுன்மாதிரி (prototype)

அணுகுமுறையாகும். ஒரு மூல முன்மாதிரி சொல் எவ்வாறு இருக்கும்? மரபு அடிப்படையில் ஒரு குறைந்த வரிசை மாற்றக்கூடிய அலகு என்று பண்பாக்கம் செய்வது நமக்குப் பயனுள்ளதாக அமையும். இது மூல முன்மாதிரி சொல்லுக்கு (prototypical word) இது இரு பண்புக்கூறுகளை அடை செய்கின்றது.

1. இதை வாக்கித்தில் அங்கும் இங்கும் நகர்த்தலாம்; அல்லது குறைந்தது பிற உறுப்புகளுடன் தொடர்புடைய அதன் இடத்தை சில புதிய விவரங்களை இடையில் சேர்த்து மாற்றலாம்.

2. அதை இடையூறு செய்யலாம் அல்லது அதன் பாகங்களை வரிசை மாற்றம் செய்யலாம்.

வாக்கியத்தில் மாற்றங்களைச் செய்கையில் நாம் சொற்களை அமைப்பு அடிப்படையில் ஒரு முழுமையாக கருதப்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

மக்கள் தேசியமாக்கலைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

தேசியமாக்கலை மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

கடுமையாக மக்கள் தேசியமாக்கலை எதிர்க்கிறார்கள்.

புதிய விவரங்களைப் பின்வருமாறு இடையில் சொருகலாம்.

நம் நாட்டு மக்கள் முழுமையான தேசியமாக்கலை மிகக் கடுமையாக எதிர்க்கிறார்கள். இடைச்சொருகல் இடங்கள் சொற்களுக்கு இடையில் வருவதைக் கவனிக்கவும். சொற்கள் எழுதுகையில் இடம் விட்டு எழுதப்படுகின்றன. ஆனால் பேசுகையில் நிசப்தத்தால் பிரிக்கப்பவதில்லை. அவைகளுக்குத் தனிப்பட்ட உள்அமைப்பு உண்டு· மூல முன்மாதிரியில் (pசடிவடிவலிiஉயடடல) ஒன்றுக்கும் மேற்பட்ட சொல் வேர் இல்லை. எ.கா.

அநியாயம், இனிமை, வேகம்-ஆக, அழகு-ஆன, முன்-நாள், நடந்தான், படித்தல்

சில சொற்களுக்கு ஒன்றுக்கும மேற்பட்ட சொல் வேர்கள் இருப்பது போல் தோன்றுகின்றது. எ.கா.

வண்ணத்துப்பூச்சி, கரும்பலகை.

இவை முன்மாதிரியானவை அல்ல; பெரும்பாலானவற்றில் வோ;கள் போன்று தோற்மளிப்பவை முழுவதும் பொருண்மை அடிப்படையில் தனிப்பட்டவை அல்ல. ஒருங்கிணைந்த வேர் (faced root) ஆகும். பிறசொற்களில் சொல்

வேர்களே இல்லை: இவை இலக்கண சொற்கள் என்று அழைக்கப்படும்: எ.கா. *அந்த, மற்றும், அல்லது, உடைய.*

இந்த இடத்தில் நாம் சொல் என்று குறிப்பிடுவதை ஓரளவுக்கு துல்லியமாகக் கூறவேண்டும். ஒரு அர்த்தத்தில், *நட, நடந்தான், நடக்கிறான், நடப்பான்* என்பன வேறுபட்ட சொற்கள். மற்றொரு அர்த்தத்தில் அவை ஒரு சொல்லின் (*நட* என்பதன்) வேறுபட்ட வடிவுகள் ஆகும். மாறாக *நட* என்பதும் *நடப்பு* என்பதும் இரு அர்த்தத்திலும் வேறுபட்ட சொற்கள். ஆனால் *படி* (steps) என்பதும் படி (a measure) என்பதும் ஒரே வடிவில் உள்ள சொற்கள்; அவைகளுக்குத் தனித்தனியான பதிவுகள் தரப்படுவதை நாம் எதிர்பார்ப்போம்; எனவே அவை இரண்டாவது அர்த்தத்தில் வேறுபட்ட சொற்களாகும். சொல் வடிவுகளுக்கும் (word forms) சொல்லன்களுக்கும் (lexemes) வேறுபாடு பாராட்ட வேண்டும். சொல்வடிவுகள் அவற்றின் (ஒலியன் வடிவாலோ எழுத்து வடிவாலோ) தனிப்பட்டவை. சொல்லன்களை வேர்களாலும் மற்றும்/அல்லது அதற்கு மேற்பட்ட வடிவுகளை ஒன்றாகக் குழுமம் செய்யப்பட்டவையாகக் கருதலாம். எனவே *ஓடு, ஓடினான், ஓடுகிறான், ஓடுவான்* என்பன *ஓடு* என்ற சொல்லனைச் சார்ந்த வடிவுகளாகும். *நட, நடந்தான், நடக்கிறான், நடப்பான்* என்பன *நட* என்ற சொல்லனைச் சார்ந்த வடிவுகளாகும். *மதித்தான், மதிக்கிறான், மதிப்பான்* என்பன *மதி* என்ற சொல்லனைச் சாரும். *அவமதி, அவமதித்தான், அவமதிக்கிறான், அவமதிப்பான்* என்பன முதல் குழுமத்தின் வேரைக் (மதி) கொண்டிருந்தாலும் வேறுபட்ட சொல்லனைச் சாரும் (*அவமதி*). *அவமதி* என்பது *மதி* என்ற சொல்லனிடமிருந்து *அவ* என்ற சொல்லாக்க ஒட்டைக் கொண்டிருப்பதால் வேறுபட்டதாகக் கருதப்படும்.

### 6.3.1. சொற்பொருண்மையும் இலக்கணப்பொருண்மையும்

சொற்பொருண்மையும் இலக்கணப்பொருண்மையும் எவ்வாறு வேறுபடும் என்று நீங்கள் அறிந்திருப்பது மிக அவசியம். சொற்பொருண்மைக்கும் இலக்கணப்பொருண்மைக்கும் பெரும்மாலும் வேறுபாடு பாராட்டப்படும். எல்லா இரண்டாகப்பிரித்தலிலும் ஆபத்து உண்டு. சொற்றன்மை, இலக்கணத்தன்மை என்பனவற்றில் தொடர்ந்து வேறுபடுகின்ற அளவுகோல் உண்டு என்பதை மனதில் கொண்டால் இந்த இரண்டாகப்பிரித்தல் ஆபத்தானதல்ல. பொருண்மையைக் கொண்டிருக்கும் அலகுகளின் வகை

அடிப்படையில் இந்த வேறுபாட்டை வெளிப்படுத்துவது வசதியான வழியாகும். நாம் இலக்கண அலகுளை மூடிய குழும அலகுகள் (closed items) மற்றும் திறந்த குழும அலகுகள் (open set items) என்று பகுக்கலாம். மூடிய குழும அலகளின் எடுத்துக்காட்டுகள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்:

• இவைச் சிறிய பதிலீட்டுக் குழுமங்களைச் (substitution sets) சார்ந்திருக்கும்.

• இவற்றின் முக்கியமான செயல்பாடு வாக்கியங்களின் இலக்கண அமைப்பை வெளிப்படுத்துவதாகும்.

• இவை ஒத்தறி அடிப்படையில் மிகக் குறைவாகத்தான் மாறும்; ஒரு தனிப்பட்ட பேசுபவர் அதன் இழப்பையோ ஈட்டத்தையோ அவர் வாழ்நாளில் கண்டுகொள்வது அரிது. அதாவது ஒரு குறிப்பிட்ட மூடிய குழும இலக்கண வகைப்பாட்டில் அலகுகளின் பட்டியல் நிலையானது (க¡ஒநன). இதைப் பின்வரும் பண்புகளைக் கொண்ட திறந்தகுழும அலகுகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்தலாம்:

• இவை ஒத்தறி அடிப்படையில் பெரிய பதிலீட்டுக் குழுமங்களைச் சாரும்.

• பதிலீட்டு வகுப்புகளின் அங்கத்தினர்களில் ஒத்தறி விரைவான மாற்றம் இருக்கின்றது. ஒரு தனிப்பட்ட பேசுபவர் அவர் வாழ்நாளில் பல இழப்புகளையும் ஈட்டங்களையும் சந்திப்பது சாத்தியமாகும்.

• அவற்றின் முக்கியச் செயல்பாடு ஒரு பொருண்மையைச் சுமப்பதாகும். மூடிய மற்றும் திறந்த குழும இலகுகள் இரண்டும் பொருண்மையைச் சுமக்கின்றன. அவை முன்மாதிரியாக சுமக்கின்ற பொருண்மைகளின் பண்புகளில் வேறுபாடுகள் இருக்கின்றன என்பது அவற்றின் வேறுபட்ட செயல்பாட்டை அர்த்தப்படுத்துகின்றன. மூடியகுழும அலகுகள் இலக்கண அலகுகளாகச் சரியாக செயலாற்ற வேர்களின் அகன்ற எல்லைப் பரப்புடன் (wide range of roots) எந்த ஒழுங்கின்மையும் இல்லாமல் இணையும். இந்த சாத்தியத்திற்காக அவற்றிற்கு நெகிழ்வான பொருள் இருக்கும். எளிதில் முரண்பாடுகள் உருவாகாதபடி போதுமான அளவு வலிமை குறைக்கப்படவேண்டும். அடிக்கடி நிகழும் வேறுபாட்டைக் குறிப்பீடு செய்யவேண்டும். எனவே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் போன்ற எந்த வினைக் கருத்துச் சாயலுடனும் இணைந்து வரும் பொருண்மைகளும் மூலமுன்மாதிரி அடிப்படையில் இலக்கணப் பொருண்மைகளாகும். மாறாக அடிக்கடி நிகழ்வுறுகின்ற

பொருண்மைகளோ அகன்ற இணைந்து வருகை சாத்தியங்களோ (coocurrence possibilities) தேவை இல்லாமையால் ஒரு திறந்த குழும அலகு சுமக்கும் பொருண்மையின் குறிப்பிட்டதன்மைக்கோ வளமைக்கோ எல்லை இல்லை. எனவே திறந்த குழும அலகுகள் கூற்றுகளின் பொருண்மை உள்ளடக்கத்தின் சுமையை முன்மாதிரியாகச் சுமக்கின்றது. அவற்றின் பொருண்மையின் வளமை மற்றும் அவற்றின் எல்லையற்ற எண்ணிக்கையின் காரணமாக அவை கலவை நிலை அடுக்குறவு மற்றும் உறுப்பமைவு உறவு அமைப்புகளில் பங்கெடுக்கின்றன.

பொருளடக்கச் சொற்கள் (content words) (அடிப்படையான பெயர்கள், வினைகள், பெயரடைகள், மற்றும் வினையடைகள்) மூலமுன்மாதிரியாக ஒரு திறந்த குழும (பொதுவாக வேர் உருபன் என்று அழைக்கப்படும்) உருபனைக் கொண்டிருக்கும் மற்றும் அவை ஒன்றோ அல்லது அதற்கு மேலோ மூடிய குழும அலகுகளை ஒட்டு வடிவில் கொண்டிருக்கும். பொருளடக்கச் சொற்களின் பொருண்மைகளை ஆய்வது ஏறக்குறைய சொற்பொருண்மை இயலாகும்; மற்றும் திறந்த குழும அலகுகள் செய்கின்ற பங்களிப்புக்கு முக்கியமாகத் தொடர்பு படுத்துகின்றது. இலக்கணப் பொருண்மையில் மூடிய குழும அலகுகளின் பொருண்மையில் கவனத்தைச் செலுத்துகின்றது.

**6.3.2. சொற்பொருண்மையும் வாக்கியப் பொருண்மையும்**

பொதுவாகச் சொற்பொருண்மைகள் தனிநிலை அடிப்படையில் கருத்துப்பரிமாற இயலும் பொருண்மை அலகுகளின் வகை அல்ல. ஒரு சொல் தானாக எதையும் சொல்வதில்லை. பிற பொருண்மை உறுப்புகள் உட்படையாக இருப்பதுவரை ஒரு முழு எண்ணத்தையும் கூறுவதில்லை. அப்பயன்பாட்டிற்குக் கூடுதல் கலவைத் தன்மையான குறைந்தது தேற்றக்கூற்றுகளின் கலவை நிலை உள்ள (சொற்களால் உருவாக்கப்பட்ட) பொருண்மை அலகுகள் தேவை. சொற்கள் (அடிப்படை நிலையில் உருபன்கள்) இக்கூடுதல் கலவை அமைப்புகளின் உருவாக்கும் அலகாக மாறுகின்றது.

**6.3.3. சொற்பொருண்மையியலின் அணுகுமுறைகள்**

சொற்பொருண்மை குறித்த பல அணுகுமுறைகள் இருக்கின்றன. அவையாவன:

- ஒரு நிலை அணுகுமுறையும் இரு நிலை அணுகுமுறையும்
- ஒரு பொருண்மை மற்றும் பல்பொருண்மை அணுகுமுறைகள்
- பொருண்மைக்கூறாய்வு அணுகுமுறை

• முழுமை வாதத்தார் அணுகுமுறை

**ஒரு நிலை அணுகுமுறையும் இரு நிலை அணுகுமுறையும் (One-level vs. two-level approaches)**

பொருண்மை இயலுக்கும் கலைக்களஞ்சிய அறிவுக்கும் (encyclopaedic knowledge) வேறுபாடு செய்யவேண்டுமா என்ற கேள்வி பொருண்மை இயலாரைப் பிரிக்கும் முக்கியப் பாகுபாட்டுக் கோடாகும். இப்பாகுபாட்டை நம்புகின்றவர்கள் ஒலியியல்-ஒலியனியல் பாகுபாட்டுடன் ஒப்புமை காண்கின்றனர். மனித இனம் பேச்சொலிகளின் எல்லையில்லாத வகைகளை உருவாக்கவும் அறிந்து கொள்ளவும் இயலும். ஆனால் இவற்றில் கையில் அடங்குகிற சிறிதளவு பேச்சொலிகள் தாம் பொருண்மையை வெளிப்படுத்துவதற்கு வேறுபடுத்திக்காட்டும் செயற்பாடு புரிகின்றன. அல்லது அக்கலவையின் ஒழுங்குமுறையான உறவுகளில் ஈடுபடும். மொழியின் ஒலி வசத்தில் உண்மையான மொழி அலகுகள் இருக்கின்றன. இதே வழியில் ஆயப்படாத பொருண்மைகளின் வேறுபட்ட வகைகள் எல்லை இல்லாதவை. ஆனால் இவற்றில் எல்லைக்குட்பட்ட எண்ணிக்கையிலானவை தான் உண்மையான மொழி அலகுகள். இவை மொழி ஒழுங்குமுறையின் பிற நோக்குகளுடன் ஒழுங்காக ஊடாடும்.

இருநிலை அணுகுமுறையின்படி பேசுபர்கள் கொண்டிருக்கின்ற உலகத்தைப் பற்றிய விரிவான அறிவு மொழி அலகுகளின் உடமை அல்ல மொழிக்கு வெளியிலுள்ள கருத்துருக்களின் உடமை ஆகும். உண்மையில் மொழிப் பொருண்மை அலகுகள் மிகச் சுருங்கிய வகையைச் சாரும் மற்றும் முறைப்படுத்தலுக்கு உட்படுத்தக் கூடியதாகக் கருதப்படும். சில இலக்கண அலகால் பொருண்மை சுமக்கப்படுவதன் காரணத்தாலோ உடன்பாட்டு அமைப்பொழுங்கு அல்லது முக்கியத் தொடரியல் வகைப்பாடுகளின் துணை வகைப்பாடு போன்ற காரணிகளுடன் தொடர்புகொண்டுள்ளதாலோ மொழிப் பொருண்மையைப் பொருண்மையைப் புரிந்துகொள்ள பரிந்துரைக்கப்பட்ட ஒரு அளவீடு தொடரியலுடன் தொடர்புடையது.

ஒருநிலை அணுகுமுறையில் ஈடுபாடு உடையவர்கள் பொருண்மை அல்லது களஞ்சிய வசம் என்ற ஈரிணையான பொருண்மையின் நோக்குகளைத் தருவதற்கு இடுகுறியற்ற அடிப்படை இல்லை என்ற சாதாரண பரிசோதனைக்கும் நிலைநிற்கும் கருத்தைக் கொள்கின்றனர். பெரும்பாலான புலனறி மொழியலார் (cognitive linguists) எல்லாப் பொருண்மையும் கருத்துரு

அடிப்படையிலானவை என்ற பார்வையை எடுக்கின்றனர். இலக்கணப் பொருண்மைக்கும் சொல்/கலைக்களஞ்சியப் பொருண்மைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை மறுக்க வேண்டியதில்லை. அதை ஈரிணையானது மற்றும் முழுவதும் கருத்துருத் தன்மையானது என்பதற்குப் பதிலாகத் தொடர்ச்சியான ஒன்றாப் பார்க்கலாம்.

ஒருபொருண்மை மற்றும் பல்பொருண்மை அணுகுமுறைகள் (**Monosemic vs. polysemic approaches**)

ஒரு சொல்லுக்கு எத்தனை அர்த்தங்கள் தரவேண்டும் என்பதன் அடிப்படையில் ஒருபொருண்மை அணுகுமுறைக்கும் பல்பொருண்மை அணுகுமுறைக்கும் இடையில் உள்ள வேறுபாடுதான் விவாதத்திற்கான முக்கியக் கருத்தாகும். படி என்பது போன்ற தெளிவானவற்றின் ஒருசொல்போலித் (homonymy) தன்மையைப் பற்றி எந்தக் கருத்து வேற்றுமையும் இல்லை. இதில் ஒன்றில் இருந்து மற்றொன்றை உருவாக்கும் எண்ணத்தகுந்த வழியில்லை. பல்பொருண்மையின் பண்பு தொடர்பான தொடர்புள்ள அர்த்தங்களின் தொகுப்பில்தான் கருத்து வேற்றுமை மையமிட்டுள்ளது. ஒரு மொழியின் அகராதியில் (ஒரு சொல்லுக்கு) எவ்வவு குறைவாக அர்த்தம் செய்ய இயலுமோ அந்த அளவுக்குத்தான் வேறுபட்ட அங்கீகாரத்தைத் தரவேண்டும், அவற்றிலிருந்து எவ்வளவு ஆக்க முடியுமோ அவற்றை ஆக்க வேண்டும் என்பதுதான் ஒருபொருண்மைப் பார்வையாகும். ஒரு சொல்லின் பொருண்மை ஏதாவது வழியில் மற்றொன்றின் உந்தப்பட்ட நீட்சியாக (motivated extension) இருந்தால், ஒன்று மட்டும்தான் பதிவு செய்யப்பட வேண்டும்; மற்றொன்று சொல் விதிகளின் (lexical rulesf) செயல்பாட்டில் விட்டுவிடப்படவேண்டும்; சொல் விதிகள் பொதுவாக ஒன்றுக்கும் மேற்பட்ட நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும்; எனவே அகராதியல் ஒழுங்காக உருப்படுத்தம் செய்யப்பட வேண்டும்.

பல்பொருண்மை அணுகுமுறை சொற்பொருண்மையின் உந்தப்பட்ட நீட்சி அகராதியில் பதிவு செய்யப்பட வேண்டியதில்லை என்ற ஊகத்தை மறுக்கின்றது. இதன் காரணம் என்னவென்றால் சொல் விதிகள் சாத்தியமான பொருண்மையின் நீட்சிகளைத்தான் குறிப்பிடுகின்றது. சிலவைதான் மரபுத்தன்மை பெற்று அகராதியில் உட்படுத்தப்படுகின்றது. பிறவை சாத்தியமானது; அவை புதிய வடிவுகளாக/ஆக்கங்களாகத் தோன்றலாம்; இருப்பினும் இவற்றிற்கும் நிறுவப்பட்டவற்றிற்கும் தெளிவான வேறுபாடு

இருக்கின்றது. (கொள்கை அடிப்படையில் உண்மையில் நிறுவுதலின் தொடர்ச்சியான அளவு இருக்கின்றது.) குடி என்பதை எடுத்துக்கொள்வோம். பல சூழல்களில் 'குடித்திருப்பது' என்பதன் அர்த்தம் தெளிவானது; இருப்பினும் வெளிப்படையாக ஒருவர் குடி என்பதற்கு குடிக்கத்தக்க எல்லா திரவங்களுக்கும் வேறுபட்ட சொற்பதிவை உருவாக்க விரும்புவதில்லை. இந்த அளவில் ஒற்றைப் பொருண்மை இயலார்களும் (monosemist) பல்பொருண்மை இயலார்களும் (polysemist) சம்மதிப்பார்கள். இருப்பினும் குடி என்பதற்குக் குறிப்பிட்ட பொருண்மையாக குறிப்பிடத்தக்கத் திரவங்களை உள்ளடக்குதல் சாத்தியமானது. கொள்கை அடிப்படையில் எந்த வகைக் குடிபான வகுப்பும் இவ்வகையில் உள்ளடக்கப்படலாம். தமிழில் மதுபானங்கள் என்பதைப் பின்வருமாறு குறியாக்கம் செய்யலாம்: எ.கா.

ராஜா திரும்பவும் குடிக்கத் தொடங்கிவிட்டான் என்று வருத்தமாக இருக்கின்றது. கொள்கை அடிப்படையில் மதுபானத்திற்குப் பதில் பழரசங்ஞளுடனும் இது சம்பவிக்கலாம். தமிழ் அகராதியைப் பொறுத்தவரையில் உண்மை என்றவென்றால் குடி என்பதற்கு இச்சாத்தியங்களில் ஒன்று இருக்கின்றது; ஆனால் மற்றொன்றில்லை. தற்போது பெரும்பான்மையான அணுகுமுறை ஒருபொருண்மை அணுகுமுறையாகும்.

**பொருண்மைக்கூறாய்வு அணுகுமுறை (componential analysis of meaning)**

சொற்பொருண்மையை அணுகுவதின் மிகப்பழமையான மற்றும் இன்றும் புழக்கத்தில் உள்ள மற்றும் மிகப்பரந்த வழி சொற்பொருண்மையைப் பொருண்மையின் மிகச்சிறிய, மிக அடிப்படையான மாறாத அலகுகளிலிருந்து உருவாக்கபடுவதாக எண்ணுவதுதான். (பொருண்மையின் அணு அமைப்பிற்கு ஒப்பிடலாம்.) இப்பொருண்மை அணுக்கள் பலவகைகளில் அழைக்கப்படுகின்றன: பொருளன்கள் (sememes), பொருண்மைப் பண்புக்கூறுகள் (semantic components), பொருண்மைக் குறிகள் (semantic markers), பொருண்மை முதன்மைகள் (semantic primes). தற்கால மொழியியலுக்குள் பொருண்மை இயலுக்குக் கூறாய்வுத் திட்டத்தின் (componential programme) முதல் மொழிபுக்குக் காரணமானவர் யெல்ம்ஸ்லெவ் (1961) (Hjelmselv) என்பவராவார். இவர் கொள்கை அடிப்படையில் மொழிக் குறியின் (linguistic signs) பொருண்மை வசம் ஒலி வசத்தைப் போன்று அமைப்புக் கொள்கைகளைக் காட்டவேண்டும் என்று நம்பினார். அவருக்கு குறைத்தல் (சநனரஉவ்டிஇ) என்ற கருத்துச்சாயல்

மிக முக்கியமானதாகும். ஒரு மொழியிலுள்ள வேறுபட்ட குறிகளின் நூற்றுக்கணக்கான ஆயிரங்களில் ஒலியன் அமைப்பு (phonological builing blocks) ஒரு சில நூற்றுக்கணக்கில் வரும் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்ட அசைகளின் கூட்டிணைப்பாகப் பகுப்பாய்வு செய்யலாம். மேலும் இவை ஐம்பதோ அதற்குமேலோ வரும் பட்டியலைச் சார்ந்த ஒலியன்களலிருந்து உருவாக்கப்பட்டவையாகக் காட்ட இயலும். இறுதியாக ஒரு டசன் எண்ணிக்கையுள்ள ஒலியன் உருவாக்க அலகுகளான (phடிஇடிடடிபiஉயட ரெடைiஇப டெடிஉமஎ) சிறப்புப் பண்புக்கூறுகளாகக் (distinguishing features) காட்டலாம். இதே போலவே குறிகளின் பொருண்மை வசம் (meaing side of sigens) பகுப்பாய்வு செய்யப்படுகின்ற குறிகளைவிட மிகக்குறைந்த எண்ணிக்கையிலான அலகுகளின் பட்டியலிருந்து எடுக்கப்பற்றவற்றின் கூட்டிணைப்பாகக் குறைக்கப்படவேண்டும். அவர் குறிப்பிட்ட அடிப்படை அலகுகளான (கலைச்சொல்லான) ‘figurae’ அருவமானதல்ல; அவைப் மொழியின் பொருண்மைகளாகும். எல்லாச் சொற்களின் பொருண்மைகளையும் உருவாக்க இயலும் அடிப்ப டைச் சொற்களின் குழுமத்தைக் கண்டுபிடிப்பதுதான் அவர் மனத்தில் இருந்ததாகத் தோன்றுகின்றது. எல்மஸ்லெவ்தான் முதல் அமைப்புப் பொருண்மை இயலார் (strucutual semantist). இந்த அணுகுமுறை ஐரோப்பிய மொழியலாரால் வளர்க்கப்பட்டது; ஜெர்மன் வகையும் பிரஞ்சு வகையும் இதன் விளைவுகளாகும். அமேரிக்காலில் கூறாய்வு அணுகுமுறை ஐரோப்பிய இயக்கத்திலிருந்து சுதந்திரமாக வளர்ந்தது. இது மானிடவியல் மொழியியலாருக்கு (Anthropologial linguists) இடையில் முதலில் தோன்றியது. உட்புக இயலாத (பகுத்தாய இயலாத) உறவுமுறை ஒழுங்கு முறைகளின் (kinship systems) கலவைத் தன்மையைக் குறைந்த பண்புக்கூறுகளின் குழுமங்களின் கூட்டிணைப்பாகக் குறைப்பதில் பெருமளவில் வெற்றி அடைந்தது.

காட்ஸ் மற்றும் பாடர் (Katz and Fodor) என்பர்களால் முன்மொழியப்பட்ட ஒரு புதிய விருத்தாந்தம் தொடக்க கால சாம்ஸ்கியின் ஆக்கமுறை இலக்கணச் சூழலில் தோன்றியது. இது இதற்குமுன் தோன்றிய எல்லாவற்றையும் விட இது மிக பேராசை உள்ளதாக அமைந்தது. முதலாவது மொழியின் முழுக்கோட்பாட்டின் முழுமைதரும் பகுதியாக (integral part) அமைந்தது. இரண்டாவது இது உலகப்பொதுமை (universality) மற்றும் உளவியல்

உண்மைநிலை ((psychological reality) என்பனவற்றை உரிமை கொண்டாடியது. மூன்றாவது, பண்புக்கூறுகள் நடப்பில் இருக்கின்ற சொற்களின் பொருண்மைகளோடு (meaings of existing words) நின்றுவிடாமல் அவை அருவத்தன்மையானதாகவும் கருதப்பட்டது. இந்த அணுகுமுறை முக்கிய ஆக்கமுறை மொழியியலுடன் இணையவில்லை மற்றும் தற்போதைய ஆக்கமுறையாளர்களுக்குகள் முழுமையான பொருண்மைக்கூறாய்வு ஜாகெண்டாப் (Jackendoff, 1987, 1990, 1996) ஆராய்ச்சியல் காணப்படுகின்றது. பொருண்மைச் கூறாய்வின் தீவிரமான மறுவடிவம் வெர்ஸ்பிகாவின் (Wierzbicka, 1996) ஆராய்ச்சியல் காணப்படுகின்றது. இது மிக முதன்மையான (தன்முயற்சியான) அணுகுமுறையாகும். இது மேற்சொன்ன எந்த அணுகுமுறையின் கிளையும் அல்ல. இது லெப்னிஸ் (Leibniz 1903) போன்றவர்களின் முந்தைய தத்துவ ஆய்வுகளிலிருந்து தூண்டுதலைப் பெறுகின்றது. எல்லாக் கருத்தில் உருவாக்கக் கூடிய பொருண்மைகளையும் வெளிப்படுத்த இயலும் மிக எல்லைக்குட்பட்ட உலகளாவிய பொருண்மை அணுக்களின் குழுமம் இருக்கின்றது என்பது வொ;ஸ்பிகாவின் பார்வைக் கோணமாகும். வொ;ஸ்பிகாவின் முதன்மைகளின் பட்டியல் (inventory of primes) ஆச்சரியப்படத்தக்க அளவு சிறயதாகும் (அவர் பதினொன்றில் தொடங்குகிறார், ஆனால் பட்டியல் ஐம்பதாக நீள்கின்றது.) அவை அருவத்தன்மையானது அல்ல; எனவே காட்ஸ் மற்றும் பார்டரைப் போல் நேரடி உணர்வால் பரிசோதனைக்கு உட்படாதது. அவைப் பருமைத் தன்மையானது (concrete); எந்த ஆய்வும் மொழிபேசுவோரின் உள்ளுணர்வைத் திருப்தி செய்யவேண்டும். மு

**முழுமை வாதத்தார் அணுகுமுறை (Holist's approach)**

சொல்லின் பொருண்மையைச் சில பயனுள்ள அர்த்தத்தில் மொழியிலுள்ள பிற சொற்களின் பொருண்மைகளிலிருந்து தனியாக முற்றுநிலையில் குறிப்பிடலாம் என்பது கூறாய்வு இயலாரின் நம்பிக்கையாகும். மொழி தத்துவ இயலாருக்கு இடையில் இது வட்டார பார்வை (localist approach) என்று அறியப்படும். வட்டார வாதத்தாருக்கு சூழல் வேறுபாடு சூழலுடன் ஊடாட்ட விதிகளால் (rules of interaction) விளக்கலாம். இந்தப் பார்வைக்கு எதிரிடையான நிலை முழுமைப் பார்வையாகும். இதன்படி ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களின் பொருண்மைகளும் கணக்கில் எடுக்காமல் ஒரு சொல்லின்

பொருண்மையை அறிய இயலாது. முழுமை வாதத்திற்கு பல மறு வடிவங்கள் இருக்கின்றன. இரண்டு இங்கு சுருக்கமாகத் தரப்படும்.

**ஹாஸ்** (Hass)

ஹாஸ் என்பவரின் தன்மனப்போக்கான பொருண்மையின் பார்வை விட்ஜென்ஸ்டன் (Wittgenstein) என்பவரின் ஆய்வின் ஒரு நோக்கிலிருந்து ஆக்கப்பட்டதாகும். அவருடைய பொருண்மைப் பயன்பாட்டுக் கோட்பாடு (Use theory of meaning) “பொருண்மையைப் பார்க்காதே, பயன்பாட்டைப் பார்” (Don’t look for the meaning - look for the use) என்ற கருத்தை உள்ளடக்குகின்றது. அதாவது ஒரு வெளிப்பாட்டின் பொருண்மை அதன் பயன்பாடாகும். இது அவ்வளவு பயனுள்ளதல்ல; குறிப்பாகத் தெரிவிப்பதாகும். ஹாஸ் ஜெ.ஆர்.ஃபிர்த் (J.R.Firth) எனபவரின் கருத்தான “சொற்கள் இணைந்துவரும் சொற்களால் அறியப்படும் (Words shall be known by the company they keep) என்பதால் உந்தப்பட்டு அவர் தன்னுடைய கொள்கைக்குத் தனவயமான திருத்தம் கொடுத்தார். ஹாஸ் இதற்கு மேலும் சென்றார். ஒரு சொல்லின் பொருண்மை அதன் பொருண்மைக் களமாகும் (semntic field); அதற்கு இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன:

1. உறுப்பமைவுப் பரிமாணம் (syntagmatic dimension): இதில் சொல்லின் எல்லாச் சாத்தியமான (இலக்கண அடிப்படையில் நல் உருவாக்கப்பட்ட= பசயஅஅயவiஉயடடல றநடட கடிசஅநன) சூழல்கள் இயல் நிலையில்; வரிசை முறையில் அடுக்கப்பட்டுள்ளன.
2. அடுக்குறவு பரிமாணம் (pragmatic dimension): இதில் சொல்லின் சாத்தியமான பதிலீடுகள் (substitutes) இயல் நிலையில் வரிசைமுறையில் அடுக்கப்பட்டுள்ளன.

ஹாஸைப் பொறுத்தவரையில் ஒத்தறி இயல்நிலை (relative normality) முதன்மையானதாகும் (primitive). கொள்கை அடிப்படையில், சூழல் மொழிக்கு வெளியிலுள்ள சூழலையும் (extralinguistic context) உள்ளடக்கும். ஆனால் எல்லாத் தேவையான மொழிக்கு வெளியிலுள்ள சூழலின் நோக்கையும் மொழி அடிப்படையில் குறியாக்கம் செய்ய இயலும் என்ற காரணத்தால் கவனத்தை மொழிச் சூழலுக்குக் (linguistic context) கட்டுப்படுத்திக் கொண்டால் எந்தவித நஷ்டமும் ஏற்படாது என்று ஹால் வாதிடுகின்றார். ஹாஸ் தெரிந்துகொண்ட

அளவில் சொல்லின் பொருண்மைக் களம் அதன் பொருண்மையை உண்டாக்குகின்றது. எனவே ஒவ்வொரு சொல்லும் மற்றொரு சொல்லின் பொருண்மையில் பங்கெடுப்பதைக் கவனிக்கவும். ஹாஸ் இங்கு லெய்ப்னிஸின் (Leibniz) அறுதி அலகால் (monad) உந்தப்பட்டுள்ளார். எனவே சொற்பொருளுக்கும் களஞ்சிய அறிவுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ஹாஸின் பார்வையில் ஒரு சொல்லின் பொருண்மைக்களம் (semantic field of a word) சொல்லின் பொருண்மையை கொண்டிருக்கின்றது. சொல்லின் பொருண்மைக் களம் அதன் பொருண்மையைப் பிரதிபலிக்கின்றது.

**லையான்ஸ் (Lyons)**

முழுமை வாதத்தின் (Holism) இரண்டாவது வகை லையான்ஸால்; உருப்படுத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் சாராம்சம் பொருண்மைகள் தனித்திருக்கும் தன்மையாது (substantitive) அல்ல ஒத்தறி தன்மையாது (relative) என்பதாகும். ஒரே ஒழுங்குமுறைக்குள் வேறுபடுத்தலால் உண்டாக்கப்பட்டது என்ற சசூரியன் நம்பிக்கையாகும் (Saussurean belief). ஒரு சொல் அலகின் பொருண்மை (the sense of lexical items) அச்சொல் அலகு ஒரு பொருண்மைக் களத்தில் பங்கெடுக்கும் சொல் அலகுகளுடன் வேறுபடும் பொருண்மை உறவுகளின் (sense relation) குழுமத்தால் ஆனது என்று லையானஸ் கூறுகின்றார். பொருண்மை உறவுகள் சுதந்திரமாக நிறுவப்பட்ட பொருண்மைகளுக்கு இடையே உள்ள உறவுகள் அல்ல என்று அவர் வற்புறுத்துகின்றார். பொருண்மைகள் எல்லாம் பொருண்மை உறவுகளால் உண்டாக்கப்பட்டது என்று நாம் கூறவேண்டும். எடுத்துக்காட்டாக *குதிரை* என்பதன் பொருண்மை கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் விளக்கப்படவேண்டும்: இந்த ஒழுங்கமைப்பில் “ஒரு வகை ஆகும்” (எ.கா. *குதிரை:விலங்கு*) “ஒரு வகை ஆகாது” (எ.கா. *குதிரை:பசு*), “பகுதி ஆகும்” (எ.கா. *பிடரிமயிர்:குதிரை*), “உண்டாக்கும் சப்தம் ஆகும்” (எ.கா. *கனை:குதிரை*), “இருப்பிடம் ஆகும்” (எ.கா. *லாயம்:குதிரை*) போன்றன குறிப்பிட்ட வகையில்படும் தொடர்புகள் ஆகும். எடுத்துக்காட்டப்பட்ட சொற்களும் குதிரை அல்லாத பிற சொற்களுடன் தொடர்புகொள்வதால், குதிரை என்பதன் முழுப்பொருண்மை முழு அகராதியை உள்ளடக்கும் சாத்தியமான உறவுகளின்

கலவைத் தன்மையான வலை போன்ற அமைப்பு (இநவ றடிசம) ஆகும். **6.3.4**

**அடுக்கு அர்த்த உறவுகள் (Paradigmatic sense relation)**

அடுக்குறவு முறையில் ஒன்றையொன்று மாற்றிக்கொள்ள இயலும் சொற்களுக்கிடையே உள்ள உறவுகளைப் பொருண்மை அடிப்படையில் ஆயலாம். அவ்வுறவுகளாவன:

- ஒருபொருள்பன்மொழியம் (Synonymy)
- உள்ளடங்குமொழியம் ( Hyponymy)
- இணக்கம் (Compatibility)
- இணக்கமின்மை (Incompatibility)

ஒருபொருள்பன்மொழியம் பொருண்மை அடிப்படையில் ஒன்றையொன்று உள்ளடக்கும், இடம் பெயர்க்கும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு ஒருபொருள்பன்மொழியம் எனப்படும்.

எ.கா. புத்தகம் : நூல், உதிர்: விழு, காண்: பார், நுழை: பிரவேசி, விரட்டு: துரத்து.

**ஒத்திருத்தலின் அளவுகோல்**

ஒருபொருள்பன்மொழியின் உறவை விரிவாக நோக்குதல் இன்றியமையாததாகிறது. பின்வருவன இரண்டு நியாயமான பொருண்மை உள்ளுணர்வுகள்:

- சில இணைச் சொற்களும் சில கூட்டம் சொற்களும் தமக்கிடையில் ஒற்றுமையைக் காட்டுகின்றன. இந்த ஒற்றுமையை நாம் ஒரு பொருள் பன்மொழி என்கிறோம்.
- சில இணச் சொற்கள் மற்ற இணைச் சொற்களை விட கூடுதல் ஒத்திருக்கிறன. எ.கா. நூல்: புத்தகம், தந்திரசாலி : புத்திசாலி

ஒருபொருள்பன்மொழியின் பண்;புகளைக் கூறச் சரியான வழியில்லை. கீழ்க்கண்ட இரு வழிகளை நாடலாம்:

- முதலாவதாக தேவையான அளவு ஒற்றுமைகள், அனுமதிக்கக்கூடிய வேற்றுமைகள் மூலம்.
- இரண்டாவதாக சூழல் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வாக்கிய சட்டத்தின் மூலம்.

ஒருபொருள்பன்மொழிகளுக்கு இடையில் தேவையான அளவு பொருண்மை மேலுறல் இருப்பது கட்டாயமாகும் என்பது வெளிப்படை.

எ.கா. தாழ்மையுள்ள: பணிவுள்ள x உண்மையுள்ள: சிவப்பான

ஒருபொருள்பன்மொழிகள் மிக உயர்வான பொருண்மை மேலுறவைக் காட்டுவதுடன் மிகக் குறைவான வேற்றுமையைத்தான் காட்டவேண்டும். பொதுவாக, இணை ஒருபொருள் பன்மொழிகளுக்கிடையில் ஒன்றை மறுப்பது மற்றொன்றை மறுப்பதை ஒக்கும்.

நீ அந்த புத்தகத்தைப் படித்தாயா ?

?இல்லை, அந்த நூலைப் படித்தேன்.

அந்த புத்தகத்தைப் படித்தேன் = அந்த நூலைப் படித்தேன்

ஒரு பொருள் பன்மொழிகள் முக்கியமான பொருண்மைப் பண்புகளில் ஒப்புமையைக் காட்டும். வேறுபடுவதென்றால் முக்கியமில்லாத விளிம்பில் வரும் பண்புகளில் வேறுபடலாம். சிலவகை வெளிப்பாடுகளின் ஒருபொருள்பன்மொழிகள் சேர்ந்துவரலாம். எடுத்துக்காட்டாக, விவரணையாக, அல்லது அர்த்தமாக ஒருபொருள்பன்மொழி பயன்படுத்தப்படலாம்.

அவன் அவளைக் கொன்று விட்டான், அதாவது கொலை செய்து விட்டான்.

அவன் அவளை சினேகிக்கிறான், அதாவது காதலிக்கிறான்.

சில சமயங்களில் ஒருபொருள்பன்மொழிகள் ஒன்றுக்கு ஒன்று முரண்படுவதுபோல் வரலாம். அப்பொழுது. ‘அதாவது’, ‘சரியாகச் சொல்லப்போனால்’ என்ற சொற்கள் இடையில் வரலாம். அவன் ஒரு முட்டாள், சரியாகச் சொல்லப்போனால் ஒரு மடையன்.

பொதுவாக முரண்பட்டு வரும் சொற்கள் மேற்சொன்னபடி வரா.

? அவன் ஒரு முட்டாள், சரியாகச் சொல்லப்போனால் புத்திசாலி.

ஒரு பொருள்பன்மொழிகளுக்குள் சில இணைச்சொற்கள் மற்ற இணைச் சொற்களைவிட கூடுதல் ஒப்புமையாக இருக்கும். இதனால் ஒப்புமையைக் காட்டுகிற அளவுகோல் உள்ளது போல் தோன்றும்.

ஒருபொருள்பன்மொழியையும் ஒருபொருள்பன்மொழி அல்லாதவற்றையும் பிரிக்கும் கோடு தெளிவற்றது. எ.கா.

உலர்தல் : காய்தல் : உணங்குதல்: கரிதல் : கருகுதல்.

முற்று ஒருபொருள் பன்மொழியன் (**Absolute Synonymy**)

இரண்டு சொற்கள் முற்று ஒரு பொருள்பன்மொழியாக அமைய வேண்டுமானால் அவற்றின் ச{ழல் உறவுகள் ஒன்றாக இருக்கவேண்டும். உண்மையைச் சொல்லப்போனால் அத்தகைய முற்று ஒரு பொருள்

பன்மொழிகளைக் கண்டுபிடிப்பது நடைமுறைக்கு ஒவ்வாது, ஏனென்றால் அவை வரும் சூழல்களையும் நோக்குவது முடியாத காரியம். ஆனால் அத்தகைய எதிர்பார்ப்பு நோpடையாக முற்று ஒருபொருள்பன்மொழியை அறிய உதவும்.

முற்று ஒருபொருள்பன்மொழிகள் மிகக்குறைவாகவே உள்ளன. ஒரு மொழியில் முற்று ஒருபொருள் பன்மொழியின் தேவைக்கு சரியான காரணமில்லை. அப்படியிருக்குமானால் போட்டியிடும் இணைச்சொற்களில் ஒன்று இல்லாமல் போகவோ அல்லது அவற்றின் பொருண்மைச் செயற்பாடு மாறவோ செய்யும். எ.கா.

நூல் : புத்தகம், சொல்லுதல்: கூறுதல்

**எதிர்மொழியம் (Antonymy)**

இணக்கமற்ற ஆனால் ஒன்றையொன்று எதிர்ப்பதுபோல் பொருள் அமையும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு எதிர்மொழியம் எனப்படும். எ.கா.

உயரம்:குள்ளம், நல்லது: கெட்டது.

உள்ளடங்கு மொழியம் பொருண்மை அடிப்படையில் உள்ளடங்கும் சொற்களுக்கும் உள்ளடக்கும் சொற்களுக்கும் இடையே உள்ள உள்ளடங்கு மொழியம் (hyponymy) எனப்படும்




எதிர்மை (opposition), முரண் (contrast) ஆகியவற்றைப் போல உள்ளடங்குமொழியமும் மிக முக்கியமான அடுக்கு உறவாகும். உள்ளடங்குமொழி தனித்தன்மையான அல்லது உள்ளடங்கும் சொல்லுக்கும் பொது அல்லது உள்ளடக்கும் சொல்லுக்கும் உள்ள உறவைக் குறிப்பதாம்.

எ.கா. நாய், பூனை, எலி: விலங்கு

வாங்கு: பெறு ரோஜா,

முல்லை, மல்லிகை: பூ

தர்க்கவியலார் (logicinans) வகுப்பில் அடக்கல் (class inclusion) என்ற நிலையில் உள்ளடங்குமொழியத்தை விவரிக்கின்றனர்.

அ = ஆ ஆ ≠ அ

ரோஜா = பூ பூ ≠ ரோஜா

(எல்லா ரோஜாக்களும் பூக்கள், ஆனால் பூக்கள் எல்லாம் ரோஜாக்கள் அல்ல.) தர்க்க இயலாரின் விவாத்தில் தெளிவின்மை இருக்கிறது. உள்ளடங்குமொழி உள்ளடக்குமொழியில் சொல்லில் அடங்குகிறதா உள்ளடக்குமொழி உள்ளடங்குமொழியில் அடங்குகிறதா என்ற ஐயம் எழுகிறது. சொற்களின் அகலத்தைப் (extension) பார்த்தால் உள்ளடக்குமொழி கூடுதல் உள்ளடக்கும் தன்மையுடையது என்றும் சொற்களின் ஆழத்தைப் (intension) பார்த்தால் உள்ளடங்குமொழி கூடுதல் உள்ளடக்கும் தன்மையது என்றும் கூறலாம். எடுத்துக்காட்டாக, ரோஜா, பூவின் எல்லா பண்புகளையும் பெற்றிருப்பதோடு கூடுதலாக ரோஜாவின் தனிப்பண்புகளையும் பெற்றிருக்கிறது. உள்ளடங்மொழியத்தை ஒருதலை நோக்குச் சம்பந்தம் (unilateral relation) மூலம் விளக்கலாம். அவள் தலையில் மல்லிகை வைத்திருக்கிறாள் = அவள் பூ வைத்திருக்கிறாள் அவள் தலையில் பூ வைத்திருக்கிறாள் அவள் · மல்லிகை வைத்திருக்கிறாள் இதன்படி ஒருபொருள்பன்மொழித்தை இருதலை நோக்குச் சம்பந்தம் (bilateral relation) மூலம் அதன் ஒத்த தன்மையை (symmetry) விவரிக்கலாம். உள்ளடங்கு மொழியத்தை ஒவ்வாத் தன்மையாகக் (asymmetry) கருதலாம். உள்டங்கு மொழியத்தை ஒரு கடவு (transitive) உறவாகக் கொள்ளலாம்.‘அ’, ‘ஆ’-வின் உள்ளடங்குமொழியாகவும்; ‘ஆ’, ‘இ’-யின் உள்ளடங்குமொழியாகவும் வருமானால், ‘அ’, ‘இ’-யின் உள்ளடங்குமொழியாகும்.

பசு:பாலூட்டி, பாலூட்டி:விலங்கு, பசு:விலங்கு

உள்ளடங்குமொழியத்தை கீழ்வரும் சூத்திரத்தில் ஏற்றி analytic நியாயத்தை வெளிப்படுத்த முடியும்:

அ என்பது ஒரு வகை ஆ (‘அ’, ‘ஆ’-வின் உள்ளடங்குமொழி என்றால்)

பசு என்பது ஒரு வகை விலங்கு/பசு ஒரு விலங்கு.

‘ஆ’ என்ற சொல் ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளடங்குமொழிகளை உள்ளடக்கும் என்றால் கீழ்வரும் வாக்கியங்களில் 1-உம் 2-உம் சரியானவைகளாகும்.

1. பசுக்களும், வேறு மிருகங்களும் வந்தன.
2. ரோஜாவும், வேறு பூக்களும் வாங்கினாள்.
3. ?பசுக்களும், வேறு பூக்களும்.
4. ?ரோஜாவும், வேறு விலங்குகளும்.

இம்மாதிரிப்பட்ட வெளிப்பாடுகள் (வாக்கிய வெளிப்பாடுகள்) உள்ளடக்குமொழியத்தையும்; இணை உள்ளடங்குமொழியத்தையும் நிறுவுவதற்கு முக்கியமாகும். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் சொற்களின் பொருளை அறியாமலேயே ஒரு சொல் இன்னொரு சொல்லின் உயர் உள்ளீட்டுச் சொல் என்றும், ஒரு சொல்லும் இன்னொரு சொல்லும் இணை உயர்உள்ளீட்டுச் சொற்கள் என்றும் அறியலாம்.

குவளை ஒருவகை மலர்/குவளை ஒரு மலர்

வங்கு ஒருவகை விலங்கு / வங்கு ஒரு விலங்கு

நம் மொழியிலுள்ள சொற்களின் பொருளைப் பற்றி நமது அறிவு பெரும்பாலும் மேற்சொன்ன விதமானதாகும். எடுத்துக்காட்டாக, நாம் “ஆல் என்பது ஒரு மரம் ஆகும்” அல்லது “மீன்கொத்தி என்பது ஒரு பறவை” ஆகும் என்று அறிவோமேயன்றி ஆல் பிற மரங்கிளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறதென்றோ, மீன்கொத்தி எவ்வாறு பிற பறவைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்றோ சரியாகக் கூறுவதற்கு அறியோம்.

பெரும்பாலும் உள்ளடங்குமொழி ஒரு பெயரடையை உள்ளடக்கி இருப்பதால் அவ்வடையும் உள்ளடக்குமொழியும் சேர்ந்து உள்ளடங்குமொழிக்கு இணையாய் வருவதுண்டு. எ.கா.

ஒரு யானையைப் பார்த்தேன்.

ஒரு பெரிய விலங்கைப் பார்த்தேன்.

இதனால் ஒரு உள்ளடங்குமொழியும் அதனோடு தொடர்புடைய பெயர் அடையும் உள்ளடக்குமொழியும் சோ;ந்த கூட்டுச் சொல்லும் ஒருபொருள் பன்மொழி என்று அர்த்தமல்ல. எடுத்துக்காட்டாக, பசு என்பதும் கொம்புள்ள மிருகம் ஒருபொருள்பன்மொழிகள் அல்;ல. உள்ளடங்குமொழியும் உள்ளடக்குமொழியும் சேர்ந்து வருவதுண்டு. எ.கா.

முல்லைப்பூ, ஆல் மரம்

இதுபோல் (மேற்சொன்னது போல்) வரும் சுட்டுச் சொற்கள் சில சமயம் தமக்கு தவறான எண்ணத்தை உருவாக்கலாம். எடுதுக்காட்டாக, கழுதைப்புலி என்பது

ஒருவகைப் புலியல்ல. அதுபோல் வரிக்குதிரை என்பது ஒரு வகைக் குதிரையுமல்ல. வினைகளையோ, பெயரடைகளையோ, வினையடைகளையோ, பிற சொல் வகைகளையோ “அ என்பது ஒரு வகை ஆ” என்ற சூத்திரத்தில் அடக்கிவிட இயலாது. எல்லாச் சொல் வகைகளுக்கும் உள்ளடக்குமொழியத்தை நிரூபிப்பது கடினமான காரியம். உள்ளடங்கு உறவு சொற்றொகுதியை அமைப்பாகக் காண உதவுகிறது. சொற்றொகுதியோடல்லாமல் சொற்களங்களையும் (lexical fields) அது படிநிலை அமைப்பாக உணரச் செய்கிறது. இப்படிநிலை உறவு அமைப்பைக் கிளைப்படங்கள் மூலம் காட்டலாம்.

**இணக்கம்**

பொருண்மை அடிப்படையில் ஒன்றையொன்று மேலுறவாக வரும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு இணக்கம் எனப்படும். இணங்கிவரும் சொற்கள் சில பொருண்மைப் பண்புகளில் ஒன்றுபட்டும் சில பொருண்மைப் பண்புகளில் வேறுபட்டும் இருக்கும்.

பாம்பு : விஷஜந்து (சரியான இணக்கம்)

நாய் : செல்லப் பிராணி (யதேட்சையான இணக்கம்)

**இணக்கமின்மை**

பொருண்மை அடிப்படையில் உள்ளடங்கவோ உள்ளடக்கவோ செய்யாமல் இணக்கமின்றி வேறுபட்டு வரும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு இணக்கமின்மை எனப்படும்.

மலை : மாடு ஆடுதல் : தின்னுதல்

**பகுதி உறவுகள்** (Partial Relations)

தொடரியல் வருகை முறையில் பகுதி மேலுறவாக வரும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு பகுதி உறவு எனப்படும். எ.கா. ஒளி : மறை.

அவன் தன் பணத்தை ஒளித்து வைத்தான்.

அவன் தன் பணத்தை மறைத்து வைத்தான்.

அவன் அவள் கண்களை மறைத்தான்.

அவன் அவள் கண்களை ஒளித்தான் சூரியன் மறைந்தது

*சூரியன் ஒளித்தது

**முழுமையற்ற உறவுகள்** (Quasi –Relations)

சில சமயங்களில் சரியான இணை இல்லாததால் சொற்களுக்கு இடையே உள்ள அடுக்கு உறவு முழுமையுறாது நிற்கும். வேண்டிய பொருளைக் கொண்ட ஆனால் வேறு தொடரியல் வகையைச் சார்ந்த சொல் அந்த இடைவெளியைப் பூர்த்தி செய்யுமாறு அமையும். இத்தகைய நிலையில் உள்ள உறவை முழுமையற்ற உறவு எனலாம்.

நிறம் ( பெயர் ) (முழுமையற்ற உள்ளடக்குமொழி)

சிவப்பு மஞ்சள் பச்சை (பெயரடைகள்) (முழுமையற்ற உள்ளடங்குமொழிகள்)

**போலி உறவுகள்**

சொற்களுக்கு இடையே குறிப்பிடத்தக்க உறவு இல்லாமல் ஆனால் சூழ்நிலை மூலம் உறவு தோன்றினால் அச்சொற்களுக்கு இடையே உள்ள உறவை போலி உறவு எனலாம். எ.கா. முக்கோணத்திற்கு மூன்று கோணங்கள் உண்டு

முக்கோணத்திற்கு மூன்று பக்கங்கள் உண்டு

கோணம்:பக்கம் (போலி ஒருபொருள் பன்மொழிகள்)

**சினை-முழுமை உறவு**

சொற்களுக்கிடையிலான உறவுகளில் மிக முக்கியமான உறவு சினை முழுமை உறவாகும். இது உள்ளடங்கு-உள்ளடக்கு உறவு போன்று சொற்றொகை ஒரு படிநிலை அமைப்பில் தர பொரpதும் உதவுகின்றது. தலை என்பதற்கும் உடல் என்பதற்கும் முள் என்பதற்கும் கடிகாரம் என்பதற்கும் உள்ள உறவு சினை-முழுமை உறவுகளாகும். பின்வரும் கிளைப்படம் மனித உடலின் உறுப்புகளைக் குறிக்கும் சொற்களுக்கிடையே உள்ள சினை-முழுமை உறவைக் காட்டும்.

[உடல்] [கை] [கால்] [வயிறூ [மார்பு] [தலை] [தொடை] [மூட்டு] [முழங்கல்] [கணுக்கால்] [பாதம்] [விரல்] [குதிகால்] [கணூ [நகம்] தன்மதிப்பீடு 1. சொற்பொருண்மையியல் என்றால் என்ன? 2. தற்கப்பொருண்மையில் என்றால் என்ன? 3. ஒருபொருள்பன்மொழியம் என்றால் என்ன? 4. எதிர்மொழியம் என்றால் என்ன? 5. உள்ளடக்கு மொழியம் என்றால் என்ன?

6. சினை முழு உறவு என்றால் என்ன?

6.5. பாடத்தொகுப்புரை

பொருண்மையியலின் நோக்கத்தையும் விளக்கத்தையும் அறிந்து கொண்டீர்கள். தர்க்கப் பொருண்மையியலில் பங்கெடுப்பாளரும் பயனிலைகளும், வாக்கியங்களின் தர்க்கப் பண்புகள், தர்க்க வகுப்புகள் என்பன குறித்து தெரிந்து கொண்டீர்கள். சொற்பொருண்மையியலில்

சொற்பொருண்மையயும் இலக்கணப் பொருண்மையும், சொற்பொருண்மையும் வாக்கியப் பொருண்மையும், சொற்பொருண்மையின் அணுகுமுறைகள், அடுக்கு அர்த்த உறவுகள் என்பன குறித்த விளக்கங்களை அறிந்து கொண்டீர்கள்.

6.6. கலைச்சொற்கள்

1. அடுக்குறவு, 2. இணக்கம், 3. இணக்கமின்மை, 4. உள்ளடக்குமொழியம், 5. உள்ளடங்குமொழியம் 6. ஒருபொருள்பன்மொழியம் 7. சினை-முழுமை உறவு 8. சொற்பொருண்மையியல் 9. தர்க்கப்பொருண்மையியல், 10. பயன்வழிப்பொருண்மையியல், 11. பொருண்மையியல்

**6.7. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்**

சண்முகம், செ. பொருண்மையியல்

தன்மதிப்பீட்டு விடைகள்

1. சொற்களுக்கு இடையே உள்ள அடுக்குறவுகளையும் உறுப்பமைவு உறவுகளளையும் ஆய்வது சொற்பொருண்மையியலாகும்.

2. தர்க்கப்பொருண்மையியல் இயற்கை மொழிக்கும் முறையான தர்க்க ஒழுங்குமுறைகளான தேற்றக்கூற்று (proposition) மற்றும் பயனிலை நுண்கணிதம் (predicate calculus) இவற்றிற்கு இடையிலான உறவுகளை ஆய்கின்றது.

3. பொருண்மை அடிப்படையில் ஒன்றையொன்று உள்ளடக்கும், இடம் பெயர்க்கும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு ஒருபொருள்பன்மொழியம் எனப்படும். எ.கா. புத்தகம் : நுhல், உதிர்: விழு, காண்: பார், நுழை: பிரவேசி, விரட்டு: துரத்து.

4. இணக்கமற்ற ஆனால் ஒன்றையொன்று எதிர்ப்பதுபோல் பொருள் அமையும் சொற்களுக்கு இடையே உள்ள உறவு எதிர்மொழியம் எனப்படும். எ.கா. உயரம் : குள்ளம், நல்லது : கெட்டது.

5. பொருண்மை அடிப்படையில் உள்ளடங்கும் சொற்களுக்கும் உள்ளடக்கும் சொற்களுக்கும் இடையே உள்ள உள்ளடங்கு மொழியம் எனப்படும். எ.கா. பசு: விலங்கு, ரோஜா: பூ.

6. சொற்களுக்கிடையிலான உறவுகளில் மிக முக்கியமான உறவு சினை முழுமை உறவாகும். இது உள்ளடங்கு-உள்ளடக்கு உறவு போன்று சொற்றொகை

ஒரு படிநிலை அமைப்பில் தர பெரிதும் உதவுகின்றது. தலை என்பதற்கும் உடல் என்பதற்கும் முள் என்பதற்கும் கடிகாரம் என்பதற்கும் உள்ள உறவு சினை-முழுமை உறவுகளாகும்.

## பாடப்பகுதி 7
## கிளைமொழியியல் படிப்பு நோக்கம்

- கிளைமொழியியலின் நோக்கமும் விளக்கமும்
- கிளைமொழிகளின் வகைப்பாடு
- வட்டார மற்றும் சமூகக் கிளைமொழிகள் பற்றிய விளக்கம்
- தமிழின் இரட்டை வழக்குப் பற்றிய விளக்கம் பாடக்கருத்தலகுகள்

7.0. பாட முன்னுரை
7.1. கிளைமொழியலின் நோக்கமும் விளக்கமும்
7.2. வட்டாரக் கிளைமொழிகள்
7.3. சமூகக் கிளைமொழிகள்
7.4. இரட்டை வழக்கு
7.5. பாடத்தொகுப்புரை
7.6. கலைச்சொற்கள்
7.7. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

### 7.0. பாடமுன்னுரை

மொழி ஒரு ஒருபடித்தான இருப்புப்பொருள் அல்ல என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். தஞ்சையில் பேசப்படும் தமிழும் கன்னியாகுமரியல் பேசப்படும் தமிழும் வேறுபாடு உள்ளவை என்பது உங்களுக்குத் தெரியும். நாம் எழுதுவது போல் பேசுவதில்லை, பேசுவதுபோல் எழுதுவதில்லை. பேச்சு வழக்கு வேறு, எழுத்து வழக்கு வேறு. இவ்வாறு மொழியை ஒரு ஒருப்படித்தான இருப்புப்பொருளாக நாம் கருதினாலும் அது பல வேறுபட்ட வழக்குகளின் ஒரு கதம்பம் என்பது நமக்குத் தெரியும். ஒரு மொழியானது இடம் அடிப்படையிலும் சமுதாயம் அடிப்படையைpலும் வேறுபடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இத்தகைய கிளைமொழிகளைப் பற்றிப் படிக்கும் ஆய்வை கிளைமொழியியலின் என்பர். நாம் கிளைமொழியியலின் நோக்கமும் விளக்கமும் பற்றியும், கிளைமொழிகளின் வகைப்பாடு பற்றியும் கிளைமொழிகளுக்கு இடையிலான வேறுபாடுகள் பற்றியும் இப்பாடப்பகுதியல் படிக்கவிருக்கிறோம்.

### 7.1. கிளைமொழியியலின் நோக்கமும் விளக்கமும்

மொழி என்பதை நாம் மாறாத இயல்புடைய ஒரு சீரான ஒழுங்குமுறையாக உருவகிக்கின்றோம். ஆனால் மொழி என்பது உண்மையில் மாறும் இயல்புடைய

சீரற்ற ஒரு ஒழுங்கமைப்பாகும். அதாவது மொழி பல வேறுபாடுகளைக் கொண்ட துணைநிலை வழக்குகள் கொண்ட ஒன்றாகும். மொழி என்பது ஒரு ஒருபடித்தான ஒழுங்குமுறையாக அமையாமல் பல வேறுபட்ட துணைநிலை ஒழுங்குமுறைகளை உள்ளடக்கிய ஒன்றாகும். அதாவது மொழி என்பது பல கிளை வழக்குகள்/ கிளைமொழிகளை உள்ளடக்கிய ஒரு ஒழுங்கமைப்பாகும். கிளைமொழி என்பது னயையடநஉவ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ் சொல்லாகும். இதை ஒரு மொழியிலிருந்து பிரிந்த அல்லது கிளைத்த மொழி எனக் கருதலாகாது. கிளைமொழி என்ற கலைச்சொல் ஒரு குறிப்பிட்ட பேச்சுமொழியின் வகையைக் குறிக்கும். ஒரு தனிமனிதன் ஒரு குறிப்பிட்ட வயதில், குறிப்பிட்ட நேரத்தில் ஒருவனுடன் பேசும் பேச்சு 'தனிமனிதப்பேச்சு வழக்கு (idiolect)' என்று அழைக்கப்பெறும். அவரையொத்த பலர் பேசும் பேச்சுகள் ஒன்று சோ;ந்த ஒட்டுமொத்தமான ஒரு பேச்சுவழக்கைக் கிளை மொழி எனலாம். தனிமனிதர்களுக்கிடையில் இருக்கும் பேச்சு வேறுபாட்டை விட்டுவிட்டு அவர்களுக்கு இடையே காணப்படும் பொதுவான மொழிக்கூறுகளைக் கருத்தில் கொண்டு அவ்வகை வழக்கை ஒரு கிளைமொழி என்பர். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தைச் சார்ந்தோர் மொழிபரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் அவ்வட்டாரத்தைச் சார்ந்தோர் சில மொழிக்கூறுகளைக் பொதுவாகக்கொண்டிருப்பர். இது அவ்வட்டாரத்திலிருந்து விலகி இருப்பவர்கள் அதாவது முதலில் சொன்ன வட்டாரத்திலிருப்பவர்களுடன் மொழிப்பரிமாற்றத்தில் ஈடுபட சாத்தியங்கள் குறைவாய் இருப்பர்கள் பேசும் மொழி வகையிலிருந்து வேறுபடும். இவ்வாறு வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடும் கிளைமொழிகள் வட்டாரக் கிளைமொழிகள் எனப்படும். இம்மொழி வேறுபாடு சமூகங்களுக்கும் பொருந்தும். ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்கள் மொழிப்பரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கான சாத்தியங்கள் மற்றொரு சமூகத்தைச் சார்ந்தவர்ளுடன் மொழிபரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கான சாத்தியங்களைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால் ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்களின் பேச்சுவழக்கு மற்றொரு சமூகத்தைச் சார்ந்தவர்களின் பேச்சுவழக்கிலிருந்து வேறுபடும். இவ்வாறு சமுதாயம் அடிப்படையில் வேறுபடும் பேச்சு வழக்குகளைக் சமூகக் கிளைமொழிகள் என்பர். காலமுன் மொழி வேறுபாட்டிற்குக் காரணமாக அமைந்து காலக் கிளைமொழிகளை உருவாக்கும். மொழி என்பதை ஒரு குழுமக் கிளை மொழிகளை உள்ளடக்கிய ஒரு ஒழுங்கமைப்பு என்று

சொல்லலாம். பின்வரும் வரை படம் மொழிக்கும் கிளை மொழிகளுக்கும் உள்ள தொடர்பை விளக்கும்.




மொழியின் கிளைமொழிகளைப் பற்றி படிக்கும் இயல் கிளைமொழியியல் எனப்படும்.

### 7.2. வட்டாரக் கிளைமொழிகள்

இடவடிப்படிப்படையில் மொழி வேறுபடும் என்று பார்த்தீர்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தை அல்லது வட்டாரத்தைச் சார்ந்த மொழிபேசுபவர்கள் சில மொழிக்கூறுகளைத் தங்களுடைய வட்டாரத்தின் சிறப்புக்கூறுகளாகக்கொண்டு மொழி பரிமாற்றத்தில் ஈடுபடுவர். இச்சிறப்பக்கூறுகள் மற்றொரு வட்டாரத்தைச் சிறப்புக்கூறுகளிடமிருந்து வேறுபடும். இத்தகைய ஒரு வட்டாரத்திற்கென்று உள்ள மொழிக் கூறுகளைக் கொண்ட மொழியை வட்டாரக் கிளைமொழி என்பர். ஒருவட்டாரத்தைச் சார்ந்தவரின் பேச்சைக் கேட்கும் போதே அவர் இன்ன வட்டாரத்தைச் சார்ந்தவர் எனக்கூறவியலும். கீழ்வரும் எடுத்துக்காட்டு இரு வட்டாரக் கிளைமொழிகளுக்கு இடையில் உள்ள வேறுபாடுகளைக் காட்டும்:

| **வட்டாரக் கிளைமொழி 1** | **வட்டாரக் கிளைமொழி 2** |
| --- | --- |
| அரை | அறை |
| கரி | கறி |
| எரு | ஏறு |
| பேரு | பேறு |

மொழியின் எல்லா மட்டங்களிலும், அதாவது ஒலியனியல், உருபனியல், சொல்லியல், தொடரியல், பொருண்மையியல் என்ற எல்லா மட்டங்களிலும் வட்டாரக்கிளைமொழிகளுக்கிடையே வேறுபாடுகளைக் காணலாம்.

### 7.3. சமூகக் கிளைமொழிகள்

சமூக அடிப்படையில் மொழி வேறுபடும் என்று நீங்கள் பார்த்தீர்கள். ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் சில மொழிக்கூறுகளைத் தங்களுக்கென்றுள்ள தனிப்பட்ட மொழிக்கூறுகளாகக் கொண்டு மொழிப்பரிமாற்றத்தில் ஈடுபடுவர். அவர்களின் பேச்சைக் கேட்கும் போது அவர் இன்ன சமுதாயத்தைச் சார்ந்தவர் எனக் கூறவியலும். ஒரு குறிபிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் தங்களை அச்சமுதாயத்துடன் அடையாளம் காண்பதற்காகவும் இதைப் பயன்படுத்துவர். பின்வரும் எடுத்துக்காட்டு சமூகக் கிளைமொழிகளின் வேறுபாட்டை வெளிப்படுத்தும்:

| **மீனவர் பேச்சு** | **அரிசனர் பேச்சு** |
| --- | --- |
| தேழு | தேளு |
| ராசாழி | சாளி |
| மஞ்செ | மன்செ |
| பூதா(ன்) | பீரா(ன்) |

### 7.4. இரட்டை வழக்கு

ஒரு மொழியில் பல்வேறு வழக்குகள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். படித்தவர்களிடம் நீங்கள் பேசும்போது ஒரு வழக்கிலும் பாமரர்களிடம் பேசும்போது ஒரு வழக்கிலும் பேசுவீர்கள். இலக்கிய கட்டுரைகள் எழுதப் பயன்படும் வழக்கும் நாவல்களையும் அவற்றில் வரும் உரையாடல்களையும் எழுதப்பயன்படும் வழக்கும் ஒன்றல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே மொழி வழக்குகள், பயன்படும் சூழல்களுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. இலக்கியக் கட்டுரைகள் எழுதவும் பொது மேடைகளில் பேசவும் எழுத்து வழக்குப் பயன்படுகின்றது. இதனை உயர்வழக்கு என்று குறிப்பிடுவர். இயல்பான அலுவல் சூழல்களில் நண்பர்களுடன் உரையாடவும், வீட்டுச் சூழலில் மனைவி மக்களிடம் பேசவும், தினசரி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொதுவான ஒரு வழக்குப் பயன்படுகின்றது. இதனைப் பேச்சு வழக்கு என்று கூறுவர். இவ்விரு வழக்குகளும் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு அல்லது வட்டாரத்திற்கு உரியனவாக இல்லாது மொழி பேசுவோர் அனைவருக்கும் உரிய பொது வழக்குகளாகப் பெரும்பாலும் அமைந்துள்ளன. இவ்வாறு ஒரு மொழி இருபெரும் வழக்குகளைப் பெற்றும், அவ்விரு வழக்குகளும் தத்தமக்குரிய சூழல்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டும் இருப்பதனை, குறிப்பாக நீங்கள் அறியும் தமிழ்மொழியில் காண்பீர்கள். இவ்விரு வழக்குகளையும் அவற்றிற்குப்

பொருந்தாதச் சூழல்களில் பயன்படுத்த இயலாத வண்ணம் சமூகக்கட்டுப்பாடு இயல்பாக அமைந்து விடுகின்றது. இத்தகைய கட்டுப்பாடுடன் கூடிய இரு வழக்குகள் ஒரு மொழியில் இருப்பதை இரட்டை வழக்கு (diglossia) என்று குறிப்பிடலாம். இந்த இரட்டை வழக்கு நிலை எல்லா மொழிகளிலும் காணப்படுவதில்லை. எனவே இரட்டை வழக்கு உடைய மொழிகளை நீங்கள் இரட்டை வழக்கு மொழிகள் என்ற சிறப்பித்துக் கூறலாம். பின்வரும் எடுத்துக்காட்டுகள் உயர்வழக்கிற்கும் தாழ் வழக்கிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்கும்.

| **உயர்வழக்கு** | **தாழ்வழக்கு** |
|---|---|
| இன்று | இண்ணைக்கி |
| உயர்வு | ஒசத்தி |
| எண்பது | எம்பளது |
| பிறகு | பொறகு |

**தன்மதிப்பீடு**

1. கிளைமொழி என்றால் என்ன?
2. வட்டாரக் கிளைமொழி என்றால் என்ன?
3. சமூகக் கிளைமொழி என்றால் என்ன?
4. இரட்டை வழக்கு என்றால் என்ன?

7.5. பாடத்தொகுப்புரை இப்பாடத்தொகுதியில் கிளைமொழியியல் பற்றிய விளக்கத்தையும் நோக்கத்தையும் அறிந்துகொண்டீர்கள். கிளைமொழிகளின் வகைப்பாடுகள் குறித்தும் வட்டார மற்றும் சமூகக் கிளைமொழிகள் பற்றிய விளக்கம் குறித்தும் தமிழின் இரட்டை வழக்குப் பற்றிய விளக்கம் குறித்தும் அறிந்து கொண்டீர்கள்.

**7.6.கலைச்சொற்கள்**

1. இரட்டைவழக்கு (diglossia) 2. கிளைமொழி (dialect) 3. சமூகக்கிளைமொழி (social dialect) 4. வட்டாரக்கிளைமொழி (regional dialect)

**7.7. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்**

கருணாகரன்.கி.1975. சமுதாய மொழியியல். சிவகாமி அச்சகம். அண்ணாமலை நகர். சீனிவாசவர்மா, கோ. 1986. கிளைமொழியியல். அனைத்திந்திய தமிழ்மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.

ஆரோக்கிய நாதன். எஸ்.1985. மொழியியல்: இரட்டை வழக்கு. மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

**தன்மதிப்பீடு விடைகள்**

1. கிளைமொழி என்பது dialect என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லாகும். இதை ஒரு மொழியிலிருந்து பிரிந்த அல்லது கிளைத்த மொழி எனக் கருதலாகாது. கிளைமொழி என்ற கலைச்சொல் ஒரு குறிப்பிட்ட பேச்சுமொழியின் வகையைக் குறிக்கும்.

2. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தைச் சார்ந்தோர் மொழிபரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் அவ்வட்டாரத்தைச் சார்ந்தோர் சில மொழிக்கூறுகளைக் பொதுவாகக்கொண்டிருப்பர். இது அவ்வட்டாரத்திலிருந்து விலகி இருப்பவர்கள் அதாவது முதலில் சொன்ன வட்டாரத்திலிருப்பவர்களுடன் மொழிப்பரிமாற்றத்தில் ஈடுபட சாத்தியங்கள் குறைவாய் இருப்பர்கள் பேசும் மொழி வகையிலிருந்து வேறுபடும். இவ்வாறு வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடும் கிளைமொழிகள் வட்டாரக் கிளைமொழிகள் எனப்படும்.

3. ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்கள் மொழிப்பரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கான சாத்தியங்கள் மற்றொரு சமூகத்தைச் சார்ந்தவர்ளுடன் மொழிபரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கான சாத்தியங்களைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால் ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்களின் பேச்சுவழக்கு மற்றொரு சமூகத்தைச் சார்ந்தவர்களின் பேச்சுவழக்கிலிருந்து வேறுபடும். இவ்வாறு சமுதாயம் அடிப்படையில் வேறுபடும் பேச்சு வழக்குகளைக் சமூகக் கிளைமொழிகள் என்பர்.

4. ஒரு மொழியின் ஒரு வகை வழக்கு ஒரு குறிப்பிட்ட மொழிப்பயன்பாட்டுச் சூழலிலும் மற்றொரு வழக்கு மற்றொரு மொழிப்பயன்பாட்டுச் சூழலிலும் பயன்படுத்தப்படுமானால் அத்தகைய வழக்குகளை இரட்டை வழக்கு எனப்படும். தமிழ் ஒரு இரட்டைவழக்கு மொழியாகும்.

## பாடப்பகுதி 8
## வரலாற்று மொழியியல்

**படிப்புநோக்கம்**

• வரலாற்று மொழியியலின் விளக்கமும் நோக்கமும்
• மொழிகளை வரலாற்று முறையில் விளக்குதல்
• மொழிமாற்றத்தின் வகைகளை விளக்குதல்
• மொழி மாற்றத்திற்கான இயங்குமுறைகளளை விளக்குதல்
• மொழி மீட்டுருவாக்கம் பற்றி விளக்குதல்

பாடக்கருத்தலகுகள்

8.0. முன்னுரை
8.1. வரலாற்று மொழியியலின் விளக்கமும் நோக்கமும்
8.2. அகவரலாறும் புற வரலாறும்
8.2. மொழி மாற்றத்தின் வகைகள்
8.3. மொழி மாற்றத்தின் இயங்குமுறைகள்
8.4. மொழி மீட்டுருவாக்கம்
8.5. ஒப்புமை மொழியியல்

### 8.0. முன்னுரை

நீங்கள் எந்தப் இருப்புப்பொருளும் காலப்போக்கில் மாறக்கூடியது என்று அறிவீர்கள். மொழியும் இதற்கு விதிவிலக்கல்ல. மொழியும் காலப்போக்கில் மாறக்கூடியது. ஆனால் உங்களது வாழ்க்கையின் காலகட்டத்தில் இம்மாற்றம் உங்களுக்குத் தொாpவதில்லை. ஏனென்றால் மொழியில் மாற்றம் மிக மெதுவாகத்தான் நடைபெறும். இருப்பினும் நீங்கள் பழங்காலப் பனுவல்களை இக்காலப் பனுவல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தீர்கள் என்றால் மொழி அடைந்துள்ள மாற்றம் வெளிப்படையாக உங்களுக்குத் தெரியும். இந்தகைய மாற்றம் குறித்து இப்பாடப்பகுதியில் உங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும். இப்பகுதியில் வரலாற்று மொழியியலின் நோக்கமும் விளக்கமும் முதலில் தரப்படும். பின்னர் மாற்றங்களின் வகைகளையும் மாற்றத்திற்கான இயங்குமுறைகளும் விளக்கப்படும். இவற்றைத் தொடர்ந்து மீட்டுருவாக்கம் பற்றியும் அறிமுகப்படுத்தப்படும்.

### 8.1. வரலாற்று மொழியியலின் நோக்கமும் விளக்கமும்

வரலாற்று மொழியியில் என்றால் என்ன? என்று நீங்கள் முன்னர் பார்த்தீர்கள். வரலாற்று மொழியியலுக்கும் வருணனை மொழியலுக்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் உணர்ந்தருப்பீர்கள். வரலாற்று மொழியியல் என்பது ஒரு மொழியின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இருக்கும் ஒலியனியல், உருபனியல், சொல்லியல், தொடரியல் மற்றும் தொடரியல் பண்புக்கூறுகளை ஒப்பிட்டு ஆய்ந்து அப்பண்புக்கூறுகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வதாகும். ஆனால் வருணனை மொழியியல் ஒரு காலகட்டத்தில் உள்ள மொழியமைப்பை மாறாத ஒன்றாக எடுத்துக் கொண்டு அதன் ஒலியனியல், உருபனியல், சொல்லியல், தொடரியல், பொருண்மையியல் பண்புக்கூறுகளை ஆயும். ஒரு காலகட்டத்தில் பேசப்படும் மொழியின், எடுத்துக்காட்டாகத் தற்காலத் தமிழ் மொழியின் ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் அமைப்புகளை ஆய்வது வருணனை மொழியியலாகும். ஒரு காலகட்டத்தில் மொழியின் அமைப்பை மாறாத ஒன்றாகக் கொண்டு ஆய்வதால் வருணனை மொழியிலை ஒருகால மொழியியல் அல்லது சமகால மொழியியல் என்பர். ஆனால் ஒன்றிற்கும் மேற்பட்ட காலகட்ட மொழியமைப்புகளை ஒப்பிட்டு ஆய்வதால் வரலாற்று மொழியியலை இருகால மொழியல் என்பர்.

### 8.2. அக வரலாறும் புற வரலாறும்

ஹாக்கெட் வரலாற்று மொழியியலை அக வரலாறு (internal history) என்றும் புற வரலாறு (external history) என்றும் பிரிப்பார். மொழிபேசுபரின் இடம் மற்றும் இடப்பெயர்ச்சி, பிற மொழி பேசுபருடன் அவர்களுக்கு ஏற்பட்ட தொடர்புகள், மொழி பேசுபர்களின் புதிய குழுவைப் பெறுதல் (அதாவது சமுதாயத்தில் பிறந்த குழந்தை இயல்பாக பெறுவதைத் தவிர்த்து) மற்றும் மொழியின் வரலாற்றுடன் தொடர்புடைய எதுவும் புற வரலாற்றில் அடங்கும். மொழியின் அமைப்பில் ஏற்படும் கால அடிப்படையிலான மாற்றங்கள் அக வரலாறு எனப்படும்.

### 8.2. மொழி மாற்றத்தின் வகைகள்

காலம் மாற்றத்தை உருவாக்கும். பயன்படுத்தப்படும் எதுவும் மாற்றத்திற்குள்ளாகும். அது மொழிக்கும் பொருந்தும். எனவே நீண்டகாலப் பயன்பாடு மொழியில் பல மாற்றங்களைச் செய்திருப்பது வியக்கத்தக்கதல்ல. மொழியின் மாற்றம் குறித்து நீங்கள் அறிந்திருப்பீhகள். கிளை மொழிகளின் வேறுபாடுகளைப் பற்றி முந்திய அலகில் படித்தீர்கள். கிளைமொழியில்

காணும் மாற்றங்களையும் இடம் அடிப்படையிலான வரலாற்று மாற்றம் என்றும் குறிப்பிடவியலும். இடம் அடிப்படையிலான கால மாற்றம் ஒரு மொழி கிளை மொழிகளாக பிரிவதற்கு வழி வகுக்கும். இக்கிளை மொழிகள் காலப்போக்கில் அவற்றிற்கு இடையே உள்ள புரிதல் தன்மை குறைய குறைய அவை புதிய மொழிகளாகக் கருதப்படும் அளவுக்கு மாறும். எடுத்துக்காட்டாக தமிழ், மலையாளம், கன்னடம், துளு போன்ற திராவிட மொழிகள் ஒரு காலகட்டத்தில் கிளை மொழிகளாக இருந்தவைதான். காலப்போக்கில் அவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு கூடக்கூட பல காரணிகளின் தாக்கத்தால் அவை தனித்தனி மொழிகளாகக் கருதப்பட்டன. இவ்வாறு ஒரு தாயின் மக்களாய் தனித்தனியாகப் பரிந்துள்ள மொழிகளுக்கிடையே மொழியமைப்பின் எல்லா மட்டங்களிலும், அதாவது ஒலியனியல், உருபனியல், தொடரியல், மற்றும் பொருண்மையியல் என்ற எல்லா மட்டங்களிலும் வேறுபாடுகளைக் காணலாம். இவை தவிர சொற்களின் முழு இழப்பு சொல் மாற்றத்தை ஏற்படுத்தும். ஹாக்கெட் மொழியின் கால அடிப்படையிலான மாற்றங்களை பின்வருமாறு பாகுபாடு செய்வார்:

1. மையமாற்றம்:

அ. ஒலியனியல் மாற்றம்: ஒலியனின் பட்டியலில் மற்றும் வரிசை முறைகளில் ஏற்படும் எந்த மாற்றமும் ஒலியனிலயனியல் மாற்றமாகும்.

ஆ. இலக்கண ஒழுங்கமைப்பு மாற்றம்:

1) இலக்கண மையத்திற்குள் மாற்றம்: இதற்கு நாம் இலக்கண மாற்றம் என்ற சொல்லைப் பயன்படுத்தலாம்.

2) இலக்கண மையத்திற்கு வெளியே ஏற்படும் சொல் மாற்றம்

இ. உருபொலியினியலில் ஏற்படும் மாற்றம்:

1) உருபன்களின் அல்லது பெரிய வடிவுகளின் ஒலியனியல் உருப்படுத்தத்தில் ஏற்படும் மாற்றம்: வடிவ மாற்றம்

2. உறழ்சிகளின் பழக்கங்களில் மாற்றம்: உறழ்ச்சி மாற்றம்

2. புறமாற்றம்

அ. பொருண்மை மாற்றம்: இலக்கண வடிவுகளில் ஏற்படும் பொருண்மை மாற்றம்

ஆ. ஒலி மாற்றம்: ஒலித்தல் மற்றும் கேட்டல் பழக்கங்களில் ஏற்படும் மாற்றம்

### 8.2.1. ஒலியனியல் மாற்றம்

மொழியின் ஒலியனியல் மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஒலியனியல் மாற்றங்கள் எனலாம். ஒரு காலகட்டத்தில் ஒலியன்களாகச் செயல்பாடு புரிந்த ஒலியன்கள் மொழியின் மற்றொரு கால கட்டத்தில் ஒலியன்களாக செயல்புரிவதை இழத்தலை ஒலியனியல் மாற்றம் எனலாம். இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒலியன்கள் இணைந்து ஒரு ஒலியனாக மாறுவதால் நிகழலாம். மாறாக ஒரு ஒலியனின் மாற்றொலிகள் பிரிந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒலியன்களாக மாறுவதாலும் நிகழலாம்.

எடுத்துக்காட்டாகப் பழந்தமிழில்; /p/ என்ற ஒலியனுக்கு [p] மற்றம் [b] என்ற இரு மாற்றொலியன்கள் இருந்தன. பின்னர் தற்காலத் தமிழில் கடன்பேறு, ஒப்புமையாக்கம், இணைவு ஆகியவற்றால் அவை இரண்டும் பிரிந்து தனி ஒலியன்களாக மாறியுள்ளன. தற்காலப் பேச்சுத் தமிழில் /ழ்/ மற்றும் /ள்/ என்பன இணைந்து /ள்/ என்ற ஒரே ஒலியனாக மாறியுள்ளமையும் /ற்/ மற்றும் /ர்/ என்பன இணைந்து /ர்/ என்ற ஒரே ஒலியனாக மாறியுள்ளமையும் ஒலியனியல் மாற்றத்தின்கண் படும்.

### 8.2.2. உருபனியல் மாற்றம்

உருபனியல் நிலையிலும் மொழி மாற்றத்தை நீங்கள் காணலாம். தற்காலத் தமிழ் உருபனியலை இடைக்கால அல்லது பழங்காலத் தமிழ் மொழியுடன் ஒப்பிடுகையில் பல மாற்றங்களைக் நீங்கள் காணலாம். பழந்தமிழ் தற்காலத்தமிழ் போயினன் போனான் கண்டனன் கண்டான் மலையினின்று மலையிலிருந்து பழந்தமிழில் இறந்த காலம் மற்றும் இறப்பு உணர்த்தா காலம் என்ற இரு கால வடிவங்கள் தாம் இருந்தன. தற்காலத் தமிழில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று கால வடிவங்கள் இருக்கின்றன.

### 8.2.3. சொல் மாற்றம்

ஒரு மொழியின் ஒரு காலகட்டத்தில் புழக்கத்தலிருந்த சொற்கள் பல பிந்தைய காலகட்டத்தில் வழக்கிழந்து போவது சொல் மாற்றமாகும். எடுத்துக்காட்டாக யானையைக் குறிக்கும் கரி போன்ற சொற்களும் கூறுதலைக் குறிக்கும் நவில் போன்ற சொற்களும் தற்காலத் தமிழ் வழக்கில் இல்லை. இத்தகைய மாற்றம் சொல் மாற்றம் எனப்படும்.

### 8.2.4. தொடரியல் மாற்றம்

தொடரியல் நிலையிலும் பழந்தமிழுக்கும் இடைக்கால மற்றும் தற்காலத் தமிழுக்கும் இடையில் வேறுபாடுகளை நீங்கள் காணலாம்.

| **பழந்தமிழ்** | **தற்காலத்தமிழ்** |
|---|---|
| கண்டேன் கற்பினுக்கினியாளை | கற்பினுக்கு இனியளைக் கண்டேன். |
| கற்க கசடற | கசடற கற்க |

### 8.2.5. பொருண்மையியல் மாற்றம்

மொழியானது பொருண்மையியல் அடிப்படையில் பல மாற்றங்கள் அடைவதை நாம் வேறுபட்ட கால அடிப்படையில் மொழி அமைப்புகளை ஒப்பிடுகையில் உணரலாம். எடுத்துக்காட்டாக, கடன் என்ற சொல் தற்காலத் தமிழில் புதிய பொருண்மை அடைந்துள்ளது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் தமிழ் மொழியில் நிகழ்ந்துள்ள பொருண்மை மாற்றங்களைத் தெளிவு படுத்தும்:

| **சொல்** | **பழம்பொருள்** | **புதுப்பொருள்** |
|---|---|---|
| இதழ் | பூவிதழ் | பத்திரிக்கை |
| நேய் | எண்ணெய் | நேய் |
| பள்ளி | மடம் | பள்ளிக்கூடம் |
| விசிறி | காற்றாடி | தொண்டன் |

### 8.3. மொழி மாற்றத்தின் இயங்குமுறைகள்

மொழி மாற்றத்திற்கான இயங்குமுறைகளாக ஹாக்கெட் மூன்று முக்கியமான இயங்குமுறைகளைப் பட்டியலிடுவார். அவை ஒலிமாற்றம், கடன்பேறு, ஒப்புமையாக்கம் என்பனவாகும். மேலும் சில ஒலி தொடர்பான மொழி மாற்றங்களை ஒலி மாற்றங்கள் என்பர். **8.3.1. ஒலிமாற்றம்**

இவ்விதமான ஒலி மாற்றங்களை ஓரினமாதல் (assimilation), வேற்றினமாதல் (dissimilation), இடம்பெயதர்தல் (metathesis) என மாற்றத்தின் அடிப்படையில்; வகைப்படுத்தலாம். ஓரினமாதல் இம்மாற்றம் மிகப்பரவலான மாற்றமாகும். ஒலியன் அதற்கு முந்திய அல்லது பிந்திய ஒலியனின் உச்சரிப்புக்கு ஏற்ப மாறுவது ஓரினமாதல் எனப்படும்.

தன்பின் > தம்பி

பெரிம் > பெரும்

முன்வழி ஓரினமாதல் முன்வழி ஓரினமாதல் (progressive assimilation) ஒரு ஒலி அதற்கு முன்வரும் ஒலியின் பண்பால் அது அதைப் போன்ற பண்பைநோக்கி மாற்றம் அடையும் செயற்பாங்கை முன்வழி ஓரினமாதல் என்பர். கீழ்வரும் எடுத்துக்காட்டில் முன்வரும் இகரத்தால் பின்வரும் உகரம் இகரமாக மாறுவதால் இது முன்வழி ஓரினமாதல் எனப்படும். எழுந்திரு > எழுந்திரி

பின்வழி ஓரினமாதல் பின்வழி ஓரினமாதல் (regreessive assimilation) ஒரு ஒலி அதற்குப் பின்வரும் ஒலியின் பண்பால் அது அதைப் போன்ற பண்பைநோக்கி மாற்றம் அடையும் செயற்பாங்கை பின்வழி ஓரினமாதல் என்பர்.

வன்சினம் > வஞ்சினம்

நன்செய் > நஞ்செய்

புன்செய் > புஞ்செய்

இருவழி ஓரினமாதல் முன்வரும் மொழி பின்வரும் ஒலியையும் பினவரும் ஒலி முன்வரும் ஒலியையும் அவற்றின் ஒலியியல் பண்பை நோக்கி ஒன்றையொன்று மாற்றம் அடையச் செய்யும் செயற்பாங்கு இருவழி ஓரினமாதல் எனப்படும். கீழ்வரும் எடுத்துக்காட்டுகளில் முன்வரும் ஒலியின் அண்பல் ஒலிப்பிடம் பின்வரும் ஒலியின் பல் ஒலிப்பு இடத்தை அண்பல் ஒலிப்பிடமாக மாற்றுகின்றது. அதே நேரத்தில் பின்வரும் ஒலியின் அடைப்பு ஒலிப்புமுறை முன்வரும் மருங்கு ஒலிப்புமுறையை அடைப்பு ஒலிப்புமுறையாக மாற்றுகின்றது.

கல்+தாழை > கற்றாழை

கல்+தூண் > கற்றூண்

அண்ணமாக்கம் கீழ்வரும் எடுத்துக்காட்டில் பின்வரும் முன்னுயிர் இ பின்வரும் கடையண்ண அடைப்பொலியை இடையண்ண அடைப்பொலியாக மாற்றுகின்றது. இவ்வொலி மாற்றம் அண்ணமாக்கம் எனப்படும். திராவிடத் தாயிலிருந்து வந்த தமிழில் இவ்வித மாற்றங்களைக் காணலாம்.

கெவி > செவி (தமிழ்)

கெய் > செய் (தமிழ்)

**வேற்றினமாக்கம்**

ஒரே ஒலிப்புள்ள இரு ஒலிகள் ஒன்றையொன்று சோ;ந்து வருகையில் ஒரு ஒலி தன்ஒலிப்பினத்தை மாற்றிக்கொள்ளும். இத்தகைய மாற்றம் வேற்றினாக்கம் எனப்படும். கீழ்வரும் எடுத்துக்காட்டில் ஆழப்புழா எனவரும் மூலச்சொல் மலையாள மொழியில் ஆலப்புழா என மாறுவது வேற்றினமாக்கமாகும். இதில்

மூலச் சொல்லில் முதலில் வரும் இடையண்ண உயிர்ப்போலி (palatal approximant) அண்பல் மருங்கொலியாக மாறுகின்றது.

ஆழப்புழா > ஆலப்புழா

இடம் பெயரல் ஒலிகள் முன்பின் என இடம் மாறுவதை இடம்பெயரல் (metathesis) என்பர். திராவிட மொழியான தெலுங்கில் இடப்பெயரலுற்ற சொற்களைக் காணலாம். பின்வரும் எடுத்துக்காட்டில் சதை என்பது தசை என மாறுவது இடம்பெயரல் ஒலிமாற்றமாகும்.

சதை > தசை

அவன் > வாடு (தெலுங்கு)

**8.3.2. கடன்பேறு**

ஒரு மொழி அது தொடர்புகொள்ளும் மொழியிலிருந்து சொற்களைக் கடன்வாங்கி பயன்படுத்தும் செயல்பாடு கடன்பேறு எனப்படும். எந்த மொழியும் இப்போக்கிலிருந்து தப்பவியலாது. தமிழ்மொழிக்கு அதன் புறவரலாற்றில் சமஸ்கிருதம், ஆங்கிலம், போர்த்துகீசு மொழி, பெர்சியன் மொழி, உருது மொழி என்பனவற்றுடன் தொடர்பு ஏற்பட்டது. இம்மொழி பேசுபவர்களின் பண்பாடு தமிழ் பண்பாட்டில் ஊடுருவியது. இதைப் பண்பாட்டு ஊடுருவல் என்பர். இதன்காரணமாக தமிழ் மொழி பல சொற்களை பிறமொழிகளிலிருந்து பெற்றுக்கொண்டது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதை வெளிப்படுத்தும்:

| கடன் தரும் மொழி | கடன் சொற்கள் |
|---|---|
| சமஸ்கிருதம்; | பாவம், புண்ணியம், மோட்சம் |
| உருது | சபாஷ், தமாஷ், சர்பத், சவால் |
| ஆங்கிலம் | சோப்பு, சினிமா, ஜங்சன், காலேஜ் |

கடன் பேறு கௌரவ நோக்கத்தாலும் (prestige motive) தேவை பூர்த்திசெய்யும் நோக்கத்தாலும் (need filling motive) நிகழலாம். *சோறு* என்பதற்குப் பதிலாக *சாதம்* என்று கூறுவதும் *தேனீர்* என்பதற்குப் பதிலாக *டீ* என்று கூறுவதும் கௌரவ நோக்கமாக இருக்கலாம். டிரான்சிஸ்டர், டேப்ரிக்கார்டர் என்ற புதிய கருத்துருக்களைப் பெயரிடத் தமிழ்ச் சொல் இல்லாததன் காரணமாக மற்றொரு மொழிச்சொல்லைப் பயன்படுத்துவது தேவை கருதி என்று கூறலாம்.

**8.3.3. ஒப்புமையாக்கம்**

ஒருவர் தாம் ஏற்கனவே கற்ற மொழியமைப்பைக் கொண்டு பிறவற்றிற்கும் அதே அமைப்பை கையாளும் செயல்பாட்டை ஒப்புமையாக்கம் என்பர். எடுத்துக்காட்டாக எடு என்பதன் இறந்த கால வடிவான எடுத்தார் என்பதைக் கற்ற ஒருவர் படு என்பதற்கு படுத்தார் என்றும் தடு என்பதற்கும் தடுத்தார் என்றும் இறந்தகால வடிவங்களை உருவாக்குகின்றர் என்றால் இக்கற்றல் செயல்பாடு ஒப்புமையாக்கத்தின்கண் படும். இதே அமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் இடு என்பதற்கு இடுத்தார் என்ற தவறான வடிவை உருவாக்குவதும் ஒப்புமையாக்கத்தின்கண் படும். ஆங்கிலத்தில் நலந என்பதன் பழைய பன்மை வடிவம் நலநஇ என்பதாகும். இதற்குப் பதிலாக வரும் தற்கால வடிவான நலநள என்பது ஒப்புமையாக்கத்தால் ஆகும்.

book – books

boy – boys

eye – eyes (பழைய வடிவு eyen)

**8.4. மொழி மீட்டுருவாக்கம்**

மாற்றத்திற்கு உட்பட்ட மொழிகளின் பழைய நிலையை மீட்டுருவாக்கம் மூலம் மீண்டெடுக்கலாம். மீட்டுருவாக்கத்தை அக மீட்டுருவக்கம் என்றும் புற மீட்டுருவாக்கம் என்றம் இரண்டாகப் பகுப்பர். ஒரு மொழிக்குள்ளேயே இருக்கும் மொழிக்கூறுகளைக் கொண்டு அதன் முந்தைய நிலையை மீட்டுருவாக்கம் செய்வது அக மீட்டுருவாக்கம் எனப்படும். மீட்டுருவாக்க வடிவு ஒரு மொழியின் ஒரு காலகட்டத்திற்கு முந்தைய வடிவையோ பழைய மொழியின் வடிவையோ காட்டும். எடுத்துக்காட்டாக தற்காலத்தமிழில் போனான் என்று வருகின்ற இறந்தகால முற்றுவடிவத்;;தை போயினான் என இலக்கியங்களில் மெய்யபடுத்தம் செய்யப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து மீட்டுருவாக்கம் செய்வது அக மீட்டுருவாக்கம் எனப்படும். பிற எடுத்துக்காட்டுகள் (*என்ற குறியீடு மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட வடிவைக் குறிக்கும்): எண்ணெ< *எள்நெய், வெண்ணை < *வெள்நெய், நஞ்செய்< *நன்செய் ஒன்றிற்கும் மேற்பட்ட மரபு அடிப்படையில் தொடர்புடைய மொழிகளிலிருந்து அவற்றின் மூல மொழியை மீட்டெடுப்பது புற மீட்டுருவாக்கம் ஆகும். புற மீட்டுருவாக்கத்தின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைப் பட்டியலிடலாம்:

• இனமொழிகளை ஒருங்கிணைப்பது.

• அம்மொழிகளிடையே உள்ள பொதுமைக் கூறுகளைக் கண்டறிவது
• மொழிகளின் தனித்தன்மைகளை விளக்குவது
• தொல் வடிவத்தைக் கண்டுபிடிப்பது
• தொல்வடிவத்துடன் இனமொழிகளின் பண்புக்கூறுகளை ஒப்பிடுவது

பின்வரும் எடுத்துக்காட்டுகள் புற மீட்டுருவாக்கத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

செவி (தமிழ்) > * கெவி சீர (மலையாளம்) > கீரை உப்பு (தமிழ்) > சுப்பு

## 8.5. ஒப்புமை மொழியியல்

மொழிகளை வரலாற்று அடிப்படையில் ஒப்பிடுகையில் சில மொழிகள் மரபு அடிப்படையில் தொடர்புகொண்டு பல மொழியமைப்பு ஒற்றுமைகளைக் காட்டும். அத்தகைய மொழிகளை ஒரே குடும்பத்தைச் சார்ந்து மொழிகளாக் கருதவியலும். அவற்றின் பொதுப்பண்புக்கூறுகளை ஒப்பிட்டு மூல மொழியின் அல்லது அவற்றின் தாயாகக் கருதவியலும் மொழியின் மொழிக்கூறுகளை மீட்டுருவாக்கம் செய்யவியலும். இத்தகைய நோக்கங்களைக் கொண்ட மொழியியல் ஒப்புமை மொழியியல் எனப்படும். எடுத்துக்காட்டாக தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தோடா, கோதா போன்ற மொழிகளை ஒரே இனத்தை அல்லது ஒரே குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் (அதாவது திராவிட மொழிகள்) எனக்கொண்டு ஆயவியலும். பின்வரும் எடுத்துக்காட்டு சொல் அடிப்படையில் திராவிட மொழிகள் ஒற்றுமைகளைக் காட்டுவதையும் சில மொழிக்கூறுகளால் அவை வேறுபடுவதையும் விளக்கும்:

| தமிழ் | மலையாளம் | தோடா | கோத்தா | கன்னடம்; |
|---|---|---|---|---|
| panRi ‘pig’ | panni | pody | paj | pandi |
| niir ‘water’ | niir | Niir | - | Niirt |
| eli ‘rat’ | eli | Od | eyi | eli/ ili |
| veer ‘root’ | veer | Poor | veer | Ber |

### தன்மதிப்பீடு

1. வரலாற்று மொழியியலுக்கும் வருணனை மொழியியலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

2. மொழியின் புற வரலாறுக்கும் அக வரலாறுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

2. மொழிமாற்றங்களின் வகைகள் யாவை?

3. மொழி மாற்றத்தின் இயங்குமுறைகள் யாவை?

## 8.3. பாடத்தொகுப்புரை

வரலாற்று மொழியியல் என்ன என்றும் வரலாற்று மொழியியலும் வருணனை மொழியியலும் எவ்வாறு வேறுபடுகின்றன என்றும் அறிந்து கொண்டீர்கள். மொழிகளை வரலாற்று முறையில் விளக்குதல் குறித்து அறிந்து கொண்டீர்கள். மொழியில் ஒலியனியல், உருபனியல், சொல்லியல், தொடரியல் ஆகிய நிலையில் ஏற்படும் மாற்றங்களையும் அறிந்து கொண்டீர்கள்.

## 8.4. தொடர்ந்து படித்தற்குரிய நூல்கள்

கருணாகரன், கி. ஷ வ. ஜெயா. 1997. மொழியியல். குமரன் பதிப்பகம் சென்னை

கோதண்டராமன், பொன். பொது மொழியியல். பூம்பொழில் சென்னை.

பரமசிவன்.கு. 1984. இக்கால மொழியியல் அறிமுகம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

முத்துச்சண்முகம். 1989 (மூன்றாம் பதிப்பு). இக்கால மொழியியல் மதுரை பப்ளிஷிங் உறவுஸ் மதுரை.

அரங்கன்.கி.1985. தொடரியல்: மாற்றிலக்கண அணுகுமுறை. தமிழ்ப் பல்கலைக் கழகம். தஞ்சாவூர்.

## தன்மதிப்பீடு விடைகள்

1. வரலாற்று மொழியியல் என்பது ஒரு மொழியின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இருக்கும் ஒலியனியல், உருபனியல், சொல்லியல், தொடரியல் மற்றும் தொடரியல் பண்புக்கூறுகளை ஒப்பிட்டு ஆய்ந்து அப்பண்புக்கூறுகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வதாகும். ஆனால் வருணனை மொழியியல் ஒரு காலகட்டத்தில் உள்ள மொழியமைப்பை மாறாத ஒன்றாக எடுத்துக் கொண்டு அதன் ஒலியனியல், உருபனியல், சொல்லியல், தொடரியல், பொருண்மையியல் பண்புக்கூறுகளை ஆயும்.

2. மொழிபேசுபரின் இடம் மற்றும் இடப்பெயர்ச்சி, பிற மொழி பேசுபருடன் அவர்களுக்கு ஏற்பட்ட தொடர்புகள், மொழி பேசுபர்களின் புதிய குழுவைப் பெறுதல் (அதாவது சமுதாயத்தில் பிறந்த குழந்தை இயல்பாக பெறுவதைத் தவிர்த்து) மற்றும் மொழியின் வரலாற்றுடன் தொடர்புடைய எதுவும் புற வரலாற்றில் அடங்கும். மொழியின் அமைப்பில் ஏற்படும் கால அடிப்படையிலான மாற்றங்கள் அக வரலாறு எனப்படும்.

3. மொழி மாற்றங்களை ஒலியனியல் மாற்றம், உருபனியல் மாற்றம், தொடரியல் மாற்றம், பொருண்மையியல் மாற்றம் என வகைப்படுத்தலாம்.
4. ஒலிமாற்றம், கடன்பேறு, ஒப்புமையாக்கம் என்பன மொழிமாற்றத்தின் இயக்குமுறைகளாகும்.

=================================================================